பிறப்பு நூற்றாண்டு

இரட்டை இதழ்

# பொருளியல் நோக்கு

டிசம்பர் 1993/ஜனவரி 1994

கள் வங்கி வெளியீடு



ங் பிஷி, லெங் ரொங், கொங் யுஷி,

ஸொங் குவான்

## ளைய மார்க்சிசம்

ம்ஸ் பெட்ராஸ்,

ரிட் ஹுய்ஸர்

## ட்டமிடலுக்கு அப்பால், ன்றாவது பாதை மற்றும் ற்ற மார்க்கமும்

யோர்ஜி லிங்க்யேல்

## ஜார்தானிய முற்போக்குவாதி யாருவரின் சித்திரம்

லிஸ்ஸா டன்பார்

பாவின் புரட்சி – 35 ஆவது ஆண்டு நிறைவு

நூலகம்

# முன்னோட்டம்

மாபெரும் அக்டோபர் புரட்சியின் வெற்றியின் பின்னர்(குறிப்பாக ஸ்டாலினின் தலைமையின் கீழான சோவியத் யூனியனின் ஐந்தாண்டுத்திட்டங்கள் கண்ட பிரமாண்டமான வெற்றிகள் காரணமாக), சோஷலிஸம், ஏகாதிபத்தியவாதத்தை முறியடித்து, தேசிய சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கான மிகவும் தாக்கமான ஒரு வழிமுறையாக மட்டுமன்றி உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்திக்கு மிகவும் உசிதமான ஒருமுறையாகவும் நோக்கப்பட்டது. இதன் மூலம் புதிதாக சுதந்திரமடைந்த நாடுகள் குறைவிருத்தி மற்றும் வறுமை என்ற இரட்டைப் பொறிகளிலிருந்து தப்பிக் கொள்வதற்கு முடியும் என்றும் கருதப்பட்டது.

இன்று நாங்கள் வித்தியாசமான ஓர் உலகில் வாழ்ந்து வருகின்றோம். நடைமுறையில், ஏகாதிபத்தியவாதத்துக்கு எதிரான உலகளாவிய போராட்டத்தின் முன்னணியில், அதிதீவிர தேசியவாத சக்திகளும் மத அடிப்படைவாதமும் கைகோர்த்துக் கொண்டுள்ளன. (புரட்சிகர சோஷலிஸ கியூபா குறிப்பிடத்தக்க ஒரு விதிவிலக்காகும்). உண்மையில் நிலவிவரும் சோஷலிஸத்தின் தோல்வியினையடுத்து, விஞ்ஞானரீதியான சோஷலிஸ தெரிவே துரித அபிவிருத்திக்கும் செழிப்பு நிலைக்குமான பாதையாக உள்ளது என்ற நம்பிக்கை சிதைந்து போயுள்ளது. (போலந்திலிருந்து கிரீஸ் மற்றும் இத்தாலி வரையில்) பலநாடுகளில் இப்பொழுது இடம் பெற்றுள்ள இடதுசாரி அணிகளின் தேர்தல் வெற்றி, மார்க்ஸிஸம் அல்லாத அல்லது லெனினிஸ-சோஷலிஸம் அல்லாத சமூக ஜனநாயக வடிவமொன்றினையே கொண்டுள்ளது. புதிய தாராளவாத-முதலாளித்துவ முறைக்கான யதார்த்தபூர்வமான ஒரு மாற்றாக இன்றைய நிலையில் இது மட்டுமே இருந்து வருகின்றது. இவையும் ஏனைய மாற்றங்களும் மார்க்ஸிஸத்தின், இன்றைய மற்றும் எதிர்காலப் பங்களிப்பு தொடர்பான ஒரு நிச்சயமற்ற தன்மை நிலவி வருகின்றது என்பதனையே காட்டுகின்றன.

கொர்பசேவின் பரிட்சார்த்தம் நிராகரிக்கப்பட்டமை புதிய சிந்தனைக்கு ஒரு அவப் பெயரை எடுத்து வந்துவிட்டது. எனினும் வித்தியாசமான வடிவிலான ஒரு புதிய சிந்தனை அவசியமாக உள்ளது என்பதனை நாம் எந்த வகையிலும் மறுத்துரைக்க முடியாது. மார்க்ஸிஸம் வழக்கொழிந்த ஒரு மொழியாக மாறிவிடாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கு இந்தப் புதிய சிந்தனை அவசியமாகும். இதற்காக ஏனையவற்றுக்கு மத்தியில், நாங்கள் எமது மூலவேர்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது. எமது பிதாமகர்களை மீண்டும் தேடிச் செல்ல வேண்டியுள்ளது. இன்று நாங்கள் எதிர்கொண்டிருக்கும் புதிய பணிகள் மற்றும் புதிய போராட்டங்கள் என்பவற்றின் பின்புலத்தில் நின்று அவர்களை நாங்கள் ஆராய வேண்டியுள்ளது. மாற்றம் எதுவும் இன்றி தொடர்ந்து செல்லல், என்பதனையோ அல்லது, தொடர்ச்சியின்றி மாற்றம், என்பதனையோ நாங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்தப் பின்னணியில், நாங்கள் மாவோசேதுங்கையும் அதேபோல சீனாவின் அனுபவத்தினையும் ஆராயவேண்டும். குறிப்பாக, சீனா இப்பொழுது முன்னெடுத்துச் செல்லும் சோஷலிஸ சந்தைப் பொருளாதார உபாயம் தொடர்பான பரிட்சார்த்தத்தை நாங்கள் உன்னிப்பாக நோக்க வேண்டும். சீனாவின் தற்போதைய பொருளாதார உபாயத்தின் ஒரு சில மூலவேர்களை 1940களின் போது, விடுவிக்கப்பட்ட பகுதிகள் தொடர்பாக சீனக் கம்யூனிஸ்டுகள் பின்பற்றி வந்த பொருளாதாரக் கொள்கைகளில் காண முடியும். மாவோசே துங் 1943ல் நிகழ்த்திய ஓர் உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: "எமது பொருளாதாரக் கொள்கையின் அத்திவாரம் உற்பத்தியின் அனைத்து வகைகளையும் அபிவிருத்தி செய்வதாகும். ஒருபுறத்தில் வாடகைக் குறைப்பினையும் வட்டிக் குறைப்பினையும் பலவந்தமாக அமுல் செய்தல், மறுபுறத்தில் வாடகை மற்றும் வட்டி என்பவற்றின் கொடுப்பனவினை உத்தரவாதப்படுத்துதல் தொழிலாளர்களின் வேதனங்களை உயர்த்துதல், அத்துடன், முதலாளித்துவவாதிகளின் சட்டபூர்வமான செல்வப் பெருக்கத்தினை எதிர்க்காதிருத்தல்; உழவர் விவசாயிகளினதும் தொழிலாளர்களினதும் வாழ்க்கைத்தரம் உயர்த்தப் படவேண்டும்; ஆனால், அதேவேளையில் நிலப்பிரபுக்களினதும் முதலாளித்துவவாதிகளினதும் சொத்து உரிமைகள் பேணப்படுதல் வேண்டும். உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந் நாட்டுத் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று திரட்டப்படுதல் வேண்டும்; அதேநேரத்தில், தொழிலாளர்களின் சம்பளங்கள் உயர்த்தப்படுதல் அவசியம். அதிகாரவர்க்க மூலதனம் மற்றும் ஊக வியாபாரம் என்பவற்றிலிருந்து வரும் பேரிடிகளிலிருந்து சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை நாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.... பொதுத்துறை வியாபாரத்தின் அபிவிருத்தியுடன் இணைந்தவகையில் தனியார்துறை தொழில் முயற்சிகளும் ஊக்குவிக்கப்படுகின்றன. தனியார் மூலதனமும் பொது மூலதனமும் விஸ்தரிப்படைவதற்கு சமமான வாய்ப்புக்களைக் கொண்டுள்ளன.... நிதிக்கொள்கைத் துறையில், பணக்காரர்கள். தமது பணத்தினை வழங்குகின்றார்கள். தொழிலாளர்கள் தமது சக்தியை வழங்குகின்றார்கள், என்ற கொள்கையை நாம் பின்பற்றி வருகின்றோம்.இந்தவகையில், பல்வேறு சமூக வர்க்கங்களையும் சேர்ந்த மக்கள் தாம் தம்வசம் கொண்டிருப்பவற்றை நாட்டுக்காகப் பெற்றுக் கொடுப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. அதிகார வர்க்க மூலதனம் இருந்து வருவதற்கு இடமளிக்கக்கூடாது. பொருட்களின் பதுக்கல் மிகவும் தீவிரமான முறையில் குறைக்கப்படுதல் வேண்டும். செல்வந்த வர்த்தகர்களினதும் நிலப்பிரபுக்களினதும் ஏகபோகத்துக்கு இடமளிக்கக்கூடாது; செல்வந்தர்கள் ஒரு சிறிதளவு பங்களிப்பினை மட்டுமே வழங்கி வருகின்றனர்; மேலும் சிலவேளைகளில்; வறியோரிடமிருந்து அனுகூலங்களையும் கூட அவர்கள் பெற்றுவருகின்றார்கள். இந்த நிலையில், சாதாரண மக்கள் தமது பணத்தினையும் தமது உழைப்பினையும் வழங்குவதற்கு இடமளிப்பது நியாயமானதாகாது. அதிகார வர்க்க மூலதனம் வர்த்தக மூலதனம், வங்கி மூலதனம் அதேபோல செல்வந்த நிலப்பிரபுக்களின் நிலமூலதனம் என்பன கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். நிதிக் கொள்கையில் செல்வந்தர் அதிகளவுக்கு வழங்கும் கோட்பாட்டினை உறுதி செய்யும் பொருட்டு, மத்தியமயமாக்கல் கொள்கை

(பின் உள்ளட்டையைப் பார்க்க)

# பொருளியல் நோக்கு

மலர் 19 இதழ் 9/10 டிசம்பர் 1993 ஜனவரி 1994

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 2,
இலங்கை.

## உள்ளே


| | | |
|---|---|---|
| ஜ்யோர்ஜி லிங்க்யேல் | 27 | தொழில்முனைவோர் எங்கிருந்து வருகின்றார்கள்? |
| ஜ்யோர்ஜி லிங்க்யேல் | 33 | தொழிலாளர் அணியும் முகாமையாளர்களும் |
| மெலிஸ்ஸா டன்பார் | 38 | ஜோர்தானின் துவாஜான் பய்ஸால் |
| அபு என். எம். வாஹிட் | 43 | குடியகல்வும் அது தொடர்பான லீ மற்றும் டொடாரோ என்பவர்களின் கோட்பாடுகளும் |


விசேஷ அறிக்கை

### மாவோ நூற்றாண்டும் நாளைய மார்க்சிசமும்


| | | |
|---|---|---|
| ஸிங் பிஷி | 2 | சோஷலிஸ அபிவிருத்திப் பாதையைக் கண்டறிவதற்கான மாவோவின் நீண்ட தேடல் |
| கொங் யுஷி<br>ஷி ஸொங்குவான் | 5 | மாவோ சே துங் சிந்தனையும் டெங்ஷியா வோ பெங்கின் சோஷலிஸ கோட்பாடும். |
| லெங் ரொங் | 9 | நடந்த நிகழ்வுகளிலிருந்து உண்மையை தேடுதல் |
| ஜேம்ஸ் பெட்ராங் | 12 | முதலாளித்து நிலைமாற்றம்: மார்க்சிசத்தின் தொடர்பும் வரையறைகளும் |
| ஜெரிட் ஹூமிஸர் | 19 | அடுத்த ஆயிரமாவது ஆண்டில் உலகளாவிய மார்க்சிசம் குறித்த சில சிந்தனைகள் |
| சுதத்த ரணசிங்க | 51 | இலங்கையில் மனித மூலவளங்களும் அபிவிருத்தி |


கொழும்பு தமிழ்ச் சங்கம்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவு-களையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் முழு ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதி-பலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்-களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

### அடுத்த இதழில்

- உலக பொருளாதார மந்தம் - ஒரு பொது நோக்கு
- வளர்முக நாடுகளும் உலக பொருளாதார மந்தமும்
- ஐரோப்பிய யூனியனின் புதிய தர நிர்ணய விதிகளும் இலங்கையின் ஏற்றுமதிகளும்

அட்டை வடிவமைப்பு : நிமல் குணவிக்கும்

# சோஷலிஸ அபிவிருத்தி பாதையை கண்டறிவதற்கான மாவோ சே துங்கின் இன்னல்மிக்க தேடல் முயற்சி

ஸிங் பிஷி

மாவோவின் நூற்றாண்டினை நினைவுகூரக்கூடிய மிகச் சிறந்த வழி மாவோ சேதுங் குறித்து ஒரு ஆழமான பகுப்பாய்வில் ஈடுபடுவதாகும். இந்த வகையில், சீனப்புரட்சியின் வெற்றி யிலிருந்து கலாச்சாரப் புரட்சி வரையிலான 17 வருட காலப் பிரிவின் போது மாவோ சேதுங்கும் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியும் மேற்கொண்டு வந்த மகத்தான பணிகளை அலசி ஆராய்வது மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

இன்று மாவோ சிந்தனையைக் கற்றறிவது என்பது முக்கியமான கடினமான ஒரு பணியாக உள்ளது. சீன ஜனநாயகப் புரட்சியை வழிநடாத்திச் செல்வதிலும், புதிய ஜனநாயகத்தை கோட்பாட்டுக்குள் எடுத்து வருவதிலும் மாவோ ஒரு தனித்துவமான பங்கினை வகித்தார். இது, பொதுவாக கோட்பாட்டு வட்டாரங்களும் சீன கம்யூனிஸ்டுக் கட்சியும் ஏற்றுக் கொள்ளும் உண்மைகளாகும். எனினும், நவ சீனாவின் உதயம் தொட்டு 1966ஆம் ஆண்டின் கலாச்சாப் புரட்சி வரையிலான காலகட்டம் முழுவதிலும் மாவோ சேதுங் வகித்து வந்துள்ள பங்கு குறித்து பெருமளவுக்கு சர்ச்சைகள் இடம் பெற்று வருகின்றன. நவசீனாவின் உதயத்தின் பின்னர் (குறிப்பாக, 1966ன் பின்னர்) சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி, சோஷலிஸ அபிவிருத்தி குறித்த துறையில் முக்கியமான வெற்றிகள் எவற்றையும் சாதித்துக் கொள்ளவில்லை என சிலர் வாதாடுகின்றனர். வேறு சிலர், அது பயணித்த பாதை எண்ணற்ற பல திருப்பங்களையும் திரிபுகளையும் கொண்டதாக இருந்து வந்துள்ளது என்றும், அதனால் ஈட்டப்பட்ட வெற்றிகள் கணிசமானதாக இருக்கவில்லையென்றும் கூறி வருகின்றனர். இந்த இரண்டு வகையான எடுகோள்களும் தவறானவை என்பதே எனது கருத்தாகும்.



சீன கம்யூனிஸ்டுக் கட்சியின் 11வது மத்திய குழுக் கூட்டத்தின்

மூன்றாவது தொடரிலிருந்து சீனா, டெங்சியாவோ பிங்கின் தலைமையின் கீழ், சீனா குணாம்சங்களைக் கொண்ட சோஷலிஸத்தைக் கட்டியெழுப்பும் பயணத்தில் இறங்கியது. இது வரலாற்று முக்கியத்துவம் கொண்ட மாபெரும் தொடக்கமொன்றாக உள்ளது. ஆனால், அதேவேளையில், அது ஒரு தற்செயல் நிகழ்வாகவும் இருக்கவில்லை. சோஷலிஸத்தைக்கட்டி எழுப்பும் நிகழ்வுப்போக்கின் அனுபவங்களை மேலும் அபிவிருத்திசெய்தல் மற்றும் அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளுதல் என்பவற்றின் விளைவாகவே இந்த மாற்றம் இடம் பெற்றது. மேலும், உலகக் கம்யூனிஸ்டு இயக்கமும் சீனாவும் கடந்த காலத்தில் சந்தித்த தோல்விகள் மற்றும் பின்னடைவுகள் என்பவற்றை தொகுத்து நோக்கி, அவற்றிலிருந்து படிப் பினைகளை பெற்றுக் கொண்டதன் விளைவாகவும் இது தோன்றியிருந்தது. இறுதியாக, மாவோவின் இன்னல்கள் சூழ்ந்த தேடலினை அடிப்படையாகக் கொண்ட அவருடைய சிந்தனையை மேலும் முன்னெடுத்துச் செல்வதன் விளைவாகவும் இந்த மாற்றம் இடம் பெற்றிருந்தது. "இன்று நாங்கள் பல வழிகளில், தோழர் மாவோ பேசிய விடயங்களையே செயற்படுத்தி வருகின்றோம்; அவர் அவற்றினை எடுத்துக் கூறிய போதிலும், அவரால் அவற்றை செயற்படுத்த முடியவில்லை. அவர் தவறாக எதிர்த்த விடயங்களை இப்பொழுது நாங்கள் சீராக்கி வருகின்றோம்; மேலும், அவர் சரியாக செய்யாதவற்றை இப்பொழுது நாங்கள் செய்து வருகின்றோம்......." என டெங்சியாவோ-பிங் குறிப்பிட்டார்.

நாங்கள் ஒரு சரியான பகுப்பாய்வினை மேற்கொள்ளா விட்டால், வரலாற்றை முற்றிலும் நிராகரித்துவிட்டால், சீனக் குணாம் சத்துடன் கூடிய சோஷலிஸ கோட்பாட்டின் உள்ளடக்கத்தையும் இயல்பினையும் எம்மால் சரிவர புரிந்து கொள்வது அநேகமாக சாத்திய மற்றதாகிவிடும். இதனை நாங்கள் செய்யாதுவிடின், மார்க்சிசம்-லெனினிஸம்-மாவோ சேதுங் சிந்தனையை வாரிசுரிமையாகப் பெற்று, அதனை மேலும் அபிவிருத்தி செய்ததன் விளைவாகவே சீன குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாடு உருவாகியுள்ளது என்ற வரலாற்று உண்மையை புரிந்து கொள்வது சிரமமாகிவிடும்.

கலாச்சாரப் புரட்சிக்கு முந்திய 17 வருட காலத்தின் போது, சோஷலிஸத்தைக் கட்டியெழுப்புவதில் மாவோ சேதுங்கும் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியும் ஆற்றிவந்த மிக முக்கியமான பணிகள் குறித்த விரிவான விளக்கமொன்றை முன்வைப்பது இங்கு எனது நோக்கமாக இருக்கவில்லை. அதற்குப் பதிலாக, மிக முக்கியமான ஒரு விடயம் குறித்த- அதாவது, சோவியத் யூனியனின் அனுபவங்களை நாங்கள் எவ்வாறு நோக்க வேண்டும் என்பது குறித்த - எனது கருத்துக்களை இங்கு முன்வைக்க ஒரு முயற்சியை மேற்கொள்ள விரும்புகிறேன். இது மிகுந்த முக்கியத்துவம் கொண்ட மிகவும் பாரதூரமான ஒரு விடயமாக இருந்து வருகின்றது.

இந்த விடயம் குறித்த மிகச் சரியான ஒரு பகுப்பாய்வினை மேற்கொள்ளாமல் சீனக் குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாட்டின் மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் குறித்த அடிப்படையான விளக்கமொன்றைப் பெற்றுக் கொள்வது முடியாத காரியம் என்றே நான் நினைக்கிறேன்.

நாங்கள் சோவியத் யூனியனின் அனுபவங்களை சரியாகப் புரிந்து கொண்டு, அதன் பின்னர், மாவோ சேதுங்கும் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியும் ஆற்றியுள்ள பணிகளில் எமது கவனத்தைச் செலுத்த வேண்டும். நீண்ட காலமாக, சீனா சோவியத் மாதிரியிலிருந்தும் தப்பிச் செல்ல முடியாதிருந்தது. எனினும் சீனாவுக் கான அபிவிருத்திப் பாதையின் தேடலின்போது, பல புதிய கருது கோள்களை முன்வைத்ததன் மூலம் மாவோ ஒரு ஆக்கபூர்வமான பங்கினை வகித்து வந்துள்ளார் என்ற விடயத்தை நாங்கள் மறந்துவிடமுடியாது. அந்த கருதுகோள்களாவன:

(1) புதிய ஜனநாயகத்திலிருந்து சோஷலிஸத்தை நோக்கிய நிலை மாற்றம் குறித்த கோட்பாடு: நவ சீனாவின் உதயத்தின் ஆரம்ப வருடங்களில் மாவோ ஈட்டிக் கொண்ட ஒரு முக்கியமான கோட்பாட்டுச் சாதனையாக இதனைச் சுட்டிக் காட்ட முடியும். இக் கோட்பாடு வெறு மனே லெனினின் நிலைமாற்றக் கோட்பாட்டின் ஒரு நகலாக இருக்க வில்லை. அது புதிய ஜனநாயகம் குறித்த மாவோவின் முக்கியமான ஒரம்சமாகவும் நிரந்தரமான ஓர் அபிவிருத்தியாகவும் இருந்தது.

புதிய ஜனநாயகப் புரட்சி இடம் பெற்ற காலகட்டத்தின் போது, மாவோ "புதிய ஜனநாயகம் குறித்து" என்ற தலைப்பில் முக்கியமான ஒரு கட்டுரையை எழுதினார்; இக்கட்டுரையில், புதிய ஜனநாயகப் புரட்சியின் இயல்பினை அவர் பகுப் பாய்வு செய்தார். புதிய ஜன நாயகப் புரட்சி வெற்றியடைந்த பின்னர், அதனை சோஷலிஸப் புரட்சியுடன் பிணைத்துக் கொள்வது எவ்வாறு என்பது குறித்து அவர் எழுதினார். இந்த இரு புரட்சிகளுக்கும் இடையில் இணைக்க முடியாத ஒரு பிளவு இருந்து வரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். புதிய ஜனநாயகப் புரட்சியின் வெற்றியின் பின்னர் ஜனநாயகத்தை சோஷலிஸமாக நிலைமாற்றம் செய்வது எப்படி என்பதனை அவர் சுட்டிக் காட்டினார். சீனாவில் நிலவிவந்த உறுதியான நிலையை பகுப்பாய்வு செய்வதனை அடிப்படையாகக் கொண்ட ஒரு முக்கியமான கோட்பாடாக இது இருந்தது. புதிய ஜனநாயகப் புரட்சி வெற்றியடையும் பொழுது, அதற்கும் சோஷலிஸத்துக்குமிடையில் பிணைக்க முடியாத ஒரு பிளவு இருப்பதில்லை என்பதே மாவோவின் கருத்தாக இருந்தது; ஆனால், சீனாவின் பொருளாதார குறைவிருத்தி நிலை காரணமாக, உடனடியாக புரட்சியை எடுத்துவந்து, சோஷலிஸத்தைக் கட்டியெழுப்புவது சாத்தியப் படமாட்டாது என்றும், ஒரு நிலைமாற்றக் காலகட்டம் அவசியமாக இருக்கும் என்றும் அவர் கருதினார். இந்த நிலைமாற்ற காலகட்டத்தின் போது, பொருளாதார அபிவிருத்தியை சாதித்துக் கொள்வதும் ஏனைய துறைகளில் ஆயத்தங்களைச் செய்வதுமே பிரதான பணியாக இருக்கும். இக்காலகட்டத்தின்போது அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம் என்பன சோஷலிஸ வடிவங்களையோ அல்லது முதலா ளித்துவ வடிவங்களையோ எடுக்க

மாட்டாது என்றும், நிலைமாற்ற வடிவமொன்றையே அவை எடுக்க முடியும் என்பதும் மாவோ சுட்டிக் காட்டினார். மாவோவின் இந்தக் கோட்பாடு சமூகவியலாளர்களாலும் சித்தாந்தவாதிகளாலும் சரியாக ஆராயப்படவில்லை. நவ சீனாவின் உதயத்தினை அடுத்து வந்த குறுகிய ஏழாண்டு காலத்தில், மாவோவின் கோட்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக, சோஷலிஸப் புரட்சியை நிறைவு செய்து கொள்வது சாத்தியமாயிற்று. மேலும், இக் காலகட்டத்தின்போது, புதிய ஜனநாயகத்திலிருந்து சோஷலிஸத்தை நோக்கிய நிலைமாற்றம் இடம் பெற்றதுடன், சோஷலிஸமும் கட்டியெழுப்பப்பட்டது. இது மாவோவும் சீன கம்யூனிஸ்டு கட்சியும் ஆற்றிய மாபெரும் பணியாகும். அனுபவங்களின் அடிப்படையில் நோக்கும் பொழுது, இந்த நிலமாற்றக் காலகட்டம் கொந்தளிப்புக்கள் சூழ்ந்த காலப் பிரிவொன்றாக இருந்து வந்துள்ளது போல தோன்றுகின்றது. உண்மையிலேயே சில சம்பவங்கள் மிருதுவாக இடம்பெறவில்லை. இதன் விளைவாக, தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் நிலைத்து வந்தன. ஆனால், இந்தக் காலகட்டத்தின் மகத்தான வரலாற்றுப் பங்களிப்பினை நாங்கள் ஒருபோதும் புறக்கணித்துவிட முடியாது.

(2) சோஷலிஸ நிலைமாற்றம் குறித்து ஆற்றப்பட்ட பணிகள்: இந்தவகையில், சீனாவின் சோஷலிஸ நிலைமாற்றம் சோவியத் சோஷலிஸ புரட்சியின் ஒரு போலியாக இருக்கவில்லை. சோவியத் யூனியனின் கூட்டுப் பண்ணைப் பாதையில் பயணிக்க சீனா விரும்பவில்லை என்பதனை மாவோ மிகத் திட்டவட்டமாக எடுத்துக் கூறினார். சீன வேளாண்மைத் துறையின் "சோஷலிஸ நிலைமாற்றம் பொருத்தமான அபிவிருத்தி நிகழ்வுப்போக்கொன்றுக்கூடாக சென்றது. சீனா "சோஷலிஸத்தின் வித்துக்கள்" எனக் கருதப்படக் கூடிய பொருளாதார அமைப்புக்களிலிருந்து, பெருமளவுக்கு சோஷலிஸ கிரணிகளின் ஆதிக்கம் நிலவும் பொருளாதார அமைப்பொன்றுக்கும், இறுதியில், உள்ளடக்கத்திலும் இயல்பிலும் சோஷலிஸ தன்மை வாய்ந்த கூட்டுறவு அமைப்பு ஒன்றுக்கும் அபிவிருத்தி கண்டது. இது மூன்று காலகட்டங்களுக் கூடாக இடம்பெற்றது. இது சோவியத் மாதிரியை பிரதி பண்ணுவதாக இருக்கவில்லை. முன்னர் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் காணப்பட்ட சுய உதவி அமைப்புக்களை ஒன்று திரட்டுவதுடன், சீனாவுக்கேயுரிய சிறப்புக் குணாம்சங்களை கவனத்தில் எடுத்ததன் மூலம் சீன வேளாண்மைத் துறையில் சோஷலிஸ நிலைமாற்றத்துக்கான பாதையை தெளிவுபடுத்திக் கொண்டதன் விளைவாகவே இது தோன்றியது.

முதலாளித்துவ கைத்தொழில்கள் மற்றும் வர்த்தக தொழில் முயற்சிகள் என்பவற்றின் சோஷலிஸ நிலைமாற்றமும் இந்த அடிப்படையிலேயே முன்னெடுத்துச் செல்லப்பட்டது. சோவியத் யூனியனில் புதிய பொருளாதாரக் கொள்கை செயற்படுத்தப்பட்ட காலகட்டத்தின் போது, லெனின் முதலாளித்துவ விலையிடல் முறையொன்று குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தார். ஆனால், சில வரலாற்றுக் காரணங்களின் நிமித்தம் லெனினின் கருத்துக்கள் சோவியத் யூனியனில் அமுல் செய்யப்படவில்லை. சீனா அதன் முதலாளித்துவ சீரமைப்பின் போது, விலையிடல் முறைகள் குறித்த லெனினின் கருத்துக்களை, அங்கு உறுதியாக நிலவி வந்த நிலவரங்களுடன் இணைத்துக் கொண்டது. ஒரு காலப் பிரிவுக்கு முதலாளிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒரு வட்டியைச் செலுத்தும் முறை (அதாவது, பூர்ஷ்வாக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு விலையிடல் முறை) அமுல் செய்யப்பட்டது.

இதற்கூடாக, முதலாளித்துவம், முதலாளித்துவ கைத்தொழில்கள் மற்றும் வர்த்தக தொழில் முயற்சிகள் என்பவற்றை மீளமைப்புச் செய்யும் சிக்கலான பணி அமைதியான முறையில் நிறைவு செய்யப்பட்டது. மாவோ சேதுங்கும் சீன கம்யூனிஸ்டு கட்சியும் வழங்கிய தனித்துவமான ஒரு பங்களிப்பாக இது இருந்தது.

(3) சோவியத் யூனியனின் சோஷலிஸத்தை கட்டியெழுப்பும் அனுபவங்கள் குறித்த அணுகுமுறையொன்றை பின்பற்றுவது தொடர்பான பிரச்சினை: சீனா, சோஷலிஸத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பாக 1956 பின் பின்னர் ஏதேனும் பங்களிப்புக்களை நல்கியுள்ளதா? அது பாராட்டத்தக்க வெற்றிகளை சாதித்துக் கொண்டுள்ளதா? இந்தக் கேள்விகளுக்கான பதில் "ஆம்" என்பதாகும். இந்த விடயத்திலும் கூட மாவோ சேதுங்கும் சீன கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களும் கணிசமான அளவிலான பணிகளை நிறைவு செய்துள்ளனர். சோவியத் யூனியனில் சோஷலிஸத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பான அனுபவங்கள் குறித்து சீனா ஒரு கோட்பாட்டு ரீதியான அணுகுமுறையை பின்பற்றவில்லை. சோவியத் யூனியனுக்கு வேண்டிய விதத்தில் அது நடந்து கொள்ளவுமில்லை. மாவோ 1956 அளவிலேயே "பத்து மாபெரும் உறவு முறைகள்" என்ற தனது ஆக்கத்தில், ஏனைய நாடுகளின் அனுபவங்கள் திரும்ப மேற்கொள்ளப்படக் கூடாது என்று கூறினார். அவர் உணர்வு பூர்வமான முறையில் இந்த புத்திமதியை முன்வைத்தார். சோவியத் யூனியனில் சோஷலிஸத்தை கட்டியெழுப்பும்போது இடம்பெற்ற சில தவறுகளும் பலவீனங்களும் சமீப காலத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என அவர் கூறினார். திரிபுகளும் திருப்பங்களும் நிறைந்த இந்தப் பாதையை நாங்களும் பின்பற்ற வேண்டுமா என அவர் கேட்டார். மாவோ முன்வைத்த புதிய சிந்தனை, சோவியத் யூனியனின் அனுபவத்திலிருந்து பெருமளவுக்கு மாறுபட்டது என்பதனை இது எடுத்துக் காட்டுகிறது. ஆனால், இந்தச் சிந்தனை மேலும் வளர்த்தெடுக்கப்படாமையாலும், வெற்றிகரமாக செயற்படுத்தப்படாமையாலும் சீனா சோவியத் மாதிரியிலிருந்து முற்றிலும் தப்பிக் கொள்வது சாத்தியமில்லாது போய்விட்டது.

சீன கம்யூனிஸ்டு கட்சியின் 11ஆவது மத்தியகுழுக் கூட்டத்தின் 3ஆவது அமர்வின் பின்னரேயே, அது தன்னை சோவியத் மாதிரியிலிருந்து முற்றிலும் தவிர்த்துக்கொள்வது சாத்தியமாயிற்று.

சோவியத் அனுபவத்தின் தாக்கமற்ற தன்மையை மாவோவும் ஏனைய சீனத் தலைவர்களும் சரியாக புரிந்து கொண்டிருந்தனர். அதனால் இவற்றின் பிடியிலிருந்து சீனாவை விடுவிப்பதற்கு அவர்கள் முயன்றனர். வரலாற்று ரீதியான மட்டுப்பாடுகள் காரணமாக

(50 பக்கம் பார்க்க)

# மாவோ சேதுங் சிந்தனையும் சீன குணாம்சங்களைக் கொண்ட டெங் சியாவே பிங்கின் சோஷலிஸ கோட்பாடும்

கொங் யுஷி ஷி ஸொங் குவான்

*(இக்கட்டுரையாளர்கள் இருவரும் சீன கம்யூனிஸ்டு கட்சியின் கவடிகள் ஆய்வுப் பிரிவில் ஆய்வாளர்களாக பணியாற்றி வருகின்றனர்.)*

வரலாற்று ரீதியான அறிவை வாரிசுரிமையாக பெற்றுக் கொள்வதன் மூலமும் புதிய நடைமுறைகளையும் அனுபவங்களையும் தொகுத்து, வளர்த்தெடுத்துக் கொள்வதன் மூலமும் மானிட நாகரிகத்தில் புதிய சிந்தனைகளும் புதிய கோட்பாடுகளும் தோற்றம் பெறுகின்றன. மரபுரிமையாக பெற்றுக் கொண்ட அறிவினையும், வளர்த்தெடுத்துக் கொண்ட அறிவினையும் இணைப்பதாகவே இது உள்ளது; அதாவது, அறிவு அபிவிருத்தியின் தொடர்ச்சியையும் கால இடைவெளியையும் ஐக்கியப்படுத்தல்/ஒருங்கிணைத்தல் என இது அமைகிறது. டெங் ஷியாவோ பிங்கின் சீன குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாட்டுக்கும் மாவோசேதுங் சிந்தனைக்கும் இடையிலான உறவை, அறிவு அபிவிருத்தியின் தொடர்ச்சியையும் கால இடைவெளியையும் ஒருங்கிணைப்பதொன்றாகவே கருத முடியும்.

மாவோ சேதுங் சிந்தனைக்கும் டெங் ஷியாவோ பிங் கோட்பாட்டுக்கும் இடையிலான உறவு குறித்து கலந்துரையாடும் பொழுது பின்வரும் விடயங்களுக்கிடையிலான உறவின் மீது கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்: மாவோ சேதுங் சிந்தனை, மாவோவினால் அவருடைய இறுதி வருடங்களில் இழைக்கப்பட்ட தவறுகள், மற்றும் சீனக் குணாம்சங்களுடன் கூடிய டெங் ஷியாவே பிங்கின் சோஷலிஸ கோட்பாடு. இந்த மூன்று அம்சங்களுக்குமிடையில் நிலவிவரும் உறவு குறித்த தெளிவான ஒரு பகுப்பாய்வினை மேற்கொள்வதன் மூலம் மட்டுமே, மாவோ சிந்தனைக்கும் டெங் ஷியாவோ பிங்கின் சீன குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாட்டுக்குமிடையிலான உறவினை சரியாக புரிந்து கொள்வது சாத்தியமாகும்.

(1) மாவோவினால் அவருடைய இறுதி வருடங்களில் இழைக்கப்பட்ட தவறுகளையும் மாவோ சிந்தனையையும் வேறுபடுத்தி நோக்குவதும், மாவோ சிந்தனையை, சீன குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாட்டுடன் ஒப்பிட்டுநோக்குவதும்: சீன கம்யூனிஸ்டுக் கட்சியின் 11ஆவது மத்திய குழு கூட்டத்தின் 3ஆவது அமர்வின் பின்னர், டெங் ஷியாவோ பிங்ஆற்றியுள்ள மாபெரும் பணிகள், மாவோவினால் அவருடைய இறுதி வருடங்களில் இழைக்கப்பட்ட தவறுகளுக்கும் மாவோ சிந்தனைக்கும் இடையிலான வேறுபாட்டினை எடுத்துக் காட்டுவனவாக இருந்தன. மாவோ சேதுங் சிந்தனை அவருடைய சரியான கருத்துக்களை மட்டுமே உள்ளடக்கியதாக இருந்து வர வேண்டும். மாவோவினால் அவருடைய இறுதிக் காலத்தின் போது இழைக்கப்பட்ட தவறுகள் அவரது சிந்தனைத் தொகுப்பின் ஒரு பாகமாக அமையக் கூடாது.

இந்த வேறுபடுத்தல் அரசியல் ரீதியாகவும் கோட்பாட்டு ரீதியாகவும் பெரும் முக்கியத்துவத்தைப் பெறுகிறது. இது இல்லாமல் கலாச்சார புரட்சியின் தவறுகளை நிவர்த்திக்க முடியாது; மேலும், எமது கட்சியின் வழிகாட்டு நெறிகளாக மாவோ சேதுங் சிந்தனையை திட்டவட்டமாக, தயக்கமெதுவுமின்றி ஏற்றுக்கொள்வதும் சாத்தியமற்றதாகிவிடும். இது ஒரு கோட்பாட்டு ரீதியான பிரச்சினையாக இருக்கவில்லை. இது தேசிய ரீதியிலும் பாரிய பரிமாணங்களைக் கொண்டுள்ள ஓர் அரசியல் பிரச்சினையாக இருந்து வருகின்றதென டெங்ஷியாவே பிங் கூறினார். மாவோ சிந்தனையிலிருந்து, அவருடைய கடைசி வருடங்களின் தவறுகளை பிரித்து வேறுபடுத்தி நோக்கும்பொழுது, எமது கட்சியின் வழிகாட்டும் தத்துவமாக மாவோ சிந்தனையை நாம் தொடர்ந்தும் வைத்துக் கொள்ள முடியும். சீன குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாடு, மாவோ சிந்தனையின் நிராகரிப்பாக இருக்கவில்லை; மாவோ தனது இறுதி வருடங்களில் இழைத்த தவறுகளையே அது நிராகரிக்கிறது.

வேறு வார்த்தைகளில் கூறுவதாக இருந்தால், மாவோவினால் அவருடைய

இறுதி வருடங்களில் இழைக்கப்பட்ட தவறுகளை நிராகரித்து விடுவதன் மூலம் மட்டுமே சீன குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாடொன்றை உருவாக்கிக் கொள்வது சாத்தியமாக இருக்கும். பொதுவில், மாவோவின் இறுதிவருட தவறுகளுக்கும் சீன குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாட்டுக்குமிடையே மரபுரிமையாக பெற்றுக்கொள்ளப்பட்ட ஓர் உறவு நிலவி வரவில்லை. அத்தகைய ஓர் உறவு நிலவி இருந்தால், அது எதிர் மறையானதாகவே இருக்கும். எனவே, ஏற்கனவே குறிப்பிடப்பட்ட 3ஆவது கூட்டத்தொடரின் பின்னரேயே சரியான வழியும் கோட்பாடும் உருவாகியது.

(2) சீன குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாட்டுக்கும் மாவோ சேதுங் சிந்தனைக்குமிடையே மரபுரிமையாகப் பெறப்பட்ட ஓர் உறவு நிலவி வருகின்றது; அல்லது அவை ஒன்றுடனொன்று பிணைக்கப்பட்டிருப்பதுடன், பொதுவில் சில குணாம்சங்களையும் கொண்டுள்ளன. இதனை விளங்கிக் கொள்வதற்கு நாங்கள் நான்கு விடயங்களைக் கவனத்தில் எடுக்க வேண்டும்:

(1) சீன கம்யூனிஸ்டுகளின் கூட்டுப் பிரக்ஞையில் இந்த இரண்டும் – அதாவது, சீன மாதிரியிலான சோஷலிஸமும் மாவோ சிந்தனையும் – ஒரு பொது அளவுகோலாக இருந்து வருவதுடன், ஐக்கியப்படுத்தும் ஒரு காரணியாகவும் நிலைத்து வருகின்றது. சீன குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாடு, டெங் ஸியாவோ பிங் மையத்தில் இருந்த இரண்டாவது தலைமுறை மத்திய தலைமையினால் உருவாக்கப்பட்டது. (சுருக்கமாக கூறுவதானால், அது டெங்ஸியாவோ பிங்கினால் உருவாக்கப்பட்டது). மாவோ மைய ஸ்தானத்தில் வீற்றிருந்த முதலாவது தலைமுறையைச் சேர்ந்த தலைமையினால் மாவோ சேதுங் சிந்தனை உருவாக்கப்பட்டது. (சுருக்கமாகக் கூறுவதானால் அது, மாவோ சேதுங்கினால் உருவாக்கப்பட்டது). தனி நபர்கள் என்ற முறையில், இரண்டு தலைமுறைகளையும் சேர்ந்த இந்த கூட்டுத் தலைமைகளுக்கிடையே ஓர் உறவு இருந்து வருகின்றது. முதலாவது தலைமுறை கூட்டுத் தலைமையினால் துவக்கி வைக்கப்பட்ட இயக்கங்களில் ஏனைய உறுப்பினர்கள் பங்கேற்றது மட்டுமன்றி மத்திய நிறுவனங்களில் அவர்கள் முக்கியமான தலைமைத்துவப் பங்களிப்புக்களையும் வழங்கி வந்துள்ளனர்; அவர்கள் மாகாண ரீதியான அல்லது துறைரீதியான தலைவர்களாகவும் செயற்பட்டு வந்தனர். முன்னைய இயக்கங்களுக்கும் தற்போதைய முயற்சிகளுக்குமிடையே இவர்கள் ஓர் இணைப்பாக செயற்பட்டு வந்தனர். முதலாவது தலைமுறையைச் சேர்ந்த தலைவர்கள் நிறைவு செய்யாது விட்டு வைத்துச் சென்ற பணிகளை, இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்த தலைவர்கள் நிறைவு செய்து வைத்தனர். முதல் தலைமுறை தலைவர்களால் இழைக்கப்பட்ட தவறுகளை நிவர்த்தி செய்வதும் இதில் ஒரு கூறாக இருந்தது.

(II) கோட்பாட்டு ரீதியான சிந்தனை அடிப்படையில் உள்ள தொடர்பு. இங்கு நாங்கள் உபாயரீதியான சிந்தனை அல்லது அடிப்படை சிந்தனையை குறிக்கிறோம்; ஸ்தூல சிந்தனையை குறிப்பிடவில்லை. ஸ்தூல சிந்தனையைப் பொறுத்தவரையில், மாவோ மற்றும் பிங் ஆகியோரின் நோக்குகளில் சில வேறுபாடுகள் காணப்பட்டன. ஆனால், உபாய ரீதியான அல்லது அடிப்படை சிந்தனையைப் பொறுத்தவரையில், அவை ஒரே விதமானவையாக இருந்து வருகின்றன. மார்க்சிசம் – லெனினசத்தின் அகிலம் தழுவிய உண்மையை "சீனப் புரட்சியின் யதார்த்தத்துடன் தொடர்புபடுத்தும் ஒரு கோட்பாடாகவே இது உள்ளது. "எமது கட்சியின் பல தோழர்கள் மார்க்சிசம்-லெனினிசம் மற்றும் மாவோ சேதுங் சிந்தனையை தொடர்ந்தும் கற்று வருகின்றார்கள். மார்க்சிசம்-லெனினசத்தின் அகிலம் தழுவிய உண்மையையும் புரட்சியையும் இணைக்கும் அடிப்படை ஆதாரத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்கள் தொடர்ந்தும் பாடுபட்டு வருகின்றனர். இது ஒரு நல்ல வேலை; இது மேலும் விஸ்தரிக்கப்படுதல் வேண்டும்" என டெங் கூறினார். தென் சீனாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்: "நான் அதிகளவுக்கு புத்தகங்கள் வாசிப்பதில்லை. மாவோ குறிப்பிட்ட ஒரு விடயம் தான் மிக முக்கியமானதாகும். அதாவது, நடப்புக்களிலிருந்து உண்மையைத் தேடுவதாகும்." அவர் மேலும் சொன்னார்: "சீர்திருத்தம் மற்றும் திறந்துவிடுதல் என்பன தொடர்பான நிகழ்வுப்போக்கில் நாங்கள் வெற்றி கண்டோம். இதற்கு நாங்கள் நூல்களில் நம்பிக்கை வைத்திருக்கவில்லை; மாறாக, நடப்பு நிலைமையில் நம்பிக்கை வைத்திருந்தோம்; நடப்புக்களிலிருந்து உண்மைகளைத் தேடினோம்."

கோட்பாட்டு ரீதியான குணாம்சங்களின் அடிப்படையில் இணைத்தல்: சீன குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாடும் மாவோ சிந்தனையும் வேறுபட்ட மூலக்கூறுகளைக் கொண்டுள்ளன. இவற்றுக்கிடையே ஒத்த தன்மைகளும் நிலவி வருகின்றன. ஒத்த தன்மைகளை இரு துறைகளிலும் மிகத் தெளிவாக காண முடிகிறது; சீன குணாம்சங்களை வலியுறுத்துவது முதலாவது விடயமாகும். சீன நிலைமைகளுக்குப் பொருந்தக் கூடிய சீனக் குணாம்சங்களைக் கொண்ட ஜனநாயக புரட்சிகர பாதையொன்றுக்கான தேடலின் மீது அழுத்தம் காட்டப்பட்டு வந்தமையின் காரணமாக, 1930 களிலும் 1940களிலும் பாரிய வெற்றிகளை ஈட்டிக்கொள்வது சாத்தியமாயிற்று. 1950 களிலும் சீன நிலைமைகளுக்கு பொருத்தமான சோஷலிஸ அபிவிருத்திப் பாதையொன்றுக்கான தேடலின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. இதனால் வெற்றிகளும் அதேபோல தோல்விகளும் ஏற்பட்டன.

இந்த விடயத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் 1980 களிலும் 1990 களிலும் புதிய வெற்றிகளை ஈட்டிக் கொள்ளக் கூடியதாக இருந்தது; மேலும், இந்தக் காலகட்டத்தின் போது, நாம் எமது சொந்தப் பாதையில் பயணித்து, சோஷலிஸத்தை கட்டியெழுப்பினோம். மாவோவும் டெங்கும் வறட்டுக் கோட்பாட்டாளர்களாக இருக்கவில்லை; அவர்கள் மார்க்சிசத்தின் அத்திவாரங்களை பேணிக் காத்துக் கொள்வதற்கு முயன்று வந்த அதேவேளையில், மார்க்சிசம் தொடர்பான கோட்பாடுகளை வளர்த்தெடுத்துக் கொள்வதற்கு முயன்றார்கள். "மார்க்சிசம் கட்டாயமாக மேலும் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். அது தேக்கமடைவதற்கு இடமளிக்கக் கூடாது. அது தேக்கமடைந்துவிட்டால், கிழடு

தட்டிவிட்டால் அது சக்திவாய்ந்ததாக இருக்கமுடியாது" என மாவோ எப்பொழுதும் வலியுறுத்தி வந்தார். மார்க்ஸ் போன்ற எமது மூதாதையர்களால் எழுதப்பட்ட நூல்களை மட்டும் நாங்கள் நம்பியிருக்கக்கூடாது என்றும் அவர் கூறினார். நாங்கள் புதிய கோட்பாடுகளை உருவாக்க வேண்டும்; புதிய நூல்களை எழுத வேண்டும். டெங் சியாவோபிங் இத்தகைய குணாம்சங்களைக் கொண்ட ஒரு மனிதராவார். வாரிசுரிமையாக பெற்றிருக்கும் மார்க்சிசத்தை ஒருவர் புதிய சிந்தனைகள் மூலமும் கருதுகோள்கள் மூலமும் மேலும் அபிவிருத்தி செய்யாதிருந்தால், அவர் ஒரு உண்மையான மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டாக இருக்க முடியாது என்பதனை அவர் வலியுறுத்தினார். டெங் சியாவோ பிங்கின் சோஷலிஸ கோட்பாடு மாவோவின் சிந்தனையிலிருந்து சுவீகரித்துக் கொண்ட ஒரு முக்கியமான அம்சம், கோட்பாட்டு ரீதியான குணாம்சங்களை ஒருங்கிணைத்துக் கொண்டதாகும்.

IV *சீன* குணாம்சங்களைக் கொண்ட சோஷலிஸ கோட்பாடு, அங்கு தற்பொழுது இடம்பெற்று வரும் சீர்திருத்தம் மற்றும் சோஷலிஸ நிர்மாணத்துக்கான திறந்துவிடல் என்பவற்றைக் கொண்ட நிகழ்வுப் போக்கின் புதிய அனுபவங்களின் ஒரு தொகுப்பாகவும், பொழிப்பாகவும் இருந்து வருகின்றது.

இது தெட்டத் தெளிவான உண்மையாகும். எனினும், அறிவு வரலாற்றின் பின்புலத்தில் நின்று நோக்கும் பொழுது, இவற்றில் பெரும்பாலான அம்சங்களின் வேர்கள் முன்னைய தேடல்களில் உருவானவை என்பதனை காண முடிகிறது. நவ சீனாவின் உதயத்தின் பின்னர், எமது கட்சியின் சோஷலிஸ பாதையொன்றுக்கான தேடலில் இரு போக்குகள் மிகத் தெளிவாக புலப்பட்டன. இதில் ஒன்று சரியானதாக அல்லது ஓரளவுக்கு சரியானதாக இருந்து வருகின்றது. இதற்கூடாக, சீன குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாட்டின் அத்திவாரம், கோட்பாட்டு ரீதியான கருதுகோள்களையும் தத்துவங்களையும் இணைத்துக் கொண்டதன் மூலம் தயாரிக்கப்பட்டது. இந்த வகையிலேயே இக் கோட்பாட்டின் கூறும் மாவோ சேதுங் சிந்தனையும் ஒருங்கிணைக்கப்படுகின்றன. முன்னர் சரியாக அல்லது ஓரளவுக்கு சரியாக இருந்து வந்த கருதுகோள்கள் மற்றும் கருத்துக்கள் என்பவற்றில் சில, பின்னர் கைவிடப்பட்டன.

(3) *சீனக்* குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாடு மாவோ சேதுங் சிந்தனையின் மேலும் ஒரு அபிவிருத்தியாகும். இது வெறுமனே ஒரு அளவு ரீதியான அபிவிருத்தியாக இருக்கவில்லை; தர ரீதியான அபிவிருத்தியாக இருந்தது. மாவோ சேதுங் சிந்தனையை வளர்ச்சியடைந்த மார்க்சிசமாக கருத முடியுமானால், *சீனக்* குணாம்சங்களுடன்கூடிய சோஷலிஸ கோட்பாட்டை வளர்ச்சியடைந்த மாவோ சேதுங் சிந்தனை என வர்ணிக்க முடியும். அவை ஒருமித்த இயல்பினைக் கொண்டுள்ளன. அவை இரண்டும் விஞ்ஞான முறையிலான மார்க்சிசத்தைச் சேர்ந்தவையாகும். ஆனால், தர அடிப்படையில் ஒரு முக்கியமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த தரரீதியான பாய்ச்சலை பின்வரும் முறையில் புரிந்து கொள்ள முடியும்:

(i) *சீனக்* குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ் கோட்பாடு, அரசியல் புரட்சியை மையப்பணியாக கருதும் கோட்பாட்டு முறையிலிருந்து, பொருளாதார அபிவிருத்தியை மையப் பணியாக கருதும் கோட்பாட்டு முறைக்கான ஒரு பாய்ச்சலாகவே உள்ளது. ஜனநாயகப் புரட்சி இடம்பெற்ற கால கட்டத்தின் போதே மாவோ சேதுங் சிந்தனை உருவாகியது. அதன் முக்கிய கோட்பாட்டு ரீதியான கூறுகள், பிற்போக்கு வர்க்கங்களை தூக்கியெறிவதற்கான அரசியல் புரட்சியுடன் சம்பந்தப்பட்டிருந்தன. நவ சீனாவின் உதயத்தின் பின்னர் மாவோ சேதுங் சிந்தனை மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டது. கட்சி நடவடிக்கைகளின் முதன்மை நோக்கு, உபாய ரீதியாக புரட்சியிலிருந்து அபிவிருத்தியை நோக்கி நகர்த்தப்பட வேண்டும் என்பதனை மாவோ புரிந்து கொண்டிருந்தார். சோஷலிஸ நிர்மாண பாதைக்கான தேடலில் பல்வேறு வகைப்பட்ட அனுபவங்கள் கிடைத்தன. சோஷலிஸ நிர்மாணத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால், மாவோ மைய ஸ்தானத்தில் இருந்த நவ சீனாவின் முதலாவது தலைமுறைய கூட்டுத் தலைமை இந்த உபாய ரீதியான மாற்றத்தை முற்றாக மேற்கொள்ள முடியாது போய்விட்டது. அவர்கள் நீண்ட காலமாக, ஒரு சோஷலிஸ சமூகத்திலும் கூட, வர்க்கப் போராட்டமே முதன்மை நடவடிக்கையாக இருக்க வேண்டும் என்ற தவறான நம்பிக்கையில் தொங்கிக் கொண்டிருந்தனர்.

இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்த கூட்டுத்தலைமையினால் இந்த தவறான கருத்து நிராகரிக்கப்பட்டது. இதற்கு டெங் சியாவே பிங் தலைமை தாங்கினார். முற்றிலும் சீன குணாம்சத்தைக் கொண்ட சோஷலிஸ கோட்பாடு, இந்த உபாய ரீதியான மாற்றத்தை செயற்படுத்துவதற்கூடாகவும் பொருளாதார அபிவிருத்தியை வலியுறுத்தும் பல கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்பதன் மூலமும் படிப்படியாக உருவாக்கப்பட்டது. சீன கம்யூனிஸ்டு கட்சியின் 14ஆவது காங்கிரசினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த கோட்பாட்டு ரீதியான மாதிரி காரணமாக, கட்சி, வெற்றிகரமான புரட்சிக் கோட்பாடொன்றை மட்டுமன்றி வெற்றிகரமான பொருளாதார அபிவருத்திக் கோட்பாடொன்றையும் வைத்திருக்கக் கூடியதாக இருந்தது.

(II) *சீன* குணாம்சத்துடன் கூடிய சோஷலிஸ கோட்பாடு, (மாவோ மைய ஸ்தானத்தில் இருந்த முதலாவது தலைமுறை கூட்டுத்தலைமையினால் சமர்ப்பிக்கப்பட்ட) குறிப்பிட்ட சில முக்கியமான, ஆனால், தெளிவற்ற, வளர்ச்சியடையாத கருத்துக்களிலிருந்து முழு நிறைவான, ஒழுங்கமைந்த ஒரு சிந்தனையை நோக்கிய ஒரு பாய்ச்சலாக இருந்தது. உதாரணமாக, சோஷலிஸம் இரு கட்டங்களை உள்ளடக்கியிருப்பதாக மாவோ கூறினார்: விருத்தி குன்றியதும் ஓரளவுக்கு விருத்தியடைந்ததும். இது ஆரம்ப நிலை சோஷலிஸ கட்டத்தின் கோட்பாடு என சிலர் கூறுகின்றனர். மாவோ இந்தக் கருத்து குறித்து பேசிய போதும் அவர் அதனை வலியுறுத்தவோ மேலும் அபிவிருத்தி செய்யவோ இல்லை. இதிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறை மற்றும் கொள்கை முடிவுகளை அவர் எடுத்துக் கூறவில்லை.

அதனால் இந்தக் கருத்து அதிக கவனத்தைப் பெறவில்லை. இதனை ஒரு கணநேர சிந்தனை என குறிப்பிட முடியும். இது பாராட்டப்பட வேண்டிய ஒரு கருத்தாகும். ஆரம்பநிலை சோஷலிஸம் குறித்த கோட்பாடு சீன கம்யூனிஸ்டு கட்சியின் 11ஆவது மத்திய குழுக் கூட்டத்தின் 3ஆவது அமர்வின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டது. இது சீன குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாட்டின் அத்திவாரத்தின் ஒரு கூறாக இருந்தது. சீன கம்யூனிஸ்டு கட்சியின் 13ஆவது காங்கிரஸ், இந்த வழிமுறைக்கான அத்திவாரத்தையிடுவதை வலியுறுத்தியதுடன், நாட்டு நிலவரங்கள் குறித்த மதிப்பீடு கவனத்தில் எடுக்கப்பட வேண்டுமென கூறியது.

மாவோவின் சோஷலிஸத்தின் இருகட்டங்கள் குறித்த கருத்தும் (அதாவது விருத்தி குன்றிய கட்டமும் ஓரளவுக்கு விருத்தியடைந்த கட்டமும்) சோஷலிஸத்தின் ஆரம்ப கட்டம் குறித்த கோட்பாடும் வரலாற்றுப் பின்னணி, வலியுறுத்தும் கோணம், பொருள் மற்றும் ஆழம் என்பவற்றின் அடிப்படையில் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவையாகும். சோஷலிஸத்தின் முதலாவது கட்டம் குறித்த கோட்பாடு ஒரு புதிய பாய்ச்சலுக்கு இணையானதாக உள்ளது.

மற்றொரு உதாரணம், மாவோ லியு சியாவோ ஷி மற்றும் சூ என்லாய் ஆகியோர், குறிப்பிட்ட சில வரையறைகளுக்குள் முதலாளித்துவம் நிலவிவருவதற்கும் அபிவிருத்தியடைவதற்கும் இடமளிக்கப்பட வேண்டும் என்பது குறித்து 1956லும் 1957லும் தெரிவித்திருந்த ஆணித்தரமான கருத்துக்களாகும். சமூகத்துக்கு அவை தேவையாக இருக்கும் பட்சத்தில் பாரிய தனியார் துறை தொழிற்சாலைகளை ஸ்தாபிக்க முடியும் என மாவோ கூறினார்; கடல் கடந்த சீனர்களால் இடப்பட்டுள்ள முதலீடுகள் நூறு வருடங்களுக்கு தேசியமயமாக்கப்படமாட்டாது. ஒரு சிறு அளவிலான முதலாளித்துவத்தை மீண்டும் ஸ்தாபிக்க முடியும்.

சீனக் குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸத்தின் கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது, இது ஒரு மின்னும் சிந்தனைப் பொறியாக உள்ளது.

மாவோ இதனை ஒரு தனித்து விடப்பட்ட பிரச்சினையாக நோக்கினார்; இதனை ஒரு பொதுப் பிரச்சினையாக அவர் கருதவில்லை. இருந்தாலும், இது அவருடைய சிந்தனையின் ஒளிவு மறைவற்ற தன்மையையும், அவருடைய கொள்கைககளின் நெகிழ்ச்சித் தன்மையையும் காட்டுகிறது. சீன குணாம்சங்களைக் கொண்ட சோஷலிஸ கோட்பாடு புதிய முறைகளின் அனுபவங்களை சுருக்கி, தொகுத்தெடுத்து, பொது உரித்து முறை முதன்மை வடிவமாக இருந்து வருவதுடன் இணைந்த வகையில், பல்வேறு உரித்து முறைகள் நிலவி வருவது தொடர்பான கருதுகோள்களை சமர்ப்பித்தது. இது கோட்பாட்டு ரீதியான ஒரு பாய்ச்சலாக இருந்தது. மாவோ, லியு மற்றும் சூயென்லாய் போன்ற தலைவர்களின் உரைகளை கம்யூனிஸ்டு கட்சியின் சுவடிகள் திணைக்களத்தில் கண்டு பிடித்ததானது, நாங்கள் இன்று பின்பற்றிவரும் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புரிந்து கொள்வதற்கு பெருமளவுக்கு உதவுகிறது.

(III) சீனக் குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாடு மத்தியமயப்படுத்தப்பட்ட திட்டமிட்ட பொருளாதார கோட்பாட்டிலிருந்து சந்தைப் பொருளாதார கோட்பாட்டுக்கான ஒரு பாய்ச்சலாக உள்ளது. நீண்ட காலமாக திட்டமிடப்பட்ட பொருளாதாரம் சோஷலிஸத்துடனும், சந்தைப் பொருளாதாரம் முதலாளித்துவத்துடனும் சமாந்தரமாக கருதப்பட்டு வந்துள்ளது. மாவோவின் சோஷலிஸ நிர்மாணம் குறித்த கோட்பாடு திட்டமிட்ட பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்டிருந்தது. 1950 களின் நடுப் பகுதி தொடக்கம் மாவோவும் ஏனைய தலைவர்களும் திட்டமிட்ட பொரு ளாதார முறையை சீர்திருத்துவது குறித்து சிந்தித்து வந்த போதிலும், திட்டமிடப்பட்ட பொருளாதாரம் குறித்த கோட்பாட்டிலிருந்து அடிப்படையில் விலகிச் செல்ல அவர்கள் விரும்பவில்லை.

சீன கம்யூனிஸ்டு கட்சியின் 12ஆவது மத்திய குழுக் கூட்டத்தின் 3ஆவது அமர்வு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஆவணத்தை ஏற்றுக் கொண்டது: "பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்த கம்யூனிஸ்டு கட்சி மத்திய குழுவின் தீர்மானங்கள்". சீனாவின் சோஷலிஸ பொருளாதாரம், பொது உரித்தினை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடப்பட்ட பண்டச் சந்தைப் பொருளாதாரமொன்றாக இருந்து வருகின்றது என அது சுட்டிக் காட்டியது. இது திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தையும் பண்டச் சந்தைப் பொருளாதாரத்தையும் ஒன்றுடனொன்று முரண்பட்டவை என கருதும் பாரம்பரிய எண்ணப் போக்கினை மாற்றியமைத்துள்ளது. சீன பொருளாதார முறையின் முற்று முழுதான சீர்திருத்தத்துக்கு வழிகாட்டக்கூடிய ஒரு புதிய கோட்பாட்டினை அது வழங்கியது. மேலும், அரசியல் பொருளாதாரம் குறித்த மார்க்சிச கோட்பாட்டினதும், மாவோ சேதுங் சிந்தனையின் பொருளாதார கோட்பாட்டினதும் முக்கியமான ஒரு அபிவிருத்தியாகவும் இது இருந்தது. திட்டமிடப்பட்ட பண்டச் சந்தைப் பொருளாதாரம் குறித்த இந்தப் பலமான கோட்பாட்டு அத்திவாரம் காரணமாகவே, சீனக் குணாம்சங்களுடன்கூடிய சோஷலிஸ கோட்பாட்டினை முழு நிறைவான ஒரு கோட்பாட்டு முறையாக நிலைமாற்றம் செய்து கொள்வது சாத்தியமாயிற்று. டெங் தனது தென் சீன சுற்றுப் பயணத்தின்போது சொன்னார்: "திட்டமிடப்பட்ட பொருளாதாரம் சோஷலிஸமல்ல; முதலாளித்துவ நாடுகளும் கூட திட்டமிடலில் ஈடுபட்டுள்ளன. சந்தைப் பொருளாதாரம் முதலாளித்துவமல்ல; சோஷலிஸ நாடுகளும் சந்தைகளைக் கொண்டுள்ளன." இந்த உரையின் விளைவாக மக்களின் ஆர்வம் பெருகியது. சோஷலிஸ சந்தைப் பொருளாதார கோட்பாடு கட்சியின் 14 ஆவது காங்கிரசில் சமர்ப்பிக்கப்பட்டது. டெங்கின் உரையை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடப்பட்ட பண்டச் சந்தைப் பொருளாதார கோட்பாட்டின் ஓர் அபிவிருத்தியாகவே இது இருந்தது. சீனக் குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாடு இதன் ஒரு முக்கிய கூறாகும். மார்க்சிசம்-லெனினிசம் மற்றும் மாவோ சேதுங் சிந்தனையின் வளர்ச்சி வரலாற்றில் இது பிரமாண்டமான ஒரு பாய்ச்சலாக இருந்தது.

# இடம்பெற்ற சம்பவங்களிலிருந்து உண்மையை தேடுதல்

லெங் ரொங்

*சீனாவின் தற்போதைய மார்க்சிச* முறையாக இருந்து வரும் டெங் *சியாவோ பிங்கின் சீனக் குணாம்சங்*களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாடு, *சீனாவில்* கடந்த பத்தாண்டு காலமாக இடம்பெற்று வரும் நவீனமயமாக்கல் மற்றும் *சீர்*திருத்த நிகழ்வுப்போக்கு என்பவற்றினால் சாதித்துக் கொள்ளப் பட்ட பெரும் வெற்றிகளினால் உருவாகியது. பிந்திய 1970 கள் தொடக்கம் 1990 களின் தொடக்கப்பகுதி வரையிலான வரலாற்றுக் காலகட்டம் முழுவதும் *சீனாவில்* உறுதியாக நிலவி வந்த நிலைமைகளின் கீழ் இக்கோட்பாடு பிறந்தது. *சீனக்* குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாடு உருவாகிய விதத்திலிருந்து பலவற்றைக் கற்றுக்கொள்ள முடியும்: இவற்றுள் மிக முக்கியமானது; நடந்த நிகழ்வுகளிலிருந்து உண்மையைத் தேடுவது தொடர்பான சித்தாந்த வழியாகும்.

மாவோ சேதுங் ஒரு மாபெரும் மார்க்சிஸ்டாக இருந்தார். நடந்த நகழ்வுகளிலிருந்து உண்மையைத் தேடும் கம்யூனிஸ்டு கட்சியின் வழிமுறையை இவர் உருவாக்கினார்; அவர் சீனப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் சென்றார்; பல துறைகளில் ஆக்கபூர்வமான முயற்சிகளை துவக்கி வைத்தார். எனினும், அவருடைய கடைசி வருடங்களின் போது தவறுகள் இழைக்கப்பட்டன. இதற்கு காரணம், நடந்த நிகழ்வுகளிலிருந்து உண்மையைத்தேடும் வழியிலிருந்து அவர் தன்னை தூரப்படுத்திக் கொண்டதாகும். நடந்த நிகழ்வுகளிலிருந்து உண்மையைத் தேடும் சித்தாந்த வழியில் தொடர்ச்சியாக பயணிப்பது இலகுவானதல்ல என்பதனை இது நிரூபிக்கிறது. மாவோவின் தவறுகளுக்கு அவரை இட்டுச் சென்ற காரணிகள் சிக்கலானவையாகும். இதிலிருந்து பல படிப்பினைகளை பெற்றுக்கொள்ள முடியும். உதாரணமாக, மாவோவும் ஏனைய பல தலைவர்களும் புரட்சிகரப் போராட்டத்தில் தமது வாழ்க்கையை கழித்து வந்திருந்தமையால் உற்பத்தி உறவுகள் மற்றும் உயர் கட்டுமானம் என்பற்றில் மாற்றங்களை எடுத்து வரவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர்.

உற்பத்தி உறவுகளுடன் சம்பந்தப்பட்ட பிச்சினைகளை தான் ஓரளவுக்கு அறிந்திருந்தபோதிலும், உற்பத்திச் சக்திகளைப் பொறுத்த வரையில், தான் ஒரு கற்றுக்குட்டியாக இருந்து வருவதாக மாவோ ஏற்றுக் கொண்டுள்ளார். உற்பத்திச் சக்திகளை அபிவிருத்தியடையச் செய்து, நாட்டை வறுமையிலிருந்து விடுவிப்பதே அவருடைய குறிக்கோளாக இருந்தது. மார்க்சிசத்தின்படி, சோஷலிஸ உற்பத்தி உறவுகள் ஸ்தாபிக்கப்பட்ட உடனேயே, உற்பத்திச் சக்திகளை விடுவித்து, உற்பத்தியை அபிவிருத்தி செய்ய முடியும். இதில் நம்பிக்கை வைத்திருந்த மாவோ, உற்பத்திச் சக்திகளை வேகமாக அபிவிருத்தி செய்யும் பொருட்டு, உயர் அளவிலான சோஷலிஸ உற்பத்தி உறவுகளை சாதித்துக் கொள்வதற்காக விரைந்து செயலாற்றினார். எனவே, அவர் "மாபெரும் பாய்ச்சலை" துவக்கி வைத்ததுடன், மக்கள் கம்யூன்களை ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியம் குறித்தும் பேசினார். இங்கு மாவோ ஒரு விடயத்தை குறைவாக மதிப்பிட்டிருந்தார். அதாவது, உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்தி மட்டத்துடன் இணைந்து செல்லக் கூடியவையாக இருந்தால் மட்டுமே தாக்கமானவையாக இருக்க முடியும்; பொது உரித்து முறையில் உள்ளார்ந்த ரீதியாக காணப்படும் ஏதேனும் மேன்மை நிலையினால் இது ஏற்படுவதில்லை என்பதே அந்த விடயமாகும். *சீனாவின்* யதார்த்த நிலைமையை கவனத்தில் எடுக்காமல் (*சீனாவில்* உற்பத்திச் சக்திகள் குறைவிருத்தி நிலையிலேயே காணப் பட்டன) உற்பத்தி உறவுகள் தொடர்பான பிரச்சினையை அவர் நோக்கினார்.

மாபெரும் பாய்ச்சல் மற்றும் மக்கள் கம்யூன்கள் என்பவற்றின் தோல்வியுடன், ஸ்தாபிக்கப்பட்டிருந்த உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகளைத் தாண்டிச் சென்றிருந்தமையை தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. இதன் விளைவாக, பாரிய மற்றும் பொதுமக்கள் கம்யூன்களிலிருந்து பின்வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. விவசாயக் குடிமக்களின் அனுபவம் நிரூபித்துக் காட்டியுள்ளது போல, உற்பத்திப் பொறுப்பினை குடும்ப அலகுகளுக்கு கையளித்தமை வேளாண்மைத் துறை உற்பத்தியை சீர்திருத்துவதற்கு உதவியுள்ளது. உற்பத்தி உறவுகள் குறித்த இந்த முறை, கிராமப் புறச் *சீனாவில்* காணப்பட்ட உற்பத்தி உறவுகளின் அபிவிருத்தி மட்டத்துடன் முழு அளவில் பொருந்திச்

செல்வதாக இருந்தது. மாவோ இதனை புரிந்து கொண்டிருந்தார்.

நாங்கள் இதற்கும் அப்பால் செல்வதாக இருந்தால், செல்நெறி மற்றும் பாதை என்பன தொடர்பாக பிரச்சினைகள் தோன்ற முடியும் என அவர் கருதினார். இந்தக் கால கட்டத்தின் போது, மக்கள் கம்யூன்கள் மூன்று வகையான உரித்து வடிவங்களைக் கொண்டிருந்தன. கம்யூன் உரித்து, உற்பத்தி சார் படை அணி உரித்து மற்றும் உற்பத்திக் குழு உரித்து.

இங்கு மாவோ சீனாவின் யதார்த்த நிலைமைகளிலிருந்து பிரச்சினைகளை நோக்கவில்லை; மாறாக, சோஷலிஸத்தை அவர் புரிந்து கொண்ட விதத்திலிருந்தே அவற்றை நோக்கினார். மீண்டும் ஒரு முறை அவர் தன்னை சீனாவின் யதார்த்த நிலையிலிருந்து தூரப்படுத்திக் கொண்டார். இது தொடர்பான டெங் சியாவே பிங்கின் கருத்துக்கள் சரியானவையாக இருந்தன. சில பிரதேசங்களில் விவசாய உற்பத்தியை சீர்திருத்தி, அபிவிருத்தி செய்யக்கூடியதாக இருந்தால் அந்தப் பாதையை நாங்கள் பின்பற்றிச் செல்வோம் என அவர் கூறினார். "மக்களுக்கு வேண்டிய விதத்தில் நாம் விடயங்களை செயற்படுத்துவோம். அது சட்டபூர்வமானதாக இல்லாதிருந்தால், அதனை நாங்கள் சட்டபூர்வமானதாக ஆக்குவோம்; பூனையின் நிறம் என்ன என்பது முக்கியமல்ல; அதனால் எலி பிடிக்க முடியுமா என்பதே முக்கியமாகும்". இது வரலாற்று ரீதியான பொருள் முதல்வாதத்தின் அடிப்படைகளை சரியாகப் புரிந்து, செயலில் விடும் திறனை டெங் கொண்டிருந்தார் என்பதனையும், பிரச்சினைகளை நடப்பு நிலவரங்களின் கண்ணோட்டத்தில் நோக்கக்கூடியவராக இருந்தார் என்பதனையும் நிரூபித்துக் காட்டுகிறது.

நவ சீனாவின் உதயத்தின் பின்னர், நடப்பு நிலவரங்களிலிருந்து உண்மையைத் தேடும் முயற்சியில் மாவோ தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை என்று கூற முடியாது. பிரச்சினைகளை, பயனீட்டுக் கோட்பாட்டின் கண்ணோட்டத்திலேயே நோக்க வேண்டும் என அவர் சீனக் கம்யூனிஸ்டு கட்சிக்கு அடிக்கடி ஆலோசனை வழங்கி வந்தார். ஆனால், இது சரியாக செயற்படுத்தப்படவில்லை; உதாரணமாக, 1955-இன் விவசாய கூட்டுறவு இயக்க காலத்தின் போது சூ என் லாயும் ஏனைய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களும் "நாங்கள் அதிக தூரம் சென்றுவிட்டோம்" என்றும் "இதற்கும் அப்பால் செல்வதனை எதிர்க்க வேண்டும்" என்றும் கூறினார்கள். ஆனால், மாவோவின் மனப்போக்கு இதற்கு முற்றிலும் மாறுபட்டதாகவே இருந்தது.

விவசாயக் குடியானவர்கள் சோஷலிஸ பாதையில் அடியெடுத்து வைப்பதற்கு ஆவலுடன் காத்திருக்கிறார்கள் என்று அவர் கூறினார். வெகு தூரம் செல்வதனை எதிர்ப்பதனை நாங்கள் எதிர்க்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். மாவோவின் எடுகோள் தவறானது என்பதனை வரலாறு நிரூபித்துள்ளது. இது யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமையால் அவர் அதிலிருந்து வெகு தூரம் விலகியிருந்தார் என்பதனையே காட்டுகிறது. அவர் யதார்த்தத்தைப் புரிந்து கொண்ட போது சரியான கருத்துக்களை முன்வைத்தார். உதாரணமாக, நடப்பு விவரங்களை திரட்டுவதன் மூலம் ஆராய்ச்சி பலப்படுத்தப்பட வேண்டுமென 1961ல் அவர் கூறினார். ஓர் இடத்தைத் தெரிவு செய்து, அங்கே தங்கி, ஆராய்ச்சி செய்யுமாறு அவர் மத்திய தலைவர்களை கேட்டுக் கொண்டார். அவரும் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அவர்கள் (அதாவது தலைமைத்துவம்) யதார்த்தத்தைப் புரிந்து கொண்டமையால், பெருந்தொகையான சரியான கொள்கைகளை முன்வைப்பது சாத்தியமாயிற்று. இதன் விளைவாக, பல வருட காலமாக நிலைமை விருத்தியடைந்தது.

சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 11ஆவது மத்திய குழுக் கூட்டத்தின் மூன்றாவது அமர்வின்போது ஓர் அடிப்படை வரலாற்றுப் படிப்பினை பெறப்பட்டது: மார்க்சிசத்தின் அகிலம் தழுவிய அடிப்படைகள், சீன யதார்த்தங்களை கவனத்தில் எடுத்து, சீனாவின் உறுதியான நிலைமைகளுடன் இணைக்கப்பட வேண்டும். சிந்தனையை தளைகளிலிருந்து விடுவித்து, நடந்த நிகழ்வுகளிலிருந்து உண்மையைத் தேடுவதுடன் இணைந்த வகையில் புதிய கட்டத்தின் வரலாறு துவங்கியது. கடந்த பத்தாண்டு கால வரலாறு நெடுகிலும், நடந்த நிகழ்வுகளிலிருந்து உண்மையைத் தேடும் முயற்சி ஒரு சிவப்புக் கோடாக ஓடியுள்ளது. இது சீனக் குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸ கோட்பாட்டின் அடிப்படையாக இருந்தது.

சமீபத்தில் டெங் சியாவோ பிங் நூல் திரட்டின் பாகம் III வெளியிடப்பட்டது. முதலாவது கட்டுரையில் டெங் கூறுகிறார்: " ஒருவர் தனது சொந்தப் பாதையில் பயணித்தல்: சீனக் குணாம்சங்களுடன் கூடிய சோஷலிஸத்தை நாங்கள் கட்டியெழுப்புவோம்". இது சரியான பாதையை எடுத்துக் காட்டுகிறது. நிகழ்த்தப்பட்ட உரைகளின் முக்கிய விடயங்களை உள்ளடக்கிய இந்நூலின் கடைசிக் கட்டுரை, இந்தச் சித்தாந்த வழிக்கும் சிந்தனை முறைக்கும் முன்னுரிமை அளிக்கின்றது. டெங் ஒரு முறை ஒரு வெளிநாட்டுப் பயணியிடம் இப்படிக் கூறினார்: " நான் ஒரு முறை ஒரு சுய பகுப்பாய்வினை மேற்கொண்டேன். நான் சீர்திருத்தக் குழுவையோ அல்லது பாரம்பரிய குழுவையோ சேர்ந்தவனல்ல. நடந்த நிகழ்வுகளிலிருந்து உண்மையைத் தேடும் குழுவைச் சேர்ந்தவனாவேன். எமது கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை நாட்டின் யதார்த்த நிலைமைகளுக்கேற்ற விதத்தில் செயற்படுத்துவதே எனது குறிக்கோளாகும்". கடந்த பத்தாண்டு காலத்தின் போது டெங் இதனை செய்து வைத்துள்ளார். மூன்று விடயங்களை நோக்கும் போது இது தெளிவாக தெரிகிறது.

(1) அனைத்துக் கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் நூல்களை அடிப்படையாகக் கொண்டோ அல்லது கற்பனையான நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டோ உருவாக்கப்படவில்லை. யதார்த்தத்தின் அடிப்படையிலேயே அவை தயாரிக்கப்படுகின்றன. சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து வரும் யோசனைகளையே அவை அடிப்படையாகக் கொண்டுள்ளன. சாதாரண ஜனங்களின் முன் முயற்சிக்கு மதிப்பளிப்பதன் விளைவாகவும் அவை உருவாகின.

(2) சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டங்கள், கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் சரியான தன்மையை பிரயோகம் தீர்மானிப்பதற்கு இடமளித்தல். அதாவது, "சாட்சியத்துடன் பேசுவது."

(3) சரியான தருணத்தில் அனுபவங்களை தொகுத்து நோக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துதல். இதற்கூடாக, பல்வேறு சிக்கலான நிலைமைகளிலும் அபிவிருத்தி வேலைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வது உறுதிப்படுத்தப்பட்டதுடன், "மாபெரும் பாய்ச்சல்கள்" மீண்டும் நிகழ்வது தடுக்கப்பட்டது.

நடந்த நிகழ்வுகளிலிருந்து உண்மையைத் தேடும் சித்தாந்த வழி, சீர்திருத்த நிகழ்வுப்போக்கு மற்றும் சீனாவின் நவீனமயமாக்கலுக்கான திறந்துவிடல் என்பன தொடர்ந்தும் இடம்பெற்றுச் செல்லும் என்பதற்கான உத்தரவாதமாகும்.

# கியூபா புரட்சியின் 35ஆவது ஆண்டு நிறைவு

புரட்சிகர கியுபா 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி 35 ஆண்டுகளை நிறைவு செய்கின்றது. இந்தப் புரட்சி, அதனை நேரடியாக எதிர்கொண்ட தலைமுறையினரின் வாழ்க்கை மாதிரிகளில் மட்டுமன்றி, அதனையடுத்து வந்த பல தலைமுறையினரின் வாழ்க்கை மாதிரிகளிலும் பெரும் மாற்றங்களை எடுத்து வந்துள்ளது என்று கூறுவது மிகையாகாது. இங்கு "சாத்தியமில்லை" என்று கருதப்பட்ட ஒரு விடயம் சாத்தியமானதுடன், கனவுகள் யதார்த்தமாகின. அது மனிதர்களின் அறிவுடன் அன்றி இதயங்களுடன் பேசியது. இலத்தீன் அமெரிக்காவிலும் மற்றும் உலகின் ஏனைய பாகங்களிலும் வாழ்ந்து வந்த கோடிக்கணக்கான ஒடுக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையுணர்வினை அளித்தது.

புதிய ஆண்டொன்றுக்கு மட்டுமன்றி புதிய யுகம் ஒன்றுக்கும் கட்டியம் கூறிய அந்த உதயம் நிகழ்ந்து இப்பொழுது 35ஆண்டுகள் கடந்துவிட்டன. கியுபாவின் இந்த மகத்தான புரட்சி பிரமாண்டமான பல இடையூறுகளைத் தாண்டிவந்து, இப்பொழுது முதிர்ச்சி கண்டுள்ளது; பல வெற்றிகளைச் சாதித்துக் கொண்டுள்ளது. அதேபோல பல; தோல்விகளையும் பின்னடைவுகளையும் சரிவுகளையும் கூட அது சந்தித்து வந்துள்ளது. ஆனால், இடையூறுகள் சூழ்ந்த இந்தக் கடினமான காலகட்டங்கள் முழுவதிலும், அப்புரட்சி, புதிய சமுதாயமொன்றை புதியதோர் மனிதனை உருவாக்குவது தொடர்பான (பிடல் கஸ்த்ரோவினதும் ஏர்னஸ்டோ சேகுவேராவினதும்) தரிசனத்திற்கு விசுவாசமாக இருந்து வந்துள்ளது.

இன்று புரட்சிகர கியுபா அதன் வரலாற்றிலேயே கடும் இன்னல்கள் சூழ்ந்த ஒரு காலகட்டமொன்றுக்கு ஊடாக பயணித்துக் கொண்டிருக்கின்றது. உலகின் பல பாகங்களில் சோஷலிஸ அரசாங்கங்கள் வீழ்ச்சியடைந்து வந்ததனையடுத்து. கியுபா தனித்து நின்று, ஐக்கிய அமெரிக்கா என்ற ஜாம்பவானின் இடையறாத எதிர்த்தாக்குதல்களை சமாளித்துக் கொண்டிருக்கின்றது. அமெரிக்கா, கியுபாவின் புரட்சியை சிதைத்து விடுவதற்கான அதன் 35 வருடகால முயற்சியை இப்பொழுது இரட்டிப்பாக்கிக் கொண்டுள்ளது. இந்த மிகக் கடுமையான போராட்டத்தில் கியுபாவுக்குள்ள ஒரேயொரு ஆறுதல் அந்நாட்டில் வாழும் மக்களில் பெரும்பான்மையானவர்களின் ஆதரவும் (இம்மக்கள் மிகக் கடுமையான பொருளாதார கஷ்டங்களுக்கு மத்தியிலும் கூட புரட்சிக்கும் பிடல் கஸ்த்ரோவுக்கும் ஆதரவாக உறுதியாக அதன் போராட்டத்தின் தார்மீக பலமும் உலகெங்கிலும் வாழும் மக்களின் தோழமை உணர்வுமாகும்.

பிடல் கஸ்த்ரோ மிகச் சரியாகவே குறிப்பிட்டது போல,கோழைத்தனமும் சந்தர்ப்பவாதமும் மலிந்து காணப்படும் யுகமொன்றில் இன்று நாம் வாழ்ந்து வருகின்றோம். சுய முன்னேற்றமும் சுய அக்கறையும் முதல் முன்னுரிமை பெற்றுவரும் ஒரு யுகமாக, துரோகச் செயல்கள் மலிந்திருக்கும் ஒரு யுகமாக அது உள்ளது. வெற்றியை ஒரு போராட்டத்தின் ஏற்புத்தன்மையையும் தார்மீக மேன்மையையும் அளவிடுவதற்கான ஓர் அளவுகோலாக கவனத்தில் எடுக்கும் தவறினை நாம் இழைத்து விடக்கூடாது. கஸ்த்ரோ ஒரு முறை சொன்னார்: "வெற்றி என்பது, எந்த வகையிலும், நீங்கள் சரி அல்லது பிழை என்பதனை எடுத்துக் காட்டக்கூடிய ஓர் அளவுகோலாக இருந்துவருவதாக நான் நம்பவில்லை. நாங்கள் தோல்வி அடைந்திருக்க முடியும், அந்தத் தோல்வி ஏற்பட்டிருக்காவிட்டால், நாங்கள் தவறு என்பதனை அது நிரூபித்திருக்க மாட்டாது. இந்தப் போராட்டம் முழுவதிலும் பல, சந்தர்ப்பங்களில், நாம் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்வதற்கு அதிர்ஷ்டம் மட்டுமே ஒரே காரணமாக இருந்து வந்துள்ளது. எங்கள் குழு முற்று முழுதாக ஒழித்துக் கட்டப்படக்கூடிய சந்தர்ப்பங்களும் இருந்து வந்துள்ளன.அவ்விதமாக நாங்கள் ஒழித்துக கட்டப்பட்டிருந்தாலும் கூட, நாங்கள் சரியாக செயற்படவில்லை என்பதனையோ அல்லது நாங்கள் செய்தது சரியானது அல்ல என்பதனையோ அது அர்த்தப்படுத்தியிருக்க மாட்டாது. ("வரலாற்றின் முன்னோக்கிய பயணத்தை எதுவுமே தடுத்து நிறுத்தி விட முடியாது". ஜெப்ரி எலியட் மற்றும் மேர்வின் டைமலி ஆகியோருக்கு அளித்த பேட்டி). சுருக்கமாகச் சொல்வதனால், மனிதவரலாறு நெடுகிலும் தோல்வியடைந்துள்ள பல நியாயமான போராட்டங்கள் விரவிக் கிடப்பதனைக் காண்கிறோம்.

எதிர்காலம் எப்படியாக இருந்த போதிலும் ஒரு விஷயத்தை மட்டும் மிக உறுதியாகக் கூறிக் கொள்ள முடியும். புரட்சிகர கியுப்பாவை அழித்து ஒழித்து விடுவதற்கான தமது 35 வருட கால முயற்சியில் நீதியின் பகைவர்கள் வெற்றிகாண முடியும், ஆனால் கியுப புரட்சியின் மகத்தான முன்மாதிரியினை ஒருபோதும் அழித்துவிடமுடியாது. மிகப் பிரமாண்டமான இடையூறுகளுக்கு மத்தியிலும் கூட, நியாயத்துக்காகப் போராடுவது அவசியமானது. சாத்தியமானது என்பதனை சின்னஞ்சிறு கியுபா 35 வருட காலமாக முழு உலகுக்கும் எடுத்துக் காட்டி வந்துள்ளது. இந்தப் படிப்பினையை எதிர்காலப் போராளிகள் அனைவருமே நன்கு நினைவில் பதித்துக் கொள்வார்கள்.

ரீ. ஜீ.

# முதலாளித்துவ நிலைமாற்றம் : மார்க்சிசத்தின் தொடர்பும் வரையறைகளும்

ஜேம்ஸ் பெட்ராஸ்

சமூகவியல் பேராசிரியர், நிவ்யோர்க் அரச பல்கலைகழகம்

## அறிமுகம்

அதிகார வர்க்க கூட்டாண்மையின் வீழ்ச்சி, மார்க்சிசம், கோட்பாட்டு அடிப்படையிலும் அரசியல் நடைமுறையிலும் நிலைகுலையாமல் உள்ளது என்பதனை தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. மேலும், நீண்ட காலமாக இடம்பெற்று வரும் முதலாளித்துவத்தின் உலகளாவிய மந்தம் இப்பொழுது, வரலாற்று ரீதியில் முன்னெப்பொழுதும் எட்டியிராத மட்டங்களை எட்டியுள்ளது. இது முதலாளித்துவம் குறித்த மார்க்சிச விமர்சனத்தை நியாயப்படுத்துகின்றது. எவ்வாறிருப்பினும், மார்க்சிஸ்டுகள் இன்றும் உடனடி எதிர்காலத்திலும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பெரும் அச்சுறுத்தல்களைக் கொண்டனவாக உள்ளன.

தொடக்கத்தில் "மார்க்சிசத்தின் நெருக்கடி" என்று அழைக்கப்படுவதனை "புத்திஜீவிகளின் நெருக்கடி"யாக "மன உறுதியின் தோல்வி"யாக நாங்கள் கலந்துரையாடுவோம். முதலாளித்துவத்தின் மையங்களிலிருந்து தோன்றும் சக்திவாய்ந்த நிர்ப்பந்தங்களுக்கு மத்தியில், "மார்க்சிசத்தின் நெருக்கடி", முன்னைய மார்க்சிஸ்ட் புத்திஜீவிகளின் தப்பெண்ணங்கள் மற்றும் ஆற்றாமை என்பவற்றால் புற உண்மைகளை உள்ளபடி காட்டாத ஒரு யதார்த்தமாக நோக்கப்படுகிறது. இந்த நெருக்கடியின் "அகநிலையை" விவாதித்து பகுப்பாய்வு செய்வதானது, அதிகாரவர்க்க கூட்டாண்மை மற்றும் சமகால முதலாளித்துவத்தின் அமைப்பு ரீதியான இயக்கவியல் என்பவற்றின் அஸ்தமனத்தை பகுப்பாய்வு செய்வதில் மார்க்சிசத்தின் புறவயமான சம்பந்தம் குறித்த கலந்துரையாடலொன்றுக்கான வழியைத் திறந்துவிடும். எனவே, ஸ்டாலினிசத்தின் அஸ்தமனத்தை புரிந்து கொள்வதில் மார்க்சிசத்தின் சம்பந்தத்தினை கலந்துரையாடுவதன் மூலம் நாம் இதனை தொடங்குவோம். இது தொடர்பாக ஒரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்டுவது மிக முக்கியமானதாகும். பூர்ஷ்வா எழுத்தாளர்கள், முதலில், கம்யூனிசம் அழிவின் விளிம்பில் இருந்து வருவதாகவும், அதனையடுத்து, உள்ளக பரிணாம வளர்ச்சியை எடுத்துவர முடியாத ஒரு எதேச்சாதிகார முறையாக அது இருந்து வருகின்றது என்றும் வர்ணித்தனர். அதே வேளையில், மார்க்சிஸ்டுகள் கம்யூனிஸ்டு ஆட்சியின் (தொழிலாளர்களுக்கும் அதிகாரத்தத்துவ ஆட்சியாளர்களுக்குமிடையிலான கொந்தளிப்பு, சோஷலிஸ உற்பத்தி மற்றும் அதிகாரத்துவ கட்டுப்பாடு என்பவற்றுக்கிடையிலான கொந்தளிப்புகள் போன்ற) முரண்பட்ட இயல்பிலும், (கூட்டுநன்மை எதிர் சலுகை பெற்ற சிறு பிரிவினர் போன்ற) அதன் சித்தாந்த உரிமை கோரல்கள் குறித்தும் கவனம் செலுத்தி வந்தனர். சமகால முதலாளித்துவத்தின் மிக ஆழமான அமைப்புரீதியான இயக்கவியலை புரிந்து கொள்வதில் மார்க்சிசத்துக்கு இருந்து வரும் தொடர்பு குறித்து இப்பொழுது கலந்துரையாடுவோம். இந்த வகையில், மார்க்சீய பகுப்பாய்வு முறை லிபரல் மற்றும் புதிய, சாஸ்திரீய அணுகுமுறைகளிலும் பார்க்க உன்னதமானதொன்றாக இருந்து வருகின்றது. இது மறுபுறத்தில், சமகால மார்க்சிசம் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும், சவால்களையும் புரிந்து கொள்வதற்கும் எமக்கு வாய்ப்பளிக்கும்.

## புத்திஜீவிகளின் நெருக்கடி

இன்று கலந்துரையாடப்பட்டுவரும் "மார்க்சிசத்தின் நெருக்கடி" புத்திஜீவிகளின் மனஉறுதியின் நெருக்கடியொன்றாக இருந்து வருகின்றது. இது முன்னாள் இடதுசாரிகள், சமகால உலக முதலாளித்துவத்தின் அரசியல். இராணுவ வெற்றிகளுடன் கூடிய பிரமாண்டமான பிரசன்னத்தின் முன்னிலையில் முழு அளவில் சரணடைந்து போயுள்ளதனை குறிக்கிறது. முன்னைய இடதுசாரிகள் தமது எதிர்மறை பார்வையினால் அதிர்ந்து போயுள்ளனர். உலகச் சந்தை சர்வ வியாபகமாகியுள்ளது; சர்வேதச வங்கிகளின் விதிமுறைகள் ஒரே சீராக வலியுறுத்தப்பட்டு வருகின்றன; கைத்தொழில் துறை தொழிலாளர் வர்க்கம் பின்வாங்கத் தொடங்கியுள்ளது; ஐ. நா. அமைப்பு அமெரிக்க. ஐரோப்பிய உலகளாவிய போலீஸ் படையொன்றாக உருவாகியுள்ளது. முன்னாள் இடதுசாரிகள் இந்த "அருள்பாலிப்பு" தரிசனத்தை எதிர்கொண்ட நிலையில், சந்தையிலிருந்து இயங்குவதும், இலாப எல்லைகள் குறித்த வங்கிகளின் விதிமுறைகளை பின்பற்றுவதும், உள்ளூர் நடவடிக்கைகளுக்கு (சிவில் சமூகத்துக்கு) தமது நடவடிக்கைகளை சுருக்கிக் கொள்வதும், அரச தலையீடு

மற்றும் அரசஅதிகாரம் என்பவற்றை வன்மையாகக் கண்டிக்கும் கோஷ்டி கானத்தில் சேர்ந்துகொள்வதும், குறுகிய கலாச்சார அடையாங்களை வலியு றுத்துவதும் சிறந்தது என முடிவு செய்துள்ளார்கள்........ சுருக்கமாக சொல்வதானால், இவர்கள், உடனடியாக சாத்தியமாகக்கூடிய அல்லது நடைமுறைப்படுத்தக்கூடிய வற்றில் மட்டும் முயற்சிகளை மேற்கொள்ளும் கொள்கையை (Possibilism) இப்பொழுது பின்பற்றி வருகின்றார்கள்.

மேலைத்தேய தொடர்பு சாதனங் களும் அரசுகளும் (அதேபோல அவர்க ளுடைய உத்தியோகபூர்வ புத்திஜீவி வட்டாரங்களும்) மார்க்சிசத்தை அதிகாரவர்க்க கூட்டாட்சி முறைக ளுடன் இணைத்து நோக்குவதற்காக கடுமையான சித்தாந்த வழியிலான நிர்ப்பந்தங்களையும் தாக்குதல்களையும் தொடுத்து வந்துள்ளன. இந்தக் கடுமை யான தாக்குதலை எதிர்த்து நிற்கும் சக்தி இடதுசாரி இயக்கத்திடம் இல்லாதிருந்தமையே "மனஉறுதியின்" தோல்விக்கான மூலகாரணமாகும்.

அதிகாரத்துவ வர்க்க கூட்டாட்சி முறைகளின் வீழ்ச்சி மார்க்சிசத்தின் தோல்வியை பிரதிபலிக்கின்றது என்ற வகையில் பெரும்பாலானவர்களிடையே -குறிப்பாக இடதுசாரிகளிடையே- ஓர் எண்ணம் நிலவி வருகின்றது. இந்தக் கருத்து உலகளாவிய சமூக மற்றும் அரசியல் இயக்கங்களில் தீவிரமாக ஊடுருவி பரவியிருப்பதுடன், இது இடதுசாரிகளை -இந்த விடயத்தை வேறுவிதமாக புரிந்து கொண்டிருக்கும் இடதுசாரிகளையும் கூட-பெருமளவுக்கு பலவீனப்படுத்தியுள்ளது. இந்த எண்ணப்போக்கு, இதுவரையில் எத்தனையோ கெடுதல்களுக்கு வழிகோலியுள்ளது: லிபரல் அரசியல் அல்லது பிரிவு அடிப்படையிலான சீர்திருத்தவாத இயக்கங்கள் என்பவற்றை நோக்கிய கொள்கை மாற்றம், பொது விவாதத்துக்கான களத்தினை ஒடுக்கியமை, தொடர்பு சாதனங்களை பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு மறுக்கப்பட்டமை மற்றும் வெகுசன இயக்கங்களில் சோர்வினையும், சீர்குலைவினையும் எடுத்துவந்தமை என இந்தக் கெடுதல்களை விளக்கமுடியும்.

இரண்டாவதாக, கம்யூனிஸ்டு அல்லாத துறைகளையும் உள்ளடக்கிய இடதுசாரி அமைப்புக்களின் கணிச மான பிரிவுகள், கம்யூனிஸ்டு ஆட்சிகளின் பொருள் உதவியிலேயே தங்கியிருந்தன. இந்த கம்யூனிஸ்டு ஆட்சிகளின் அஸ்தமனம், உலக முதலாளித்துவ அமைப்புக்கு வெளியே இயங்குவதற் கான இடதுசாரிகளின் விருப்பினையும் ஆற்றலினையும் பெருமளவுக்கு கட்டுப்படுத்தியுள்ளன.

மூன்றாவதாக, ஸ்டாலினிஸத்தின் வீழ்ச்சி மற்றும் மார்க்சிசத்தின் கம்யூனிச அரச சித்தாந்தத்தை இணைத்தல் என்பவற்றின் பொருளை விளக்கும் விஷயத்தில், வெகுசன தொடர்பு சாதனங்களிலும், பொது விவாதங்க ளிலும் மேலைய உலகின் அரசியல் வர்க்கமும் கிழக்கின் முன்னைய ஸ்டாலினிஸ தலைவர்களும் ஏகபோகம் அனுபவித்து வருகின்றனர். இந்தச் சமன்பாட்டினை (அதாவது ஸ்டாலினி ஸத்தின் வீழ்ச்சி =மார்க்சிசத்தின் முடிவு) பொதுமக்களும் புத்திஜீவிகளும் ஏற்கச் செய்வதில் அவர்கள் வெற்றி கண்டுள்ளனர். மார்க்சிசத்தை ஸ்டாலினிசத்திலிருந்து பிரித்து, வேறுபடுத்தி நோக்கும் பணி மிகக் கடினமானதாக உள்ளது.

இந்தக் காரணங்களால், சோவியத் கம்யூனிசத்தின் வீழ்ச்சி (ஸ்டாலினி சத்துக்கு எதிரான மார்க்சிஸ்டுகள் நம்பியதைப் போல), மார்க்சிச கோட்பாட்டையும் நடைமுறையையும் நியாயமாக கவனத்தில் எடுப்பதற்கான வழிகளை திறந்துவிடவில்லை; தன்னாதிக்கமுடைய மார்க்சிச இயக்கங்களின் வளர்ச்சிக்கு வழிகோலவுமில்லை. இன்றைய உலகில், இதன் பின்விளைவொன்றாக, பெரும்பாலான கல்விமான்கள் மற்றும் அரசியல் செயல்வீரர்கள் என்போருக் கிடையேயான விவாதங்களில், மார்க்சிசம் காலாவதியாகிவிட்ட ஒரு சித்தாந்தமாக நோக்கப்பட்டு வருகிறது.

### மார்க்சிசத்துக்கு பிற்பட்ட விமர்சனங்கள்

ஒரு சில எழுத்தாளர்களைப் பொறுத்தவரையில், ஸ்டாலினிஸத்தின் அஸ்தமனம் லிபரல் ஜனநாயகத்தின் உலகளாவிய எழுச்சியை – வரலாற்றின் முடிவை -குறித்தது. இந்தக் கருத்தின்படி, கம்யூனிஸ்டு புரட்சிகள், லிபரல் ஜனநாயக முதலாளித்துவத்தை நோக்கிய வரலாற்றின் பயணத்தில் ஒரு சுற்றுப்பாதையாக இருந்தது. வேறு சில எழுத்தாளர்கள், கம்யூனிஸ்டு புரட்சிகள் பூர்ஷ்வாக்களின் புரட்சிகளின் பின்னணியில் இருந்த மறைந்த கரமாகும் என கருதினர். மேலும், அவை, சமூகத்தில், மண்டிக் கிடந்த முதலாளித்துவத்துக்கு முற்பட்ட இடிபாடுகளை அகற்றி, புதிய, முனைப்பு மிகுந்த முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டமொன்றுக்கான பாதையை தயார்படுத்தின என்றும் அவர்கள் கருதினர்.

வரலாற்றின் முடிவு குறித்த விவாதம், லிபரல் முதலாளித்துவத்தை, தனக்கேயுரிய எழுச்சி, முதிர்ச்சி, வீழ்ச்சி மற்றும் நிலைமாற்றம் என்பவற்றைக் கொண்ட வரலாற்று ரீதியாக குறித்துரைக்கப்பட்ட ஒரு சமூக முறையாக நோக்கத் தவறுகின்றது. முதலாளித்துவ சமூகங்களில் காலத்துக்குக் காலம் ஏற்படும் சீர்குலைவுகள், நலிவுற்ற நிலையில் இருக்கும் அரசுகள் மீது அவை மேற்கொள்ளும் வன்முறையுடன் கூடிய ஊடுருவல்கள், அவற்றின் இடையறாத விஸ்தரிப்பு, எளிதில் ஊறுபடத்தக்க பொருளாதாரங்கள் மீதான அவற்றின் மேலாதிக்கம், மூலவளங்களை திசை திருப்பி, உலகளாவிய தலைமைத் துவத்தின் பெயரில் உள்நாட்டுச் சமூகங்களை வறுமையின் பிடிக்குள் எடுத்துவருதல் ஆகியன அனைத்தை யும் அடுத்து, விரயத்தையும் பேரழிவுகளையும் எடுத்துவரும் போர்கள் தோன்றுகின்றன. இவற்றுட் சில இறுதியில் முதலாளித்துவத்துக்கு எதிரான புரட்சிகளாக மாற்றம டைகின்றன. இப்புரட்சிகளில் சில பின்னர் திசை திரும்புகின்றன. சுருக்கமாக சொல்வதானால், "சுதந்திரமான சந்தைகள்" மற்றும் "லிபரல் ஜனநாயகம்" என்பவற்றை நோக்கிய நேர்கோட்டு முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது என்று விவாதிப்பதற்கு (கடந்தகால அல்லது தற்கால) வரலாற்று அடிப்படை எதுவும் இல்லை. முதலாளித்துவம், அது லிபரல் ஜனநாயக முதலாளித் துவமாக, எதேச்சாதிகார முதலாளித்து வமாக, அரசை மையமாகக்கொண்ட

அல்லது சந்தையை நோக்கிய முதலாளித்துவமாக எதுவாக இருந்தாலும் சரியே, உள்ளக மற்றும் வெளிநேரெதிர் சக்திகளுக்கிடையிலான கொந்தளிப்பின் விளைவாக பரிணாம வளர்ச்சிடைந்துள்ளது; மூலதனத்துக்கும் ஊழியத்துக் குமிடையே உள்ளக முரண்பாடுகள் தோன்றுகின்றன; போட்டியிடும் மூலதனங்களுக்கிடையே வெளியில் முரண்பாடுகள் தோன்றுகின்றன. காலத்துக்கு காலம் ஏற்படும் புரட்சிகளும் எதிர்புரட்சிகளும் உள்ளக முரண்பாடுகளை பிரதிபலிக்கின்றன; உலக பிராந்திய மற்றும் வர்த்தகப் போர்கள் வெளி முரண்பாடுகளாகும்.

இரண்டாவதாக, கம்யூனிஸத்தின் வீழ்ச்சி முதலாளித்துவ சமூக வர்க்கமொன்றினால் எடுத்துவரப்படவில்லை; அத்துடன், இந்த வீழ்ச்சியை அடுத்து ஜனநாயக-முதலாளித்துவ சமூகமொன்றோ அல்லது பொருளாதாரமொன்றோ எழுச்சியடைவில்லை. முதலாளித்துவ சிந்தனையில் ஊறிப்போயிருந்த (ஆனால், முதலாளித்துவம், அதன் அபிவிருத்தி மற்றும் சந்தைகள் என்பவற்றுடன் எவ்விதமான வரலாற்றுப் பிணைப்புக்களையும் கொண்டிராத) அதிகாரத்துவ மேட்டுக்குடியினர் வர்க்கமொன்றினாலேயே கம்யூனிசம் தூக்கியெறியப்பட்டது. இந்த அமைப்பில் முதலாளித்துவத்துக்கு ஓரளவுக்கேனும் அண்மித்து காணப்பட்ட வர்க்கம், திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தின் இடுக்குகளைப் பயன்படுத்தி, தடை செய்யப்பட்ட பண்டங்களின் வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்த வர்க்கமாகும். முதலாளித்துவமல்லாத ஒரு வர்க்கத்தினால் முதலாளித்துவம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்விளைவு, செயற்படுத்துவதற்கு பொருத்தமான சமூக முகவரங்களைக் கொண்டிராத சமூகமான்றுக்குள் கொள்கைகளையும் நடைமுறைகளையும் திணிப்பதாகும். உள்நாட்டு முதலாளித்துவ வர்க்கமொன்றுக்குப் பதிலாக, ஒரு புறத்தில், மேலைத்தேய முதலாளித்துவத்தின் இடைத்தரகர் குழுவொன்றும், மறுபுறத்தில், சக்தி வாய்ந்த கொள்கைக் கும்பலொன்றும் (Mafia) எழுச்சியடைந்துள்ளது. இந்தக் கும்பல்கள் இன்றைய பொருளாதாரத்தின் பொது மூலவளங்களை கொள்ளையடித்து வருவதுடன், வெளிநாட்டுக் கடன்களை உற்பத்திப் பெருக்கத்துக்கு பயன்படுத்தாது, வெளிநாட்டு வங்கிக் கணக்குகளுக்கு திசைதிருப்பிக் கொண்டுள்ளன. இவற்றின் விளைவாக, கம்யூனிசத்துக்கு பிற்பட்ட இன்றைய சமூகங்கள் பாரிய அளவிலான சீரழிவுகளை எதிர்நோக்கி வருகின்றன. நீண்டகால வேலையில்லாத் திண்டாட்டம், குற்றச்செயல்கள், விபச்சாரம், உற்பத்தியிலும் நுகர்விலும் வீழ்ச்சி என இந்தச் சீரழிவுகளை விளக்க முடியும். இதனுடன் இணைந்த விதத்தில், எதேச்சார ஆட்சியாளர்கள் உருவாகியிருப்பதுடன், பொருளாதாரக் கொள்கையில் வெளிநாட்டுச் செல்வாக்கு மேலோங்கி வருகின்றது. கூட்டு கம்யூனிச ஆட்சி முறைகள் தூக்கியெறியப்பட்டமையையடுத்து லிபரல் ஜனநாயகமோ அல்லது முதலாளித்துவமோ ஏற்படவில்லை. சோவியத் யூனியனின் சிதைவும் அதன் பின்னர் மேலைத்தேய சார்பு ஆட்சியாளர்கள் அதிகாரத்துக்கு வந்தமையும் கூட நிலையான தேசிய அரசுகள் ஸ்தாபிக்கப்படுவதற்கேனும் வழிகோலவில்லை. இனத்துவ அடிப்படையிலான பிரிவுகள், உள்நாட்டுப் போர்கள், தேசியவாத மற்றும் மத அடிப்படையிலான எதேச்சாதிகாரம் என்பன கம்யூனிசத்துக்கு பிற்பட்ட உலகின் மிக முக்கியமான குணாம்சங்களாக இருந்து வருகின்றன.

"வரலாற்றின் முடிவு" என்ற காட்சிக்கு நேர்மாறான விதத்தில், கம்யூனிஸத்துக்குப் பிற்பட்ட பல சமூகங்கள், சமூக மற்றும் கலாச்சார விடயங்களில் பின்னோக்கிச் சென்றுள்ளன. 19ஆம் நூற்றாண்டின் நோய்கள் மீண்டும் தோன்றியுள்ளன; கருக்கலைப்புக்கள்மீது மீண்டும் தடைகள் எடுத்துவரப்பட்டுள்ளன. ஓய்வு பெற்றவர்களிடையே நிலவிவரும் பரவலான ஏழ்மை இப்பொழுது ஒரு பொது நிகழ்வாகியுள்ளது. நன்கு பயிற்றப்பட்ட விஞ்ஞானிகள், ஒன்றில் வேலையற்றவர்களாக இருந்து வருகின்றனர், அல்லது சொற்ப சம்பளத்துக்காக வேலை செய்து வருகின்றனர். கம்யூனிஸத்தை முறியடித்து, லிபரல் ஜனநாயகத்தினதும் முதலாளித்துவத்தினதும் இறுதி வெற்றியாக இருக்குமென எது கருதப்பட்டதோ, அது, இப்பொழுது, தேசிய அரசினை சீர்குலைவுக்கு இட்டுச் செல்லும் ஒரு நிகழ்வாக மாற்றமடைந்துள்ளது. இதன் விளைவாக, இனக் குழுக்களின் மோதல்களும், பொது வாழ்க்கையின் சீர்குலைவும், உற்பத்தி அமைப்புக்களின் நாசமும் ஏற்பட்டுள்ளன. சந்தைச் சக்திகள் வெற்றி கண்டிருக்கும் அனைத்து நாடுகளிலும் இப்பொழுது வெகு சனங்களின் அதிருப்தி பரவி வருவதற்கான அடையாளங்கள் தென்படுகின்றன. சுதந்திரச் சந்தையினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வரவர பெருகிவரும் ஒரு நிலையில், உண்மையில் முடிவுக்கு வந்திருப்பது சந்தை மீளமைப்புத் தொடர்பான ஜய பேரிகைகளுடன் கூடிய கொண்டாட்டங்களாகும். கம்யூனிஸம் தூக்கி எறியப்பட்டமையை முதலாளித்துவ முன்னேற்றத்துக்கு வழிகோலக்கூடிய ஒரு பூர்ஷ்வா புரட்சியாக நோக்க முடியவில்லை; இதற்கு மாறாக (குறிப்பாக, முன்னைய சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும்) கம்யூனிஸத்துக்கு பிற்பட்ட ஆட்சிகள் எழுச்சியடைந்து இருப்பதனை வரலாற்று ரீதியான ஒரு பின்னோக்கிய பயணமாக நோக்குவதே அநேகமாக பொருத்தமானதாக இருக்கும். இது ஒருவேளை, புத்துயிர் ஊட்டப்பட்ட, ஒரு புதிய வடிவத்தினைக் கொண்ட ஜனநாயக கூட்டாண்மை ஆட்சிக்கான பயணத்தை நோக்கிய ஒரு சுற்றுவழிப் பாதையாக இருக்கக் கூடும்.

### கம்யூனிஸம் குறித்த மார்க்ஸிஸ விமர்சனம்

நாங்கள் ஒரு கணத்துக்கு மார்க்ஸிஸத்துக்கு பிற்பட்ட புது பாணிகளை மறுத்து, மார்க்ஸிஸத்தின் அத்தியாவசியமான பகுப்பாய்வு வகைகளை இனங்கண்டு கொள்வோமேயானால், அவை, சமகால முதலாளித்துவத்தின் பேரளவிலான நீண்டகால அமைப்பு ரீதியான போக்குகளை எதிர்த்து நிற்பதில் எந்த அளவுக்கு ஆற்றலினைக் கொண்டுள்ளன என்பதனை கண்டு கொள்ள முடியும். இங்குள்ள அடிப்படையான விடயம் இப்பொழுது இடம்பெற்றுவரும் அமைப்பு ரீதியான மாற்றங்களைப் புரிந்து கொள்வதில் மார்க்ஸிஸமே பெருமளவுக்கு உதவ முடியும் என்பதாகும்; இவற்றைப் புரிந்து கொள்வதற்கு புதிய சாஸ்திரிய பொருளாதாரமோ அல்லது லிபரல் அரசியலோ எமக்கு உதவ முடியாது. மேலும், ஸ்டாலினிஸத்தின் பரிணாம வளர்ச்சி, நெருக்கடிகள் மற்றும்

அஸ்தமனம் என்பன மார்க்ஸிஸ சிந்தனையாளர்களினால் மிகச் சிறந்த முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன், எதிர்பார்க்கவும்பட்டன.

போஷவிக் கட்சியின் கட்டமைப்பில் காணப்பட்ட எதேச்சாதிகாரப் போக்குகளை முதலில் ரோசா லக்ஸம்பேர்க் இனங்கண்டு கொண்டு இருந்தார். புதிய அரச இயந்திரம், உழைக்கும் வர்க்கத்திடமிருந்து மிகைகளைப் பிரித்தெடுத்துக் கொள்ளும் ஒரு விசேஷ சமூக அரசியல் முறையாக உள்ளது என்பதனை லியோன் ட்ரொஸ்கி கட்டிக் காட்டினார். இந்த ஆட்சிமுறை சமத்துவம் தொடர்பான நெறிகளைப் புறக்கணித்து, அரசின் புரட்சிகர தோற்றப்பாடுகளை முரண்படச் செய்து வருகின்றது என்றும் அவர் கருதினார். மார்க்ஸீய வரலாற்று ஆசிரியரான ஐஸக் டியோட்ஸர் முதலாளித்துவ மீளமைப்பினை நோக்கிய பரிணாம வளர்ச்சியொன்றிற்கான சாத்தியப்பாடு குறித்து கலந்துரையாடினார். மார்க்ஸிஸ்ட் தத்துவஞானியான ஹேபர்ட் மார்கூஸ் "மார்க்ஸீய சித்தாந்த பாரம்பரியத்தின் ஒரு பாகத்தை நாம் பின்பற்றி வருகின்றோம்" என்ற சோவியத் யூனியனின் உரிமை கோரல்களை கடுமையாக மறுத்துரைத்தார். ஸ்டாலினிஸ ஆட்சி முறையின் நெருக்கடிகளையும் முதலாளித்துவத்தின் மீளமைப்பினையும் புரிந்துகொள்வதற்காக மார்க்ஸீய இயங்கியல் முறை, வர்க்கப்பகுப்பாய்வின் உபயோகம், வர்க்க முரண்பாடுகள் தொடர்பான எண்ணக்கருக்களை பிரயோகித்தல், வர்க்க முரண்பாடுகள் மற்றும் அரசின் வர்க்க இயல்பு குறித்த எண்ணக்கரு என்பன அவசியமாகும். ஸ்டாலினிஸம் அதன் சொந்த சீர்குலைவினை எவ்வாறு விளக்க முடியாததாக இருந்ததோ, அதேபோல, கம்யூனிஸத்துக்கு பிற்பட்ட லிபரல் முதலாளித்துவம், அதன் நிறுவனங்களும் கொள்கைகளும் இப்பொழுது எதிர்கொண்டு வரும் நாசகரமான நெருக்கடிகளை விளக்கும் திறனற்று திணறிக் கொண்டிருக்கின்றது.

### மார்க்ஸிஸத்தின் தொடர்பு

இன்று முதலாளித்துவ உலக பொருளாதாரத்தில் இடம் பெற்று வரும் மிக முக்கியமான அமைப்பு ரீதியான மாற்றங்களைப் புரிந்து கொள்வதில் மார்க்ஸிஸமே மிகவும் உபயோகமான ஒரு கண்ணோட்டமாக இருந்து வருகின்றது. எனினும், மார்க்ஸீய கோட்பாட்டுவாதிகள், கடந்த கால் நூற்றாண்டு காலமாக வர்க்க அமைப்புக்கள், தொழில் நுட்பங்கள், அரச/ சிவில் சமூக உறவுகள் என்பவற்றில் ஏற்பட்டு வந்துள்ள பாரிய மாற்றங்களை அங்கீகரிக்க வேண்டும். இல்லாவிடின், சமகால உலகினைப் பகுப்பாய்வு செய்வதிலும், பொருத்தமான ஒரு மாற்றுவழியை வடிவமைப்பதிலும் அவர்களுடைய கோட்பாட்டு அணுகுமுறை பொருத்தமற்றதாகி விடும்.

மிக முக்கியமான சமகால அமைப்பு ரீதியான நிகழ்வுப்போக்குகளை மார்க்ஸீய கட்டமைப்பொன்றுக்குள் நன்கு புரிந்து கொள்ள முடியும். அடிப்படைக் கருதுகோள்களுடன் தொடர்புபட்ட விதத்தில் இந்த நிகழ்வுப்போக்குகளை மீளாய்வு செய்வது மார்க்ஸிஸ கோட்பாட்டின் உபயோகத்தினை எடுத்து விளக்கும்.

1. நாடுகளுக்கிடையிலும் பிராந்தியங்களுக்கிடையிலும் மூலதனம் ஒன்று திரண்டிருப்பதும், மத்தியமயமாகியிருப்பதும், அகிலம் தழுவிய தொழில் முயற்சிகளின் வளர்ச்சியினை அடுத்து நிறுவனங்கள் ஒன்றுடனொன்று இணைவதும், கொள்வனவு செய்வதும் மார்க்ஸீய பகுப்பாய்வில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாளித்துவ விதியின் ஒரு குறிகாட்டியாகும்.

2. முதலாளித்துவ விஸ்தரிப்பு மற்றும் போட்டி என்பவற்றுடன் இணைந்தவிதத்தில் சுரண்டல் தீவிரமடைதல், பெருகுதல், வருமான வீழ்ச்சி, சுகாதாரம், ஓய்வூதியம், விடுமுறை போன்ற சலுகைகள் ஒழிக்கப்படுதல், ஊழியத்தின் உற்பத்தித் திறன் வளர்ச்சி, உழைப்பு நேர நீடிப்பு போன்றவை மார்க்ஸீய பகுப்பாய்வுக்கு சான்று பகர்கின்றன.

3. பெருகிவரும் வர்க்க ஏற்றத்தாழ்வுகளும் சமூகக் கூர்மையடைதலும்: ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்கா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஆசியா ஆகிய பிராந்தியங்களில், சுதந்திரச் சந்தைக் கொள்கைகள், சமூகப் பாதுகாப்பு முறைகளை சீர்குலைத்துள்ளன. செல்வம் ஒரு சிலரின் கைகளில் ஒன்று திரண்டு வரும் வளர்ச்சி மாதிரியொன்றுக்கும், உப பாட்டாளி வர்க்கமொன்றின் வளர்ச்சிக்கும் அது பங்களிப்புச் செய்துள்ளது.

4. முதலாளித்துவத்துக்கு இடையிலான போட்டி பெருகி வருதல்: வர்த்தகப் போர்கள், முக்கியமான முதலாளித்துவ எதிரெதிர் அணிகளினால் கூட்டுக்கள் உருவாக்கப்படுதல், ஏகாதிபத்தியவாத சக்திகளுக்கிடையிலான பகைமைகள் மீள உருவாகுதல் என்பன, ஒன்றுக்கு ஒன்று ஒத்தாசை புரியும், இணக்கத்துடன் கூடிய சந்தை உறவுகள் தொடர்பான புதிய சாஸ்திரீய பொருளாதாரக் கருதுகோள்களை முற்றாக புறக்கணிக்கின்றன.

5. நெருக்கடிகள் மற்றும் தேக்கம் என்பவற்றை எடுத்துவரக் கூடிய முதலாளித்துவத்தின் போக்குகள்: போர் பொருளாதாரங்களின் வீழ்ச்சி, மீட்சியையும் வளர்ச்சியையும் தூண்டிவிடும் ஆற்றலைக் கொண்ட புதுமைப் புனைவுகள் இல்லாதிருத்தல், பெருகிவரும் கடன் சுமை, நிதிப் பற்றாக்குறைகள், வளர்ந்து வரும் உற்பத்தித் திறன் மற்றும் குறுகிவரும் நுகர்வோர் அடித்தளம் என்பவற்றுடன் இணைந்தவிதத்தில் நெருக்கடிகளை தோற்றுவிக்கக் கூடிய உள்ளார்ந்த போக்குகள் முன்னணிக்கு வந்துள்ளன.

6. நன்கு வளர்ச்சியடைந்துள்ள முதலாளித்துவ அரசுகளுக்கும் குறைவிருத்தி நிலையில் இருந்து வரும் முதலாளித்துவ அரசுகளுக்கிடையிலான உறவுகளை நிர்ணயம் செய்வதில் ஏகாதிபத்தியவாதம் ஒரு முக்கியமான அம்சமாக இருந்து வருகின்றது. மேற்கு ஐரோப்பிய மற்றும் ஐக்கிய அமெரிக்க மூலதனத்தின் மேலாதிக்கத்துக்கு கிழக்கு ஐரோப்பாவும் முன்னைய சோவியத் யூனியனும் சரணடைந்ததனை காரணமாக அவற்றின் பொருளாதாரங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. அதேபோல சீனாவின் சந்தைக்குள் ஜப்பான், ஹொங்கொங், தாய்லாந்து போன்ற நாடுகள் ஊடுருவிச் சென்று, தமது மேலாதிக்கத்தினை நிலைநிறுத்தி

வருகின்றன. இவை அனைத்தும், அகிலம் தழுவிய விஸ்தரிப்புடன் கூடிய ஏகாதிபத்திவாதம் எமது சகாப்தத்தின் மிக முக்கியமான உந்து விசையாக இருந்து வருகின்றது என்பதற்கு சான்று பகர்கின்றன.

7. வரலாற்றின் இயக்கச் சக்தி என்ற முறையில் வர்க்கப் போராட்டம்: இன்று அநேகமாக அனைத்து அரசியல் கலந்துரையாடல்களிலும் போட்டித் திறன், ஊழியத்தின் நெகிழ்ச்சித்தன்மை போன்ற பதங்கள் அடிக்கடி பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. இப்பதங்கள் ஊழிய/மூலதன உறவில் ஏற்பட்டுள்ள ஒட்டுமொத்தமான மாற்றங்களை விளக்குகின்றன. கடந்த இரு தசாப்த காலமாக, முதலாளித்துவ வர்க்கமும் அதன் அரச பிரதிநிதிகளும் நிரந்தரத் தொழிலாளர்களை தற்காலிக தொழிலாளர்களாக மாற்றியமைத்தும், வேலை விதிகளை மாற்றியமைத்தும் வலையின் மீது முழுக் கட்டுப்பாட்டினை மேற்கொண்டும் ஒரு தீவிரமான வர்க்கப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர். இந்த வர்க்கப் போராட்டம் தொடர்பான தொழிலாளர்களினதும் தொழிற்சங்கங்களினதும் எதிர் விளைவு இந்த நிகழ்வுப்போக்கின் சாராம்சத்தினை எந்த வகையிலும் மறைத்துவிடவில்லை. அதாவது, ஒரு முதன்மை வர்க்கம், அதன் அதிகாரத்தை மற்றொரு வர்க்கத்தின் மீது வலிந்து திணிப்பதற்கு முயன்று வந்துள்ளது.

8. அரசின் வர்க்க இயல்பு: முன்னணி முதலாளித்துவ வர்க்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் முக்கியமான பொருளாதார நிகழ்வுப் போக்குகளுக்கு வசதி செய்து கொடுப்பதற்கு அரச கொள்கையில் ஆகக் கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. அரச கொள்கைகள் ஊழியத்தின் மீளமைப்பினையும் தொழிற்சங்கங்களின் நலிவினையும் ஊக்குவித்து வருகின்றன. மூலதன அசைவுகள், அரச வரிக் கொள்கைகள் மூலம் மானியப்படுத்தப்பட்டுள்ளன. அரச ஒழுங்கு விதித் தளர்ப்பினால் மூலதனம் ஒன்றுதிரட்டப்படுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. அரச தலையீட்டுக் கூடாக தனியார் நட்டங்கள் பொதுத் திறைசேரிக்கு மாற்றப் படுகின்றன.

9. அரசு என்பது வர்க்கங்களுக்கிடையில் மத்தியஸ்தம் செய்து வைக்கும் ஒரு தன்னாதிக்க அலகாக இருந்து வரவில்லை; அதன் முக்கியமான தீர்மானங்களை அதன் வர்க்க இயல்பின் கட்டமைப்புக்குள் நன்கு புரிந்து கொள்ள முடியும்

## உலக வரலாற்று மாற்றங்கள் -மார்க்ஸிஸத்துக்கான சவால்

கடந்த இரண்டு தசாப்த காலமாக வர்க்கக் கட்டமைப்பு, ஊழிய நிகழ்வுப்போக்கு, தொழில்நுட்ப பிரயோகம், மூலதனத்தின் அமைப்பு, வர்க்கங்களின் அமைப்பு தொடர்பான சித்தாந்தம், குடும்பம், நகரங்களின் அமைப்பு, உலகளாவிய அரசியல் பொருளாதாரத்தில் அதிகாரத்தின் அமைப்பு ஆகிய அனைத்திலுமே பாரிய மாற்றங்கள் இடம்பெற்று வந்துள்ளன.

1. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் கிழக்கு ஐரோப்பா, இலத்தீன் அமெரிக்கா, முன்னைய சோவியத் யூனியன் மற்றும் ஆபிரிக்கா ஆகியவற்றின் முக்கிய பிராந்தியங்களிலும் நிரந்தர கூலித் தொழிலாளர்கள் அதேபோல பாரிய மூலதன முதலீட்டாளர்கள் ஆகிய இரு பிரிவினரும் நலிவுற்று சிறுபான்மையினராகி வந்துள்ளனர்; கைத்தொழில் யுகத்துக்குப் பிற்பட்ட ஊழியர் படையில் முக்கியமான மாற்றங்கள் தென்படுகின்றன. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் குறைந்த வேதனம் பெறும் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களும், சேவைத் துறைகளில் தொழில் தேர்ச்சி பெற்றவர்களும் எண்ணிக்கையில் பெருகி வருகின்றனர். உயர் தொழில்நுட்பம் என்பதன் பொருள், உற்பத்தி மற்றும் விநியோகம் என்பன குறைந்த கூலிபெறும் சேவைத் துறை தொழிலாளர்களால் நடாத்தப்பட்டு சிறிய எண்ணிக்கையிலான உயர்ந்த சம்பளம் பெறும் நிரந்தரமான தொழிலாளர்களினாலும் அதிகாரிகளினாலும் பராமரிக்கப்பட்டு வரும் அமைப்புக்களாகும். மூன்றாவது உலக நாடுகளில் சுய தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டு வருகின்றது. இவர்கள் மலிவான பொருட்களை விநியோகிப்பவர்களாக செயற்பட்டு வருவதுடன், சுழல்முறை உற்பத்தி ஊழியத்துக்கு குறைந்த கூலியில் கிடைக்கக் கூடியவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

2. மூலதனச் செறிவுமிக்க உயர்தொழில்நுட்பத்துக்கும் ஊழியச் செறிவுமிக்க முறைக்கும் இடையிலான உறவுகளும் அவை இரண்டினதும் இணைந்த வளர்ச்சியும் உலகளாவிய உற்பத்தி சங்கிலித் தொடர் முறை ஒன்றையும் மூலதனத்துக்கான மாற்று முதலீட்டு உத்திகளையும் வழங்கியுள்ளன. உற்பத்தியின் உலகமயமாக்கல் மற்றும் தேசிய எல்லைகளைக் கடந்த விதத்தில் மூலதனத்தின் பாய்ச்சல் என்பவற்றுடன் இணைந்த விதத்தில், மூலதனத்தின் தெரிவு செய்யப்பட்ட ஒரு முதலீட்டு முறை தோன்றியுள்ளது. இடம்பெயர்ந்த அல்லது தேசிய எல்லைகளுக்குள் இருக்கும் குடி பெயர்ந்து வந்த ஊழியத்தினைப் பயன்படுத்தி இங்கு உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், இந்த உற்பத்தி முறை ஊழியத்தினை மிகை அளவில் சுரண்டி வருகின்றது.

3. மூலதனத்தின் சர்வதேச விஸ்தரிப்புக்கான ஓர் உபகரணம் என்ற முறையில் தேசிய அரசினைப் பலப்படுத்துவதுடன் இணைந்த விதத்தில், மூலதனத்தின் சர்வதேச நடவடிக்கைகளையும் அரசினையும் நிலைநிறுத்தி வந்த தேசியப் பொருளாதாரம் அரித்துச் செல்லப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் மூலவளங்கள் உலகளாவிய சந்தைகளை நோக்கி திசை திருப்பப்பட்டதன் விளைவாக, அரசு நிதி நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி இருப்பதுடன் சம்பளங்களிலும் சமூகச் செலவினங்களிலும் பாரிய வெட்டுக்களை மேற்கொள்ள வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. உலகளாவிய போட்டி அதிகரிக்கும் பொழுது உள்நாட்டுச் சமூகத்தில் சீரழிவு தோன்றுகின்றது.

4. ஆண் தொழிலாளர்களின் கூலிகளில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி (குடும்ப வருமானத்தில் ஏற்படும் பற்றாக் குறையை ஈடுசெய்யும் நோக்குடன்) பெரும் எண்ணிக்கையிலான பெண் ஊழியர்கள் சந்தைக்குள் வருவதற்கு வழி கோலியுள்ளது. இவர்கள் வறுமையை தவிர்த்துக் கொள்ளும்

நோக்கில் இவ்விதம் ஊழியச் சந்தையில் பிரவேசிக் கின்றார்கள். உணவு, உடை மற்றும் இலத்திரனியல் பொருட்கள் என்பவற்றின் உற்பத்தி குறைந்த கூலி விகிதங்களைக் கொண்டுள்ள மூன்றாவது உலகினைச் சேர்ந்த நாடுகளில் பரவியிருப்பதும், முதலாவது உலகின் நாடுகளுக்கு அத்தகைய பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதும் மலிவான நுகர் பொருட்களை பெற்றுக் கொடுக்கின்றன. கூலியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியை இவை ஈடுசெய்கின்றன. மேலைத்தேச நாடுகளில் வாழும் குறைந்த கூலிகளைப் பெற்றுக் கொள்ளும் தொழிலாளர்கள் வருமான வீழ்ச்சிகளுக்கு மத்தியிலும்கூட மலிவான இறக்குமதிகள் காரணமாகவும் இலகுவான கடன் வசதிகள் காரணமாகவும் நுகர் பொருட்களை இன்னமும் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருந்து வருகின்றனர்.

5. சில காலமாக, மலிவான இறக்குமதிப் பொருட்கள் குறைந்த கூலியிலான உற்பத்தித் தொழிலாளர்களை இடம்பெயரச் செய்து வருவதுடன், பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கான அவர்களுடைய ஆற்றல்களையும் மட்டுப்படுத்தி வருகின்றன. வீழ்ச்சியடைந்து வரும் கூலி- மலிவான நுகர்வு என்பதிலிருந்து குறைவான கூலி-வீழ்ச்சியடைந்து வரும் நுகர்வு என்ற கட்டத்துக்கான நகர்வு இப்பொழுது ஏற்பட்டு வருகின்றது. இது 1980களின் போது இடம்பெற்ற சுதந்திரச் சந்தை முதலாளித்துவத்தின் முதலாவது கட்டத்திலிருந்து 1990 களின் இரண்டாவது கட்டத்தை நோக்கிய நிலைமாற்றத்தின் ஒரு பாகமாகும்.

6. ஐக்கிய அமெரிக்காவில் ஊழிய அமைப்பில் ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்கள் கறுப்பின மற்றும் வெள்ளையின கூலித்தொழிலாளர்களை மட்டுமன்றி சம்பளம் பெறும் தொழில்சார் நிபுணர்கள், ஊழியர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் ஆகிய பிரிவினரையும் மிகக் கடுமையாக பாதித்துள்ளன. தொழில்சார் நிபுணர்கள் நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் பதவியணியினர் போன்ற ஊழியப் பிரிவுகளிலும் கூட தற்காலிக ஒப்பந்த வேலை முறை இப்பொழுது உருவாகியுள்ளது. நிலையான நல்ல சம்பளங்களுடன் கூடிய வேலை வாய்ப்புக்களின் வீழ்ச்சி, சுகாதார மற்றும் ஓய்வூதிய அனுகூலங்கள் ஒழிக்கப்பட்டமை என்பன நடுத்தட்டு வர்க்கத்தின் சீர்குலைவினை கட்டிக் காட்டுகின்றன. நடுத்தட்டு வர்க்கம் பாட்டாளிமயமாக்கப்பட்டிருப்பதானது, அவர்கள் எந்த வகையிலும் இதற்கான காரணங்களையும் பொது நிலைமைகளையும் அங்கீகரித்துக் கொள்ளும் நிலைக்கு இட்டுச் செல்லவில்லை; எந்த வகையான வர்க்கத் தோழமையுணர்வும் உருவாகவில்லை. முன்னைய வர்க்க அனுபவங்கள் குறித்த பிரக்ஞையே பெருமளவுக்கு காணப்படுகின்றது. புதிய வர்க்கத்துடன் அதே நிலையில் தம்மை இனங்கண்டு கொள்வதற்குப் பதிலாக வர்க்க வெறுப்புணர்வே மேலோங்கி நிற்கிறது.

7. ஸ்டாலினிஸத்தின் மறைவும் சமூக-ஜனநாயகம் புதிய தாராளவாதத்துக்கான ஓர் ஊடகமாக நிலைமாற்றம் அடைந்திருப்பதும், உழைக்கும் வர்க்கத்துக்கும் நலன்புரி அரசியலுக்குமிடையிலான பாரம்பரிய தொடர்புப் புள்ளியினை நலிவுறச் செய்துள்ளது. மேலும், கம்யூனிஸ நலன்புரி மாதிரியின் மறைவு, மேலைத்தேய நாடுகளில் நலன்புரி கொள்கைகளை வைத்திருப்பதற்கான நிர்ப்பந்தங்களைக் குறைத்துள்ளது. முன்னாள் கம்யூனிஸ்டு மற்றும் சமூக ஜனநாயக அணிகளைச் சேர்ந்த பேச்சாளர்கள் இப்பொழுது புதிய தாராளவாதத்துக்கு சார்பாக குரல் கொடுத்து வருவதானது, சுதந்திர சந்தை முதலாளித்துவத்துவம் தவிர வேறு மாற்றுவழிகள் இல்லை என்ற வாதத்துக்கு மேலும் வலுவூட்டி வருகின்றது.

8. மூலதனத்தின் சர்வதேச அசைவுகள் தேசிய அரசின் வருவாய்களை இல்லாமல் செய்துள்ளதுடன், கூலிகளையும் குறைத்துள்ளன. இதன் விளைவாக, பல நாடுகளில் நிதி நெருக்கடிகளும் நிதிப்பற்றாக் குறைகளும் பெருகிவருகின்றன. இது சமூக செலவினத்தை ஒழித்து விடுவதற்கான ஒரு சாக்காக அமைந்து விடுகின்றது. உயர் தொழில்நுட்பம் நிலவும் மற்றும் கைத்தொழில் மயமாக்கம் அற்ற பொருளாதாரத்தில் காணப்படும் மிகை ஊழியம் சுகாதாரம், கல்வி, வீடமைப்பு போன்றவற்றில் முதலீடுகளைக் குறைத்துக் கொள்வதற்கான தூண்டுகோல் காரணியாக இருந்து வருகின்றது. உள்நாட்டுப் பொருளாதாரத்தைச் சுரண்டுவது பேரரசுகளை நிலைநிறுத்திக் கொள்வதற்கான அத்தியவசிய நிபந்தனையொன்றாகி விடுகின்றது.

9. ஊழிய நிகழ்வுப்போக்கு மீள ஒழுங்கு படுத்தப்பட்டமை மூலதனத்துக்கும் ஊழியத்துக்கும் இடையிலான உறவினை பெருமளவுக்கு நிலைமாற்றமடையச் செய்துள்ளது. மூலதனம், உயர் அதிகாரிகளுக்கும் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்குமிடையில் இருந்து வரும் பல முகாமைத்துவ அடுக்குகளை ஒழித்து வருகின்றது. செலவுகளைக் குறைக்கும் நோக்குடனேயே இது மேற்கொள்ளப்படுகின்றது. எஞ்சியுள்ள முகாமையாளர்களும் பொறியிலாளர்களும் உற்பத்தித் தளத்தில் இயங்கிவரும் ஊழியர்படையின் ஒரு பாகமாகி வருகின்றனர். வருமானம், அதிகாரம், சிறப்புரிமை என்பன தொடர்பான ஏற்றத்தாழ்வுகள் நிலவிவரும் அதே வேளையில், உற்பத்தியின் மேலாதிக்க முறை நிலைமாற்றமடைந்திருப்பதுடன், முகாமையாளர்கள் வேலைத்தளத்துடன் பெருமளவுக்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர். நிர்வாகச் செலவுகளில் விரயங்கள் பெருமளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளன என்பதே இதன் பொருளாகும். இது முதலாளித்துவத்தின் கீழ், அதிக இலாபத்தினையும் குறைந்த செலவினையும் கொண்ட ஒரு முறையாக உள்ளது. சோஷலிஸத்தின் கீழ், மேலாதிக்க முறையும் நுகர்வோருக்கு குறைந்த செலவும் என்றே இது பொருள்படும். ஊழிய நிகழ்வுப்போக்கு, தொழிலாளர்களின் நேரடி கண்காணிப்பு முறையிலிருந்து உற்பத்தியின் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி என்பவற்றில் தொழிலாளர்களுக்கான தன்னாதிக்கம் என்பதை நோக்கி இப்பொழுது நகர்ந்து கொண்டிருக்கின்றது. முதலாளித்துவத்தின் கீழ் இந்தப் புதிய தன்னாதிக்கம், புதிய நிறைவேற்று அதிகாரிகளின் உபாய ரீதியான குறிக்கோள்களுக்கு அடிபணிந்ததாக இருந்து வருகின்றது. எனினும், நவீன நிறுவனங்கள் குறைந்த அளவிலான முதலாளித்துவத்தின் நேரடித் தலையீட்டுடன் இயங்கி வருகின்றன என்பது தெளிவாகத் தெரிகின்றது. தொழிலாளர்களின்

தன்னாதிக்கம் உற்பத்தித் தளத்திலிருந்து படிப்படியாக மேல்நோக்கி விரிவடைந்து செல்வதானது, சுய முகாமையுடன் கூடிய சோஷலித்துக்கான சக்திவாய்ந்த ஒரு வாதத்தினை முன்வைக்கின்றது. சுருக்கமாகச் சொல்வதானால், முதலாளித்துவம் தொழிலாளர்களுக்குப் பெருமளவில் தன்னாதிக்கத்தை அளிக்கும் விதத்தில் வேலை நிகழ்வுப்போக்கினை அனுகி வருகின்றமையானது அதன் அழிவுக்கான வித்துக்களையும் அதற்குள் கொண்டுள்ளது.

10. புதிய தொழில்நுட்பம் மற்றும் தகவல் முறைகள் என்பன, தொழில் உறவுகள், ஊழிய நிகழ்வுப்போக்கு மற்றும் வருமானப் பகிர்வு என்பவற்றை பெருமளவுக்கு மாற்றம் காணச் செய்துள்ளன. இலத்திரனியல் வலைப்பின்னல் தொடர்பு அமைப்புக்களும் தகவல் முறைகளும் உலகளாவிய பேரளவிலான மூலதன அசைவுகளுக்கான தளத்தினையும் வாய்ப்புக்களையும் துரிதமாக அதிகரிக்கச் செய்துள்ளன. இந்த நவீன தொழில்நுட்பங்கள் மூலதனத்தை உற்பத்திசார் தொழில் வாய்ப்புக்களிலிருந்து பிரித்தெடுத்து, மிகத்துரிதமாக மாற்றல் செய்து கொடுக்கும் முறைகளை எடுத்து வருகின்றது. இதன் விளைவாக, செல்வந்த முதலீட்டு வங்கியாளர்களும் அதேபோல குறைந்த கூலி பெறும் சேவைத் துறை தொழிலாளர்களும் பெருகி வருகின்றனர்.

11. கூலிகள் வீழ்ச்சியடைந்து வரும் ஒரு காலகட்டத்தில் பெண் தொழிலாளர்கள் பேரளவில் ஊழியர் படையில் பிரவேசிப்பதானது, குடும்பத்தில் முரண்பாடுகளை தீவிரப்படுத்துவதுடன் சமூக-அரசியல் நிகழ்ச்சித் திட்டங்களில் உழைக்கும் வர்க்கத்தின் உள்ளடக்கத்தினை வரைவிலக்கணம் செய்வதனையும் பாதித்து விடுகின்றது. ஊழியர்படையை மகளிர்மயப்படுத்தலானது, பழைய ஊழியத்தின் உணர்வுபூர்வமான பிரிவு இப்பொழுது செயற்படவில்லை என்பதனையே காட்டுகின்றது. இப்பொழுது ஆணும் பெண்ணும் வேலையின்போது ஒரே வகையான மன உளைச்சலினையே அனுபவிக்கின்றார்கள்; இருவருக்கும் வீட்டில் உணர்வுபூர்வமான ஒத்தடங்கள் கிடைப்பதில்லை. வேலைத் தளத்தில் நிலவிவரும் ஏற்றத் தாழ்வுகளும் மன உளைச்சல்களும் வீட்டில் பெருமளவுக்கு தோழமை உணர்வும் சமத்துவமும் தோன்றுவதற்கு அல்லது பெரும் மோதல்களும் சச்சரவுகளும் தோன்றுவதற்கு வழிகோல முடியும்.

12. உயர் தொழில்நுட்ப கைத்தொழில்கள் (குறிப்பாக, தமது ஒரே கொள்வனவாளர் என்ற முறையில் ஐக்கிய அமெரிக்க இராணுவத்தில் தங்கியிருக்கும் கைத்தொழில்கள்) கடுமையான நெருக்கடிகளின்போது எளிதில் ஊறுபடத்தக்க கைத்தொழில்களாக இருந்து வருகின்றன. தனிச்சிறப்புடைய உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கென தமது தொழில்நுட்பங்களை வடிவமைத்துக் கொண்டிருக்கும் உயர் தொழில் நுட்பக் கைத்தொழில்கள், கொள்வனவாளரின் அரசியல் அவசர நிலைகள் மற்றும் தமது உற்பத்திப் பொருட்களின் காலாவதியாகும் தன்மை என்பவற்றால் பாதிப்படைகின்றன. யுத்த தளபாடங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை இதற்கான சிறந்த உதாரணங்களாக கூறமுடியும்.

முடிவுரை

இந்த முக்கியமான நிலைமாற்றங்களின் அரசியல் தாத்பரியம் மிக தெளிவானதாகும்: நிலையான கைத்தொழில் ஊழியம் மற்றும் கைத்தொழில் மூலதனம் என்பவற்றுக்கிடையிலான பழைய வர்க்க உறவு முறை இனியும் சமூகத்தின் அடிப்படை உறவுகளை நிர்ணயம் செய்து வரவில்லை. தற்காலிக ஊழியத்தின் வளர்ச்சி, தனியார் கம்பனிகள் மற்றும் அரசுகள் என்பவற்றில் மானியத்திட்டங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பாரிய வெட்டுக்கள் என்பவற்றை ஒரு சிறிய தொழிற்சங்க இயக்கத்தினால் எதிர்கொள்ள முடியாது. இந்த நிலைமாற்றங்கள் வர்க்கப் போராட்டத்தின் இயல்பினையும் உள்ளடக்கத்தினையும் பெருமளவுக்கு மாற்றியமைத்துள்ளன. இந்த மாற்றங்களை புறக்கணிப்பதானது மார்க்ஸிஸத்தை புறமொதுக்குவதாகவே முடியும். இந்த மாற்றங்களுக்கான பதிலடிகள் மிக மெதுவாக எழுச்சியடைந்து வருகின்றன.

முதலில் அரசுக்கும் சிவில் சமூகத்துக்குமிடையிலான மிகத் தெளிவான வேறுபாடுகள்- அதாவது, முதலாளித்துவம், அரசினை சுரண்டுவதன் மூலம் செழித்து வளர்கின்றது என்ற வாதம்- இனிமேலும் நிலவிவரவில்லை. எனவே, இந்த நிலையிலுள்ள அடிப்படைப் பிரச்சினை, சமூக இயக்கங்கள் தோன்றக் கூடிய ஓர் இலக்கு என்ற முறையில் வர்க்க அரசின் மீதே கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அரசு எதிர் கோட்பாட்டாளர்கள் இங்கு உறுதியாக நிராகரிக்கப்பட வேண்டும். அரசு மாற்றத்துக்கான ஒரு முக்கிய மூலவளமாக நோக்கப்படுதல் வேண்டும்.

இரண்டாவதாக, மூலதனத்தின் சர்வதேசமயமாக்கலுடனான எந்த ஒரு அரசியல் நேரெதிர் கொள்ளலிலும் தேசிய பொருளாதாரம் துவக்கப் புள்ளியாக நோக்கப்படுதல் வேண்டும். உலகமயமாக்கல் தொடர்பான வார்த்தைஜாலங்கள், உள்நாட்டு இலாபங்கள் வெளிநாடுகளுக்கு திசை திருப்பப்படுவதனை தடுத்து நிறுத்தும் உத்திகள் மூலம் எதிர்கொள்ளப்படுதல் வேண்டும்.

மூன்றாவதாக, ஊழியத்தின் சர்வதேசமயமாக்கலினை எதிர்த்து நிற்கும் பொருட்டு, ஊழியத்தின் உள்நாட்டு நிலைமைகளை சிறந்த முறையில் விருத்திசெய்து கொள்வதற்கான தடுப்பு அரண்கள் நிர்மாணிக்கப்படுதல் வேண்டும்.

நான்காவதாக, தொழில்நுட்ப மாற்றங்கள், அவற்றின் பிரயோகத்தை நெறிப்படுத்துவதற்காக புதிய சமூக நிறுவனங்களை வேண்டி நிற்கின்றன. தன்னாதிக்கம் நிலவும் வேலைத்தளங்களின் வளர்ச்சி, வேலை நேரத்தை குறைத்து வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்யும் தொழில் நுட்பத்தின் பிரயோகத்துக்கு விஸ்தரிக்கப்படுதல் வேண்டும்.

ஐந்தாவதாக, ஊழியம் மகளிர்மயமாக்கப்படுவது தொழிற்சங்க இயக்கங்களிலும் மகளிர் இயக்கங்களிலும் கலாச்சார மற்றும் சமூக புரட்சிகளை அவசியப்படுத்துகின்றது.

# அடுத்த ஆயிரமாவது ஆண்டில் உலகளாவிய மார்க்சிசம் குறித்த சில சிந்தனைகள்

ஜெரிட் ஹுய்ஸா
(கத்தோலிக்க பல்கலைக்கழகம், நெதர்லாந்து)

"கல்வித் துறையில் சேர்ந்து கொள்வதற்கு முன்னர், சுமார் 20 வருடகாலம் ஒரு செயல்வீரனாக இயங்கி வந்துள்ளவன் என்ற முறையில், நான், மார்க்ஸிஸத்தின் எதிர்காலத்தை, நடைமுறை பிரயோகத்தினை வலியுறுத்தக்கூடியவிதத்திலும், உள்ளே இருந்தும் கீழே இருந்தும் நோக்கும் ஓர் அணுகுமுறையிலும் நோக்க விரும்புகின்றேன்" (ஹுய்சர், 1979). மார்க்ஸீய நடைமுறையும் மார்க்ஸிய கோட்பாடும் அடிப்படையில் மார்க்ஸின் சொந்த வாழ்க்கையுடனும் எழுத்துக்களுடனும் நெருக்கமாக பின்னிப் பிணைந்தவையாக இருந்து வருகின்றன. சில சந்தர்ப்பங்களில், நடைமுறை, மார்க்ஸிஸத்தின் மிக முக்கியமான அம்சமாக இருந்திருக்க முடியும். ஆனால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், கோட்பாட்டு ரீதியான சிந்தனை, விவாதம், கருத்து வேறுபாடு என்பன பெருமளவுக்கு நிலவிவந்துள்ளன. மாாக்ஸிஸம் ஒரு விஞ்ஞானமாக ஒரு சித்தாந்தமாக ஒரு யுகத்தின் இயக்கமாக அல்லது ஒரு சமயமாக வருணிக்கப்பட்டு வந்துள்ளது. என்னவாக இருந்தாலும், மார்க்ஸிஸத்தின் "முடிவான தோல்வி" என்பது நிச்சயமாக சாத்தியமானதல்ல. கிறஸ்தவம், இஸ்லாம், அணு பௌதீகவியல் அல்லது தாராளவாதம் என்பவற்றின் "தீர்க்கமான தோல்வி" என்பது எவ்வாறு சாத்தியமில் லையோ அதேபோல மார்க்ஸிஸத்தின் தோல்வியும் சாத்தியமில்லை. அதன் செல்வாக்கு உலகின் முகத்தோற்றத்தினையும், மனித குலத்தின் வரலாற்றினையும் மாற்றியமைத்துள்ளது. அடுத்துவரும் 1000 வது ஆண்டிலும் கூட இந்த மாற்றங்கள் இடையறாது இடம் பெற்று வரமுடியும்.

சமூக/அரசியல்/சமய இயக்கங்கள் தோன்றி மறைய முடியும். ஆனால், பெரும் எண்ணிக்கையிலான மக்களின் கூட்டு அனுபவம், பரிணாம வளர்ச்சி மற்றும் புரட்சி என்பவற்றின் நிகழ்வுப்போக்கின் நடத்தையில் தொடர்ச்சியான செல்வாக்கினைக் கொண்டிருக்கும். இந்த நிகழ்வுப்போக்குகளில் வெகுசனங்கள், செயல்வீரர்கள், மேட்டுக் குடியினர், கோட்பாட்டாளர்கள், தலைவர்கள், சீடர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் வகித்துவரும் பங்குகளும் நிர்ணயகரமானவையாகும்.

"பொருளியல் நோக்கு" இதழில் (1991) நான் முன்னர் எழுதிய ஒரு கட்டுரையில், செல்வந்தருக்கும் வறியவருக்குமிடையிலான முரண்பாடு ஒழிந்து விடவில்லை என்பதனையும், அதற்கு மாறாக, கடந்த அபிவிருத்தித் தசாப்தங்களின் போது, உலகளாவிய மட்டத்திலும் உள்ளூர் மட்டத்திலும் அது மேலும் தீவிரம் அடைந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டியிருந்தேன். மேலைநாடுகளில் வாழும் உலக குடித்தொகையினரில் 10 சதவீதமான மக்கள் தென் மண்டலத்தில் வாழும் 80 சதவீதமான மக்களைப் பார்க்கிலும் 24மடங்கு அதிகம் தலைக்குரிய நுகர்வினை மேற்கொண்டு வருகின்றார்கள். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் (1980) காலத்தில் தயாரிக்கப்பட்ட "Global 2000" என்ற ஆவணத்தில் இது தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பிரமாண்டமான இடைவெளி குறித்த இந்த உண்மையை கல்விமான்களும் கொள்கை வகுப்போரும் வேண்டுமென்றே புறக்கணித்து வந்துள்ளனர். அண்மையில் ஐ.நா.வின் மானிட அபிவிருத்தி அறிக்கைகள் முன்வைத்த தரவுகள் இதனை மேலும் ஒரு முறை ஊர்ஜிதம் செய்துள்ளன. கடந்த மூன்று அபிவிருத்தி தசாப்தங்களின்போது, செல்வந்தருக்கும் வறியோருக்குமிடையிலான இடைவெளி இரு மடங்கால் பெருகியுள்ளதென இந்த அறிக்கைகள் மிகவும் தெட்டத் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளன.

வர்க்க முரண்பாடுகளும் போராட்டமும் முன் எப்பொழுதையும் விட இப்பொழுது முக்கியத்துவம் பெற்று வருகின்றன என்பதனை இந்தப் போக்குகள் சுட்டிக் காட்டுகின்றனவா? இது அப்படித்தான் தோன்றுகின்றது. தொடர்புசாதன அமைப்புக்களினால் உலகெங்கிலும் பரப்பப்பட்டு வரும் "பெருகி வரும் அபிலாசைகளின் புரட்சி" பெரும்பாலான சந்தர்ப்பங்களில், "பெருகி வரும் விரக்திகளின் புரட்சி"ஒன்றினையே உருவாக்கி வருகின்றது. இத்தகைய விரக்திகள் (கடந்த காலத்தில் நிகழ்ந்திருப்பது போல) தற்போதைய நிலையில் மதங்களுக்

கிடையிலான, இனங்களுக்கிடையிலான, கட்சிகளுக்கிடையிலான ஒரு போராட்டமாக, வறியோருக்கெதிராக வறியோர் நிற்கும் ஒரு போராட்டமாக வெளிப்படுத்தப்படக்கூடிய ஒரு வாய்ப்புள்ளது. ஆனால், ஒரு பொது எதிரி மிகத் தெளிவான முறையில் கண்டறியப்படும் வரையில் இந்தப் போராட்டம் எவ்வளவு காலத்துக்கு நீடித்துச் செல்ல முடியும்?

இப்பொழுது மிக வறிய சமூகப்பிரிவினரில் சிலர், தென் மண்டல உலகின் கிராமப் புறங்களில் நிலவிவரும் தரித்திர நிலையிலிருந்து தப்பிக் கொள்வதற்காக நகரங்களுக்கு குடிபெயர்ந்து செல்வதற்கு முயன்று வருகின்றனர். அப்பொழுது பெருமளவுக்கு தளம்பல் தன்மையைக் கொண்ட நகரவாசிகள் அரசியல் அல்லது பொருளாதார அகதிகள் என்ற முறையில் வேறு நாடுகளில் சென்று தஞ்சம் கேட்கின்றார்கள். ஆனால், இப்பொழுது புதிய பேர்லின் சுவர்கள் மீண்டும் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதன் விளைவாக, எல்லைகளைக் கடந்து வேறு தேசங்களில் போய் தஞ்சம் அடைவது வரவர அபாயகரமான ஒரு நடவடிக்கையாக மாற்ற மடைந்து கொண்டு வருகின்றது. இந்த நிலையில், கிராமப் புறங்களிலும் சேரிகளிலும் வாழும் ஏழை எளிய மக்கள் தமது சகாக்களையும் ஒன்று திரட்டிக் கொண்டு கடுமையான ஒரு போராட்டத்தில் குதிப்பதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும்?

புதிய மற்றும் ஆக்கபூர்வமான மாற்றம் குறித்த வடிவங்களுக்கான துவக்கப் புள்ளிகளாக பல விடயங்களை நோக்க வேண்டியுள்ளது.

அடுத்துவரும் பல தசாப்தங்களின் போதும் அநேகமாக அடுத்த ஆயிரமாவது ஆண்டின் போதும் தொடர்ச்சியாக நிலவி வரக்கூடிய அடிப்படையான முரண்பாடு, பூர்ஷ்வாக்களுக்கும் ஏனையோர்களுக்கிடையிலான முரண்பாடாகும். இந்தப் பின்னணியில், பூர்ஷ்வாக்களின் பங்கு குறித்த மார்க்ஸின் கூற்றினை இங்கு மீண்டும் வலியுறுத்திக் கூற முடியும். மார்ஷல் பேர்மான் தன்னுடைய "திடமானவை எல்லாம் காற்றில் கரைந்து விடுகின்றன: நவீனத்துவத்தின் அனுபவம்" (1983) என்ற நூலில், மார்க்ஸ் மற்றும் ஏஞ்கல்ஸ் ஆகியோரின் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரகடனத்துக்கு கோதேயின் நூலுக்கு அடுத்தபடியாக முக்கியத்துவத்தினை அளித்துள்ளார். மார்க்ஸ், கோதேயை போலவே பூர்ஷ்வாக்களின் "செயலுக்கான மேதாவித்தனம்" குறித்து பெருமளவுக்கு மனம் கவரப்பட்டிருந்தார் என பேர்மான் குறிப்பிடுகின்றார். அவர் மார்க்ஸின் நன்கு பிரபல்யம் பெற்ற கூற்றினை மேற்கோளாக எடுத்துக் காட்டுகின்றார்:

> "உற்பத்தியை இடையறாது புரட்சிகரமானதாக மாற்றியமைத்தல், அனைத்து சமூக உறவுகளினதும் இடைமீடற்ற குழப்பநிலை, தொடர்ச்சியாக நிலவிவரும் நிச்சயமற்ற நிலை மற்றும் கிளர்ச்சி என்பன பூர்ஷ்வா சகாப்தத்தினை ஏனைய அனைத்து காலப்பிரிவுகளிலிருந்தும் பிரித்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. நிலையான உறைந்து போயுள்ள அனைத்து உறவு முறைகளும் அவற்றின் புனிதமான கருத்துக்கள், அபிப்பிராயங்கள் என்பவற்றின் தொடர்ச்சியுடன் அடித்துச் செல்லப்படுகின்றன. புதிதாக உருவாக்கப்பட்ட அனைத்துக் கருத்துக்களும் அவை இறுகிவிடுவதற்கு முன்னர் காலாவதியாகி விடுகின்றன. திடமான அனைத்தும் காற்றில் கரைந்து விடுகின்றன. புனிதமானவை அனைத்தும் களங்கப்பட்டு விடுகின்றன. இறுதியில், மனிதர்கள் தமது சாதாரண உணர்வுகளை எதிர்கொண்ட நிலையில், தமது வாழ்க்கையின் யதார்த்த நிலைகளை கண்டு கொண்ட நிலையில் உண்மையான உணர்வுகளை அனுபவிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள்"

இந்தக் கூற்று முன் எப்பொழுதையும் விட இன்றைய நிலையில் உண்மையானதாக தோன்றுகிறது. உண்மையிலேயே இந்த நிகழ்வுப்போக்கு இப்பொழுது தீவிரமடைந்து வருகின்றது. "Global-2000" என்ற வெளியீடும் ஐ.நா.வின் பல அவதானிப்புக்களும் இதன் தாக்கங்களை நன்கு எடுத்துக் காட்டியுள்ளன.

மேலும், ஜிம் பெட்ராஸ் (1993), "உலக மயமாக்கல்", "அமைப்புரீதியான சீராக்கம்" அல்லது "சீர்திருத்தம்" போன்ற பதங்களின் பிரயோகத்தின் மூலம் உலக மக்கள் மீதான இந்தத் தாக்கங்கள் மூடிமறைக்கப்பட்டு வருகின்றன என்று சுட்டிக் காட்டியிருந்தார். "மூன்றாவது மண்டல நாடுகளில் வட அமெரிக்க கலாச்சாரம் வெற்றிகரமாக ஊடுருவிச் சென்றுள்ளது. இந்தப் பொருளாதார மற்றும் இராணுவ மேலாதிக்க முறை, உருவாகி வரும் பொருளாதார சீரழிவு நிலையை மயக்கும் மாயாஜாலங்களினால் திசை திருப்பிக் கொண்டிருக்கின்றது. இதுவே இந்த வெற்றியின் பின்னாலுள்ள இரகசியமாகும்" என அவர் சரியாகவே குறிப்பிடுகின்றார். இதற்கான ஓர் எதிர் விளைவாக இடதுசாரி இயக்கம் ஆன்மீக மற்றும் பொருள் சார்ந்த விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட புதிய சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் தரிசனத்தின் மீது ஒரு நம்பிக்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டுமென அவர் கேட்டுக் கொள்கிறார். எனது முன்னைய கட்டுரையில், சில ஆன்மீக மற்றும் பொருள் சார்ந்த ஊக்குவிப்புக்களையும், அதன் விளைவாக, உலகின் குடித்தொகையில் 20 சதவிகிதத்தினரை உள்ளடக்கிய சீனாவில் உருவாக்கப்பட்டுவரும் சோஷலிஸ வடிவம் குறித்தும் குறிப்பிட்டிருந்தேன். சீன மக்கள் கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக தமது முன்னோக்கிய பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

எனது முன்னைய கட்டுரையில், சீனாவில் இடம்பெற்று வரும் மாற்றங்கள் குறித்து, உலக வங்கி "பைனான்சியல் டைம்ஸ்" பத்திரிகை மற்றும் சந்தேகத்துக்கு இடமற்ற மூலாதாரங்கள் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொண்ட சில தரவுகளை முன்வைத்திருந்தேன். "சீனா: சோஷலிஸ பொருளாதார அபிவிருத்தி என்ற தனது (1983) பிரகரத்தில் உலக வங்கி, 1950க்கும் 1980 க்கும் இடைப்பட்ட காலகட்டத்தின் போது சீனா (நிலச் சீர்திருத்தம், தேசியமயமாக்கல் போன்ற) தீவிரமான சொத்து மீள்பகிர்வு முறைகள் மூலமும் ஏனைய சோஷலிஸ வழிமுறைகள் மூலமும் ஆண்டொன்றுக்கு 10 சதவீதம் வரையில் பேரளவில் கைத்தொழில் வளர்ச்சியினை சாதித்துக் கொண்டிருந்

தது என்பதனை சுட்டிக் காட்டுகின்றது. இந்தக் கைத்தொழில் வளர்ச்சியுடன் இணைந்த விதத்தில் வருமானமும் ஏனைய அனுகூலங்களும் பெருமளவுக்கு நியாயமான ஒருமுறையில் பகிர்ந்தளிக்கப்பட்டன. இதன் விளைவாக, சீன மக்களின் வாழ்க்கைத் தரம் கணிசமான அளவில் உயர்ந்து சென்றது. அதாவது, 1979ல் சீன மக்களின் ஆயுள் எல்லை இந்தியர்களின் ஆயுள் எல்லையிலும் பார்க்க 13 ஆண்டுகள் அதிகமானதாகவும், இந்தோனேசியர்களின் ஆயுள் எல்லையிலும் பார்க்க 17 ஆண்டுகள் அதிகமானதாகவும் காணப்பட்டது (உலக வங்கி, 1983, தொகுதி 111, பக்கம் 26). இந்த முன்னேற்றங்கள், இந்தக் காலகட்டத்தின் போது சீனா சந்தித்த "முன்னோக்கிய மாபெரும் பாய்ச்சல்," "கலாச்சாரப் புரட்சி" போன்ற பல வழிகளில் அழிவுகரமானவையாக இருந்த ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியிலேயே ஏற்பட்டுள்ளன என்பதனையும் இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது. 1991 ஆம் ஆண்டுக்கான உலக வங்கியின் அபிவிருத்தி அறிக்கை பின்வரும் அவதானிப்பினை முன்வைத்துள்ளது: "ஐக்கிய இராச்சியம் அதன் தலைக்குரிய வெளியீட்டினை இரட்டிப்பாக்கிக் கொள்வதற்கு 1780 தொடக்கம் 58 ஆண்டுகள் சென்றது: இதற்கு ஜப்பானுக்கு 1885 தொடக்கம் 34 ஆண்டுகள் சென்றது. சீனா 1977ல் தொடங்கி ஒரு தசாப்த காலத்துக்குள் அதன் வாழ்க்கை தரத்தை இரட்டிப்பாக்கிக் கொண்டுள்ளது."

சோஷலிச பொருளாதார அபிவிருத்தி முறையொன்றின் சார்புரீதியான வெற்றிகளை எடுத்துக் காட்டும் வேறு சில புள்ளிவிவரத்தரவுகளும் கிடைக்கக் கூடியதாக உள்ளன. இத்தரவுகள் உலக வங்கியின் 1990 ஆம் ஆண்டு தொடர்பான அபிவிருத்தி அறிக்கையில் தரப்பட்டுள்ளன. 1980க்கும் 1989க்கும் இடைப்பட்ட காலத்தில் கிழக்காசியாவின் ஏனைய பிராந்தியங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6.4 சதவீதமாக வளர்ச்சி அடைந்து வந்திருக்கும் அதே வேளையில், சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10.1 சதவீதமாக கணிசமான அளவு உயர்ந்த அளவில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மேலும், சீனாவின் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் 8.7 சதவிகிதமாக இருந்து வந்துள்ளது. இது கிழக்காசியாவின் ஏனைய பிராந்தியங்களின் வளர்ச்சி விகிதத்திலும்(4.2) பார்க்க இரட்டிப்பானதாகும். மிக மோசமான வளர்ச்சி விகிதங்களைக் கொண்டுள்ள உப சகாரா ஆபிரிக்கா (-2.2) மற்றும் இலத்தீன் அமெரிக்கா (-0.6) போன்ற பிராந்தியங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது சீனாவின் சாதனை பிரமிப்பூட்டுவதாகவுள்ளது. மேலும், மூன்றாவது மண்டலத்தின் பல நாடுகளில் உலக வங்கியின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் "வளர்ச்சி மாதிரி" தோல்வி கண்டு வந்திருப்பதனைக் காண முடிகிறது.

மற்றுமொரு மிக முக்கியமான ஒரு குறிகாட்டி கடும் ஏழ்மை நிலையில் இருப்பவர்களின் சதவிகிதமாகும். இது சீனாவில் 8 சதவீதமாக இருந்துவரும் அதேவேளையில், இந்தியாவில் 33 சதவிகிதமாகவும், உப-சகாரா ஆபிரிக்காவில் 30 சதவிகிதமாகவும், இலத்தீன் அமெரிக்காவில் 12 சதவிகிதமாகவும் இருந்து வருகின்றது. இந்த வித்தியாசங்கள், பெருமளவுக்கு குறைந்த வருமானப் பிரிவினைச் சேர்ந்த சோஷலிச வழியினைப் பின்பற்றும் (சீனா போன்ற) நாடுகள் முதலாளித்துவ வழிமுறையை பின்பற்றும் (இந்தோனேசியா, இந்தியா போன்ற) நாடுகளிலும் பார்க்க நல்ல ஆரோக்கியமான முறையில் தமது மக்களை வைத்துக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றுள்ளன என்பதனைக் காட்டுகின்றன. சோஷலிசத்தின் கீழ் குறைந்தது ஒரு வகையான மனித உரிமையாவது- அதாவது, உயிர்வாழும் உரிமையும் பிழைப்பும்-நன்கு மதிக்கப்பட்டு வருவதுபோல் தெரிகிறது. ஏனைய மனித உரிமைகள் தொடர்பாக சீனாவின் நிலைமை, மூன்றாவது உலகின் ஏனைய நாடுகளின் நிலைமைகளிலும் பார்க்க மோசமானதாக இருக்கவில்லை.

சீனாவில் காணப்படும் வருங்கால அபிவிருத்திகளுக்கான உள்ளார்ந்த ஆற்றல்களை மேலைத்தேச பூர்ஷ்வாக்கள் நன்கு தெரிந்து கொண்டுள்ளனர் போல தோன்றுகின்றது. இப்பொழுது சில வருட காலமாக ரோயல் டச் ஷெல் போன்ற பல கம்பனிகள் வலு மற்றும் ஏனைய மூலவளங்களை அகழ்ந்தெடுப்பதற்காக சீன அரசு நிறுவனங்களுடன் இணைந்து பல கூட்டு முயற்சிகளில் கோடிக் கணக்கான டொலர்களை முதலீடு செய்துள்ளன. குறிப்பாக, கடந்த ஓரிரு வருடங்களில் பல மேலைத்தேச கம்பனிகள் இதில் இணைந்து கொள்வதற்கு முயன்று வருகின்றன. டெங் சியாவோ பிங் "1992 ம் ஆண்டின் முக்கிய மனிதராக" "பைனான்சியல்டைம்ஸ்" பத்திரிகையினால் பெயர் குறிக்கப்பட்டிருந்தார். உண்மையிலேயே சீனாவின் சோஷலிசம் எந்த அளவுக்கு முதலாளித்துவமாக மாற்றமடைய முடியும் என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால், இன்றைய நிலையில், சீனாவின் கைத்தொழில் பொருளாதாரத்தில் 20% க்கும் குறைவான பகுதியே அரச கட்டுப்பாடு அற்றதாக இருந்து வருகின்றது.

அடுத்த ஆயிரமாவது ஆண்டு தொடர்பாக மார்க்ஸிஸ்டுகள் இதற்கு முன்னரிலும் பார்க்க கவனத்துடன் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமா? கடந்தகால சமூக இயக்கங்களின் போராட்டங்களின் போது, இந்த இயக்கங்கள் பழமை பேணும் பூர்ஷ்வாக்களுக்கு எதிராக பூர்ஷ்வாக்களின் லிபரல் பிரிவுகளுடன் கூட்டுக்களை வைத்துக் கொண்டிருந்தன. லிபரல்களுக்கும் பழமைவாதிகளுக்குமிடையிலான முரண்பாடு பல சந்தர்ப்பங்களில் (குறிப்பாக, இலத்தீன் அமெரிக்க நிலைமைகளில்) கடந்த காலத்திலும் இன்றும் விடுதலைப் போராட்டங்களுக்கான வாய்ப்புக்களை திறந்துவிட்டுள்ளன. மாவோ சேதுங், ஐக்கிய அமெரிக்க ஆதரவுடன் கூடிய சியாங்கே சேக் ஆட்சிக்கு எதிராக தேசிய பூர்ஷ்வாக்களுடன் அமைத்துக் கொண்ட கூட்டணி இதற்கான ஆரம்பகால உதாரணங்களாகும்.

பூர்ஷ்வாக்களை நாங்கள் எத்தகைய கவனத்துடன் பகுப்பாய்வு செய்துள்ளோம்? பூர்ஷ்வாக்கள் உறுதியான பொருளாதார அதிகாரகுழுவாக இருந்து வரும் அதேவேளையில், பல உள்முரண்பாடுகளையும் அக்கறைகளையும் கொண்ட சிக்கலான ஒரு முறையாகவும் இருந்து வருகின்றனர். கில் என்பவரின் (1991) ஆய்வுகளும் ஏனைய சில ஆய்வுகளும் இந்த முரண்பாடுகள் குறித்த சுவாரஸ்யமான உதாரணங்களைத் தருகின்றன. முப்

பக்க ஆணைக்குழுவின் தொடக்க வருடங்களில், சோஷலிஸ அணியின் ஒரு பொது அச்சுறுத்தல், ஐக்கிய அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய மற்றும் ஜப்பானிய பூர்ஷ்வாக்களை ஒரு பொது விடயம் குறித்து ஒன்று திரட்டுவதற்குப் போதுமானதாக இருந்தது. இப்பொழுது இந்த அச்சுறுத்தல் மறைந்து போயுள்ளது. ஆனால், ஏற்கனவே சோவியத் பெரிஸ்த்ரோய்காவை அடுத்துவந்த வருடங்களில், முப்பக்க அணிக்கு இடையிலான வேறுபாடுகள் தலை தூக்கத் தொடங்கியிருந்தன. ரீகனின் பழமை பேணும் இராணுவவாதக் கொள்கைகள் இதற்கு கணிசமான அளவில் பங்களிப்புச் செய்திருந்தன. அதனையடுத்து வந்த உலகப் பொருளாதார மந்தம் முப்பக்க (அதாவது, ஐக்கிய அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய, ஜப்பானிய) ஒற்றுமையின் சீர்குலைவுக்கு மேலும் வழிகோலியது. ஐக்கிய அமெரிக்க மேட்டுக்குடி வட்டாரங்களின் சில பழமைவாத பிரிவுகள், ஒரு புதிய பொது எதிரியின் தேடலினை மேற்கொண்டன என்பது ஆச்சரிய மூட்டுவதாகவுள்ளதா? ஒரு பொது எதிரியைக் கொண்டிருப்பது, மிக நெருக்கமான கூட்டு ஒத்துழைப்புக்கான மிகச் சிறந்த ஊக்குவிப்பாக இருந்து வருகின்றது என சமூகவியலாளரான லூவிஸ் கோசர் சுட்டிக் காட்டியுள்ளது இங்கு பொருந்தும்.

எதிர்ப்பு அல்லது விடுதலை இயக்கங்களை துவக்கி வைத்து, நடாத்திச் சென்றுள்ள மார்க்ஸ், ஸபாட்டா, மாவோ சேதுங் போன்ற தலைவர்களிடமிருந்தும் மற்றும் ஓரளவுக்கு முக்கியத்துவம் பெறும் தலைவர்களிடமிருந்தும் நாம் கற்றுக் கொள்ளக் கூடிய ஒரு பாடம், ஒருவர் தன்னுடைய எதிரிகளின் இயக்கங்களையும், திட்டங்களையும், கருத்துக்களையும், தந்திரங்களையும் கவனமாக ஆய்வு செய்ய வேண்டும் என்பதாகும். சில சந்தர்ப்பங்களில், நடைமுறையிலிருந்தும் தமது எதிரிகளின் உபாயங்களிலிருந்தும் பல விடயங்களை கற்றுக் கொள்ள முடியும்.

உலகளாவிய ரீதியில், அக்கறைகளின் அடிப்படையான முரண்பாடுகளை பகுப்பாய்வு செய்வதற்கான ஒரு வழி கிளின்டன், டெலர்ஸ், கோஹல் போன்ற அரசியல்வாதிகளின் உத்தியோகபூர்வ கூற்றுக்களை நோக்குவதிலும் பார்க்க உலகின் சக்திவாய்ந்த மேட்டுக்குடி சிந்தனையாளர் குழாத்தின் பழமை பேணும் பேச்சாளர்களின் கருத்துக்களையும் கொள்கை விளக்கங்களையும் கவனமாக நோக்குவதாகும்.

முப்பக்க ஆணைக் குழுவின் பங்கு குறித்த ஒரு சமீபத்திய ஆய்வு, முப்பக்க ஆவணங்களினால் வளர்த்தெடுக்கப்பட்ட சில நீண்ட கால கருத்துக்கள், அடுத்துவந்த வருடங்களில் மேலைத்தேச அரசாங்கங்கள் பின்பற்றிவந்த குறிப்பிட்ட சில கொள்கைகளின் மீது கணிசமான அளவிலான செல்வாக்கினைக் கொண்டிருந்தன எனபதனைக் காட்டுகின்றது. இந்தப் பின்னணியில், லிபரல்வாதிகளுக்கும் பழமைவாதிகளுக்குமிடையிலான கடுமையான கருத்து வேறுபாடுகள் நிர்ணயகரமான பங்கினை வகித்து வந்துள்ளன. மூன்றாவது மண்டலம் குறித்த ஐக்கிய அமெரிக்கக் கொள்கையில் பல தலைமீடுகளும் சீரற்ற தன்மைகளும் கடந்த காலத்தில் நிலவிவந்துள்ளன. இவை ஐக்கிய அமெரிக்க அதிகார வர்க்கத்துக்குள் நிலவிவரும் உள் முரண்பாடுகளை மிகத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. கப்ரியல் கொல்கோ (1988) இது குறித்து விரிவாக ஆய்வு செய்துள்ளார்.

ஒட்டுமொத்தமாக, அமெரிக்க அதிகார அமைப்பினால் இழைக்கப்பட்ட தவறுகளினால் தென் மண்டல உலகம் பயனடையவில்லை. அதற்கு மாறாக, ஐக்கிய அமெரிக்க அதிகார அமைப்பின் சக்தி வாய்ந்த அங்கங்களான சீ.ஐ.ஏ. அமைப்பு மற்றும் ஏனைய நிறுவனங்கள் போன்றவற்றின் ஒன்றுக்கொன்று முரண்பட்ட, தெளிவற்ற, தவறான சில நடவடிக்கைகளினால் அவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியில், அமெரிக்க அதிகார ஸ்தாபனத்தின் மிகவும் ஈவிரக்கமற்ற கெடுபிடிகளுக்கு மத்தியில், அடக்குமுறை நிலைக்கு எதிரான வன்முறையுடன் கூடிய எதிர்ப்பு இயக்கங்கள் அநேகமாக சாத்தியமில்லாது போய்விடும் என மார்க்ஸிஸ்டுகள் கருதி வருகின்றனர். வேறு எதிர்ப்பு முறைகள் இப்பொழுது கவனத்தில் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேட்டுக்குடியினரின் சிந்தனையில் காணப்படும் புதிய முரண்பாடுகளில் மிகக் கவனமாக மதிப்பிடப்பட வேண்டியது அபிவிருத்தியின் பின்னணியிலுள்ள தத்துவமாகும். ட்ருமன் (1949) "அபிவிருத்தி குன்றிய நாடுகளின்" சோஷலிஸ அபிவிருத்திகள் எழுச்சி அடைந்து வருவதற்கு எதிராக, துணிச்சலான புதிய நிகழ்ச்சித் திட்டத்தை துவக்கிவைத்தார். இக்கொள்கை எதிரியை சமாளித்து வைத்துக் கொள்ளும் தந்திரத்தை உள்ளடக்கி இருந்தது. சிலவருடங்களின் பின்னர், ஐக்கிய அமெரிக்காவின் அதிகார வர்க்க சிந்தனையாளர் குழாத்தினால் புகழ்பெற்ற "நவீனமயமாக்கல்" கோட்பாடு வடிவமைக்கப்பட்டது. 1950களில் மஸஸ்சூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் சர்வதேச ஆய்வுகளுக்கான மையத்தினால் மேற்கொள்ளப்பட்ட கூட்டு முயற்சிக்கு தான் பங்களிப்புச் செய்த விதம் குறித்து வால்ட் ரொஸ்டோ (1985) எழுதியுள்ளார்.

சீன மாதிரிக்கான ஒரு பதிலீடாக, பின்னர், " பொருளாதார வளர்ச்சிக் கட்டங்கள்" என்று அறியப்பட்ட ஒரு முறைக்கான அத்திவாரத்தை இக்குழுவினர் இட்டனர். இதன் ஒருபாகத்தினை சீ.ஐ.ஏ. அமைப்பு நிதிப்படுத்தியது என்று ரொஸ்டோ குறிப்பிடுகின்றார். ("பொருளாதார வளர்ச்சிக் கட்டங்கள்: கம்யூனிஸ்டு அல்லாத ஒரு விஞ்ஞாபனம்" 1960ல் வெளியிடப்பட்டது). இந்த நவீனமயமாக்கல் கோட்பாடு ஐக்கிய அமெரிக்க அதிகார அமைப்புக்கும் அதன் "படிப்படியான பொருளாதார வளர்ச்சிக் கட்டங்கள்" என்ற கருத்துக்கும் உதவி வந்துள்ளது. பிற்காலத்தில் இந்தக் கோட்பாடு தங்கியிருக்கும் கோட்பாட்டுவாதிகளின் நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகியது.மேலும், பூர்ஷ்வாக்களின் அதிகளவுக்கு விழிப்புணர்வு பெற்றுள்ள மிதவாதப் போக்குகளைக் கொண்டிருந்த பிரிவினரால் தயாரிக்கப்பட்ட ரோம் கிளப்பின் "வளர்ச்சிக்கான வரையறைகள்" (1972) பிராண்ட் அறிக்கைகள், "எமது பொது எதிர்காலம்" என்ற தலைப்பிலான (1987) ஐநா அறிக்கை போன்ற ஆவணங்கள் இதனை எடுத்துக்காட்டின. நிலைத்து நிற்கக் கூடிய வளர்ச்சி, 1950களில் ரொஸ்டோ போன்றவர்கள் ஆதரித்துப் பேசிய வரையறைகள் அற்ற வளர்ச்சியின் வகையைச் சேர்ந்ததாக

இருக்கவில்லை. பூர்ஷ்வாக்களில் சில பிரிவினர், உற்பத்தியை தொடர்ச்சியாக புரட்சிகரமாக மாற்றியமைப்பதை நோக்கிய அவர்களுடைய முயற்சி வெகு விரைவில் வரையறைகளைச் சந்திக்க முடியும் என்பதனை நன்கு அறிந்துள்ளனர். சமீபத்தில் வலுக் கொள்கைகள் தொடர்பாக பொஸ்டனில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், குடும்பமொன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு கார்கள் என்ற சமூகமொன்றை நோக்கிய சீனாவின் அபிவிருத்தி முயற்சியின் பின் விளைவுகள் ஐக்கிய அமெரிக்காவை உள்ளடக்கிய உலகின் அனைத்து நாகரிகங்களையும் மூச்சுத் திணற வைத்து விடும் என்பது மிக ஆணித்தரமாக சுட்டிக் காட்டப்பட்டது. அது அப்படி இருக்கமுடியாது. பூர்ஷ்வாக்கள் இப்பொழுது, பொருளாதார வளர்ச்சிக் கட்டங்களின் உச்சமட்டம் குறித்த முடிவு நாள் தரிசனத்தை கொண்டுள்ளனர்.

மூன்றாவது மண்டலத்தைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட விவசாயக் குடியானவர்களின் வாழ்க்கை நிலமைகளிலிருந்து நாங்கள் அறிந்து கொள்வதுபோல குறிப்பிட்ட சில உத்தியோகபூர்வ செய்திட்டங்கள் மற்றும் கொள்கைப் பிரகடனங்கள் என்பவற்றின் பின்னணியில் இருக்கும் காரணங்களையும் அக்கறைகளையும் நாங்கள் கவனத்தில் எடுப்பது அவசியமாகும். மார்க்ஸ் குறித்து ஒருபோதுமே கேள்விப்பட்டிராத மக்களின் நடைமுறை வர்க்கப் போராட்ட தர்க்கவியலாக இது இருந்து வருகின்றது. இன்றைய சூழ்நிலையில் குறிப்பாக அடுத்த நூற்றாண்டின்போது அபிவிருத்தி குறித்த மேட்டுக் குடியினரின் கோட்பாட்டு ஆக்கங்களை நாங்கள் சந்தேகக் கண்கொண்டே பார்க்க வேண்டியுள்ளது. அமெரிக்க அதிகார அமைப்பின் மிகமுக்கியமான அறிவுசார் நிறுவனங்களில் ஒன்றான சர்வதேச விவகாரங்களுக்கான ஹார்வார்ட் மையத்தின் பணிப்பாளரான சமுவேல் ஹண்டிங்டன் சமீபத்தில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் மிகவும் சுவாரஸ்யமான அச்சமூட்டும் உதாரணமொன்றை தந்துள்ளார். அவர் இக்கட்டுரையை (Forign Affairs) சஞ்சிகையில் எழுதியுள்ளார். சித்தாந்தங்களுக்கு இடையிலான (அதாவது, முதலாளித்துவம் எதிர் சோஷலிஸம்) போராட்டம் முதலாளித்துவத்துக்குச் சார்பானதாக முடிவுற்றிருப்பதனையடுத்து நாகரிகங்களுக்கிடையிலான ஒரு மோதல் இடம் பெறக்கூடிய சாத்தியப்பாட்டினை அவர் முன்வைக்கின்றார். அவருடைய கட்டுரையின் சுருக்கங்கள் அநேகமாக அனைத்து மேலைத்தேச பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதுடன், அது குறித்து குறிப்புரைகளும் வழங்கப்பட்டிருந்தன. இதேபோல சில வருடங்களுக்கு முன்னர், புகுயாமா என்பவர் எழுதிய "வரலாற்றின் முடிவு" என்ற தலைப்பிலான கட்டுரைக்குப் பரவலான பிரபல்யம் வழங்கப்பட்டது. இங்கு புகுயாமாவின் கருத்துக்களை விடவும் ஹண்டிங்டனின் கருத்துக்கள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. அவர் அமெரிக்க அதிகார அமைப்புக்குள் நிலையான ஒரு இடத்தைப் பெற்றிருப்பதுடன் அதன் சிந்தனைப் போக்கிலும் செல்வாக்கினைக் கொண்டுள்ளார். ஹண்டிங்டன் தனது கட்டுரையில் அடுத்துவரும் தசாப்தங்களில் சில மாபெரும் நாகரிகங்களுக்கிடையில் மோதல்கள் தோன்றுவதற்க அதிகளவுக்கு வாய்ப்புக்கள் உள்ளன என சுட்டிக் காட்டுகின்றார். அவர் சமகால உலகில் சில நாகரிகங்களை இனங்காட்டுகின்றார்: மேலைய, கன்பியூஷியன் ஜப்பானிய, இஸ்லாமிய, இந்து, இலத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க நாகரிகங்கள் என்பவற்றைப் பட்டியலிடுகின்றார்.

ஹண்டிங்டனின் கட்டுரை, கலந்துரையாடலுக்காகப் பல முக்கிய கூறுகளை முன்வைக்கின்றது. அவரது கருத்துப்படி, சித்தாந்தங்கள் பெருமளவுக்கு செயலிழந்து போயுள்ள இன்றைய நிலையில் மக்களின் நடத்தைக்கான ஓர் அம்சம் என்ற முறையில், நாகரிகங்களின் கலாச்சாரத்துகசு அவர் அதிக முக்கியத்துவத்தினை அளிக்கின்றார். ஒட்டுமொத்தமாக நோக்கும்பொழுது இந்த அணுகுமுறை அநேகமாக இன்றைய யதார்த்த நிலைகளுடன் பொருந்தக் கூடியதாகவே இருந்து வருகின்றது.

இறுதி முடிவாக, ஹண்டிங்டன் ஏனைய நாகரிகங்களுடன் சகவாழ்வு நடத்துவதற்கு பழகிக் கொள்ள வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றார். அதேபோல இந்த நாகரிகங்களின் அடிப்படையான சமய மற்றும் தத்துவ கருத்துக்களையும் நாம் நன்கு புரிந்து கொள்ளவேண்டிய அவசியத்தையும் அவர் சுட்டிக் காட்டுகின்றார். இதனை நாங்கள் முழுமனதுடன் ஏற்றுக்கொள்ள முடியும். கிறஸ்தவ தேவாலயங்களுக்கான உலக கவுன்ஸில் அண்மையில் தொகுத்தளித்த ஒரு நூல் திரட்டுக் காட்டுவது போல, இன்றைய நிலையில் இத்தகைய முயற்சிகள் சாத்தியமற்றவையாக இருக்கவில்லை.

என்னைப்போன்ற சில ஐரோப்பியர்களும் குறிப்பாக மூன்றாவது மண்டல நாடுகளின் அல்லது மேலைத் தேசமல்லாத நாகரிகங்களின் நண்பர்களும் சகாக்களும் ஹண்டிங்டனின் கட்டுரையில் அடிக்கடி வலியுறுத்தப்பட்டு வரும் போராட்டம், மோதல்கள் மற்றும் போர்கள் போன்ற பதங்கள் குறித்து கவலைப்பட முடியும். ஆனால், தற்போது இடம்பெற்று வரும் பல போராட்டங்களின் உண்மையான விவரங்களை அவர் எடுத்துக் கூறுவதனை நாங்கள் நிராகரித்துவிட முடியாது. இவை விதிவிலக்குகளாக இருந்து வருகின்றனவா அல்லது ஒரு விதியாக இருந்து வருகின்றனவா?

கலாச்சார மற்றும் நாகரிக மாற்றங்களுக்கிடையிலான பிரிவுக் கோடுகளை வலியுறுத்திக் கூறும் ஹண்டிங்டன், பல்தேசிய நிறுவனங்களின் உலகளாவிய செல்வாக்கு வியாபித்து வருவதனை சுட்டிக்காட்டத் தவறி விடுகின்றார். இந்த நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட பிரிவுக் கோடுகள் அனைத்தையும் தாண்டி மிகப் பேரளவில் உலகெங்கிலும் பரவிவருக்கின்றன. அங்டாட் நிறுவனம் அதன் சமீபத்திய அறிக்கையொன்றில் (World Investment Report, 1993 Newyork) இதனைச் சுட்டிக் காட்டியுள்ளது. இந்தக் கம்பனிகள் சில நாகரிகங்களில் ஏனையவற்றிலும் பார்க்க அதிகளவுக்கு இடையூறுளை எதிர்கொண்டு வருகின்றன. ஆனால், ரோயல் டச், ஷெல், I.B.M. கொகாகோலா, ஸோனி, நெஸ்லே போன்ற பல கம்பனிகள் ஹண்டிங்டன் எதிர்பார்க்கும்

நாகரிகங்களின் சாத்தியமான மோதல்கள் குறித்து கிஞ்சித்தும் கவலைப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அவை உற்பத்தியை இடையறாது புரட்சிகரமான முறையில் மாற்றியமைத்துக்கொண்டு செல்லும் பூர்ஷ்வாக்களின் போக்கினை பின்பற்றி வருவது போல் தெரிகிறது. இது மார்க்ஸைப் பொறுத்தவரையிலும் கூட, சோஷலிஸத்துக்கான ஒரு முன்னோடி என்ற முறையில் ஒரு முற்போக்கு நிலையாகவே இருந்து வருகின்றது. இந்தப் பல்தேசிய நிறுவனங்கள் அனைத்துமே அநேகமாக மேலைத்தேச அல்லது ஜப்பானிய நாகரிகங்களை அடிப்படையாகக் கொண்டவையாக இருந்து வருகின்றன. அத்துடன், அவை மேலைத்தேச கலாச்சார செல்வாக்குகளையும் பிரதிநிதித்துவம் செய்கின்றன. ஆனால், ஏனைய நாகரிகங்களுக்கு ஏற்ற விதத்தில் தம்மை போதியளவுக்கு சீராக்கம் செய்து கொள்ளக்கூடிய திறனையும் அவை கொண்டுள்ளன. மிகவும் கடுமையான முறையில் ஆத்திரமூட்டப்படும் சந்தர்ப்பங்களில் மட்டுமே, அவை, ஈரானில் மேற்கொண்டதைப் போன்ற அடிப்படைவாத இயல்பினை கொண்ட சில எதிர் நடவடிக்கைகளை எடுக்கத் துணிகின்றன. மனித நாகரிகங்கள் அன்றும் இன்றும் ஒன்றின் மீது ஒன்று பரஸ்பரம் செல்வாக்குச் செலுத்தக் கூடிய தமது பாரிய ஆற்றலையும் அதிலிருந்து பயன் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆற்றலினையும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டி வந்துள்ளன. ஐரோப்பா கடந்த காலத்தில் இஸ்லாமிய/சோனக நாகரிக செல்வாக்கிலிருந்து கணிசமான அளவுக்குப் பயன்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

உலகளாவிய நிகழ்வுப் போக்குகளில் ஐரோப்பிய மற்றும் ஜப்பானிய உலகளாவிய அக்கறைகள், ஐக்கிய அமெரிக்க அக்கறைகளை ஒத்தவையாக இருந்து வருகின்றன என ஹண்டிங்டன் கருதுகிறார். ஆனால், இது உண்மையில் அப்படி இருந்து வருகின்றதா? பல்வேறு பூர்ஷ்வாக்கள் பிரிவினராலும் பயன்படுத்தப்பட்டுவரும் உபாயங்கள் அடுத்துவரும் ஆயிரமாவது ஆண்டிலும் ஒருமித்த தன்மையைக் கொண்டனவாக இருந்து வரமுடியுமா? அல்லது அவை வித்தியாசமான தன்மைகளைக் கொண்டவையாக இருக்குமா? ஐக்கிய அமெரிக்காவின் கூட்டு நாடுகளை முப்பக்க அணியில் வைத்திருப்பதற்காக ஹண்டிங்டன் பொது எதிரிகளை தேடிக் கொண்டிருக்கின்றாரா? ஈராக் போராட்டம் பல விமர்சகர்களினால் (முக்கியமாக மேலைத்தேச விமர்சகர்கள் அல்லாதவர்களினால்) மேலைய உலகம், உலகின் ஏனைய பாகங்களுக்கு எதிராக வெளிப்படுத்திக் காட்டிய ஒரு போராட்டமாகவே பொருள் விளக்கம் செய்யப்பட்டது. ஹண்டிங்டனும் ஏனையோரும் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்கள். ஆனால், இத்தகைய ஒரு அணுகுமுறை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வர வேண்டுமா? றியோடி ஜெனிரோவில் 1992 ஜூலையில் இடம்பெற்ற அங்டாட் மகாநாடு பெருமளவுக்குச் சாதகமான ஒரு திசையிலான பயணத்துக்கான உறுதியான அடிகளை முன் எடுத்து வைப்பதற்கு முயன்றது. ஆனால், அப்போதைய ஐக்கிய அமெரிக்க நிர்வாகம் இதில் பங்கேற்பதில் எத்தகைய உற்சாகத்தையும் காட்டவில்லை.

மேலைத்தேசம் சாராத நாகரிகங்களைச் சேர்ந்த பல கல்விமான்கள் தற்பொழுது இடம் பெற்றுவரும் சர்வதேச நாணய நிதியத்தின் அனுசரணையுடன் கூடிய அபிவிருத்தி மாதிரிக்கு எதிராக மிகக் கடுமையான அறைகூவல்களை முன்வைக்கும் நூல்களை எழுதியுள்ளார்கள். இந்த அபிவிருத்தி மாதிரி மேலைத்தேச அக்கறைகளுக்கு உதவி வருவதாக ஹண்டிங்டன் பகிரங்கமாக ஒப்புக் கொள்கிறார். இந்த அபிவிருத்தி மாதிரி, சார்புரீதியான அல்லது முழு அளவிலான வறுமை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அவற்றை மேலும் தீவிரப்படுத்தி வருகின்றது. இது மேலைத்தேசம் சாராத அனைத்து நாகரிகங்களிலும் இறுதியில் ஒரு திமர் வெடிப்பு நிலை தோன்றுவதற்கு வழிகோல முடியும். அதனால்தான் பலர் இப்பொழுது இந்த அபிவிருத்தி மாதிரிக்கு சவால் விட்டு வருகின்றனர். இந்தக் கொள்கை உண்மையிலேயே மேலைய உலகின் ஒரு குறுங்கால அக்கறையாக இருந்து வருகின்றதா? அல்லது நீண்டகால அக்கறையாக இருந்துவருகின்றதா? அதுவும் இல்லாவிட்டால் ஹண்டிங்டன் போன்றவர்கள் எதிர்பார்ப்பது போல, ஐக்கிய அமெரிக்காவின் சட்டபூர்வமான ஒரு அக்கறையாக அது இருந்து வருகின்றதா? மேலைய கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படை விழுமியங்களின் ஒரு பாகமாக அது இருந்து வருகின்றதா? துரதிர்ஷ்டவசமாக, ஹண்டிங்டன் இந்தக் கேள்விகளை கவனத்தில் எடுக்கவில்லை. "உலகின் ஏனைய பாகங்களுக்கு எதிராக மேலைய உலகம்" என்ற வகையில் இன்று நிலவிவரும் பரவலான கருத்தினை கேள்விகள் எதுவும் கேட்காது அவர் ஏற்றுக்கொள்கிறார். அவருடைய இந்தக் குறுங்கால கருத்து மேலைய நாகரிகத்திலும் பார்க்க அமெரிக்க பழமை பேண் பாரம்பரியத்தை பிரதிநிதித்துவம் செய்வதற்காகவே இருந்து வருவது போல் தோன்றுகின்றது.

குறுகிய இலாப நோக்கு அடிப்படையிலான அமெரிக்க வியாபார நடைமுறைகளை ஐரோப்பியர்கள் அடிக்கடி பரிகாசம் செய்து வந்துள்ளனர். நீண்டகால இலாபத்தன்மையையும் தொடர்ந்தும் நிலைத்து நிற்பதற்கான திட்டமிடலையும் கவனத்தில் எடுக்காது அமெரிக்கர்கள் உடனடியாகப் பணம் சம்பாதிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளனர் என ஐரோப்பியர் கருதுகின்றனர். இது ஒரு வேளை ஒரு மிகைப் படுத்தப்பட்ட கூற்றாக இருக்க முடியும். ரீகன்/தாட்சர் வருடங்களின் போது சில ஐரோப்பிய வர்த்தக வட்டாரங்களிலும் இந்த வழக்கம் ஒரு மோஸ்தராக உருவாகியிருந்தது. ஆனால், இந்த அணுகுமுறையினால் உருவாக்கப்பட்டுள்ள நெருக்கடிகளை தீர்ப்பது எப்படி என்பது குறித்த ஒரு தீவிரமான மீள் சிந்தனை இப்பொழுது ஐரோப்பிய வட்டாரங்களில் நிலவி வருகின்றது. இந்த மீள் சிந்தனையை, உலகளாவிய அரசியலுக்கும் நாகரிகங்களுக்கிடையிலான போட்டிக்கும் கூட நாங்கள் விரிவுபடுத்திக் கொள்ள முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தினால் ஊக்குவிக்கப்பட்டுவரும் அல்லது திணிக்கப்பட்டுவரும் அமைப்பு ரீதியான சீராக்கம் போன்ற அபிவிருத்தி

முறையும் அதனுடன் சம்பந்தப்பட்ட கொள்கைகளும் பெருமளவுக்கு சட்டபூர்வமான மேலைத்தேச அக்கறைகளாக இருந்து வருகின்றன என்ற ஹண்டிங்டனின் கூற்று விவாதத்துக்கான ஒரு சிறந்த துவக்கப்புள்ளியாகும். இந்தவகையில், இது ஜிம் பெட்ராஸ் (1993) முன்வைத்த "உலகமயமாக்கல் என்ற சொற்பிரயோகம் ஐக்கிய அமெரிக்க மேலாதிக்க அக்கறைகளை மூடி மறைத்துக்கொள்வதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது" என்ற கண்டனக் குரலை ஊர்ஜிதம் செய்வதாக உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் இந்தக் கொள்கை அணுகுமுறையை மறைமுக கரமொன்றுக்கூடாக ஐக்கிய அமெரிக்காவின் குறுங்கால அக்கறைகளை நிறைவு செய்வதற்குப் பதிலாக முழு மனித குலத்தினதும் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய விதத்தில் சீராக்கம் செய்து கொள்ள முடியாதா? சமீபத்திய "மானிட அபிவிருத்தி அறிக்கை 1992" போன்ற ஐ. நா.வின் பல ஆவணங்களில் கலந்துரையாடப்பட்ட பல விடயங்களில் இதுவும் ஒன்றாகும். சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் அவற்றின் மூல நோக்கங்களிலிருந்து விலகிச் சென்றுள்ளன என்பதனை இந்த அறிக்கை மிகவும் தெளிவாகவே சுட்டிக் காட்டுகின்றது. இந்த இரு நிறுவனங்களிலும் பெருமளவுக்கு, ஐக்கிய அமெரிக்காவின் செல்வர்க்கு மேலாதிக்கம் செலுத்தி வந்துள்ளது என்பதனை கொஸ்கோ (1988) எடுத்துக் காட்டியுள்ளார்.

மேலைய நாகரிகத்துக்கும் இஸ்லாமிய கன்பியூஷிய நாகரிகக் கூட்டணிக்குமிடையே மோதல் நிலை வலுவடைந்து வருகின்றது என்ற ஹண்டிங்டனின் கருத்து பெருமளவுக்குக் கவலை தரக்கூடிய ஒரு விடயமாக உள்ளது. கன்பியூஷிய மற்றும் இஸ்லாமிய அரசுகளுக் கிடையிலான வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் முன்னணிக்குக் கொண்டு வருவதன் மூலம் இந்தக் கூட்டணி உருவாவதைத் தடுக்க வேண்டுமென ஹண்டிங்டன் விரும்புகிறார். ஒரு நீண்டகாலக் கண்ணோட்டத்தில் நோக்கும்பொழுது, இந்த விளையாட்டு மிகவும் அபாயகரமானதொன்றாக மட்டுமன்றி, எதிர்பார்க்கப்படும் விளைவினை எடுத்துவர முடியாததாகவும் தோன்றுகின்றது. இவற்றைப் பிரிப்பதற்குப் பதிலாக, இவற்றுக் கிடையே ஒரு வகையான கூட்டு ஒத்துழைப்பினை எடுத்து வருவது பயனளிக்க முடியாதா? இந்த அபிவிருத்தி மாதிரி குறுங்காலத்தில் ஆயுதக் கைத்தொழில்களுக்குப் பயனுள்ளதாக இருக்க முடியுமா? இந்த வகையில் தாய்வானுக்கும் சவூதி அரேபியாவுக்கும் பல கோடி டொலர் பெறுமதியான அதி நவீன ஆயுதங்களை வழங்கும் ஐக்கிய அமெரிக்க நிர்வாகத்தின் கொள்கை குறித்து பெருமளவுக்கு அச்ச உணர்வுகள் தெரிவிக்கப்பட்டு வந்துள்ளன. இந்த ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கைகள் ஐக்கிய – அமெரிக்க மேட்டுக் குடியினரிடையே பல்வேறு சக்திகள் இயங்கி வருகின்றன என்பதனை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. நீண்டகால நாகரிக உயிர்வாழ்க்கை தொடர்பான அக்கறைக்கு எதிரான விதத்தில் குறுங்கால பொருளாதார அக்கறைகள் செயற்பட்டு வருகின்றன.

ஹண்டின்டனும் அவருடைய சகாக்களும் எத்தகைய ஒரு நிலைமையை கருத்தில் கொண்டுள்ளார்கள் என்பது மிகத் தெளிவாகத் தெரியவில்லை. இப்பொழுது ஓரளவுக்குச் சீர்குலைந்து போயுள்ள இராணுவ கைத்தொழில் தொகுதியின் அக்கறைகள் அல்லது மேலைய உலகு சாராத ஏனைய பகுதிகளிலிருந்து புதிய எதிரிகளை இனங்கண்டு, அதன் மூலம் ஐரோப்பா, ஜப்பான் என்பவற்றுக்கும் ஐக்கிய அமெரிக்கவுக்குமிடையில் பெருகிவரும் போட்டியை மீண்டும் ஒரு முறை மிகவும் உறுதியான முறையில் ஐக்கிய அமெரிக்காவின் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் ஒரு காட்சியை இவர்கள் கருத்தில் கொண்டுள்ளார்களா? இவை மேலும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய மிகவும் நிர்ணயகரமான கேள்விகளாக இருந்து வருகின்றன. உலகளாவிய தன்மை வாய்ந்த மற்றும் நடைமுறை மார்க்ஸிய அணுகுமுறை தமது எதிரிகள் தொடர்பான மதிப்பீட்டினை மேற்கொள்ள வேண்டும். வர்க்கப் போராட்டங்கள் உள்ளூர் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் அதன் உள்ளடக்கம் உலகளாவிய ரீதியில் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றது. மார்க்ஸினால் (1848) தெளிவாகக் கற்பனை செய்து பார்க்க முடியாதிருந்த (ஆனால், அவர் தீர்க்க தரிசனமாக முன் உணர்ந்திருந்த) பல முன்னேற்றங்களை பூர்ஷ்வாக்கள் அடைந்துள்ளனர். மேலைத்தேச அணியைச் சாராத நாடுகளுக்கு, ஹண்டிங்டன் கருதுவதைப் போல, நடவடிக்கைக்கான மூன்று மாற்றுவழிகள் உள்ளன: மேற்கிலிருந்து தனித்திருத்தல், மேற்கைப் பின்பற்றிச் செல்லல் மற்றும் நவீன்மயமாதல்,. ஆனால் அதேவேளையில், மேலைதேய மயமாகியிருத்தல். இந்த மூன்றாவது தெரிவு மேற்குக்கு எதிராக மேற்கு சாராத ஏனைய சமூகங்களுடன் ஒத்துழைப்புடன் இயங்குவதன் மூலம் சாத்தியப்படக் கூடியது என்று கருதப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் அடிப்படைவாத அணுகுமுறையை மேலைய உலகம் மிகவும் கண்டிப்பான முறையில் தொடர்ந்தும் பின்பற்றி வருமேயானால், பெரும்பாலான மூன்றாவது மண்டல சமூகங்கள் இறுதியில் மேற்குக்கு எதிராக திரும்ப முடியும் என்பதனை அப்ரமோ சுட்டிக் காட்டியுள்ளதனை ஹண்டிங்டன் மேற்கோள் காட்டியுள்ளார். மேலைய உலகம் இந்த வகையான அடிப்படைவாதத்தை தொடர்ந்தும் மிகவும் கண்டிப்பான முறையில் ஏன் பின்பற்றி வருகின்றது என்ற கேள்வியினை ஒருவர் எழுப்ப முடியும். நான் முன்னர் பொருளியல் நோக்கு (அக்டோபர்/நவம்பர்/டிசம்.1992) இதழில் எழுதியிருந்ததைப் போல, முதலாளித்துவம் இப்பொழுது பெருமளவுக்கு விவேகபூர்வமற்ற, தன்னைத்தானே ஒழித்துக்கொள்ளும் நுகர்வுவாதத்தின் வணிகச் சரக்கினை வழிபடும் ஒரு வகையான சமயமாக உருவாகி வருகின்றதா? மேலைத்தேய பூர்ஷ்வாக்களின் சில தலைவர்களிடையேயும் சில பிரிவுகளிடையேயும் ஒரு திகில் நிலை அல்லது ஒரு குழப்ப மனப்பான்மை இப்பொழுது எழுச்சி அடைந்து கொண்டிருக்கின்றது.

அடுத்துவரும் சில தசாப்தங்களின் போது மேலே எடுத்துக் காட்டப்பட்ட பல்வேறு வகையைச் சேர்ந்த முரண்பாடுகள் தொடர்ந்தும் நிலவிவரவும் மேலும் தீவிரமடையவும் முடியும். அனைத்து கண்டங்களையும் நாகரிகங்களையும் சேர்ந்த மார்க்ஸிஸ்டுகள் இந்த முரண்பாடுகள் உள்நாட்டு நிலைமைகளில் எடுத்து

வரக்கூடிய செல்வாக்குகளை மதிப்பிடுவதற்காக ஒன்றாக இணைவது அவசியமாகும். அதேபோல உள்ளூர் அபிவிருத்திகளின் பின்னணியில் இருந்துவரும் நீண்டகாலத் தன்மை வாய்ந்த உலகளாவிய போக்குக ளையும் அவர்கள் பகுப்பாய்வு செய்ய வேண்டும். மேலைய (குறிப்பாக ஐக்கிய அமெரிக்க) பூர்ஷ்வா வர்க்கத்தினர் உலகமயமாக்கல் நிகழ்வுப் போக்கினை தமக்குச் சாதகமான முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு முயன்று வருவதனைப் பார்க்கும்பொழுது, வர்க்க முரண்பாடுகள் ஒழித்துவிடவில்லை என்பதனையும், அதற்கு மாறாக, அது உலகமயமாக்கப்பட்டு பெருமளவுக்குச் சிக்கலானதாக மாற்றமடைந்துள்ள தென்றும் ஒருவர் கூற முடியும். மேலைய பூர்சுவாக்களின் பிரதிநிதித்துவ பேச்சாளர்களான ஹண்டிங்டன் போன்றவர்களின் உபாய ரீதியான பகுப்பாய்வினை மார்க்ஸிஸ்டுகள் கற்றறிந்து, நாகரிக கலாச்சார மற்றும் மத அடிப்படையிலான பிரிவுக் கோடுகளை அவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். உலகளாவிய அதிகார வர்க்க மேட்டுக்குடியினரின் தந்திரோபாயங்களை எதிர்கொண்டு வரும் மக்கள் இயக்கங்கள் நாகரிக அல்லது இனத்துவ பிரிவினைகளின் அடிப்படையில் தமக்கிடையே சண்டையிட்டுக்கொள்வதற்குப் பதிலாக ஒரு பொது நோக்கத்தினை கண்டறிந்து கொள்ள வேண்டும்.

ஈரானின் இஸ்லாமியப் புரட்சி போன்ற உலகளாவிய அபிவிருத்திகளின் கலாச்சார மற்றும் மத அடிப்படையிலான அம்சங்கள் மார்க்ஸிஸ்டுகளினால் சரியான முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு புரிந்து கொள்ளப்படவில்லை என டிம் அலன் (1992) சுட்டிக் காட்டியுள்ளார். மார்க்ஸிஸ்டுகள் பெருமளவுக்கு பொருள் சார் அரசியல் பொருளாதார விளக்கங்களிலேயே ஈடுபட்டு வந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். இங்கு எம் முன் ஒரு முக்கியமான பணியுள்ளது: பூர்ஷ்வாக்களிடையே எழுச்சியடையக் கூடிய சாத்தியமான பிரிவுக் கோடுகளை அல்லது முரண்பாடுகளை ஆய்வு செய்வதற்கான ஒரு நீண்டகாலத் திட்டம் அவசியமாகும்.

லிபரல் ஜனநாயகவாதிகளுக்கும் பூர்ஷ்வாக்களின் பழமை பேணும் பிரிவுகளுக்குமிடையில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. மேலும் தேசிய நோக்குக் கொண்ட பிரிவுகளுக்கு இடையிலும் சர்வதேச நோக்குக் கொண்ட பிரிவுகளுக்கு இடையிலும் பல வித்தியாசங்கள் தென்படுகின்றன. இந்த பூர்ஷ்வாக்களில் சோஷலிஸ பங்கேற்பு ஜனநாயகமொன்றை உருவாக்குவதற்காகப் பாடுபட்டு வரும் பிரிவினர்களுடன் கூட்டுச் சேர்ந்து கொள்வதற்கான சாத்தியப்பாடு உள்ளது. இப்பொழுது உலகளாவிய ரீதியில் எழுச்சியடைந்து வரும் பொருளாதார மாதிரி பூர்ஷ்வாக்களின் நன்கு முன்னேற்றமடைந்த பிரிவினர், எழுச்சி இயல்பு வாய்ந்த தீவிர சீர்திருத்தப் போக்கினைக் கொண்ட இயக்கங்களுடன் ஓர் இணக்கத்துக்கு வருவதற்கு வழிகோல முடியும். மேலும், சீனாவிலும் வியட்நாமிலும் இடம்பெற்றுள்ள மாற்றங்கள் சோஷலிஸ மற்றும் முதலாளித்துவ மாதிரிகளை ஆக்க பூர்வமான ஒரு முறையில் இணைத்துக் கொள்வதற்கான வழிமுறைகளையும் காட்டுகின்றன.

மார்க்ஸிஸ்டுகள் இத்தகைய முயற்சிகளின் போது உலகமயமாக்கல் குறித்த கருத்தினை கீழேயிருந்து நோக்குவது –அதாவது தமது சொந்தக் கலாச்சாரங்களில் வேரூன்றியுள்ள மக்கள் இயக்கங்களை பிணைத்துக் கொள்வது – முக்கியமானதாகும். அடிமட்ட சமூக இயக்கங்கள் இதன் மூலம் புத்துயிர்ப்படைய முடியும். இந்தக் கருத்தினை கஸ்டாவோ எஸ்டேவா (1987) முன்வைத்தார். சாவோ பவ்லோ மாநாட்டின் உறுதியான அனுபவங்களிலிருந்து படிப்பினைகளைப் பெறுவது மற்றொரு வழியாகும். சாவோ பவ்லோ மாநாட்டின் முதலாவது கூட்டத்தின் (1990) பின்னர், "இலத்தீன் அமெரிக்காவில் ஒரு புதிய இடதுசாரி இயக்கம் தோன்றி வருவது போல் தெரிகின்றது" என ரொபின்சன் (1992) எழுதியுள்ளார். பிரேஸிலின் தொழிலாளர் கட்சியின் அழைப்பின் பேரில் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த பல.சோஷலிஸ கட்சிகள் 1990ல் சாவோ பவ்லோவில் கூடின. நிகாராகுவாவின் சார்டினிஸ்டா அணி, எல் சல்வேடாரின் பரா பொண்டோ விடுதலை முன்னணி என்பவற்றின் பிரதிநிதிகளும் மெக்சிக்கோ, பெரு, பொலிவியா மற்றும் பல நாடுகளின் இடதுசாரிக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இங்கு வந்திருந்தனர். அந்தக் கூட்டத்தின்போது, கிழக்கு ஐரோப்பாவில் இடம்பெற்ற நிகழ்வுகளுக்கு நேர்மாறான விதத்தில் சோஷலிஸம் ஜனநாயகத் தன்மையைக் கொண்டதாகவும், பங்கேற்பு முறையொன்றாகவும், பல்லின சிவில் சமூகமொன்றில் மிக உறுதியாக வேரூன்றியுள்ள ஓர் அமைப்பாகவும் இருந்துவர வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆயுதப் போராட்டம் குறித்த பித்து மனப்பான்மை கைவிடப்படுதல் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட உள்ளூர் யதார்த்தங்களில் வேரூன்றியுள்ள அரசியலுக்கு முன்னுரிமையளிக்கப்படல் வேண்டும். உள்ளூர் சமூகங்கள், மகளிர், உழவர் விவசாயிகள், தொழிற்சங்கங்கள் உயிரினவியல் சூழல் மற்றும் சமய இயக்கங்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் ஒரு புதிய சமூக ஒழுங்கினை எடுத்து வருவதற்காக உழைத்து வருகின்றனர். இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பல்வேறு குழுக்கள் மற்றும் கட்சிகள் என்பவற்றில் தீவிர கிற்ஸ்தவர்கள் கொண்டிருந்த செல்வாக்கு இங்கு முக்கியமாகச் சுட்டிக் காட்டப்படுதல் வேண்டும்.

இந்த நடைமுறை மார்க்ஸிய முன் முயற்சியை, கீழே இருந்தான உலகமயமாக்கலுக்கான உலகளாவிய முயற்சியொன்றாக மாற்றியமைக்கும் சாத்தியப்பாடு குறித்து நாங்கள் சிந்திக்க வேண்டும். உலகளாவிய மார்க்ஸிஸ்ட் கோட்பாட்டு ஆக்கம் உள்ளூர் முயற்சிகள் மற்றும் படிப்பினை, அனுபவங்கள் என்பவற்றிலிருந்தே தோன்றுகின்றன. மார்க்ஸீய பகுப்பாய்வு முறையின் கூறுகளின் மீது இலத்தீன் அமெரிக்காவின் தீவிர கிறிஸ்தவ இயக்கங்கள் மட்டும் ஆர்வம் காட்டிவரவில்லை. பௌத்த மதம், இஸ்லாம், காந்தியவாதம், இந்து மதம் ஆகியவற்றின் முற்போக்குப் பிரிவினரிடையேயும் கூட இந்த ஆர்வம் இப்பொழுது துளிர்விட்டுள்ளது. இது குறித்து ரஷ்யப் பொருளியலாளரான ஸ்டெனிஸ்லாவ் மென்சிகோ (1993) சில சுவாரஸ்யமான விடயங்களை முன்வைத்துள்ளார். கருணையுடன் கூடிய பொருளாதாரமொன்றை எடுத்து வருவதற்கு இப்பொழுது

( 61 பக்கம் பார்க்க)

# தொழில் முனைவோர் எங்கிருந்து வருகின்றனர்?

## மூன்றாவது பாதையிலிருந்து "மற்ற பாதைக்கும்" அதற்கு அப்பாலும்: ஹங்கேரிய அனுபவம்

ஜ்யோர்ஜி லெங்யேல்
(சமூகவியல் திணைக்களம்,
புடாபெஸ்ட் பல்கலைக்கழகம்)

மூன்றாவது பாதை குறித்து

"மூன்றாவது பாதை" "தரமான சோஷலிஸம்" "குடியிருப்பு தோட்ட ஹங்கேரி" போன்ற இந்தப் பதங்கள் 1930களில் ஹங்கேரியில் இடம்பெற்ற சீர்திருத்த வழிமுறையின் முக்கிய கருது கோள்களாக இருந்தன. ஹங்கேரி முதலாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் அதன் நிலப்பரப்பில் மூன்றிலிரண்டு பகுதியை இழந்தது. மேலும் பொருளாதார தேசியவாதம் மற்றும் வலதுசாரி எதேச்சாதிகார ஆட்சி என்பவற்றின் வழமையான பயப் பிராந்தியைக் கொண்டுள்ள ஒரு நாடாகவும், சீர்திருத்தங்களை எடுத்து வருவதற்கு தயார் நிலையில் இல்லாத ஒரு நாடாகவும் அது இருந்து வந்தது. இத்தகைய ஒரு சூழ்நிலையின் கீழ் லஸ்லோ நெமத் போன்ற புத்தி ஜீவிகளும் மக்களின் பரவலான அபிமானத்தைப் பெற்றிருந்த பல எழுத்தாளர்களும் ஹங்கேரிக்கான நகல் திட்டங்களை முன் வைத்தும், சமூக சீர்திருத்த மாற்று வழி குறித்து விவாதம் செய்து வந்தமையும் அநேகமாக வியப்பூட்டும் ஒரு விடயமாக தோன்ற முடியும்.

ஹங்கேரியின் குடித்தொகையில் அரைவாசிப் பங்குக்கும் மேற்பட்டவர்கள் விவசாயத் துறையில் ஈடுபட்டிருந்தனர். நாட்டு மக்களில் மூன்றிலிரண்டு பங்கிற்கும் மேற்பட்டவர்கள் கிராமங்களில் வாழ்ந்து வந்தனர். கிழக்கு ஐரோப்பாவிலேயே ஆகக் கூடிய அளவிலான மெய் ஆதனங்கள் ஹங்கேரியக் கிராமப்புறங்களில் ஒன்று திரண்டிருந்தன. சோஷலிஸ விமர்சகர்கள் ஹங்கேரியை "30 இலட்சம் பிச்சைக்காரர்களை கொண்ட நாடு" என வர்ணித்து வந்தனர். விவசாயக் குடியானவர்களில் நிலமற்ற வறியவர்களே பெரும்பாண்மையானவர்களாக இருந்தார்கள்.

இத்தகைய சூழ்நிலைகளின் கீழ் "மூன்றாவது பாதை" என்ற பதம் என்ன பொருள் விளக்கத்தினைக் கொடுக்கின்றது? அது லிபரல் தனி நபர்வாதம் மற்றும் கம்யூனிஸ்டு கூட்டுடமை ஆகிய இரண்டுக்குமான ஒரு மாற்று வழியை குறித்தது. பெரிய வல்லரசுகளிலிருந்து சமமான தூரத்தில் விலகி இருப்பதனையும் ஜேர்மன் மற்றும் சோவியத் செல்வாக்கிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக இயங்குவதையும் அது குறித்தது.

அது நிலமற்ற விவசாயக் குடிமக்களின் பிரச்சினைகளுக்கு சாதகமான நியதிகளில் ஒரு தீர்வினை வழங்கும் உத்தேசத்தினைக் கொண்டிருந்தது. நிலச் சீர்திருத்தம், நிலப் பகிர்ந்தளிப்பு, நட்டஈடு, நிலமற்ற இனம் விவசாயக் குடியானவர்களைக் குடியேற்றுதல் போன்ற குறிக்கோள்களை அது கொண்டிருந்தது. பாரிய பெருந்தோட்டங்களின் தானியக் கலாச்சாரத்தின் இடத்தில் தரமான உற்பத்தியையும், தோட்டப்பயிர் உற்பத்தியையும் எடுத்து வருவதனையும் அது நோக்கமாகக் கொண்டிருந்தது. புதிய உரிமையாளர்கள் தொழில் முனைவோராகவும், அதேவேளையில், கூட்டுறவுச் சங்கங்களின் தன்னார்வ உறுப்பினர்களாகவும் இருந்து வருவார்கள் என்று கருதப்பட்டது. இந்த வகையில், "மூன்றாவது பாதை" சிறிய மற்றும் பெரிய தோட்டங்களின் அனுகூலங்களை ஒன்றாக இணைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்தது.

"மூன்றாவது பாதை" பூர்ஷுவா/ சிவில் அதிகாரி முதலாளி/தொழிலாளி

போன்ற வேறுபாடுகளை, அவற்றை ஒன்றாக இணைத்துக் கொண்டதன் மூலம் தவிர்த்துக்கொள்ள முயன்றது. இது லிபரல் மற்றும் சோஷலிஸ விழுமியங்களை இணைத்து, சமூகத்தின் அடிமட்ட மக்கள் எழுச்சி அடைவதற்கு வழிகோலிய மண் வாசனையுடன் கூடிய ஒரு கற்பனாவாத உலகமாக இருந்தது. மேலும் அது உண்மையான ஒரு தேசிய மத்தியதரவர்க்க மக்கள் பிரிவினரையும் உருவாக்க முயன்றது. மிகச் சக்திவாய்ந்த தேசிய மத்தியதர வர்க்கமொன்றிற்கான தேவை சீர்திருத்தச் சித்தாந்தத்தின் ஒரு முக்கியமான கூறாக இருந்தது. தேசிய பிரபுத்துவ வர்க்கம் அதன் அரசியல் மற்றும் பொருளாதாரச் செல்வாக்கை இழந்திருந்தமையினாலும், அதே வேளையில், விவசாயக் குடிமக்களிடையே அத்தகைய சக்தி எதுவும் நிலவி வராமையினாலும் ஹங்கேரிய மத்தியதர வர்க்கம் நலிவுற்றிருந்தது என்பதை டெசோ சாபோ மற்றும் லஸ்லோ நெமேத் போன்றவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். முக்கியமான சிவில் அதிகாரி பதவிகளை ஜேர்மனியர்களே வகித்து வந்தனர். தனியார் பொருளாதாரத்தில் யூதர்களின் கை மேலோங்கியிருந்தது என அவர்கள் கருதினர். தற்கால வரலாற்று, சமூகவியல் ஆய்வுகளின்படி, இக் கூற்றுகள் பொய்யானவையாக அல்லது மிகைப்படுத்தப்பட்ட கூற்றுகளாக இருந்து வந்துள்ளன என்பதைனக் காண முடிகின்றது. மிகவும் சக்தி வாய்ந்த மத்தியதர வர்க்கமொன்றுக்கான தேவை நிலமற்ற விவசாயக் குடியானவர்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகளிலிருந்தும், அந்நியர்கள் தொடர்பாக காட்டப்பட்டு வந்த பாரபட்சமான அணுகுமுறையிலிருந்துமே தோன்றியது என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். இந்த நிலையில், சமூக விமர்சகர்களும் அதிகாரத்துவ மேட்டுக்குடியினரும் தலைமீட்டுவாதத்தின் விழுமியங்களைப் பகிர்ந்து கொண்டிருந்தனர். அத்துடன், அந்நியர்கள் தொடர்பாகவும் தலைமீட்டுவாதம் தொடர்பாகவும் ஒரு வெறுப்புணர்வினையும் அவர்கள் வளர்த்துக் கொண்டிருந்தார்கள். விவசாயக் குடியானவர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வினை வழங்குவதற்குப் பதிலாக, வலதுசாரி எதேச்சாதிகார ஆட்சி ஆகக் குறைந்த எதிர்ப்பு என்ற நிலைப்பாட்டினைப் பின்பற்றியது. அது 1939ன் யூத எதிர்ப்பு சட்டவாக்கத்துடன் யூதர்களின் பொருளாதார அந்தஸ்துகளை கட்டுப்படுத்தியது. ஆனால் அதேவேளையில், கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரமொன்றுக்குரிய நிறுவனங்களை அது அறிமுகப்படுத்தியது.

கலாச்சாரத்தினைப் பொறுத்த வரையில் "மூன்றாவது பாதை" விவசாயக் குடியானவர்களின் புதிய அறிவு சார் மத்தியதர வர்க்கமொன்றின் எழுச்சிக்கு உதவும் குறிக்கோளினைக் கொண்டிருந்தது. விவசாயிகளின் திறமை மிக்க பிள்ளைகளுக்காக நடுநிலைப் பள்ளிகளையும் பல்கலைக் கழகங்களையும் ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தினை சீர்திருத்த வரைவு நகல்கள் வலியுறுத்தின. அத்தகைய மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் மூலமும் மக்கள் கல்லூரிகள் மூலமும் உதவவேண்டும் என அவை கூறின. விவசாயக் குடியானவர்களுக்கான மேல்நிலைப் பள்ளிகளை ஸ்தாபிப்பதன் மூலம் உத்தியோகபூர்வ கல்விக்கும் உத்தியோகபூர்வமற்ற கல்விக்கும் இடையில் நிலவிவரும் இடைவெளியை, சீர்திருத்தவாதிகள் ஒழித்துவிட விரும்பினர். இந்தத் திசையை நோக்கி 1930களின் போது உண்மையிலேயே சில முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

விவசாயக் குடியானவர்களின் இளைஞர்களுக்கு செறிவான விவசாயத்தின் திறன்களைப் போதிப்பதன் மூலம் ஒருபுதிய தொழில் முனைவோர் வர்க்கத்தினை உருவாக்குவதனை "மூன்றாவது பாதை" நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்த வகையான கல்விக்கும் சமூகமயமாக்கலுக்குமான மிக முக்கியமான நிறுவனமாக இராணுவமே இருந்து வர முடியுமென நெமெத் போன்றோர் கருதினர். ஆனால், இராணுவ ஜெனரல்கள் இந்தத் தரிசனத்தை நிறைவு செய்வதற்குத் தயாராக இருக்கவில்லை. அவர்கள் ஏற்கனவே ஒரு இரகசிய ஆயுதக் கொள்கை உடன்படிக்கையை 1939ல் செய்து கொண்டிருந்தனர். இது பாரிய 100 கோடி பெங்கோஸ் முதலீட்டுச் செய்திட்டமொன்றை எடுத்துவந்தது. இறுதியில் யுத்தத்தில் பங்கேற்பதற்கு வழிகோலியது.

கட்டுப்படுத்தப்பட்ட போர் மற்றும் திட்டமிடப்பட்ட பொருளாதரங்களுக்கான நிறுவனங்கள் அமைக்கப்பட்டதனையடுத்து சமூக அபிவிருத்தி அடிமட்டக் கற்பனாவாத உலகம் குறித்த "மூன்றாவது பாதை" என்ற திசையிலிருந்து விலகி, வேறொரு திசையில் செல்லத் தொடங்கியது. யுத்த பொருளாதாரம் உற்பத்தியை மீளமைப்புச் செய்தது: விவசாயம், உணவு சிறிய கைத் தொழிகள் போன்றவை முக்கியத்துவம் இழந்தன: அதேவேளையில், உலோகம் மற்றும் பாரிய கைத்தொழில்கள் முக்கியத்துவம் பெறத்தொடங்கின. 1950 களின் பலவந்தப்படுத்தப்பட்ட கூட்டுப் பண்ணை முறையும் "குலாக்ஸ்" எதிர்ப்பு இயக்கங்களும் விவசாயக் கூலித் தொழிலாளர்களை கைத் தொழில் துறைக்குள் தள்ளி விட்டன.1960களின் போது, விவசாயத் துறை குடிமக்களில் ஒருபகுதியினர் நகரங்களை நோக்கிச் சென்றனர். அந்தத் தசாப்தத்தின் முடிவின் போது குடிமக்களின் நான்கில் ஒரு பங்கினர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், குடிமக்களின் அரைவாசிப் பங்குக்கும் மேற்பட்டவர்கள் கிராமங்களிலேயே வாழ்ந்து வந்தார்கள்.

### ஏனைய பாதை: இரண்டாவது பொருளாதாரம்

ஹங்கேரியில், 1960கள் தொடக்கம் பொருளாதாரக் கொள்கை பெரும் எண்ணிக்கையிலான அரசதுறை சார்ந்த மற்றும் ஓரளவுக்கு அரச துறைசார்ந்த ஊழியர்களை உருவாக்கியிருந்தது. ஆனால், அதேவேளையில், பொருளாதாரம் அவர்களுடன் ஒரு விதமான சமரசமும் செய்து கொண்டிருந்தது. முதலாவது பொருளாதாரத்தில் மக்கள் தமது உழைப்பினை விற்பனை செய்வதற்குக் கடமைப்பட்டிருந்தார்கள். ஆனால், இரண்டாவது பொருளாதாரத்தில் தமது எஞ்சிய சக்திகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கு அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களில் சுமார் ஐந்தில் நான்கு பங்கினருக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் வீட்டுக்காணித் துண்டுகளும் விவசாயம், போக்குவரத்து அல்லது உற்பத்திகளைக் கொள்வனவு

செய்தல் போன்ற வேறு சில தேவைகளும் வழங்கப்பட்டன. ஒரு வகையில், வீட்டுக் காணித்துண்டு, 1940 களின் பலவந்தமான ஒரு மறைமுகமான நட்டஈடாக இருந்தது. மேலும், முதலாவது பொருளாதாரத்தில் நிலவிவந்த குறைந்த அளவிலான விவசாயத் துறை கூலிகளுக்கும் இது ஒரு நட்டஈடாக இருந்தது

1970களின் தொடக்கத்தின் போது, இந்த வீட்டுக்காணித்துண்டுகளில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு காணித்துண்டுகள், தமது சொந்த நுகர்வுக்காகவே உற்பத்தி செய்து வந்தனர். தமது குடும்பத் தேவைகளுக்கு ஏற்றவிதத்தில் அவர்கள் மரக்கறி வகைகளையும் கிழங்குகளையும் பயிரிட்டனர். இந்த வீட்டுத்தோட்டங்கள் ஓரிரு பன்றிகளுக்குத் தேவையான தானிய வகைத் தீனிகளையும் வழங்கி வந்தன. குளிர் சாதனப் பெட்டிகளைக் கொள்வனவு செய்யும் பழக்கம் 1980களில ஏற்பட்டதனையடுத்து, உணவைப் பாதுகாத்து வைப்பதற்கான புதிய வழிமுறைகள் கிடைத்தன.

குடும்ப நுகர்வுக்காக ஒதுக்கப்பட்ட பொருட்களின் அளவு அதிகரித்து வந்த போதிலும், விற்பனைக்காக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விகிதத்துடன் ஒப்பிடும்போது குடும்ப நுகர்வுக்காக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விகிதம் வீழ்ச்சியடைந்திருந்தது. 1970களின் இறுதியின் போது, வீட்டுத்தோட்ட உற்பத்திகளில் சுமார் நான்கில் மூன்று பங்கு சந்தைப்படுத்தப்பட்டது.

1980களின் முதல் அரைப் பாகத்தில் இரண்டாவது பொருளாதாரத்தின் வருமானங்கள், முதலாவது பொருளாதாரத்தில் செலுத்தப்பட்டு வந்த கூலிகளின் மூன்றில் ஒரு பகுதியாக இருந்தன. அதேவளையில், வேலை நேரத்தின் நான்கில் ஒரு பகுதி இரண்டாவது பொருளாதாரத்தில் பயன்படுத்தப்பட்டது. சிறிய அளவிலான விவசாய உற்பத்தி, சுயகட்டுமான வேலைகள், வர்த்தகத்தில் தனியார் நடவடிக்கைகள் என்பவற்றையும் இந்த மதிப்பீடு உள்ளடக்கியுள்ளது. சிறிய அளவிலான விவசாய உற்பத்தித் துறையில் பங்கு இரண்டாவது பொருளாதாரத்தில் மிக உயர் அளவில் காணப்பட்டது. உதாரணமாக, பழ வகைகள், கிழங்குகள், முட்டைகள், பன்றிகள் போன்றவற்றின் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதி இந்தத் துறையினராலேயே உற்பத்தி செய்யப்பட்டது.

தொழில் முனைபவர்களின் கவனத்தை ஈர்த்த வேறுசில முக்கியமான பிரிவுகளும் கூட விவசாயத் துறை கூட்டுறவு அமைப்புக்களுடனும் இரண்டாவது பொருளாதாரத்துடனும் சம்பந்தப்பட்டவையாக இருந்தன. இவை கைத்தொழில் மற்றும் சேவை உப பிரிவுகளாக அல்லது விசாய கூட்டுறவு அமைப்புக்களின் உப கிளைகளாக இருந்தன. இந்த உப கிளைகள் தொழில் முனைவோரினால், தாய் அமைப்பின் அனுகூலங்களைக் கவனத்தில் கொண்டு ஸ்தாபித்துக் கொள்ளப்பட்டன. இந்த உப அலகுகள் கூட்டுறவு அமைப்புக்களுக்கு 60 சதவீதமான சேர்க்கப்பட்ட பெறுமதியை வழங்கியதுடன், இந்தக் கூட்டுறவு அமைப்புக்கள் இவற்றுக்கு சட்டபூர்வ அந்தஸ்தினைப் பெற்றுக் கொடுத்தன.

ஓரளவுக்கு தனியார் உரித்து முறையைக் கொண்டிருந்த அந்த அமைப்புக்கள், 1970களிலும் விஸ்தரிப்படைந்து சென்றதுடன், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்குப் போட்டி அடிப்படையிலான கூலிகளை வழங்கி வந்தன. நகரத்தில் நிலைத்திருப்பது அல்லது நாட்டுப்புறத்துக்கு திரும்பிச் செல்வது என்பதன் ஒப்பீட்டு ரீதியான அனுகூலங்கள் கணிசமான அளவுக்கு உயர்ந்து சென்றன. தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் உள்ளூர் சந்தையின் கொள்வனவுச் சக்தி கவர்ச்சிகரமானதாக இருந்து வருவதனைக் கண்டு கொண்ட நிலையில், குறைந்தது பகுதிநேர அடிப்படையிலாவது வேலை செய்யத் தொடங்கினார்கள். நிறுவனங்களின் உள்ளக தொழில் சந்தையில் இந்தத் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு விசேஷ முன்னுரிமை கிடைத்தது.

ஒரு கூட்டுறவுச் சங்க உறுப்பினரையும் ஒரு தேர்ச்சி பெற்ற தொழிலாளரையும் உள்ளடக்கி இருக்கும் குடும்பங்களுக்கு, வீட்டுக் காணித்துண்டுளுக்கான சலுகைகளும் அதேபோல இரண்டாவது பொருளாதாரத்தின் பகுதிநேர அடிப்படையில் தொழில் தேர்ச்சி பெற்றுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடும் அனுகூலங்களும் கிடைத்தன. நாட்டின் பொருளாதார நிலைமைகள் பெருமளவுக்கு சீர்குலைந்து கொண்டு போயுள்ள ஒரு சூழ்நிலையில், கிராமப்புறத்தில் நிலைமைகள் நல்ல விதத்தில் மாற்றமடைந்திருப்பதற்கான காரணத்தை இந்தப் பின்னணியிலேயே விளங்கிக்கொள்ள முடியும். குளியலறைகளையும் குழாய் நீர் வசதிகளையும் கொண்டிருந்த இரண்டு மாடி வீடுகள் பரவத் தொடங்கின.

1970களில் இரட்டை அந்தஸ்தினைக் கொண்டிருந்த தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் பெரும்பாலானவர்கள் இரண்டாவது பொருளாதாரத்திலிருந்து மட்டுமே மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொண்டார்கள். ஆனால், 1980கள் தொடக்கம் இவர்களில் கணிசமான ஒரு பகுதியினர் சுதந்திரமானவர்களாக உருவாகி வந்தார்கள். உள்ளூர் தொழில் முனைவோருக்கு மத்தியில் நடாத்தப்பட்ட பேட்டிகளின் படி இன்றைய வெற்றிகரமான செயல் முனைப்புமிகுந்த தொழில் முனைவோரின் பெரும்பான்மையினர் 1980களின் தொடக்கத்திலிருந்து மட்டுமே தாமாகவே உழைக்கத் தொடங்கியவர்களாக இருந்துள்ளனர்.

1930 களிலும் 1970களிலும் இடம் பெற்ற சீர்திருத்த வழிமுறைகளின் சமூகப் பின்னணிகள் பல்வேறு வழிகளில் வேறுபட்டவையாக இருந்து வந்துள்ளன. இந்த தசாப்தங்களைச் சேர்ந்த அரசியல் மேட்டுக்குடியினர் அச்சத்தை உணர்ந்திருந்தனர். 1930களின் வலதுசாரி பழமைவாதிகள், 1919ன் போல்ஷ்விக் புரட்சியிலிருந்து படிப்பினைகளைப் பெற்றுக் கொண்டிருந்த அதேவேளையில், பிற்கால் சோஷலிஸ்டுகள் 1956ன் படிப்பினைகளைப் பெற்றனர். ஹோர்தி மற்றும் கடார் ஆகிய இரு ஆட்சிகளும் ஓரளவுக்கு அடக்குமுறை ஆட்சிகளைக் கொண்டதாக இருந்து வந்துள்ள போதிலும், சித்தாந்த ரீதியான உள்ளடக்கங்களும் சமூக நிலைமைகளும் வேறுபட்டவையாக இருந்தன. முதலாவது ஆட்சி இழந்த புகழை மீட்டெடுக்கும் நோக்குடையதாக

இருந்ததுடன், இரண்டாவது ஆட்சி சீர்திருத்த நோக்குக் கொண்டதாக இருந்தது. முதலாவது ஆட்சியினால் சமூகக் கொந்தளிப்புக்களுக்கும் அடித்தட்டு மக்களுக்கும் நிலையான தீர்வினை வழங்க முடியாதிருந்தது.அதேவேளையில், இரண்டாவது ஆட்சி முறைசாராத ஒரு தீர்வினை வழங்கியது.

இரண்டாவது பொருளாதாரம் என்பது "மூன்றாவது பாதையின்" ஒரு புனர்ஜென்மமாக இருந்து வருகின்றதா? கோட்பாட்டு ரீதியில் அது அப்படியிருக்கவில்லை. அது சுதந்திரமான தொழில் முயற்சியாளர்களின் தன்னார்வ அடிப்படையிலான ஒரு கூட்டாக இருக்கவில்லை. அதற்கு மாறாக, அது ,கட்டாயமாக ஒருங்கிணைந்து கொள்ளும் ஒரு கடடமைப்புக்குள் ஓரளவுக்கு தன்னாதிக்க நிலைமையை வழங்கியுள்ளது. அது தன்னாதிக்கம் மற்றும் கட்டுப்பாடு என்பவற்றை கொண்ட ஒரு வித்தியாசமான ஒரு கூட்டாக இருந்து வருகின்றது.

ஆனால், அது இன்னொரு விதத்தில் ஒத்துழைப்பு மற்றும் தொழில் முனைப்பாண்மை என்பவற்றின் ஒரு கூட்டாகவும் பாரிய விவசாய அலகுகள் என்பவற்றின் அனுகூலங்களின் ஒரு கூட்டாகவும் இருந்து வருகின்றது. கூட்டுறவு அமைப்பு, சந்தை நோக்கிலான வீட்டுத்தோட்டங்களின் உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகள் என்பவற்றுக்கான சந்தைகளை ஏற்பாடு செய்து கொள்வதற்கு உதவியுள்ளது. அரசு முதலாவது பொருளாதாரத்தில் கூலிகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடியதாகவுள்ளதுடன் பொருட்குவிப்பின் அளவினையும் ஓரவுக்கு கட்டுப்படுத்தக்கூடியதாக இருந்து வருகின்றது.

இருந்தபோதிலும் மூன்றாவது பாதைக்கும் இரண்டாவது பொருளாதாரத்துக்குமிடையில் அறிவார்த்த தொடர்பு எதுவும் இருக்கவில்லை என்பதை கூறுவதற்கு ஒருவர் தயக்கம் காட்ட முடியும். 1960 களினதும் 1970களினதும் கமத்தொழில் நிர்ப்பந்தக் குழுக்களின் செல்வாக்கு மிக்க பல உறுப்பினர்கள் தம்முடன், "மூன்றாவது பாதையின்" அறிவுசார் வாரிசு உரிமையை எடுத்து வந்தனர். சாத்தியமான சமூக காட்சியுண்மை என்ற முறையில் சீர்திருத்தம் குறித்த கருத்து நிலவிவந்தது. சில எழுத்தாளர்களின் படைப்புக்களும் இருந்தன. இந்த சிந்தனைப் போக்குகள் ஆரம்பகால திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தில் கடும் விமர்சனங்களைச் சந்திக்க முடியும். மூன்றாவது பாதை குறித்த கருத்துக்களுடன் சித்தாந்தரீதியான அம்சங்களோ அல்லது தலையீடோ காணப்படவில்லை. ஒரு எழுத்தாளர் ("குளிர்சாதனப்பெட்டி சோஷலிஸம் " என்ற) நுகர்வு வாதத்தின் அபாயங்கள் குறித்து விமர்சித்துள்ளார்.

வீட்டுக் காணித்துண்டுகள் மற்றும் கூட்டுறவு அமைப்பு என்பவற்றின் கூட்டு, முதலாவது மற்றும் இரண்டாவது பொருளாதாரம் என்பவற்றுக்கிடையிலான கூட்டு என்பன மூன்றாவது பாதை குறித்த தரிசனத்தின் தெளிவான வெற்றியாக இருக்கவில்லை. மறுபுறத்தில் கடார் ஆட்சி 1956ன் புரட்சியின் பின்னர் சட்டபூர்வ அந்தஸ்தினை தேடிக் கொண்டிருந்தது. பெருமளவுக்கு ஊக்கம் கொண்டவர்களாக இருந்தவர்கள் படிப்படியாக செழிப்படைவதற்கு அது இடமளித்தது. இந்த முறை சாராத மாற்று வழியினை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஹங்கேரியின் "மூன்றாவது பாதை" மண்வாசனையுடன் கூடிய ஒரு கற்பனாவாத அமைப்பாக இருந்து வந்ததால், இரண்டாவது பொருளாதாரம் மண்வாசனையுடன் கூடிய கொள்கையின் ஒரு விளவாகும் எனக் கருதமுடியும். அரசியல் மேட்டுக்குடி வர்க்கத்தைச் சேர்ந்த பல்வேறு மக்கள் பிரிவினர் முதன்மை வகித்த ஒரு கொள்கையாக அது இருந்தது. இந்த பிரிவுகளில் இருந்த பல உறுப்பினர்கள் மூன்றாவது பாதையின் அறிவுசார் பாரம்பரியத்தின பேணிக் காத்துக் கொண்டனர்.

டிசோடோ என்பவர் " மற்றைய வழி" என்ற நூலை எழுதியுள்ளார். இது தென் அமெரிக்காவின் - குறிப்பாக பெரு நாட்டின்–முறை சாரா துறை குறித்த ஒரு யதார்த்தபூர்வமான பகுப்பாய்வாக உள்ளது. அது ஒரு விஞ்ஞான ஆக்கமாக இருந்த போதிலும் சித்தாந்த அடிப்படையிலான செய்திகளையும் கொண்டுள்ளது. பெரு நாட்டின் "மின்னும் பாதை" இயக்கத்துக்கான யதார்த்தபூர்வமான ஒரு வழியினை அது முன்வைக்கின்றது.

"மற்றைய வழி" என்பதன் உண்மையான பெயர் இரண்டாவது பொருளாதாரம் என்பதாகும். பெரு மற்றும் ஹங்கேரி இரு நாடுகளையும் பெறுத்தவரையில் இரண்டாவது பொருளாதாரத்தின் முக்கியமான பணி, முதலாவது பொருளாதாரத்தின் தவறுகளையும் குறைபாடுகளையும் திருத்துவதாகவே இருந்தது. இந்த இரு நாடுகளிலும் இரண்டாவது பொருளாதாரம் வேறு சில பணிகளையும் கொண்டுள்ளது என்பதே எனது கருத்தாகும். பெருவைப் பொறுத்தவரையில், விவசாயத்திலிருந்து தப்பிச் சென்று தலைநகரில் குடியேறி வாழ்க்கை நடத்துவதற்கு முயன்றுவரும் பொதுமக்களின் சவால்களை அது எதிர்கொள்கின்றது. ஹங்கேரியில் அரச துறையிலும் தனியார் துறைகளிலும் முழுநேர மற்றும் பகுதிநேர வேலைகளை கூட்டாக மேற்கொண்டிருப்பவர்களுடன் அது சம்பந்தப்பட்டுள்ளது. பெருவின் விடயம் கிராமிய வறுமையாகும். ஹங்கேரியின் கிராமப்புற மத்தியதர மக்கள் முக்கிய பிரிவினராக இருந்து வருகின்;றனர். அதேபோல பெருவில் சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்கும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் இடையிலான வித்தியாசமே முக்கிய புள்ளியாக உள்ளது. ஹங்கேரியில் அரச துறைக்கும் தனியார் துறைக்குமிடையிலான வித்தியாசம் முக்கியத்துவம் பெறுகின்றது

ஹங்கேரியில் சீர்திருத்த நிகழ்வுப்போக்கு சட்டவிரோத பொருளாதார நடவடிக்கையின் மீது கவனம் செலுத்தவில்லை. மாறாக, அது சந்தையின் மீது, உண்மையான உரிமையாளர்களின் தேவையின் மீது, சொத்து உறவுகளின் மீது முக்கியத்துவம் காட்டி வந்துள்ளது. இந்த வலியுறுத்து நிலைமாற்றத்துக்கான சித்தாந்த ரீதியான இடையூறுகளை அகற்றி விடுவதற்கு உதவியது. 1988ல் வயது வந்த குடித்தொகையினரின் காற் பகுதியினர் தொழில்முனைவோராக இருப்பதற்கு விரும்பினார்கள். இந்தத் தெரிவினை மறுத்தவர்களும் கூட, சித்தாந்த விழுமியங்களின்

அடிப்படையில் அவ்வாறு செய்யவில்லை.

### தொழில்முனைவோர் எங்கிருந்து வருகின்றார்கள்?

சோஷலிஸத்துக்கு பிற்பட்ட நிலைமாற்றத்தில் சில வரலாற்று ரீதியான முன் நிபந்தனைகள் அவசியமாக இருந்தன. இரண்டாவது பொருளாதாரம் மற்றும் நிறுவன ரீதியான மாற்றங்களுக்கு முன்னர் மேட்டுக்குடியினர் "வெகுவேகமாக தம்மை மாற்றியமைத்துக் கொள்ளல்" என்பனவும் இவற்றுள் அடங்கும். இந்த நிலைமைகள் நிலவிவரும் பொழுது அவை நிலைமாற்றத்தின் சமூக செலவுகளைக் குறைத்து விடுகின்றன.

ஹங்கேரியில் 1980களின் பிற்பகுதியில் இந்த இரண்டு முன் நிபந்தனைகளும் நிலவிவந்தன. அப்பொழுது திடீரென "மூன்றாவது பாதை" குறித்த கருத்து மீண்டும் ஒரு முறை எழுச்சியடைந்தது. அமைப்பு ரீதியான மாற்றங்கள் அப்பொழுதுதான் ஆரம்பித்திருந்தன. புதிய இயக்கங்களும் புதிய கட்சிகளும் உருவாகி வந்தன. 1930களின் சீர்திருத்த அறிவுஜீவிகளின் ஆக்கங்கள் மீண்டும் ஒரு முறை உசாத்துணை நூல்களாக முன்னணிக்கு வரத்தொடங்கின. "மூன்றாவது பாதை" தேசிய ஜனநாயக சக்திகளின் ஒரு பகுதியினரின் மிக முக்கிய கவன மையமாக மாற்றமடைந்தது. ஐரோப்பாவுக்கான மூன்றாவது பாதை எதுவும் இருந்து வரவில்லை என்று பிரகடனம் செய்த லிபரல் ஜனநாயகவாதிகள், மூன்றாவது பாதை என்ற கருத்தினை மிக வன்மையாக தாக்கி வந்தனர்.

"மூன்றாவது பாதை" குறித்த கருதுகோள் வெளிப்படையாக நிராகரிக்கப்பட்ட போதிலும் அதன் மைய அம்சம் மிகச் சக்தி வாய்ந்தது என்பது நிரூபிக்கப்பட்டது. இரண்டாவது பொருளாதாரம் மற்றும் மேட்டுக்குடியினரின் மாற்றம் என்பன வரலாற்று ரீதியான முன் நிபந்தனைகளாக இருந்து வந்தால், மிக சக்திவாய்ந்த ஒரு மத்தியதர வர்க்கம் வெற்றிகரமான நிலைமாற்றத்துக்கான அமைப்பு ரீதியான ஒரு நிபந்தனயாக இருந்து வருகின்றது என்பதைனயும் ஏற்றுக் கொள்ள வேண்டும்: எவ்வாறிருந்தபோதிலும், பின்புலம் மீண்டும் ஒருமுறை ஒரு வேறுபட்ட தன்மையைக் கொண்டுள்ளது. கட்டுப்பாடற்ற வெளிநாட்டுச் செல்வாக்கின் அபாயம் நிலவிவருகின்றது என ஐவன் செலனி கருதுகின்றார். வெளிநாட்டு மூலதனம் குறுங்கால இலாபத்தினை விரும்புவதுடன், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் உருவாக்குகின்றது.

நிலைமாற்றக் காலகட்டத்தின் போது கிழக்கு ஐரோப்பிய சமூகங்கள் பூர்சுவாக்களை வேலையில் சேர்த்துக் கொள்வது தொடர்பாக மூன்று கோட்பாடுகள் காணப்படுகின்றன. அவர்களுடைய தர்க்கவியலின்படி, வருங்கால பூர்ஷ்வாக்களின் மூலாதாரங்களை நாங்கள் வரலாற்று ரீதியான கடந்த காலத்தில் கண்டு கொள்ள முடியும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஆட்சேர்ப்பின் சமூக விதிகள் வரலாற்று ரீதியான காரணிகளினால் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன. இந்த முதலாவது கோட்பாட்டினை நீண்ட கால வரலாற்று ரீதியான வாரிசு உரிமைகள் அல்லது சமூக மூலதன விளக்கம் என அழைக்க முடியும். இந்த வாதத்தின் நடு மையம் புதிய தொழில் முனனைவோர் வர்க்கம் சோஷலிஸத்துக்கு முற்பட்ட கால கட்டத்தில் பூர்ஷ்வாக்களாக இருந்த குடும்பங்களை சேர்ந்தவர்களாகவும் நிலத்தை அல்லது வேலையாட்களை கொண்டிருந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவும் இருந்து வருகின்றார்கள் என்பதாகும். குடும்ப விவசாய உற்பத்தி சம்பந்தமாக 1980களில் மேற்கொள்ளப்பட்ட பிரயோக ஆய்வுகளின் அடிப்படையில், தொழில் முனைப்பு நடவடிக்கைகளை குடும்ப பின்னணியின் அடிப்படையிலேயே சிறந்த முறையில் விளக்க முடியும் என செலினி எடுத்துக் கூறினார். மத்திய தர மற்றும் விவசாய குடும்பங்களைச் சேர்ந்த வாரிசுகள், சுதந்திரமான பொருளாதார நடவடிக்கைகளை கையாள்வதனை பழகிக் கொண்டார்கள். இவர்களே அநேகமாக தொழில் முனைவோராக உருவாகி வந்தனர். பொறுப்புணர்வு மற்றும் முடிவுகளை எடுததல் என்பன தொடர்பான ஒரு கலாச்சாரத்தினை அவர்கள் வாரிசு உரிமையாகப் பெற்றுக்கொண்டுள்ளனர். தொழில் முனைவோரின் இனத்துவப் பின்னணியும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது.

எமது ஆராய்ச்சியின் போது பேட்டிக்கு உட்படுத்தப்பட்டவர்களின் இனத்துவ அந்தஸ்தினை பதிவு செய்வதற்கான அளவுகோல், அவர்களுடைய மூதாதையர் ஏதாவது தேசிய அல்லது இனத்துவ சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்களாக இருந்து வந்தார்களா என்பதாகவே இருந்து வந்தது. மேற்சொன்ன இனத்துவ குழுக்களைச் சேர்ந்த முன்னைய தலைமுறையினர் பலர் மிகக் கடுமையான அரசியல் ஒடுக்கு முறைக்கு உள்ளாகி வந்திருப்பதுடன், பல சந்தர்ப்பங்களில் தமது பிழைப்புக்களையும் உயிர்களையும் இழந்துவிடக் கூடிய அபாய ஏதுவினையும் எதிர் கொண்டிருந்தனர். நவீனத்துவத்தின் ஆரம்பகட்டங்களில், இந்த நடத்தை மாதிரிகளும் கலாச்சாரப் பாரம்பரியங்களும் காரணமாக இவர்களால் ஏனையவர்களிலும் பார்க்க வெகு விரைவில் பெருமளவில் செல்வத்தைச் சேர்த்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது. இதன் விளைவாக, சுதந்திர தொழில் துறையின் சில பிரிவுகளில் இந்தச் சிறுபான்மைப் பிரிவினரின் பிரசன்னம் அளவுக்கதிமானதாகக் காணப்பட்டது. எனினும், இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் மிகப் பிரமாண்டமான பல்தேசிய கம்பனிகள் ஸ்தாபிக்கப்பட்டதனையடுத்து, குடும்ப மற்றும் இனத்துவ உறவுகளின் முக்கியத்துவம் வீழ்ச்சியடைந்தது. மறுபுறத்தில், பாரம்பரியமாக மதிப்புக் குறைந்த துறைகளாகக் கருதப்பட்ட (பழைய பொருட்களை விற்பனை செய்வோர் போன்ற பிரிவுகளில், பல்வேறு இனக் குழுக்கள் ஈடுபடத் தொடங்கின. ஆட்களை நாடுகடத்தல் மற்றும் பலவந்தமாக அப்புறப்படுத்துதல், பயமுறுத்துதல் போன்ற வழிமுறைகளுக்கூடாக இந்த நிகழ்வுப் போக்கு தடுத்து நிறுத்தப்பட்டது. இதனால் பல சிறுபான்மை இனக்குழுக்கள் பாதிக்கப்பட்டன.

### தரவுகளும் முறைகளும்

இங்கே தரப்பட்டுள்ள ஆராய்ச்சி முடிவுகள் 1988 (3000 ஆட்கள்)

தொடக்கம் 1990 (1000 ஆட்கள்)வரையில் மேற்கொள்ளப்பட்ட நாடளாவிய ஒரு பிரதிநிதித்துவ மதிப்பீட்டிலிருந்தே பெறப்பட்டன. இதில் இரண்டாவது, முதலாவதன் ஒரு உப மாதிரியாகும். அதாவது, இந்த இரண்டு மதிப்பீடுகளின் போதும் ஒரே ஆட்களே பேட்டிகளுக்கு உட்படுத்தப்பட்டனர். 1988ல் சுமார் 4000 நகர தொழில் முனைவோருக்கிடையேயும் ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. வளர்ச்சியடையக் கூடிய தொழில்முனைவோர் மற்றும் நகர தொழில்முனைவோர் ஆகியோரின் சமூக உள்ளடக்கம் குறித்த தகவல்களை இந்த மதிப்பீடுகளிலிருந்து பெறமுடிகிறது.

1988ல் 35 வயதுக்குக் குறைந்த ஆண்களில் சுமார் அரைவாசிப் பங்குக்கும் மேற்பட்டவர்கள் தொழில் முனைவோராக வருவதற்கான தமது விருப்பினைத் தெரிவித்திருந்தனர். மகளிரைப் பொறுத்தவரையில், இந்த விகிதம் நான்கில் ஒன்றாக இருந்தது. வேறுவிதமாக நோக்கினால், இந்த வயதுத் தொகுதியினரில் 47 சதவிகிதத்தினர் ஆண்களாக இருந்ததுடன், தொழில் முனைவு அபிலாஷைகளைக் கொண்டிருந்த இளைஞர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் இப்பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். ஏனைய இரண்டு வயதுத் தொகுதிகளிலும் வயது செல்வதுடன் இணைந்த வகையில் தொழில் முனைவுக்கான ஆர்வம் படிப்படியாகக் குறைவடைந்து கொண்டு வந்தது.

மத ஈடுபாடு மற்றும் தொழில்களை துவக்குவதற்கான ஆர்வம் ஆகிய இரண்டுக்குமிடையிலான தொடர்பினை நோக்கும் பொழுது, மிகவும் தீவிரமான முறையில் மதப் பற்றுக் கொண்டிருப்போரிடையே சுதந்திரத் தொழில் முயற்சிகளுக்கான ஆர்வம் ஆகக் குறைந்த மட்டத்தில் நிலவி வருகின்றது என்பது தெரிய வந்துள்ளது. சுதந்திர தொழில் முயற்சிக்கான பெருவிருப்பினை சமயத்தின் தார்மீக நெறிகளை பெரிதும் மதிக்கும் பிரிவினரே (31%) வெளிப்படுத்தியுள்ளனர். வணிகர்களில் சுமார் அரைவாசிப் பங்கினர் (47%) இந்த வகையைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர்.

1990ல் பால் மற்றும் தொழில் என்பவற்றுக்கிடையிலான வித்தியாசங்கள் வீழ்ச்சியடைந்து கொண்டு வந்தன. அதேவேளையில், பெற்றோரின் அந்தஸ்து, வயது மற்றும் கல்வித் தகைமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட வேறுபாடுகள் கணிசமான அளவில் பெருகியிருந்தன. மகளிரைப் பொறுத்தவரையிலும் கூட இக்கால கட்டத்தில் தொழில் முனைப்பாண்மை மட்டம் பெருகியிருந்தது. அதேவேளையில் தொழில தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் உற்சாகமிழந்திருந்தார்கள்.

### அபிப்பிராயங்கள்

வளர்ந்துவரக்கூடிய தொழில் முனைவோரின் மனப்பாங்குகளைப் பொறுத்தவரையில், பொருளாதார சித்தாந்தத்துடன் முக்கியத்துவம் பெற்றிருக்கும் ஒரு சில விடயங்களை நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். இந்தத் தொழில் முனைவோர், அமைப்பு ரீதியான மாற்றங்களின் தொடக்கத்திலிருந்தே தனியார் துறையின் மேலாதிக்கம் நிலவிவர வேண்டும் என்பது குறித்து மிகவும் தெளிவான ஒரு கருத்தினைக் கொண்டிருந்தனர். இதே வேளையில், தொழில் முனனைவோரின் விகிதாசாரம் கணிசமான அளவில் அதிகரித்துச் சென்றது. மறுபுறத்தில், தொழில் முனைவோராக வர விரும்பாதவர்களின் தொழில் முனைவு ஆர்வம் மேலும் வீழ்ச்சியடைந்து சென்றது. தனியார் மயமாக்கல் பெற்றிருந்த ஜனரஞ்சகமும் கூட ஓரளவுக்கு குறைந்திருந்தது. 1991 மே மாதத்தில் குடித்தொகையினரில் சுமார் 40 சதவிகிதத்தினர் பெரிய தொழில் நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டுமென விரும்பினர். தொழில் முயற்சிகள் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்படக்கூடாதென 46 சதவிகிதத்தினர் கூறினர்.

மறுபுறத்தில், வளர்ச்சியடையக் கூடிய தொழில் முனனைவோரின் விகிதாசாரம் கணிசமானளவுக்கு அதிகரித்து வந்தது. ஆனால், அதே வேளையில் சந்தைமயமாக்கல் மற்றும் தொழில் முனைவு விழுமியங்கள் என்பவற்றை நிராகரிப்போரின் குரல் மிக வன்மையாக ஒலிக்கத் தொடங்கியிருந்தது. இது வேலை கொள்வோருக்கும் வேலை செய்வோருக்குமிடையிலான தொலைவு அதிகரித்து வருவதனையே காட்டியது.

பொருளாதாரக் கொள்கையின் திசை வழியைப் பொறுத்தவரையில் தொழில் முனைவோரின் அபிப்பிராயம் (முகாமையாளர்கள், வங்கியாளர்கள், மற்றும் உயர் சிவில் அதிகாரிகள் போன்ற) சமூகத்தின் மேட்டுக்குடியினரின் அபிப்பிராயத்தினை ஒத்ததாகவே இருந்தது. "என்ன செய்ய வேண்டும்" என்ற கேள்விக்கான பதில், பெரும்பாலும், "மேலைத்தேச அனுபவங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்தாகவே இருந்தது. அடுத்த தெரிவாக தொழிலாளர்களின் பங்கேற்பு இருந்தது. தொழிலாளர்களில் சுமார் அரைவாசிப் பங்கினர் மேலைத் தேசமயமாக்கலுக்கான மாற்று வழியொன்றினை விரும்பினர்.

### முடிவுக் குறிப்புக்கள்

ஹங்கேரி 1930களின் போது அதன் நவீனமயமாக்கல் முயற்சியில் தொடரான பல சமூக இடையூறுகளைச் சந்தித்தது. பழமை பேணும் மேட்டுக் குடியினர், நலிவுற்றிருந்த மத்தியதர வர்க்கத்தினர் மறறும் ஊழியர் படையின் மிகப் பலவீனமானா கட்டமைப்பு ஆகிய அனைத்துக் காரணிகளும் இந்தச் சமூக இடையூறுகளின் முக்கிய கூறுகளாக இருந்தன. மூன்றாவது பாதைவழி முறை, சமூக மேட்டுக் குடியினரை அவர்களுடைய வரலாற்று ரீதியான பங்களிப்பினை மேற்கொள்வதற்கும் நிர்ப்பந்திப்பதன் மூலம் தீர்வினை எடுத்துவர விரும்பியது. நிலமற்ற குடியானவர்களுககு காணிகளைப் பகிர்ந்தளித்தல், தொழில் முனைப்பாண்மை கலாச்சாரத்தினை அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தல், சக்திவாய்ந்த மத்தியதர வர்க்கமொன்றின் எழுச்சிக்கு ஆதரவளித்தல், சிறிய மற்றம் பெரிய தோட்டங்களின் பொருளாதார அனுகூலங்களை ஒன்றிணைத்தல் என்பன இந்த வரலாற்ற ரீதியான பணிகளாக இருந்தன.

# தொழிலாளர்களும் முகாமையாளர்களும்

## திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தில் பொருளாதார தலைவர்களை சேர்த்துக் கொள்வதில் மாறிவரும் போக்குகள்

ஜ்யோர்ஜி லெங்யேல்

*ஹங்கேரிய மற்றும் கிழக்கைரோப்பிய திட்டமிடப்பட்ட பொருளாதாரங்களில் தலைவர்களை தெரிவு செய்வதற்கான அளவுகோல் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. கல்வி மற்றும் தொழில் மாதிரிகள் என்பவற்றுடன் இந்த அளவுகோல் கொண்டிருக்கும் தொடர்பினை அது கவனத்தில் எடுக்கின்றது. தொழில் தேர்ச்சி பெறுதல் மற்றும் தொழில் அணிமயமாதல் என்பவற்றில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை அது எடுத்து விளக்குகின்றது. சோஷலிஸ கைத்தொழில் மயமாக்கலுக்கிடையே சில அடிப்படையான ஒருமித்த தன்மைகள் காணப்பட்டு வந்தபோதிலும், கிழக்கைரோப்பிய சமூகங்களிடையே இது தொடர்பான சில வேறுபாடுகளும் நிலவி வருகின்றன என்பதனை இக்கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது. ஹங்கேரிய அனுபவங்களின்படி, பொருளாதாரச் சீர்திருத்தம் தொழில் தேர்ச்சி நிகழ்வுப் போக்குக்கு ஆதரவளித்து வந்துள்ளது. அதேவேளையில், கட்சியின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் பெருமளவுக்கு உயர்வாகக் காணப்பட்டது. மாற்றங்களுடன் இணைந்தவகையில், ஆட்களை வேலைக்குத் தெரிவு செய்வதில் கட்சி அங்கத்துவம் முக்கியத்துவத்தை இழந்தது.*

திட்டமிடப்பட்ட பொருளாதாரங்களில் தலைமைத்துவத்தின் செயற்பாடுகள் ஒரு முக்கியமான விடயமாக இருந்து வந்தபோதிலும், இந்தத் தலைவர்கள் குறித்து மிகக் குறைந்த அளவிலேயே எழுத்தாக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இது குறித்து இப்பொழுது வெளியிடப்பட்டுள்ள வெளியீடுகளில் பெரும்பாலானவை முகாமைத்துவம் சார்ந்ததாகவே உள்ளன. ஹங்கேரிய பொருளாதாரத் தலைவர்கள் குறித்த ஆராய்ச்சி ஒரு முக்கியமான விடயமாக உள்ளது. அடுத்துவரும் பகுதிகளில் தரப்பட்டுள்ள தரவுகளும் தகவல்களும் முக்கியமாக ஹங்கேரியாவில் இடம்பெற்று வந்துள்ள மாற்றங்களையும் ஓரளவுக்கு சோவியத், போலந்து மற்றும் செக்கோஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளில் இடம்பெற்று வந்துள்ள மாற்றங்களையும் எடுத்து விளக்குகின்றன.

### மாறிவரும் தெரிவு அளவுகோல்

தொழில் அணியினரை தெரிவு செய்யும் முறை பல வருடகாலம் ஒரு இரகசியமான முறையிலேயே கையாளப்பட்டு வந்துள்ளது. எனினும் இந்தத் தெரிவு முறையின் சமூகவியல் அம்சங்கள் குறித்த பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன. ஏ. எல். ஹவின்ஸ் என்பவர் 1930களின் புள்ளி விவரங்களையும் தமது சொந்த ஆய்வுகளையும் பேட்டிகளையும் பயன்படுத்தி ஓர் ஆய்வுக் கட்டுரையை தயாரித்தார். இக்கட்டுரையில் பாரிய கைத்தொழில்களுக்கான தலைவர்களை தெரிவு செய்து, பயிற்றுவிக்கும் முறைகள் குறித்து கண்டறிவதற்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பொருளாதாரத்தின் ஆரம்ப கட்டங்களில் சில பொதுவான விதிமுறைகளும் பொது அணுகுமுறைகளும் இந்தத் தெரிவுகளின் போது பயன்படுத்தப்பட்டு வந்தமையை அவருடைய கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது.

கிழக்கு ஐரோப்பாவில் 1945க்கு முன்னர் பாரம்பரிய பொருளாதார மேட்டுக் குழுயினர் ஒரு மூடுண்ட சமூக அமைப்பாக இருந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் மேல் மற்றும் நடுத்தட்டு வர்க்கங்களிலிருந்து வந்தவர்களாக இருந்ததுடன் உயர் கல்வியையும் பெற்றிருந்தனர். பாரம்பரிய ஆள் தெரிவு மாதிரியின் மிக முக்கியமான அளவுகோல் உரித்து, வர்க்கம் மற்றம் உயர்கல்வி என்பனவாகவே இருந்தன.

முன்னைய மேட்டுக் குடியினர் தலைமுறையுடன் ஒப்பிட்டு நோக்கும்

பொழுது, இரு யுத்தங்களுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தைச் சேர்ந்த பொருளாதாரத் தலைவர்கள் மிகவும் தெளிவான ஒரு தொழில் நிபுணத்துவ தன்மையை வெளிப்படுத்தி வந்துள்ளமையை காண முடிகின்றது. தெரிவு நிகழ்வுப்போக்கில் உயர் கல்வியின் முக்கியத்துவம் பெருமளவுக்கு வலியுறுத்தப்பட்டு வந்துள்ள அதே வேளையில், செல்வம் மற்றும் வர்க்கம் என்பன படிப்படியாக முக்கியத்துவம் இழக்கத் தொடங்கின. தொழில்நுட்ப மற்றும் பொருளாதார உயர்கல்வியும் விஸ்தரிப்படையத் தொடங்கியது.

1945க்கும் 1949க்கும் இடைப்பட்ட தேசியமயமாக்கல் முயற்சிகளின்போது உற்பத்திசார் அலகுகள் சம்பந்தப்பட்ட முக்கியமான முடிவுகளை எடுக்கும் அதிகாரம் நிறுவனங்களிலிருந்து பறிக்கப்பட்டது. இதன் காரணமாக நிறுவன முறையின் மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு பிரிவுகளுக்கு மிடையில் ஒரு பிளவு ஏற்பட்டது. தொழில் முயற்சிகளின் தலைவர்களின் சமூக உள்ளடக்கம் மற்றும் கட்டுப்பாட்டு நிறுவனங்களின் தலைவர்களின் சமூக உள்ளடக்கம் ஆகிய இரண்டும் இந்தப் பின்னணியில் வேறுபட்டுக் காணப் பட்டன. தொழில் முயற்சிகளைப் பொறுத்தவரையில், ஆட்சேர்ப்பில் விசுவாசம் ஒரு முக்கியமான அம்சமாக இருந்தது. புதிதாக நியமனம் பெற்ற ஹங்கேரிய முகாமையாளர்களில் சுமார் மூன்றில் இரண்டு பங்கினர் ஆகக் குறைந்த கல்வித் தரங்களையே பெற்றிருந்தார்கள் என்பதனை இப் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. பொருளாதாரக் கட்டுப் பாட்டுத் துறையைப் பொறத்தவரையில், விசுவாசமும் அதேபோல தொழில்சார் நிபுணத்துவமும் முக்கியமான தகைமைகளாகக் கருதப்பட்டன. இதற்கான மிகச் சிறந்த உதாரணம், பொருளாதாரக் கட்டுப்பாட்டுத் துறையில் செயற்பட்டுவரும் தலைவர்களில் ஐந்தில் நான்கு பங்கினர் ஹங்கேரியின் தொழிலாளர் கட்சியின் உறப்பினர்களாக இருந்தபோதிலும் அவர்களில் 45 சதவிகிதத்தினர் புத்தி ஜீவிகளாக இருந்து வந்தார்கள் என்பதாகும்.

1949ல் கட்டுப்பாட்டுத் துறையில் பணிபுரிந்து வந்த அதிகாரிகளில் சுமார் நான்கில் ஒரு பங்கினர் 1945க்கு முன்னர் சிவில் சேவையில் இருந்தவர்களா வார்கள். 1945ன் பின்னர் அடிப்படை அமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டபோதும் கூட தொழில்சார் நிபுணத்துவம் ஒப்பீட்டு ரீதியில் தொடர்ந்தும் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது என்பதை அது காட்டுகின்றது. முக்கியமாக பொருளா தாரக் கட்டுப்பாட்டுத்துறையைப் பொறுத்தவரையில் தொழில்சார் நிபுணத்துவத்தின் செல்வாக்கு மேலோங்கியிருந்தது.

சிவில் சேவைத் துறைக்குள் பிரவேசிக்கும் பொழுது, ஆட்கள் பகிர்ந்தளிக்கப்படும் விதம் மத்திய பொருளாதார முகாமையின் ஆட்சேர்ப்பு உத்தியினை மிகவும் தெளிவாகப் பிரதிபலித்துக் காட்டு கின்றது. 1945ம் ஆண்டுக்கு முன்னர் அரசாங்கத் துறையில் பணிபுரிந்து வந்தவர்களில் 70 சதவிகிதத்தினர் ஓரளவுக்கு அறிவுசார் தொழில் துறைகளில் ஈடுபட்டு வந்திருந்தனர். புதிதாக நியமனம் பெற்ற தலைவர்க ளிடையே இந்த விகிதம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து கொண்டுவந்து, 1949 அளவில் இத்தகைய திறன்களைப் பெற்றவர்கள் சுமார் நான்கில் ஒரு பங்கினராக மட்டுமே இருந்து வந்தனர். தொழிலாளர்களாக இருந்தும் அதேபோல இலிகிதர்களாக இருந்தும் முகாமையாளர் அந்தஸ்துக்கு பதவி உயர்வு பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது. எனினும், விவசாயக் குடியானவர்கள் இந்த நிகழ்வுப்போக்கிலிருந்து முற்றிலும் புறமொதுக்கப்பட்டிருந்தனர். விவசா யக் குடியானவர்கள் என்ற நிலையி லிருந்து முகாமையாளர் என்ற அந்தஸ்துக்கு உயர்ந்தவர்கள் ஒரு சதவீதமாகக் கூட இருக்கவில்லை. பாராளுமன்றத்தில் 1947–49 காலத்தில் விவசாயக் குடியானவர்களின் பிரதிநிதித்துவம் 32.9 சதவீதமாக இருந்தது.

தொழில் அணியினரின் வர்க்கத்தைப் பொறுத்தவரையில், புள்ளி விவரங்களின் நம்பகத் தன்மை சந்தேகத்துக்கு உரியதாகும். ஏனெனில், கேள்விக் கொத்துக்களை தலைவர்களே பூர்த்தி செய்ததுடன், அவர்கள் தமது சொந்த அக்கறைகளை கருத்தில் கொண்டு தகவல்களை தமக்கு வேண் டிய விதத்தில் திரித்துக் கூறியுள்ளனர். உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற விடயம் மிகக் கூடியளவுக்கு வலியுறுத்திக் கூறப்பட்டிருக்க முடி யும். எனினும், இந்தத் தரவுகளை நாம் பயன்படுத்த முடியும். இத்தரவுகள் இக்கால கட்டத்தின் சித்தாந்த ரீதியான முன்னுரிமைகளை எடுத்துக் காட்டுவன வாகவுள்ளன.

1949 அளவில் பொருளாதாரக் கட்டுப்பாட்டுத் துறைக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்ட தலைவர்களில் சுமார் அரைவாசிப் பகுதியினர் தொழிலாளர் குடும்பங்களிலிருந்தே வந்தனர். மேலும், நான்கில் ஒரு பங்கினர் இலிகிதர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். பொருளாதாரத் துறைக் கான ஆட்சேர்ப்புக் கோட்பாடு தெளிவாகவே தொழிலாளர் குடும்பங் களையும் கீழ் நடுத்தட்டு குடும்பங் களையும் சேர்ந்தவர்களுக்கு சாதகமான தாக காணப்பட்டது.

திட்டமிடப்பட்ட பொருளா தாரத்தின் ஆரம்ப கட்டத்தில் ஆட்சேர்ப்பின்போது சமூக வர்க்கம் ஒரு முறையான அளவுகோலாக ஏற்கப்பட்டிருந்தது. முன்னைய கால கட்டங்களின் போது இது ஒருமுறை சாராத அளவுகோலாக மட்டுமே இருந்தது. 1945ஆம் ஆண்டுக்கு முன்னர் சிவில் சேவையிலிருந்த அதிகாரி ளிலும் பார்க்க இலிகிதர் சேவைகளிலிருந்த மத்தியதர வர்க்க ஊழியர்களுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டது.

செக்கோஸ்லாவாக்கியாவைப் பொறுத்தவரையில், 1950களில் முகாமையாளர்களாக இருந்தவர்களில் சுமார் 50 சதவிகிதத்தினர் முன்னர் தொழிலாளர்களாக இருந்தவர்களா வார்களென கல்லோவா என்பவர் மதிப்பிட்டுள்ளார். அதேவேளையில், பொருளாதாரத்தின் மத்திய அலுவலகங்கங்களில் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்களின் விகிதம் 15 சதவிகிதத்திலிருந்து 1948 பெப்ரவரியில் 37சதவிகிதமாக உயர்ந்திருந்தது. முகாமையாளர்களில் சுமார் 10 சதவிகிதத்தினர் உயர் கல்வியைப் பெற்றிருந்தனர். அதேவேளையில் 50 வதவிகிதத்தினர் ஆரம்பப் பயிற்சியை மட்டுமே பெற்றவர்களாக இருந்தனர்.

போலந்தின் சுமார் இரண்டு இலட்சம் தொழில் முயற்சி

முகாமையாளர்களில் ஐந்தில் நான்கு பங்குக்கும் மேற்பட்டவர்கள் 1950களின் நடுப்பகுதியில் தொழிலாளர் மற்றும் விவசாயக் குடியானவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். பல்கலைக்கழக டிப்ளோமா தகைமைகளைப் பெற்றிருந்த முகாமையாளர்களின் விகிதம் 1945ல் 24 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும், 1950களின் முடிவினையடுத்து முகாமையாளர்களிடையேயும் அவர்களுடைய உதவியாளர்களிடையேயும் கல்வி மட்டம் தொடர்ந்தும் அதிகரித்துச் சென்றது. கல்லூரிப் பட்டங்களைப் பெற்றிருந்த முகாமையாளர்கள் பிரதம பொறியியலாளர்கள் என்பவர்களின் விகிதம் 1968ல் முறையே 50,70 விகிதம் என இருந்தது. 1970 களின் தொடக்கத்தின்போது தொழில் முயற்சி முகாமையாளர்களின் சுமார் 70 சதவிகிதத்தினரும் திணைக்களத் தலைவர்களில் சுமார் 90 சதவிகிதத்தினரும் பல்கலைக்கழக பட்டதாரிகளாக இருந்தனர்.

ஹங்கேரியின் முன்னணி சமகாலக் கட்சிப் பத்திரிகையான "ஸபாத் நெப்" (சுதந்திர மக்கள்) தொடக்கத்திலிருந்தே ஒரு புதிய வகையைச் சேர்ந்த தலைவர் குறித்த பிம்பத்தை உருவாக்கி வந்தது. "தொழிலாளர்களை தேசியமயமாக்கப்பட்ட தொழிற்சாலைகளின் முன்னணிப் பதவிகளில் அமர்த்தவும்", "அமைச்சின் ஆணையாளராக மாறிய தட்டெழுத்தாளர்", "முன்னைய இயந்திரப் பொருத்துனர் இப்பொழுது பணிப்பாளர்" போன்ற நிலைமைகளை அது சித்தரித்தது. கூட்டாட்சி காலம் முழுவதும் இந்நிலை நீடித்தது. இப்பத்திரிகை, பிரத்தியேகமாக தொழில் முயற்சிகள் குறித்து மட்டுமே செய்தி வெளியிட்டு வந்தது. பொருளாதார கட்டுப்பாட்டுத்துறை குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. விமர்சன எழுத்துத்துறை தலைவர்களின் பாரம்பரிய படிநிலைகள் குறித்து கலந்துரையாடியது. அவை தொழில் முயற்சிகள் குறித்தும் அதேபோல கட்டுப்பாட்டு நிறுவனங்கள் குறித்தும் கருத்துத் தெரிவித்தன ("நிதியமைச்சில் எதிர்ப்புரட்சி கழகங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் அதிகளவில் உள்ளனர்"; "திறமையின் போர்வையில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைக்குள் பிற்போக்குவாதிகள் நுழைகின்றனர்"; "வங்கிப் பணிப்பாளர்கள் சும்மா இருந்து கொண்டு ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கின்றனர்"). குறிப்பாக, 1947ன் பின்னர் இக்குரல் வன்மையாக ஒலிக்கத் தொடங்கியது. " இஸ்ட்வான் வர்கா வீட்டுக்குப் போ", "பெரேடெக்னி காவைச் சுற்றி ஊழல், நாசவேலை, உளவு பார்த்தல்" போன்ற கோஷங்கள் ஒலிக்கத் தொடங்கின. ஒருபுறத்தில் 1945 அளவில், தலைவர்கள் தொடர்பான பகை மனப்பான்மை மாற்றமடைய வேண்டும் என்றும், பொறியாளர்களுக்கும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுக்கும் இடையிலான அவநம்பிக்கை போக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது; மறுபுறம், நாசவேலை எண்ணம் கொண்ட முன்னைய காலத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப பொறியியலாளர்கள் மீது ஒரு கண் வைத்துக் கொள்ளுமாறு தொழிலாளர் -பணிப்பாளர்கள் எச்சரிக்கப்பட்டிருந்தனர்.

1950 களின் முதலரைப் பாகத்தின் போது இளம் நிபுணர்கள் பொருளாதார கட்டுப்பாட்டுத் துறைக்குள் கணிசமான அளவில் பிரவேசித்தார்கள். உதாரணமாக, 1953ல் கல்லூரி பொருளாதார பட்டதாரிகளில் சுமார் அரைவாசிப் பகுதியினர் அமைச்சுக்களிலும் அரச முகவுரங்களிலும் தொழில்களைப் பெற்றனர். 1954ல் 90 சதவீதமான திணைக்களத் தலைவர்களும் கட்சி உறுப்பினர்களாக இருந்தனர்.

அமைச்சுக்களுக்கும் தொழில் முயற்சிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் 1940களின் பிற்பகுதியில் நிலவிய மட்டங்களிலும் பார்க்க ஓரளவுக்கு குறைக்கப்பட்டிருந்த போதிலும், அவை இன்னமும் கணிசமான அளவில் காணப்பட்டன. தொழில் முயற்சி முகாமையாளர்களில் 73.5 சதவீதத்தினர் தொழிலாளர் குடும்பங்களையும் 7.5 சதவீதத்தினர் விவசாயக் குடியானவர் குடும்பங்களையும் சேர்ந்தவர்களாக இருந்து வந்த அதேவேளையில், அமைச்சுக்களின் உயர் அதிகாரிகளைப் பொறுத்தவரையில், இந்த விகிதங்கள் முறையே 49%, 5.6%, எனக் காணப்பட்டன. அமைச்சு அதிகாரிகளில் சுமார் அரைவாசிப் பகுதியினர் அறிவுத்துறை, இலிகிதர் அல்லது மத்தியதர வர்க்கத்திலிருந்தே வந்துள்ளார்கள் என்பது இதன் பொருளாகும்.

பத்திரிகைகள் 1953 தொடக்கம் 1956 வரையில் தொழில் நுட்பவியலாளர்களிலும் பார்க்க முகாமையாளர்கள் குறித்து ஒரு கடும் விமர்சனத் தொனியை மேற்கொண்டு வந்தன. பணிப்பாளர்களின் அளவுக்கதிகமான பொறுப்புக்கள் குறித்தும், மிதமிஞ்சிய அளவிலான மத்தியமயமாக்கலின் குறைபாடுகள் குறித்தும் எழுதப்பட்டது. இதனையடுத்து, கைத்தொழில் தொழில் முயற்சிகளின் பணிப்பாளர்களின் வேலைப் பொறுப்புக்களைக் குறித்துரைக்கும் அமைச்சரவைத் தீர்மானமொன்று எடுக்கப்பட்டது. மிதமிஞ்சிய அளவில் மத்திமயமாக்கலும் அதிகாரக் கெடுபிடிகளும் காணப்பட்டமையினாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டதாக கூறப்பட்டது. நிறுவனத்தின் விரிவான திட்டமிடல், ஒப்புதல் பெற்ற திட்டத்தை நிறைவேற்றுதல், மத்திய கட்டுப்பாட்டு நிறுவனங்களில் ஒதுக்கப்படும் நிதிகளை விவேகபூர்வமான முறையில் பயன்படுத்துதல் போன்றவற்றுக்கு பணிப்பாளர்கள் பொறுப்பாக இருந்தனர்.

1956இன் பின்னர், விசுவாசம் மற்றும் வினைத்திறமை போன்றன தொடர்பான அளவுகோல்கள் மாற்றியமைக்கப்பட்டன: விசுவாசத்தை நிர்ணயம் செய்வதில் அரசியல் நடவடிக்கை முக்கியத்துவம் பெற்றது. தொழிற்சங்க இயக்கத்தின் பழைய, புறக்கணிக்கப்பட்ட போராளிகளுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டுமென 1957ல் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது. நம்பகத்தன்மை முக்கியமானதாக கருதப்படும் இடங்களில், பழைய போராளிகள் அமர்த்தப்பட வேண்டும் என்ற கூறப்பட்டது.

தமது அரசியல் நடத்தை காரணமாக வேலைகளிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்கள் ஒரு பாரிய சமூகப் பிரச்சினையை உருவாக்கியிருந்தனர். இந்த விடயத்தில், 1957ல் தொழில் அமைச்சர் தலையிட வேண்டியிருந்தது. அவர் கனரக கைத்தொழில்கள் அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில், "இத்தகைய தொழிலாளர்களை வேலையில்

சேர்த்துக் கொள்வதற்கு தொழில் முயற்சிகள் பயப்படுகின்றன" என்று குறிப்பிட்டிருந்தார். இது இத்தொழிலாளர்களுக்கு "மீள் கல்வியூட்டுவதனை" தடுத்ததுடன் சட்டம் ஒழுங்கு நிலைமையையும் சீர்குலைத்தது.

ஜனாதிபதி கவுன்சிலால் ஆக்கப்பட்ட சட்ட ஆணை இல.66, நன்னடத்தைச் சான்றிதழ் பெற்றிருக்கும் நபர்களைக் கொண்டு மட்டுமே நிரப்பப்படவேண்டிய சில பதவித்துறைகளை குறித்துரைத்தது. 1960 வரையில் உலோக மற்றும் இயந்திரக் கைத்தொழில் அமைச்சுக்கு இது தொடர்பாக 7666 மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இவர்களில் 265 பேர் மட்டும் முக்கியமான, இரகசியத் தன்மை கொண்ட பதவிகளில் அமர்த்தப்படுவதற்கு தகைமையற்றவர்கள் என கருதப்பட்டிருந்தனர். மறுபுறத்தில், கட்சி சாராதவர்களும் கூட முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட முடியும் என 1957ல் கட்சி ஒரு தீர்மானத்தை எடுத்தது. தொழில் முயற்சிகளின் பொறியியலாளர்களில் 38 சதவிகிதத்தினரும், தலைமைக் கணக்காளர்களில் 50 சதவிகிதத்தினரும் கட்சி உறுப்பினர்கள் அல்லாதவர்களாக இருந்தனரென உலோக மற்றும் இயந்திரக் கைத்தொழில் அமைச்சு 1961ல் மதிப்பிட்டிருந்தது. அதேவேளையில் ஆளணித் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களில் 90 சதவிகிதத்தினர் தொழிலாளர்/விவசாயிகள் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்களில் 75 சதவிகிதத்தினர் எட்டாம் வகுப்பு அல்லது அதற்கு குறைவாக கல்வி கற்றவர்கள் என்றும் மதிப்பிடப்பட்டிருந்தது. பொருளாதார முகாமையாளர்களை கண்காணித்து, கூட்டுப்படுத்தும் வேலைக்கென நியமனம் செய்யப்பட்டிருந்தவர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் இருந்தவர்களிலும் பார்க்க ஆகக் குறைவான கல்வித் தகைமைகளையே பெற்றிருந்தனர் என்பதனை இது காட்டுகிறது. இது அதிருப்திகரமான ஒரு மூலமாக இருந்தது.

கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஒரு சிறிதளவு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தபோதிலும் 1940 கள் தொடக்கம் 1960 களின் ஆரம்பம் வரையில் தலைவர்களின் சமூக உள்ளடக்கத்தில் கணிசமான மாற்றங்கள் எவையும் ஏற்பட்டிருக்கவில்லை. அதேவேளையில், தலைவர்களின் வயதுப் பகிர்வில் மாற்றம் ஏற்பட்டிருந்தது. சராசரி வயது 40 இலிருந்து 46ஆக அதிகரித்தது. 1949ல் தலைவர்களில் அரைவாசிப்பங்கினர் 40வயதுக்கு குறைந்தவர்களாக இருந்தனர். 1962ல் இது மூன்றில் ஒரு பங்காக குறைவடைந்தது. 1954ல் மத்திய கட்சி உறுப்பினர்களில் அரைவாசிப் பங்கினர் 30 வயதுக்கு குறைந்தவர்களாக இருந்தனர்; 1962ல் இது மூன்றில் ஒரு பங்காக குறைவடைந்தது. 1954ல் மத்திய கட்சி உறுப்பினர்களில் அரைவாசிப் பங்கினர் 30 வயதுக்கு குறைந்தவர்களாக இருந்தனர்; 1956ல் கட்சியின் முழு உறுப்பினர்களிலும் நான்கில் மூன்று பங்கினர் 35 வயதுக்கு குறைந்தவர்களாக இருந்தனர்.

## பொருளாதார சீர்திருத்தத்தின் தாக்கங்கள்

ஹங்கேரிய பொருளாதார சீர்திருத்தம் தொடர்பான 1968ன் முதலாவது அலையின் மிக முக்கிய கூறு, கட்டாய திட்டமிடல் முறையை முடிவுக்கு கொண்டு வந்தமையாகும். முதலீடு மற்றும் வியாபாரக் கொள்கை என்பன தொடர்பான முக்கிய தீர்மானங்கள் கூட்டுத்தாபனங்களின் ஆளுகையின் கீழ் வந்தன. இந்த நிறுவனங்கள் மீண்டும் ஒரு முறை சுதந்திர நிறுவனங்களாக மாற்றமடைந்தன. இங்குள்ள எதிர்முரண் நிலை, இந்தச் சீர்திருத்தத்தின் பின்னர், கட்சியும் அரச அமைப்புக்களும் இவற்றின் மீது மேற்கொண்டு வந்த (முறைசாரா) நிர்ப்பந்தங்களாகும்.

அவ்வப்போதைய தலையீடுகள், கட்சி மற்றும் அரச அமைப்புக்களின் நிர்ப்பந்தங்கள், அவற்றுடன் இணைந்த வெளிச்சந்தை நிகழ்வுப்போக்குகள் என்பன தொழில் முயற்சிகளுக்கான நிச்சயமற்ற ஒரு சூழ்நிலையில், பெரும்பாலான பொருளாதார தலைவர்களால் ஒரே சீரான ஒரு உத்தியை உருவாக்கிக் கொள்ள முடியாதிருந்தது. இந்த நிலையில் இவர்களுக்குரிய பணி கடைசி வேண்டுகோளை நிறைவேற்றுவது அல்லது உடனடிப் பிரச்சினையைத் தீர்ப்பது என்ற வகையிலேயே இருந்தது.

1980 களின் முதலரைப் பாகத்தின் போது ஹங்கேரிய தொழில் முயற்சிகளுக்கான முகாமையாளர்களைத் தெரிவு செய்யும் முறைகளில் முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. போட்டி அறிமுகப்படுத்தப்பட்டமையை அங்கு விசேஷமாக குறிப்பிட வேண்டும். இதன் மூலம் விண்ணப்பதாரிகளின் கடந்தகால செயற்பாடு, தொழில்நுட்ப தொழில் சார் திறன் மற்றும் தொழில்முயற்சி குறித்த அறிவு போன்ற விடயங்கள் பரீட்சிக்கப்பட்டன. இந்தப் போட்டி முறை முகாமைப் பதவிகளுக்கான விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையை கணிசமான அளவுக்கு அதிகரித்தது.

தொழில் முயற்சிகள் சட்டம் 1984ல் திருத்தப்பட்டதனையடுத்து, தொழில் முயற்சி முகாமை குறித்த புதிய வடிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பெரும்பாலான நிறுவனங்களில் தொழில் முயற்சி கவுன்சில்கள் அமைக்கப்பட்டன. முகாமையாளர் நியமனத்தை உள்ளிட்ட நிறுவனத்தின் உத்தியை நிர்ணயம் செய்வது தொழில் முயற்சிக் கவுன்சிலின் பொறுப்பாகும். இது முன்னர் சம்பந்தப்பட்ட அமைச்சின் அதிகாரத்துக்குள் இருந்தது. பின்னர், நிலைமாற்றம் மற்றும் தனியார்மயமாக்கல் என்பவற்றின் தேவைகளுக்கு ஏற்றவிதத்தில், தொழில் முயற்சி கவுன்சில்களின் மூல உரிமைகள் மீண்டும் ஒரு முறை கட்டுப்படுத்தப்பட்டன. இந்த மாற்றங்கள் நிறுவனங்களுக்கும் மத்திய பொருளாதார கட்டுப்பாட்டுக்கும் இடையிலான உறவுகளை சீர்திருத்தியமைத்தன.

## புதிய மேட்டுக்குடியினர்

1980களின் முடிவின் போது, முன்னர் சித்தாந்த ரீதியாக ஒன்றுபட்டிருந்த மேட்டுக்குடியினர் பகுதி பகுதியாக பிரிந்தனர். இதனை, கட்சியை அடிப்படையாகக் கொண்ட பழைய மேட்டுக்குடியினருக்கும் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்த புதிய மேட்டுக் குடியினருக்கும் இடையிலான கூட்டின் சீர்குலைவு என எர்ஸ்பெட்ஸலாய் என்பவர் வர்ணித்துள்ளார். இது ஒரு தலைமுறைக்குரிய குணாம்சமாகவும் கருதப்

படுகிறது. புதிய மேட்டுக் குடியினரில் பெரும்பான்மையினர் உயர் வினைத்திறன், தாராளவாதம், தகுதிவாய்ந்தவர்களின் ஆட்சி போன்ற விடயங்களை பெரிதும் மதித்துப் போற்றிய புதிய தலைமுறையைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். ஆனால், சம்பந்தப்பட்ட சமூகப் பிரக்ஞை யொன்று அவர்களிடம் இருக்கவில்லை. 1990ல் மேற்கொள்ளப்பட்ட பிரயோக ஆய்வொன்றின் அடிப்படையில், புதிய மேட்டுக் குடியினரின் தனித்துவக் குணாம்சங்களை பின்வருமாறு விளக்கமுடியும்.

1980களின் பின்னரைப் பாகத்தின் போது பொருளாதார மேட்டுக் குடியினர் – குறிப்பாக நிதி மற்றும் நாணயத் துறைகளைச் சேர்ந்த தலைவர்கள்–கணிசமான அளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருந்தனர். அமைச்சு மற்றும் தொழில் முயற்சிகளின் தலைவர்களில் 30 சதவீதமானோர் 45 வயதுக்கு குறைந்தவர்களாக இருந்து வந்த அதேவேளையில், புத்துயிர் பெற்று வரும் வங்கித்துறையின் தலைவர்களில் சுமார் 60 சதவீதத்தினர் இந்த வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்து வந்தனர். 1990ல் பொருளாதார உயரதிகாரிகளில் 83% ஆண்களாக இருந்தனர். பொருளாதார தலைமையைப் பொறுத்தவரையில் இன்னமும் ஆண்களின் மேலாதிக்கமே நிலவி வருகின்றது என்பதனையே இது காட்டுகின்றது. உயர் கல்விப் பட்டதாரிகள் ஆகக் கூடிய அளவில் (95%) காணப்பட்டனர். அதேபோல முன்னைய கட்சி உறுப்பினர்களின் விகிதமும் உயர்வாக இருந்தது.

ஆனால், 1990 அளவில், வேலைக்கு ஆட்களின் தகைமைகளை சீர்தூக்கிப் பார்க்கும் விடயத்தில் கட்சி அங்கத்துவம் முக்கித்துவம் இழக்கத் தொடங்கியிருந்தது. சில நல்ல உதாரணங்கள் இருந்தபோதிலும், பொருளாதாரத்துறை மேலதிகாரிகள் கட்சி அரசியலில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றனர். முன்னைய கட்சி உறுப்பினர்களில் பெரும்பகுதியினர் 1989ல் ஹங்கேரி சோஷலிஸ தொழிலாளர் கட்சியிலிருந்து விலகினர். அவர்கள் ஒரு புதிய கட்சியை உருவாக்கவுமில்லை. பொருளாதார உயரதிகாரிகளில் எட்டில் ஒரு பங்கினர் ஹங்கேரிய சோஷலிஸ்ட் கட்சிக்கு மாறியவர்களாக இருந்தனர். ஹங்கேரிய ஜனநாயக கழகம், கிறிஸ்தவ ஜனநாயக கட்சி போன்றவற்றிலும் சிலர் சேர்ந்து கொண்டனர். மேலும் 1 சதவிகிதத்தினரான பொருளாதார மேட்டுக் குடியினர் ஜனநாயக எதிர்க்கட்சியைச் சேர்ந்த கட்சிகளில் சேர்ந்து கொண்டனர். கட்சி அங்கத்துவமும் அரசியல் நடவடிக்கையும் ஆட்சேர்ப்புக்கான ஓர் அத்தியாவசிய அடிப்படையாக இருந்து வரவில்லை என்பதனையே இவையனைத்தும் எடுத்துக்காட்டுகின்றன.

இந்த மேட்டுக் குடியினரில் சுமார் அரைவாசிப் பகுதியினர் தொழிலாளர் குடும்பங்களிலிருந்து வந்ததுடன், சுமார் 30 சதவீதத்தினர் அறிவுத்துறை அல்லது உயர்குடி குடுமபங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். குடும்பப் பின்னணியைப் பொறுத்தவரையில், தொழில் முயற்சி முகாமையாளர்கள், பொருளாதார கொள்கை வகுப்போர் மற்றும் வங்கி முகாமையாளர்கள் போன்ற பிரிவினரிலும் பார்க்க வேறுபட்டவர்களாக இருந்தனர். முன்னைய பிரிவினரில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் மட்டுமே உயர் குடும்பங்களிலிருந்து வந்தவர்களாக இருந்தனர். பின்னைய இரு பிரிவுகளையும் பொறுத்தவரையில், இது முறையே மூன்றில் இரண்டாகவும், 45% ஆகவும் இருந்தது. தொழில் முயற்சித் தலைவர்களின் தந்தையரில் ஐந்தில் ஒரு பங்கினர் மட்டுமே உயர்கல்வியைப் பெற்றவர்களாக இருந்தனர். அதேவேளையில், அமைச்சுத் தலைவர்களைப் பொறுத்தவரையில் இது மூன்றில் ஒன்றாகவும் வங்கி முகாமையாளர்களைப் பொறுத்தவரையில் 44% ஆகவும் இருந்தது. தாய்மாரின் உயர் கல்வியைப் பொறுத்தவரையில், தொழில் முயற்சித் தலைவர்கள் 3%, அமைச்சுத் தலைவர்கள் 12%, வங்கியாளர்கள் 22% என காணப்பட்டன.

வெள்ளை வேட்டி ஊழியர்களின் பிள்ளைகளில் பெரும்பான்மையினர் வங்கியாளர்களாகவும் அமைச்சுத் தலைவர்களாகவுமே இருந்தனர். தொழில் முயற்சித் தலைவர்களிடையே இவர்கள் அரிதாகவே காணப்பட்டனர். தொழில் முயற்சித் தலைவர்களின் தந்தையரில் 47 சதவீதத்தினர் ஆரம்பக் கல்வி மட்டத்தையே பூர்த்தி செய்திருந்தனர். அந்த விகிதம் வங்கியாளர்களைப் பொறுத்தவரையில் 35%ஆகவும், அமைச்சுத் தலைவர்களைப் பொறுத்தவரையில் 30% ஆகவும் இருந்தது. தொழில் முயற்சித் தலைவர்களின் தாய்மாரில் 78 சதவீதத்தினரும், வங்கி முகாமையாளர்களின் தாய்மாரில் 48% சதவீத்தினரும் அமைச்சுத் தலைவர்களின் தாய்மாரில் 60 சதவீதத்தினரும் எட்டாம் வகுப்பினை அல்லது அதற்குக் குறைந்த மட்டத்தை பூர்த்தி செய்தவர்களாக இருந்தனர். இது தொழில் முயற்சித் தலைவர்கள், வங்கி முகாமையாளர்கள் ஆகிய பிரிவினர்கள் வெவ்வேறு சமூகப் பின்னணிகளைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர் என்பதனைக் காட்டுகிறது.

**முடிவுரை**

வேலைக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான அளவுகோல் வர்க்கத்திலிருந்து கல்வி, அனுபவம் மற்றும் கட்சி அங்கத்துவம் என்பவற்றை நோக்கி நகர்ந்து சென்றுள்ளது. கட்டுபாட்டுத்துறை தலைவர்களுக்கும் தொழில் முயற்சி முகாமையாளர்களுக்கும் இடையிலான தொடக்ககால வேறுபாடுகள் பெருமளவுக்கு குறைந்துள்ளன; ஆனால், அவை முற்றாக மறைந்துவிடவில்லை. புதிய தலைமுறை பொருளாதார தலைவர்களை தெரிவு செய்யும் அளவுகோல் சார்புரீதியில் பரவலாக்கப்பட்டுள்ளது. அமைப்பு முறையில் ஏற்பட்டு வந்த மாற்றங்களுடன் இணைந்த வகையில், ஆட்சேர்ப்பில் கட்சி அங்கத்துவத்துக்குப் பதிலாக வினைத்திறமைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இப்பொழுது ஒரு புதிய பொருளாதார மேட்டுக்குடியினர் உருவாகி வருகின்றனர். அமைப்பு ரீதியான மாற்றங்கள், தனியார்மயமாக்கல் மற்றும் தொழில் முயற்சி வடிவங்களின் பரவல் என்பவற்றுடன் மாற்றுத் தொழில் வாய்ப்புக்கள் பெருகியுள்ளன. 1990ல் 44% ஹங்கேரியர்கள் தொழில் முனைவோராக வருவதற்கு விருப்பம் தெரிவித்தார்கள். தொழில் அணியினருக்கு முகாமைத்திறன்களைப் பெற்றுக்கொடுப்பதே பொருளாதாரச் சீர்திருத்தத்தின் முக்கிய சவாலாக இருந்து வருகின்றது.

# ஜோர்தானின் டௌஜான் பய்ஸால்

## ஓர் அரசியல் வீராங்கனை

மெலிஸ்ஸா டன்பார்
( ஆசிரியர் மற்றும்
பத்திரிகையாளர், அம்மான்)

ஜோர்தானில் நவம். 8ஆம் திகதி இடம்பெற்ற தேர்தல்களின் போது, துவாஜான் பைஸால் முதலாவது பெண்மணியாகப் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார். இது, 1974 வரை மகளிருக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டிருந்த ஒரு நாட்டைப் பொறுத்தவரை ஒரு சாதாரண சாதனையாக இருக்கவில்லை. அண்மையில் அங்கு நடாத்தப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பின் போது கூட, பெண்களிலும் பார்க்க, ஆண்கள், அரசியல் பணி புரிவதிலும் முடிவுகளை எடுப்பதிலும் அதிகளவு ஆற்றல் பெற்றவர்களாக இருந்து வருகின்றார்கள் என பதிலளித்தவர்களில் 77 சதவீதமானவர்கள் குறிப்பிட்டிருந்தனர். ஜோர்தான் பல்கலைக்கழகத்தின் உத்திகள் தொடர்பான ஆய்வு மையத்தினால் நடாத்தப்பட்ட இந்தக் கருத்துக் கணிப்பு, 1989ல் இடம்பெற்ற தேர்தலின் போது வாக்களித்த பெண்களில் மூன்றில் ஒரு பங்குக்கும் மேற்பட்டவர்கள் தமது ஆண் உறவினர்களின் கட்டளைப்படியே வாக்களித்துள்ளார்கள் என்பதனையும் எடுத்துக் காட்டியது ("ஜோர்தான் டைம்ஸ், செப்டம்பா28 1993).

துவாஜான் பைஸால் ஜோர்தானில் வாழும் கார்க்கேஸிய மரபுக் குடிகளின் சிறுபான்மை சமுகமொன்றினைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் ஆவார். இந்தச் சமூகத்தினருக்கு (கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் போலவே) அரசியல் யாப்பு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பாராளுமன்ற ஆசனங்களை குறித்தொதுக்குகின்றது. ஆனால், அவர் இனவாத பிரச்சாரத்தின் மூலம் இந்தத் தேர்தலில் ஈடு படவில்லை. இதற்கு மாறாக, ஆகஸ்ட் மாதத்தில் மன்னர் உஸைன் தேர்தல் சட்டத்தை ஒரு தலைப் பட்சமாக மாற்றியமைத்த போது இடதுசாரிகளினாலும் தேசிய வாதிகளினாலும் இஸ்லாமிய சக்திகளினாலும் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் அவர் இணைந்து கொண்டார். முன்னர் ஜோர்தானியக் குடிமக்கள், தமது மாவட்டம் கொண்டிருக்கும் கீழ்சபை உறுப்பினர்களின் அளவுக்கு பல வாக்குகளை செலுத்தக் கூடியவர்களாக இருந்து வந்தார்கள். இந்தத் திருத்தம் ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற கட்டுப்பாட்டினை எடுத்து வந்தது.

உண்மையிலேயே "ஒரு ஆள் - ஒரு வாக்கு" என்ற சுலோகம் நல்லதொன்றாகவே தோன்றுகின்றது. தென் ஆபிரிக்காவில் இச்சுலோகம் பெரும்பான்மையினரின் ஆட்சிக்கான போர்க் குரலாக ஒலித்தது. ஆனால், ஜோர்தானைப் பொறுத்தவரையில், அது. முன்னர் தேர்தல் கூட்டுக்களை உருவாக்கிக் கொள்ளக் கூடிய சாத்தியப் பாடுகளினாலும், மொத்த வாக்குகள் மூலமும் பலவாக்குகள் முறையினால் வழங்கப்பட்ட வேறு பல அனுகூலங்கள் மூலமும் பயன் அடைந்து வந்த ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் சக்திகளைப் புற மொதுக்குவதற்கான முடியாட்சியின் திட்ட மொன்றாக இருந்தது. இந்த ஆண்டு, ஒருவர் ஒரு வாக்கினை மட்டுமே கொண்டிருந்த நிலையில், குடி மக்கள், தாம் நன்கு அறிந்திருந்த வேட்பாளர்களுக்கு வாக்கினை அளிக்கும் ஒரு போக்கினைக் காட்டினார்கள். அதாவது, தமது இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது சக மதத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது தமக்குச் சிறந்த சேவையைப் பெற்றுத் தரக் கூடியவர்கள் என்று தாம் கருதியவர்களுக்கே அவர்கள் வாக்கை அளித்தார்கள்.

துவாஜன் பைஸால் இந்த தனியொரு வாக்கு முறையினால் பயனடைந்தவராக இருந்து வருகின்றார். அவர் ஒரு கட்சியின் வேட்பாளராகவோ அல்லது மகளிர் இயக்கமொன்றின் ஒரு வேட்பாளராகவோ தேர்தலில் நிற்கவில்லை, ஒரு தனி நபர் என்ற முறையிலேயே தேர்தலில் நின்றார். மேலும் தனியொரு வாக்கு முறையை மிகக் கடுமையான முறையில் எதிர்த்து வந்த இஸ்லாமிய அடிப்படை வாதிகளிடமும் அவருக்குப் பிரச்சினைகள் இருந்தன. அவர் 1989ல் இடம் பெற்ற தேர்தல்களின போது குறைந்தளவு வாக்குகளையே பெற்றிருந்தார். பெண்நிலை வாதம் தொடர்பான கருத்துக்களை அவர் ஆணித் தரமாக முன்வைத்து வந்தமையால் இஸ்லாமிய

சகோதரத்துவம் அப்பொழுது அவருக்கு எதிராக மிகக் கடுமையான அவதூறுப் பிரச்சாரமொன்றினை மேற்கொண்டிருந்தது. இவற்றால் மனம் தளராத அவர், இந்தத் திருத்தத்தை மிகக் கடுமையாக விமர்சித்தார். இது இனக் குழுக்களைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கும், வாக்குகளை காசு கொடுத்து வாங்கக் கூடிய செல்வந்தர்களுக்கும் தேர்தல் முறையை எளிதானதாக்கி விடும் என்று அவர் குற்றம் சாட்டினார். புதிய சட்டம் தேசிய ஒருமைப்பாட்டினை பலவீனப்படுத்தி ஒவ்வொரு வாக்காளரும் நாட்டு நலனை அன்றி தனது சொந்த சமூகத்தின் நலனை மட்டும் விரும்பும் ஒரு நிலையை உருவாக்கி ஜோர்தானை சிறு சிறு பிரிவுகளாகப் பிரித்து விடும் என்று அவர் கூறினார். தேர்தலுக்குப், பின்னர், தேர்தல் சட்டத்தை திருத்தி அமைப்பது தமது முன்னுரிமைகளில் ஒன்றாகும் என அவர் வலியுறுத்தி வந்துள்ளார்.

உண்மையிலேயே, தனி ஒரு வாக்கு முறை (அரசாங்க ஆதரவாளர்களான) குலமரபுகளைச் சேர்ந்த வேட்பாளர்களையும் மற்றும் பாரம்பரியவாதிகளான சுயேட்சை வேட்பாளர்களையும் பெருமளவில் சீழ்சபைக்கு எடுத்து வந்துள்ளது. இஸ்லாமிய இடதுசாரி மற்றும் தேசியவாதிக் கட்சிகளுக்குரிய பாராளுமன்ற ஆசனங்கள் குறைவடைந்தமைக்கு இதுவே பிரதான காரணமாக இருந்தது. சுருக்கமாகச் சொல்வதானால், இது தேர்தல் பிரசாரத்தை வீரியமற்றதாக்கியதுடன், தேசிய பிரச்சினைகளிலிருந்து விவாதங்களை திசை திருப்பியும் விட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்க அரசுடனான சமாதான நிகழ்வுப்போக்கு, அரசாங்க அபிவிருத்திக் கொள்கை அல்லது ஊழல் போன்ற முக்கியமான தேசியப் பிரச்சினைகள் தொடர்பான விவாதங்கள் இடம் பெறவில்லை. உதாரணமாக, 1989 தேர்தல்களின் போது ஜோர்தானுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் தொடர்பாக மிகக் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வந்தன. ஆனால், 1993 தேர்தலின் போது இந்த விடயங்கள் மிக அரிதாகவே குறிப்பிடப்பட்டன. மேலும், தேர்தல் பிரச்சாரத்தின் இறுதிக் கட்டம் வரையில் வெளியரங்குகளில் நடத்தப்படும் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் தடை செய்யப்பட்டிருந்தன.

தனது கொள்கைகளை ஆதரிக்கக் கூடிய, பணிந்து போகும் பாராளுமன்றமொன்றைக் கொண்டிருப்பதற்கே முடியாட்சி விரும்புகின்றது என்ற எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டுக்கு இவை அனைத்தும் நம்பகத் தன்மையை அளித்தன. குறிப்பாக, இஸ்ரேலுடன் செய்து கொள்வதற்கு திட்டமிடப்படும் எந்த ஒரு சமாதான ஒப்பந்தத்துக்கும் பாராளுமன்றத்தின் ஆதரவினை இலகுவில் பெற்றுக் கொள்வதே முடியாட்சியின் நோக்கமாகும் என்று கூறப்பட்டது. உண்மையிலேயே, தேர்தலை உடனடுத்து ஜோர்தானிய தூதுக் குழு இஸ்ரேலுடனான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தில் கைச்சாத்திட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் கடந்த ஆண்டில் வரையப்பட்டிருந்த போதிலும் அது அத்தாட்சிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

ஆகஸ்ட் மாத்தில் பலஸ்தீனிய விடுதலை இயக்கம் மற்றும் இஸ்ரேலிய அரசாங்கம் என்பவற்றுக்கிடையே இணக்கம் காணப்பட்ட பலஸ்தீனிய சுயாட்சிக்கான காஸா-ஜெரிகோ மாதிரி தொடர்பான அபிப்பிராய வாக்கெடுப்பொன்றாக இந்தத் தேர்தல் பிரச்சாரம் மாறிவிடக்கூடிய சாத்தியப்பாட்டினை மன்னர் ஆட்சி மிகவும் தந்திரமான முறையில் தவிர்த்துக் கொண்டிருந்தது. குடிமக்களில் பெரும்பான்மையினர் பலஸ்தீனிய வம்சாவழியைச் சேர்ந்தவர்களாக இருந்து வரும் ஜோர்தான் போன்ற ஒரு நாட்டில் இது காரசாரமான விவாதங்களைத் தூண்டி விட்டிருக்க முடியும். மேலும், இங்கு பதிவு செய்யப்பட்டுள்ள 20 அரசியல் கட்சிகளில் சுமார் அரைவாசிப் பகுதி இடதுசாரி, அரபுத் தேசியவாத மற்றும் ஸியோனிஸ எதிர்ப்பு வேர்களைக் கொண்டனவாகவும் இருந்து வருகின்றன. ஆனால், அது இடதுசாரி, தேசியவாத அணியில் தற்போது நிலவி வரும் குழப்ப நிலை, நாடு கடத்தப் பட்டுள்ள பலஸ்தீனியர்களிடையே காணப்படும் இழப்புணர்வு மற்றும் தடுமாற்ற நிலை என்பன காரணமாக எந்த வகையிலும் ஒரு புரட்சியை தூண்டிவிட்டிருக்க முடியாது. ஜோர்தானிய அரசியல் ஸ்தாபனம் இத்தகைய சர்வசன வாக்கெடுப்பொன்றினை தவிர்த்துக் கொள்வதில் காட்டிய ஆர்வம், சமாதான நிகழ்வுப் போக்கு நிச்சயமற்ற ஒரு முடிவினை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் வேளையில் அது தனது பலவீன நிலையை நன்கு உணர்ந்து கொண்டுள்ளது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. மேலும் ஜோர்தானியர்கள் 1989ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிழைப்புத் தொழில்கள் தொடர்பாக தமக்கிடையே நிகழ்த்திய கலவரத்தின் பின்னர், தனது ஆட்சியை சீராக்கம் செய்து கொள்வதற்காக மன்னர் ஹுசைன் துவக்கி வைத்த ஜனநாயகமாக்கல் நிகழ்வுப்போக்கின் வரையறைகளையும் அது தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. ஜோர்தானின் புதிய ஜனநாயகத்தினை வேறு பல நாடுகளில் காணப்படும் நிலவரங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது அது பாராட்டத்தக்க நிலையில் இருந்து வந்தபோதிலும் கூட, மிகச் சரியான முறையில் வர்ணிப்பதானால் அதனைக் "கட்டுப்படுத்தப்பட்ட அரசியல் தாராள மயமாக்கல் என்று கூற வேண்டியுள்ளது.

### இஸ்லாமிய அணியின் பின்னடைவு

நவம்பர் 8 தேர்தல் குறித்த தொடர்பு சாதனங்களின் ஆரூடம் இஸ்லாமிய அணியினருக்கான ஒரு பின்னடைவினையே எடுத்துக் காட்டியது. கடந்த ஆண்டின் போது முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் முன்முயற்சியினால் உருவாக்கப்பட்ட இஸ்லாமிய நடவடிக்கை முன்னணி 16 தொகுதிகளில் மட்டுமே வெற்றியீட்டியது; ஆனால், 1989 தேர்தல்களின் போது இஸ்லாமிய சகோதரத்துவ அணி 23 தொகுதிகளை பெற்றிருந்தது. ஆனால், புள்ளி விவர நியதிகளில் நோக்கும் பொழுது, அடிப்படைவாத அமைப்பைச் சேர்ந்த வேட்பாளர்கள் 1989ல் பெற்றுக் கொண்ட அதேயளவு வாக்குகளை இம்முறையும் பெற்றுள்ளார்கள் என்பதனை காணமுடிகிறது.

அவர்களுடைய அடிப்படை ஆதரவுத் தளம் மாற்றமடையாமல் இருந்து வருகின்றது என்பதனையே இது காட்டுகின்றது. சரியாகச் சொல்வதானால் மொத்த வாக்குகளில் மூன்றிலொரு பங்கினை அவர்கள் பெற்றிருந்தார்கள். ஆனால், "ஒருவருக்கு ஒரு வாக்கு" என்ற சட்டத்திருத்தம் காரணமாக, 1989ல் பெற்றிருந்த அதேயளவு தொகுதிகளை இம்முறை அவர்களால் பெற முடியாது போய்விட்டது.

அடுத்த பாராளுமன்றம், இஸ்ரேலுடனான ஓர் ஒப்பந்தத்தை அத்தாட்சிப்படுத்த வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படும் என்பதனை இவர்கள் அறிந்துள்ளார்கள். மேலும், இது அவர்களுடைய மிகத்தீவிரமான இஸ்ரேல் எதிர்ப்பு வார்த்தை ஜாலங்கள் அனைத்தையும் முரண்படச் செய்துவிடும் என்பதையும் அவர்கள் உணர்ந்துள்ளார்கள். அதனால் இஸ்லாமிய சகோதரத்துவ அணியினர் பாராளுமன்றத்தில் தமது தற்போதைய அந்தஸ்து குறித்து அவ்வளவாகக் கவலைப்படவில்லை. மறுபுறத்தில், இருந்த அணியினர் தீவிர செயற்பாட்டினைக் கொண்ட முக்கியமான ஓர் அணியினராக சித்தரிக்கப்பட்டு வந்த போதிலும், தாம் சமாதான ஒப்பந்தமொன்றுக்கு தடையாக இருக்கப் போவதில்லை என்பதனை இவர்கள் மன்னர் ஹுசைனிடம் தனிப்பட்ட முறையில் தெரிவித்துள்ளார்கள். இந்த நிலையில், பாராளு மன்றத்தில் பெரும் பான்மை உறுப்பினர்களைக் கொண்டிருப்பதனை அவர்கள் விரும்பாதிருக்கக் கூடும்; ஏனெனில், அவ்வாறு ஒரு நிலைமை இருந்தால், நடப்பவற்றுக்கு அவர்களும் பொறுப்பினை ஏற்க வேண்டிய ஒரு நிலை தோன்றும்

மன்னரைப் பொறுத்தவரையில், அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிச் செல்லும் ஒரு கொள்கையை அவர் தொடர்ச்சியாக பின்பற்றி வருகின்றார். இந்த நிகழ்வுப் போக்கில், எதிர் அணியினருக்கு, எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகின்றது; ஆனால் அது ஒரு நிர்ணயகரமான எதிர்ப்பாக இருக்கவில்லை. இது அரசுக்கு உள்நாட்டு ரீதியிலும் வெளிநாட்டுக் கொள்கை அடிப்படையிலும் அனுகூலங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளது. ஐக்கிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமும் ஏனைய அதிகார மையங்களும், அடிப்படைவாத சக்திகளின் எழுச்சியினால் கலக்கமடைந்துள்ள நிலையில், ஜோர்தானின் இந்தப் புதிய அரசியல் மாதிரியை அக்கறையுடன் அவதானித்து வருகின்றன. இந்த மாதிரி அரசியல் ஸ்திர நிலையை எடுத்து வருவதில் பெருமளவுக்கு உதவ முடியுமென்று கருதப்படுகின்றது. மேலும், எகிப்து, அல்ஜீரியா போன்ற நாடுகளில் இடம்பெற்று வரும் குழப்ப நிலை மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கும் இது வாய்ப்பினை அளிக்கும்.

இஸ்லாமிய சகோதரத்துவ அணியை ஜோர்தானிய குடும்பத்துக்குள் சேர்த்துக் கொள்வது என்பது அவ்வளவு கஷ்டமான ஒரு காரியமாக இருக்கவில்லை. ஜோர்தானில் (1957ல்) அவசரகாலச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டிருந்த ஜனநாயகத்துக்கு முற்பட்ட காலகட்டத்தில், ஒரு தர்ம ஸ்தாபனம் என்ற முறையில் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த ஒரே அரசியல் கட்சி அதுவாகும். வறிய மற்றும் அதிருப்தியுற்ற சமூகப் பிரிவினரிடமிருந்து அது ஓரளவுக்கு வாக்குகளைப் பெற்றுக்கொண்ட போதிலும் அடிப்படையில் மத்திய தர வர்க்கத்தைக் கொண்ட ஒரு கட்சியாகவே இருந்து வருகின்றது. எனவே, ஜோர்தானின் ஸ்தாபிதமான சமூக அமைப்பில் பங்கேற்பதற்கு அது சிறந்த முறையில் தகுதி பெற்றுள்ளது என்று கூறலாம்.

இஸ்லாமிய அடிப்படை வாதிகளின் பாராளுமன்றப் பின்னடைவு, கணிசமான அளவிலான ஒரு மாற்றத்தை எந்தவகையிலும் சுட்டிக் காட்டவில்லை. ஆனால், அதேவேளையில், ஒட்டுமொத்தமான அரசியல் களம் மாற்ற மடைந்துள்ளது. அண்மைக் காலத்தில் உலகில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. அதேபோல மத்திய கிழக்குப் பிராந்தியத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக, சோவியத் யூனியனின் வீழ்ச்சி, வளைகுடாப் போரில் இராக்கின் தோல்வி மற்றும் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த அரபு-இஸ்ரேல் பேச்சுவார்த்தைகள் என்பவற்றின் விளைவாக அண்மைக் காலத்தில் மத்திய கிழக்கின் அரசியல் களம் பெரும் மாற்றங்களைச் சந்தித்தது. அதேவேளையில், ஜோர்தானைப் பொறுத்தவரையில், அரசியல் நடவடிக்கைக்கும் விவாதத்துக்குமான புதிய களங்கள் திறந்து விடப்பட்டுள்ளன. ஜனநாயகமயமாக்கல் என்பது தானாகவே தமது நாளாந்த சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து விடுவதில்லை என்பதையும் உண்மையான அதிகாரம் இன்னமும் மன்னரின் கைகளிலும் அவருடைய ஆட்களின் கைகளிலுமேயே இருந்து வருகின்றது என்பதனையும், பாராளுமன்றம் முக்கியமாக ஒரு விவாத மேடையாக மட்டுமே செயற்பட்டு வருகின்றது என்பதனையும் மக்கள் இப்பொழுது அனுபவபூர்வமாக அறிந்துள்ளார்கள். எனவே, அவர்கள் இப்பொழுது வார்த்தை ஜாலங்களில் மயங்கிப் போவதில்லை. மாறாக, அரசியல் முதிர்ச்சி பெற்றவர்களாகவும், யதார்த்தத்தை புரிந்து கொண்டவர்களாகவும் இருந்து வருகின்றார்கள். மேலும், முன்னர் தடை செய்யப்பட்டிருந்த பல விடயங்கள் குறித்து இப்பொழுது பலர் தைரியமாகப் பேசி வருகின்றனர். முன்னர் பொது விவாதங்களில் முடியாட்சியினதும் சகோதரத்துவ இயக்கத்தினதும் ஏகபோகம் மட்டுமே நிலவி வந்தது.

இந்தக் கட்டுரையுடன் தொடர்பான ஒரு விடயத்தை இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாகும். சுயேட்சையான இஸ்லாமிய ஆதரவாளரான முஹம்மத் சேதிதுவாஜான் பைஸாலும் மற்றொரு பெண் வேட்பாளரும் தமது கருத்துக்களை முன்வைத்த ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்கு சமூகமளித்து விட்டு வந்து ஜோர்தானிய தினசரி யொன்றில் நவம்பர் 6ஆம் திகதி ஒரு குறிப்பினை எழுதியிருந்தார். இஸ்லாமிய நடவடிக்கை முன்னணியின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராக இருந்த சேதி, இந்த முன்னணியில் நிலவி வந்த

இஸ்லாமிய சகோதரத்துவ அணியின் மேலாதிக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அதிலிருந்து விலகியிருந்தார். அவர் பின்வருமாறு எழுதுகிறார். "இந்த இரு வேட்பாளர்களும் பெருமளவுக்கு அரசியல் முதிர்ச்சியைப் பெற்றிருப்பதுடன், கலந்துரையாடல் மற்றும் பேச்சுவார்த்தை என்பவற்றில் அவர்கள் பிரமிப்பூட்டும் அளவிலான திறமைகளை வளர்த்துக் கொண்டுள்ளனர்.............. ஆண்களாகிய நாம், எமது பாராளுமன்றத்தில், அரசியல் மயமாகியிருக்கும் ஒரு பெண் இருப்பதனை – குறிப்பாக, அவர் ஆண்களிலும் பார்க்க உயர் அளவிலான அரசியல் முதிர்ச்சியையும் ஆற்றலையும் கொண்டிருந்தால்–விரும்புவதில்லை என்பதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்...........பெண்கள் பாராளுமன்றத்தில் வந்து சிவில் அந்தஸ்துச் சட்டம் மாற்றப் பட வேண்டுமெனக் கோருவதனை நாங்கள் விரும்புவதில்லை. ஏனெனில், பெண்கள் மீதான எமது மேலாதிக்கத்தை அது இல்லாமல் செய்துவிடும் என்று நாங்கள் கருதுகிறோம்." (ஜோர்தான் டைம்ஸ், நவம். 8, 1993).

### இடதுசாரிகள்

எவ்வாறிருந்தபோதிலும் மகளிர் தொடர்பாகவும் அதேபோல வேறுபல சமூகப் பிரச்சினகள் தொடர்பாகவும் பிற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருக்கும் இஸ்லாமியவாதிகள் மிகச்சக்தி வாய்ந்த, ஒழுங்கமைந்த ஓர் அணியினராக தொடர்ந்தும் இருந்து வருகின்றனர். இவர்களுக்கிடையே உள்ளக சச்சரவுகளும் பகைமைகளும் நிலவி வந்தபோதிலும், இடதுசாரி மற்றும் தேசியவாதக் கட்சிகளுடன் ஒப்பிட்டு நோக்கும்பொழுது, இவை ஆகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. இடதுசாரிக் கட்சிகளும் தேசியவாதக் கட்சிகளும் தேர்தல்களில் கடும் இழப்புகளைச் சந்தித்தன. இக்கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் 1989ன் தேர்தல்களில் (அப்பொழுது அக்கட்சிகள் சட்டபூர்வமான அந்தஸ்தினை பெற்றிராத போதும் கூட) அதிகளவுக்கு வாக்குகளைப் பெற்றிருந்தன. அவர்கள் 10 தொகுதிகளைப் பெற்று, அப்பொழுது ஒரு கூட்டணியை உருவாக்கிக் கொண்டனர். எனினும் குழுவாதப் பகைமைகள் மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான வேறுபட்ட எதிர் விளைவுகள் என்பவற்றின் விளைவாக இக் கூட்டணி நவம் 8ம் திகதிக்கு நீண்ட காலம் முன்னரேயே முறிந்து போயிருந்தது.

குறிப்பாக கம்யூனிஸ்டுகளும் பலஸ்தீனிய இடதுசாரிகளும் ஜோர்தானின் ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் மீண்டும் ஒரு முறை முன்னணியில் இருந்தனர். ஆனால், அரசியல் தாராளமயமாக்கல் அறிமுகப் படுத்தப்பட்டதனையடுத்து புதிய உபாயங்களையும் அமைப்பு முறைகளையும் வகுத்துக் கொள்வதில் இவர்கள் தோல்வி கண்டுள்ளனர். தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சர்வதேச மற்றும் பிராந்திய மாற்றங்களின் சூழலில் அகப்பட்டுத் தவிக்கும் இவர்கள், ஒட்டுமொத்தமான அரசியல் கலோகங்களை சமூகப் பிரச்சினைகளுடனும் அடிமட்ட ஸ்தாபன அமைப்புடனும் தொடர்புபடுத்திக் கொள்ள முடியாது போன தமது வரலாற்றுத் தோல்வியினால் இப்பொழுது பாதிக்கப்பட்டுள்ளனர். ஜோர்தான் பாராளுமன்றத்துக்கு முதன் முதலில் ஒரு பெண்மணி தெரிவு செய்யப் பட்டமையின் உடனிகழ்வாக, தீவிர இடது சாரித் தேசியவாதம் அஸ்தமனம் அடைந்தமை ஓர் எதிர் முரண் நிலையாகவே தென்படுகின்றது. ஏனெனில் இந்த அரசியல் அணியினர் 1970 களின் போது மகளிர் தமது அரசியல் விழிப்புணர்வினையும் சமூகப் பங்கேற்பினையும் மேம்படுத்திக் கொள்வதற்காக களம் அமைத்துக் கொடுத்திருந்தார்கள்.

ஜோர்தானிய மகளிர் பொது சம்மேளனத்தின் தலைவரான டாக்டர் ஹைபா அபூ–கஸ்ஸாலி, ஜோர்தானில் 12 கட்சிகளில் மகளிரின் அந்தஸ்து குறித்த ஓர் ஆய்வினை மேற்கொண்டார். இந்த 12 கட்சிகளில் இரண்டு கட்சிகள் மட்டுமே பாராளுமன்றத்துக்கு தாம் மகளிரை நியமனம் செய்வோம் எனக் கூறியிருந்தன. இந்த நிலையில், எந்தவொரு கட்சியும் பெண் வேட்பாளர்களை தேர்தலில் நிறுத்தவில்லை. ஆனால், ஒரு பெண்மணி சுயேட்சை வேட்பாளராக நின்று வெற்றி பெற்றுள்ளார்.

### பெண் வேட்பாளர்கள்

தனியொரு வாக்குத் தொடர்பான சட்டத் திருத்தத்தினையடுத்து, ஒப்புதல் பெற்றிருக்கும் ஜோர்தானின் 20 அரசியல் கட்சிகளில் 10 கட்சிகள் மட்டுமே தேர்தலில் நிற்க முன்வந்தன. மகளிரும் உற்சாகம் இழந்தவர்களாகக் காணப்பட்டார்கள் என்பது வெளிப்படையாகும். 1989 தேர்தலில் 12 பெண் வேட்பாளர்கள் இருந்தனர். ஆனால் இம்முறை 3 மகளிர் வேட்பாளர்கள் மட்டுமே களத்தில் குதித்திருந்தனர். இந்த மூவரையும் பொறுத்தவரையிலும் அடிப்படை வாதிகளின் நிர்ப்பந்தங்களை சமாளிப்பது என்பது ஒரு பெரும் பிரச்சினையாக இருந்தது. ஜோர்தானிய மகளிர் பொது சம்மேளனத்தின் ஸார்கா கிளையின் தலைவரான நஸியா புஷ்னர்க் சுமார் 20 வருட கால தனது சமூகப் பணியின் அடிப்படையில் தேர்தலில் குதித்திருந்தார். தலைநகர் அம்மானிலிருந்து 25 கிமீட்டர் வடக்கில் அமைந்திருக்கும் ஸார்கா நகரம் ஜோர்தானின் இரண்டாவது மிகப்பெரிய நகரமாக இருந்து வருவதுடன், முக்கியமான ஒரு கைத்தொழில் மையமாகவும் உள்ளது. இங்கு உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த சமூகப் பிரிவினர் செறிந்து வாழ்கின்றனர். மேலும், இராச்சியத்தின் அனைத்துப் பகுதிகளிலுமிருந்து வந்துள்ளவர்களும் மேற்குக் கரையில் பல்வேறு பகுதியிலிருந்து வந்தவர்களும் இங்கு வாழ்கின்றனர்.

குறிப்பிட்ட எந்த ஒரு இனக் குழுவினதும் தாயகமாக உரிமை கூறக்கூடிய நிலையில் ஸர்கா பிரதேசம் இருந்து வரவில்லை; அதன் காரணமாக, கடந்த காலத்தில் இப்பகுதி அரசின் புறக்கணிப்புக்கு உள்ளாகி வந்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் இஸ்லாமிய சகோதரத்துவ அணி அநேகமாக இணை அரசாங்கமொன்றினை ஒத்த வகையில் இருந்து வரக்கூடிய விரிவான சமூக சேவைகள் வலைப் பின்னல் முறையொன்றினைக் கட்டியெழுப்பி இருந்தது. சகோதரத்துவ அணி 1989 தேர்தலின் போது, அந்த

மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த தொகுதிகளில் பெருமபான்மையானவற்றை கைப் பற்றியிருந்தது. மேலும் 1990ல் இந்நகரின் மேயர் பதவியும் இந்த அணியினருக்கே கிடைத்தது. எனினும் அடிப்படைவாத அணியைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஸார்கா பிரதேசத்துக்கு ஓரளவுக்கு மட்டுமே பணியாற்றி வந்துள்ளார்கள் என்ற உண்மையின் அடிப்படையிலேயே நதியா புஷ்னர்க் தேர்தலில் நின்றார். இந் நகரத்துக்கு இன்னமும் கூட ஒரு பொது நூல் நிலையமோ இளைஞர் உடற்பயிற்சி மையமோ கிடைக்கவில்லை என்றும், மற்றும் பல வசதிகள் போதியளவில் வழங்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். எனினும், 53 வேட்பாளர்களிடையே இருந்த தனியொரு பெண் வேட்பாளரான புஷ்னர்க் மிகக் கடினமான ஒரு போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஸார்கா பகுதி கீழ் சபைக்கு இஸ்லாமிய அடிப்படை வாதிகளைத் தெரிவு செய்து அனுப்பிவைத்தது.

ஏனைய இரு மகளிர் வேட்பாளர்களான துவாஜான் பைஸால் மற்றும் ஜீனத் அல்முப்தி ஆகிய இருவரும் முற்றிலும் மாறுபட்ட ஒரு களத்தில் தேர்தலில் குதித்தனர். மிகவும் செல்வாக்கு மிக்க செல்வந்தர்களான சமூகப் பிரிவினரும் பெருமளவுக்கு கல்வியறிவு பெற்ற அரசியல் விழிப்புணர்வு கொண்ட குடிமக்களும் வாழ்ந்து வந்த லெபனானின் மூன்றாவது மாவட்டமே இவர்களுடைய களமாக இருந்தது. இங்கு நிலவி வந்த இனக்குழு மற்றும் கிளைப் பிரிவு பிரிவினைகள் தொடர்பான கடுமையான வேறுபாடுகள் காரணமாக, இந்த இரு பெண் வேட்பாளர்களும், கார்க்கேஸிய மரபுக் குடியினருக்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகுதிக்காக போட்டியிட்டனர். இவர்களுடன் இடது சாரிக் கட்சியைச் சேர்ந்த ஒருவரும் போட்டியிட்டார். இம்மூவரிலும் அல்-முப்தி அரசியல் ஸ்தாபனத்துடன் பெருமளவுக்குத் தன்னை இனங்காட்டிக் கொண்டிருந்தார். கார்க்கேஸிய சமூகத்தினரின் பெரும்பான்மையினரின் ஆதரவு இவருக்குக் கிடைக்குமென பலர் எதிர்பார்த்தனர்.

இந்த நிலையில், துவாஜான் பைஸால் அடைந்த வெற்றியின் முக்கியத்துவம் அவர் ஒரு பெண் என்ற நிலையில் மட்டும் அமையவில்லை, அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகள் என்ற இரு பிரிவுகளிலும் அவர் ஒரு முற்போக்கு வாதியாக இருந்து வருகின்றார் என்ற வகையிலும் இந்த வெற்றி முக்கியத்துவம் பெறுகின்றது. இந்தக் காரணத்தினால், இடதுசாரிக் கட்சிகள் மீதும் அதேபோல பாரம்பரிய அரசியல்வாதிகள் மீதும் அதிருப்தியுற்றிருந்த பெரும்பாலான ஆண்களினதும் பெண்களினதும் வாக்குகளை அவர் பெற்றுக் கொண்டார். மேலும், அவர் நீண்ட காலமாக மனித உரிமைகள் தொடர்பான துறையில் மிகுந்த உத்வேகத்துடன் பங்கெடுத்து வந்துள்ளார். மகளிர் பிரச்சினைகள் தொடர்பான அவருடைய அக்கறை இந்த அர்ப்பணிப்புணர்விலிருந்தே வருகின்றது. "நீங்கள் மனித உரிமைகளுக்கு ஆதரவாக குரல் கொடுக்கும் பொழுது, பொதுவாக வசதிகள் குறைந்த மக்கள் பிரிவினருக்காகவும் மகளிருக்காகவும் சிறு பிள்ளைகளுக்காகவுமே போராடுகின்றீர்கள்" என அவர் ஒரு பேட்டியின் போது கூறியிருந்தார்.

ஒரு வழக்கறிஞரின் மகளாக வளர்ந்து கொண்டிருந்த காலத்தில் நீதி மற்றும் சட்டவாக்கம் என்பன தொடர்பான கருதுகோள்கள் மீது அவர் விசேஷ அக்கறை செலுத்தி வந்தார். மேலும், சட்டங்கள் என்பவை நியாயமானவையாக இருக்க வேண்டியதில்லை என்பதனையும் அறிந்துகொண்டார். ஜோர்தானின் சட்டங்களில் முக்கியமாக நியாயமற்ற ஒரு சட்டம் என அவர் கருதுவது, அந்நாட்டின் சிவில் அந்தஸ்து தொடர்பான சட்டக்கோவையாகும். இச்சட்டக்கோவை சுகாதாரம், சமூகக் காப்புறுதி, வாரிசுரிமை, மணவிலக்கு மற்றும் தேசியத்துவம் போன்ற உரிமைகள் தொடர்பாக, ஆண்களுக்கு, பெண்களிலும் பார்க்க அதிக சலுகைகளை வழங்கி வருகின்றதென அவர் கூறுகின்றார். இந்தச் சட்டம் மகளிரை நலிவுற்றவர்களாகவும் மற்றும் ஆண் குடும்ப உறுப்பினர்களில் தங்கி இருப்பவர்களாகவும் கருதுவதனால் இது திருத்தி அமைக்கப்பட வேண்டுமென திருமதி பைஸால் ஒரு தசாப்தத்துக்கு மேலாகப் போராடி வருகின்றார். இந்தத் திருத்தங்கள் குறித்த ஒரு வரைவினை அவர் வைத்திருப்பதுடன், அதனை புதிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அவர் எதிர்பார்க்கிறார்.

மேலும், கடந்த பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட கட்சிகள் மற்றும் பத்திரிகைகள் தொடர்பான சட்டங்களும் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென அவர் வாதாடி வருகின்றார். இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக துவாஜான் பைஸால் கொண்டிருக்கும் நிலைப்பாடு இடதுசாரிகள் மற்றும் ஜனநாயகவாதிகள் போன்ற பிரிவினர் கொண்டிருக்கும் நிலைப்பாடுகளை ஒத்ததாகவே உள்ளது. இவர்கள் அனைவரும் இந்தச் சட்டங்கள் குறித்து அதிருப்தி தெரிவித்து வந்துள்ளதுடன், வாக்களிக்கும் வயது 18 ஆகக் குறைக்கப்பட வேண்டும் என்றும் வாதாடி வந்துள்ளனர்.

தன்னை ஒரு லிபரல்வாதியென வர்ணித்துக் கொள்ளும் துவாஜான் பைஸால், அதேவேளையில், குறிப்பாக ஜனநாயகமயமாக்கல் நிகழ்வுப் போக்கு தொடர்பாக தான் இடதுசாரிகளுடன் கொண்டிருக்கும் ஒருமித்த கருத்தினையும் ஏற்றுக் கொள்கிறார். தனியார் துறையிலும் சுதந்திரப் பொருளாதாரத்திலும் அவர் நம்பிக்கை வைத்துள்ளார். இவையே செயற்படக்கூடிய அமைப்புக்களாக உள்ளன என்றும் அவர் கருதுகிறார். ஆனால், இதுவரையில் வசதி படைத்த ஒரு சிலருக்கான வெகுமதி ஒன்றாக மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கும் தனியார்மயமாக்கல் முறையை அவர் எதிர்க்கின்றார்.

ஏனைய லிபரல் வேட்பாளர்கள் பலஸ்தீனிய போராட்டத்துக்காக ஒரு மேலோட்டமான ஆதரவினைத் தெரிவித்துவிட்டு, அந்த விடயத்திலிருந்து நழுவிச் சென்றுள்ளனர். ஆனால், துவாஜான் பைஸால் தான் காஸா-ஜெரிகோ பகுதியில் கண்ட பிரச்சினைகள் குறித்து மிகவும் தெளிவாக, ஆணித்தரமாக தனது கருத்துக்களை முன் வைத்துள்ளார்.

# குடியகல்வும் அது குறித்த லீ மற்றும் டொடாரோ ஆகியோரின் கோட்பாடுகளும்

அ௲. என். எம். வாஹிட்

(பொருளியல் உதவிப் போராசிரியர்,
கிழக்கு இலினோய்ஸ்
பல்கலைக் கழகம், ஐ. அமெரிக்கா)

## அறிமுகம்

கடந்த சில தசாப்த காலமாக, பொருளாதாரம் சம்பந்தப்பட்ட எழுத்தாக்கங்களில் கிராம-நகர குடியகல்வு ஒரு முக்கியமான விடயமாக கவனத்தில் எடுக்கப்பட்டு வந்துள்ளது. கிராமப் பகுதிகளிலிருந்து நகரங்களை நோக்கிய தொழிலாளர்களின் குடிப்பெயர்ச்சி விரும்பத்தக்க ஒரு நிகழ்வுப்போக்காக கருதப்பட்டு வந்துள்ளது. இதன் மூலம், மிதமிஞ்சிய கிராமிய ஊழியத்தினை பாரம்பரிய வேளாண்மைத் துறையிலிருந்து படிப் படியாக விலக்கி, நவீன கைத்தொழில் செய்திட்டங்களில், மிக மலிவான முறையில் பயன்படுத்த முடியும் என்றும், அதேவேளையில், வேளாண்மைத் துறையின் வெளியீட்டில் எத்தகைய வீழ்ச்சியும் ஏற்பட மாட்டாது என்றும் கருதப்பட்டது. அண்மையில் மேற் கொள்ளப்பட்ட பல ஆய்வுகள், வளர்முக நாடுகள் அனைத்திலும் கிராமப் பகுதிகளிலிருந்து நகரப் பகுதிகளை நோக்கிய குடிப்பெயர்ச்சி உயர் விகிதங்களில் ஏற்பட்டு வருகின்றது என்பதனை எடுத்துக் காட்டியுள்ளன. நகரங்களின் தொழில்வாய்ப்பு உருவாக்கத்தின் எண்ணிக்கையிலும் பார்க்க கூடியளவில் மக்கள் அங்கு வந்து திரண்டுள்ளார்கள் என்றும், பெருகி வரும் இந்த ஊழியர் பட்டாளத்தை உறிஞ்சிக் கொள்ளும் அளவுக்கு கைத்தொழில் துறையின் ஆற்றல் விரிவடையவில்லை என்றும் இந்த ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

இந்த வகையில், குடிப் பெயர்ச்சியானது, அபிவிருத்தி நிகழ்வுப் போக்குக்கு உதவுவதற்குப் பதிலாக ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கி வருகின்றது. இந்த ஏற்றத்தாழ்வு இரு பரிமாணங்களைக் கொண்டுள்ளது: ஒன்று, அது, சார்புரீதியாக நகர குடித்தொகை வளர்ச்சியுடன் நகர வேலைவாய்ப்பு விகிதத்தினை விகித சமமற்ற முறையில் உயர்த்தி விடுகின்றது. குடிபெயர்ந்து செல்லும் இந்த மக்கள் பிரிவினரில் நன்கு கல்வியறிவு பெற்ற இள வயதுத் தொகுதியினர் ஒரு முக்கியமான கூறாக இருந்து வருகின்றனர். இவர்கள், ஒருபுறத்தில், நகரத்தின் ஊழியர் வழங்கல் நிலையை உயர்த்திவிடும் ஒரு போக்கினைக் காட்டி வருவதுடன், மறுபுறத்தில், கிராமப் புறத்தில் இருக்க வேண்டிய புதுமைப்புனைவும் உற்சாகமும் கொண்ட ஊழியர் படையின் அளவினை குறைத்து வருகின்றார்கள். அமைப்பு ரீதியான ஏற்றத்தாழ்வின் அடுத்த அம்சம், நகர்ப் புறத்தில் தொழில் வாய்ப் பொன்றினை உருவாக்குதலுடன் சம்பந்தப்பட்ட சிரமங்களையும் செலவுகளையும் குறிக்கின்றது. ஏனெனில், இன்றைய நவீன துறை கைத்தொழில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்காக கணிசமான அளவிலான மூலவள உள்ளீடுகள் தேவைப்படுகின்றன.

அனைத்துப் பொருளாதாரக் கொள்கைகளும், கிராம அல்லது நகரப் பிரதேசங்களின் வருமான வளர்ச்சியிலும் வருமா மட்டங்களிலும் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கங்களைக் கொண்டிருப்பதனால், அக் கொள்கைகள் குடியகல்வின் பரிமாணத்தினையும் இயல்பினையும் நிர்ணயித்து வருகின்றன. அதே வேளையில், குடியகல்வுகள், ஊழியத்தின் பரிமாணம் மற்றும் செல்வழி என்பவற்றையும் குடித்தொகை வளர்ச்சியையும் அதன் இடம் சார்ந்த பரவலினையும் பாதித்து வருவதன் மூலம் பொருளாதாரக் கொள்கைகள் மீது செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. குடியகல்வுக்கான காரணங்கள், அதன் தாக்கங்கள் மற்றும் ஏனைய பொருளாதார மாறிகள் மீதான அதன் உடனிகழ்வான தாக்கங்கள் என்பவற்றை கண்டறிவதற்காக மிக விரிவான பகுப்பாய்வு மற்றும் கோட்பாட்டு ரீதியான ஓர் அமைப்பினை வடிவமைத்துக் கொள்வதற்காக இது வரையில் பல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வந்துள்ளன.

கிராம-நகர குடிப்பெ[illegible]சி தொடர்பான இரு [illegible]ரதான கோட்பாடுகளை [illegible]வனமாகப் பரிசீலனை [illegible]ய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். [illegible]ற் கென லீ என்பவரின் [illegible]மூகக் கோ[illegible]பாடும் [illegible]டாரோ என்பவரின் [illegible]ருளாதாரக் கோட்பாடும் க[illegible]திதில் எடுக்கப்ப

டுகின்றன. அதனையடுத்து, உண்மையான உலக நிலவரங்களுடன் அவை தொடர்புபட்டுள்ள விதம் குறித்து ஒரு மதிப்பீடு மேற் கொள்ளப் படுகின்றது. இக்கட்டுரை ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. பகுதி I லீ என்பாரின் கோட்பாட்டினை விளக்குகின்றது. பகுதி II டொடாரோவின் அடிப்படை மாதிரி உருவினை மீளாய்வு செய்கின்றது. பகுதி III டொடாரோ மாதிரியின் விஸ்தரிப்பொன்றான ஹரிஸ் - டொடாரோ மாதிரியின் பிரதான அம்சங்களை உள்ளடக்குகின்றது. பகுதி IV இந்த மாதிரிகளின் சாதக பாதகங்களை பரிசீலனைக்கு உட்படுத்துவதுடன், பகுதி V முடிவுரையாக அமைகின்றது.

## பாகம் I

### லீயின் சமூக அணுகுமுறை

சமூகவியலாளரான எவரெட் எஸ்.லீ என்பவர் கிராம-நகர குடியகல்வு நிகழ்வுப்போக்கினைப் பகுப்பாய்வு செய்வதற்காக மிகச் சிறப்பான, சுருக்கமான கோட்பாட்டு முறையொன்றை முன்வைத்தார். அவருடைய கோட்பாடு, பிரதானமாக ரெவன்ஸ்டீன் என்பவரின் குடிப் பெயர்ச்சி விதிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த விதிகளை பின் வருமாறு சுருக்கிக் கூற முடியும்:

(1) இரு இடங்களுக்கு இடையிலான குடியகல்வு விகிதம் இந்த இரு இடங்களுக்கும் இடையிலான தூரத்துடன் தலை கீழ் விகிதத்தில் வேறுபடுகின்றது.

(2) குடிபெயர்ந்து செல்பவர்கள், முதலில் அருகில் இருக்கும் நகரத்துக்குச் செல்கின்றனர். இறுதியில் மிகத் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் நகரங்களை நோக்கி அவர்கள் ஈர்க்கப்பட்டு விடுகின்றனர்.

(3) ஒவ்வொரு குடியகல்வுப் பாய்ச்சலும் அதற்கு ஈடு செய்யும் விதத்திலான மற்றொரு எதிர் பாய்ச்சலினை உருவாக்குகின்றது. குடியகல்வு பாய்ச்சலில் கிராம-நகர குடியகல்வு மேலாதிக்கம் செலுத்தி வந்த போதிலும், நகர-கிராம குடியகல்வு தொடர்பான ஒரு எதிர்ப் பாய்ச்சல் எப்பொழுதும் இருந்து வரும்.


(4) நகரவாசிகள், தமது கிராமப்புற சகாக்களிலும் பார்க்க குறைந்த அளவில் புலம் பெயரும் தன்மையை காட்டி வருகின்றார்கள்.

(5) குடியகல்வுப்போக்கு, காலப் போக்கில் அதிகரித்துச் செல்லும் ஓர் உள்ளார்ந்த குணாம்சத்தை தன்வகத்தே கொண்டுள்ளது. அதாவது, குடிபெயரும் வழிமுறைகள் அதிகரித்துச் செல்வதன் விளைவாகவும், தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தகம் என்பவற்றின் அபிவிருத்தியின் விளைவாகவும் இந்த அதிகரிப்பு ஏற்படுகின்றது.

(6) குடியகல்வு தீர்மானத்தை நிர்ணயம் செய்யும் காரணிகளில் பொருளாதார நோக்கம் எப்பொழுதும் மேலோங்கி நிற்கிறது.

குடியகல்வு என்பது, இருப்பிடத்தினை நிரந்தரமாக அல்லது ஓரளவுக்கு நிரந்தரமாக மாற்றி யமைத்துக் கொள்வதாகும் என லீ வரை விலக்கணப்படுத்தினார். மேலும், ஒவ்வொரு குடிப்பெயர்ச்சி நடவடிக்கையும், அது எவ்வளவு குறுகியதாக இருந்தாலும் சரி, ஒரு புறப்பாட்டு இடத்தையும் ஒரு போக்கிடத்தையும் இடையில் குறுக்கிடும் சில இடையூறுகளையும் கொண்டுள்ளது என்றும் அவர் கூறுகின்றார். குடியகல்வின் அளவினையும் பாய்ச்சல்கள் மற்றும் எதிர்பாய்ச்சல் என்பவற்றின் அபிவிருத்தியையும் குடியகல்வோரின் குணாம்சங்களையும் பகுப்பாய்வு செய்வதற்காக அவர் ஒரு கோட்பாட்டு முறையை வகுத்தார். குடிப்பெயர்ச்சி தொடர்பான தீர்மானத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை லீ நான்கு பொது வகைகளாக பிரித்தார்: (அ) தோற்றக் காரணிகள்; (ஆ)

வரைபடம் 1
குடியகல்வின் தோற்றம், சென்றடையும் இடம் தொடர்பான காரணிகளும் இடையில் குறுக்கிடும் இடையூறுகளும்




ஆதாரம் : லீ (1966) பக். 50

சென்றடையும் இடம் தொடர்பான காரணிகள்; (இ) இடையில் குறுக்கிடும் இடையூறுகள்; (ஈ) தனிப்பட்ட காரணிகள்.

இங்கு தரப்பட்டுள்ள வரை படம் 1ல், முதல் மூன்று காரணிகளும் லீயினால் எடுத்து விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆரம்ப இடமும் சென்றடையும் இடமும் சாதகமான காரணிகளை (வட்டத்தில் காணப்படும் சக புள்ளிகள்) கொண்டுள்ளன. இக் காரணிகள் குடிபெயர்வோரை கவர்ந்து இழுக்கின்றன. எதிர் மறைச்சக்திகள் (வரைபடத்தில் காணப்படும் சய புள்ளிகள்) மக்களை அதிலிருந்து துரத்துகின்றன: அல்லது தள்ளி விடுகின்றன. அதேவேளையில், நடுநிலை காரணிகள் (வரைபடத்தில் காணப்படும் பூச்சியங்கள்) பொதுவாக மக்களைக் கவர்ந்திழுப்பதுமில்லை; சம்பந்தப்பட்ட இடத்திலிருந்து துரத்தியடிப்பதுமில்லை. இந்த

காரணிகள் ஒவ்வொன்றினதும் ஆற்றல், மக்களுக்கு மக்கள், இடத்துக்கிடம், பொருளாதார மற்றும் பூகோள, சமூக அரசியல் நிலைமைகளுக்கு ஏற்றவிதத்தில் வேறுபட்டுக் காணப்படுகின்றது.

இந்த வகையில் "+", "0", "–" போன்ற புள்ளிகளை ஒவ்வொரு தனி நபரையும் பொறுத்தவரையில் வெவ்வேறு விதமாக வரைவிலக்கணப் படுத்த முடியும். உதாரணமாக, ஒரு நபரின் "+" (நல்ல கல்விப் பயிற்சி) மற்றொரு நபரின் (உதாரணமாக, அந்த அளவு கல்வி மட்டத்தை ஏற்கனவே கொண்டிருக்கும் ஒரு நபரைப் பொறுத்தவரையில்) "0" ஆக இருக்க முடியும். ஆனால், அநேகமாக அனைத்து மக்கள் பிரிவினரும் ஒரே விதத்தில் எதிர்வினை விளைவுகளைக் காட்டும் சில பொதுவான காரணங்களும் (உயர்ந்த சம்பளங்கள், அதிக தொழில் வாய்ப்புக்கள், குறைந்த விகித குற்றச் செயல்கள், நல்ல சுவாத்திய நிலமைகள் போன்றவை) இருந்து வருகின்றன. மக்கள் பொதுவாக, சென்றடையும் இடம் தொடர்பான காரணங்களிலும் பார்க்க புறப்படும் இடம் தொடர்பான காரணிகளையே நன்கு அறிந்து வைத்துள்ளனர். நிச்சயமற்ற தன்மை, அபாய ஏதுக்கள், மற்றும் எதிர்பார்ப்புக்கள் என்பன குடியகல்வு நிகழ்வுப்போக்கில் ஒரு முக்கியமான பங்கினை வகித்து வருகின்றன.

இதுவரையில் கலந்துரையாடப் பட்ட ஆரம்பிக்கும் இடம் மற்றும் சென்றடையும் இடம் என்பன தொடர்பான காரணிகள் குடிப் பெயர்ச்சி தொடர்பான தீர்மானத்தினை பெருமளவுக்கு எடுத்து விளக்கிய போதிலும், அவை போதுமானவையாக இருக்கவில்லை. அதனால், லீ "இடையில் தலையிடும் இடையூறுகள்" என்ற கோட்பாட்டினை அறிமுகம் செய்கிறார். இந்த இடையூறுகளில் சில (தூரம், போக்கு வரத்துச் செலவு போன்றவை) ஒரு சிறு அளவிலான சிரமத்தை மட்டுமே கொடுக்க முடியும். ஆனால், ஏனைய இடையூறுகளை (கட்டுப்பாட்டு இயல்பு கொண்ட குடியகல்வுச் சட்டங்கள் மற்றும் தேசிய மற்றும் இன அடிப்படையிலான கோட்டா முறை போன்றவற்றை) வெற்றி கொள்வது சிரமமாக இருக்க முடியும். இந்த இடையூறுகளும் கூட, ஒவ்வொருவரையும் பொறுத்த வரையில் வேறுபட்ட அளவுகளில் இருந்து வர முடியும். ஒருவருக்கு (அதாவது, நல்ல பண வசதி படைத்த ஒருவருக்கு போக்குவரத்துச் செலவு) ஒரு சிறிய இடையூறாக உள்ள ஒரு காரணி, மற்றொருவருக்கு (அதாவது, வறிய ஒருவர் தொடர்பான போக்கு வரத்துச் செலவு) ஒரு முக்கியமான இடையூறாக இருக்க முடியும்.

இந்த அனைத்துவிதமான காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு, லீ குடியகல்வு குறித்த சில பொதுவான எடுகோள்களை உருவாக்கினார்:

குடியகல்வின் அளவு

1. குறிப்பிட்ட ஒரு பிரதேசத்துக்குள் குடியகல்வின் அளவு, அந்தப் பிரதேசத்துக்குள் உள்ளடக்கப் பட்டுள்ள பகுதிகளின் பன்முகத் தன்மையின் அளவுடன் நேரடியாகத் தொடர்புபட்ட விதத்தில் வேறுபட்டுச் செல்கின்றது.

2. குடியகல்வின் அளவு, மக்களின் பன்முகப்பட்ட தன்மையுடன் இணைந்த வகையில் நேரடியாக வேறுபட்டுச் செல்கின்றது.

3. இடையில் தலையிடும் இடையூறுகளை எதிர் கொள்வதில் காணப்படும் சிரமங்களுடன் தலைகீழ் விகிதத்தில் குடியகல்வின் அளவு வேறுபடுகின்றது.

4. மிகக் கடுமையான கட்டுப் பாடுகள் விதிக்கப்படாதிருந்தால், குடியகல்வின் அளவும் விகிதமும் காலப்போக்கில் அதிகரித்துச் செல்லும் ஒரு போக்கினைக் காட்டும்.

பாய்ச்சலும் எதிர் பாய்ச்சலும்

5. குடியகல்வு பெருமளவுக்கு நன்கு வரையறுக்கப்பட்ட பரப்புகளுக்குள் (அதாவது, பல் வேறு வகையைச் சேர்ந்த கிராமியப் பிரதேசங்களிலிருந்து பிராந்திய நகரங்களுக்கும், அதன் பின்னர், பிரதான நகரங்களுக்கும்) இடம் பெறும் ஒரு போக்கினைக் காட்டி வருகின்றது.

6. ஒவ்வொரு பிரதான குடியகல்வு பாய்ச்சலையும் பொறுத்த வரையில், ஓர் எதிர் அலையும் உருவாகின்றது. (அதாவது, குடி பெயர்ந்து சென்றவர்களில் ஒரு பகுதியினர், தமது எதிர் பார்ப்புக்கள் உண்மையான நிலவரங்களுடன் பொருந்திச் செல்லாதிருந்தாலோ அல்லது தமது குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலை காணப்பட்டாலோ தமது பழைய இடங்களுக்கு மீண்டும் திரும்பி வருகின்றனர்.

7. தேறிய அலையின் பரிமாணம் (அதாவது அலை–எதிர் அலை) ஆரம்பிக்கும் இடத்தில் நிலவிவரும் சய காரணிகளுடன் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கும். அதாவது, சென்றடையும் இடத்தின் "தூரத்தியடிக்கும்" காரணிகளிலும் பார்க்க புறப்படும் இடத்தின் "தள்ளிவிடும்" காரணிகள் சார்பு ரீதியாக முக்கியத்துவம் பெற்றிருக்கும்.

குடிபெயர்ந்து செல்வோரின் குணாம்சங்கள்

8. குடிப்பெயர்ச்சி தெரிவு செய்யப்பட்ட ஓர் அடிப்படையிலேயே இருந்து வருகின்றது. அதாவது, குடி பெயர்ந்து செல்வோர் புறப்படும் இடத்தின் குடித்தொகையின் எழுந்தமானமான ஒரு மாதிரியாக இருக்கவில்லை.

9. சென்றடையும் இடத்தில் காணப்படும் சாதகமான காரணிகள் தொடர்பாக முக்கியமாக எதிர் விளைவு காட்டி வரும் குடியகல்வோர், ஒரு தெரிவு செய்யப்பட்ட நிலையில் இருக்கும் போக்கினைக் காட்டுகிறார்கள். அதாவது, அவர்கள் பெருமளவுக்கு

கல்வியறிவு பெற்றவர்களாகவும், தேகாரோக்கியம் கொண்டவர்களாகவும் இருந்து வருகின்றார்கள்.

10. தாம் புறபபடும் இடத்தில் காணப்படும் பாதகமான காரணிகளுக்கு முக்கியமாக எதிர் விளைவு காட்டும் குடியகல்வோர், எதிர்மறை ரீதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஒரு போக்கினைக் காட்டுகின்றார்கள். உதாரணமாக, 19ஆம் நூற்றாண்டின் போதும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வட அமெரிக்காவுக்குப் புலம் பெயர்ந்து சென்ற பெரும்பாலான ஐரோப்பியர்கள், தொழில் தேர்ச்சி எதுவுமற்ற கிராமியக் குடியானவர்களாக இருந்தனர். மேலும், அவர்கள் பொருளாதாரக் கஷ்டங்கள், அரசியல் அல்லது மத அடிப்படையிலான அடக்கு முறை என்பன காரணமாக தமது நிலங்களிலிருந்து துரத்தியடிக்கப் பட்டவர்களாகவும் இருந்தனர்.

11. இடையில் தலையிடும் மாறிகளின் கஷ்டத்துடன் இணைந்த வகையில் சாதகமான தெரிவின் அளவு அதிகரிக்கின்றது. அதாவது, அதிகளவுக்குக் கல்வியறிவு பெற்றவர்கள் பொருத்தமான தொழில் வாய்ப்புக்களைக் கண்டறிவதற்காக நெடுந்தூரம் பிரயாணம் செய்வதற்குத் தயாராக உள்ளனர்.

பாகம்II

## டொடாரோவின் பொருளாதார கோட்பாடு

குடியகல்வு என்பது பல்வேறு பொருளாதார மற்றும் பொருளாதாரம் அல்லாத காரணிகளினால் நிர்ணயிக்கப்பட்டு வரும் ஒரு தெரிவினைக் கொண்ட நிகழ்வுப் போக்காக இருந்து வருகின்றது. அதே வேளையில், குடியகல்வோரின் பொருளாதார நிலைமைகளையும் சமூக அந்தஸ்தினையும் நிர்ணயம் செய்து வரும் மிக முக்கியமான காரணியாகவும் அது உள்ளது. குடியகல்வு நிகழ்வுப்போக்கில், பொருளாதாரம் மற்றும் பொருளாதாரம் அல்லாத காரணிகளின் சார்பு ரீதியான ஆற்றல் நாடுகளுக்கிடையிலும், அதே போல, வரையறுக்கப்பட்ட பூகோள பிராந்தியங்கள் மற்றும் குடித்தொகைகள் என்பவற்றுக் கிடையிலும் வேறுபட்டுச் செல்கின்றது. குடியகல்வு தொடர்பான பெரும் பாலான ஆரம்ப கால ஆராய்ச்சிகள், பொருளாதார மாறிகளின் முக்கியத்துவத்திற்கு வெறுமனே அங்கீகாரத்தினை மட்டுமே அளித்து வந்த அதேவேளையில், சமூக, பௌதீக மற்றும் உளவியல் காரணிகளை பெருமளவுக்கு வலியுறுத்தி வந்தன. உதாரணமாக, பின்வரும் விதத்தில் காரணிகள் மற்றும் செல்வாக்குகள் என்பன மீது அழுத்தம் காட்டப்பட்டிருந்தது:

1. கிராமிய சமூக அமைப்பில் காணப்படும் பாரம்பரிய இடையூறுகளிலிருந்து தப்பிச் செல்வதற்கான குடியகல்வோரின் விருப்பினையும் உள்ளடக்கிய சமூக காரணிகள்.

2. வெள்ளப்பெருக்குகள், கடும் வறட்சிகள் மற்றும் பஞ்சம் போன்ற இயற்கை அழிவுகளைப் போன்ற காலநிலை தொடர்பான காரணிகளை உள்ளடக்கிய பௌதீகக் காரணிகள். இத்தகைய சூழ்நிலைகளில், மக்கள் மாற்று வாழிடப் பகுதிகளைக் கண்டறிவதற்கு நிர்ப்பந்திக்கப் படுகின்றார்கள்.

3. மரண விகிதங்களில் ஏற்படும் வீழ்ச்சி, அதனுடன் இணைந்த வகையில் கிராமியக் குடித் தொகையில் ஏற்படும் உயர்ந்த விகிதங்களிலான வளர்ச்சி என்பவற்றை உள்ளடக்கிய குடிசனவியல் காரணிகள் கிராமியக் குடித்தொகையடர்த்தி மிகத் துரிதமாக அதிகரித்து வருவதற்கு வழிகோலுகின்றன.

4. புதிதாக குடிபெயர்ந்து வருபவர்களுக்கு ஆரம்ப நிதிப் பாதுகாப்பினைப் பெற்றுக் கொடுக்கும் நகர விஸ்தரிக்கப் பட்ட குடும்ப உறவு முறை மற்றும் நகரின் பிரகாசமான ஒளி விளக்குகளின் கவர்ச்சி ஆகிய கலாச்சாரக் காரணிகள்.

5. நன்கு விருத்தியடைந்த நிலையிலுள்ள போக்குவரத்து, நகர் சார்ந்த கல்வி முறைகள், வானொலி, தொலைக்காட்சி, சினிமா போன்ற சாதனங்களின் நவீனமயமாக்கும் தாக்கம் போன்ற தொடர்பாடல் காரணிகள் அனைத்தும் வீ யின் இடையில் வரும் இடையூறுகளின் தாக்கத்தை பெருமளவுக்கு குறைத்து விடுகின்றன.

குடியகல்வு பகுப்பாய்வு தொடர்பான சமூக அணுகுமுறையில் பொருளாதாரமல்லாத காரணிகள் கவனத்தில் எடுக்கப்பட்டு வந்த போதிலும், குடியகல்வு நிகழ்வுப் போக்கினை பெருமளவுக்கு பொருளியல் காரணிகளுடன் சம்பந்தப் படுத்தி விளக்க முடியும் என்பது குறித்து பொருளியலாளர்களிடையே அநேகமாக ஒரு கருத்தொற்றுமை நிலவி வருகின்றது. தேங்கிக் கிடக்கும் கிராமியப் பொருளாதாரத்தின் தள்ளி விரட்டும் இயல்பு மற்றும் சார்பு ரீதியில் உயர்ந்த அளவில் காணப்படும் நகர்ப் புறத்தின் சம்பளங்கள் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் என்பவற்றின் கவர்ந்திழுக்கும் தன்மை மட்டுமன்றி உயர் அளவிலான நகர வேலையில்லாத் திண்டாட்டத்தின் திரும்ப தள்ளி விடக்கூடிய தாக்கத்தினையும் இந்தப் பொருளாதாரக் காரணிகள் உள்ளடக்கும்.

மைக்கல் டொடாரோ பொருளாதாரக் காரணிகளுக்கு மேலும் கூடிய முக்கியத்துவத்தினை அளிக்கும் வகையில் ஒரு நவீன மாதிரி உருவினை அபிவிருத்தி செய்தார். நகர்ப்புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டமும் கீழ் உழைப்பும் உயர் மட்டங்களில் அதிகரித்துக் கொண்டு செல்வதற்கு மத்தியிலும் கூட கிராமிய குடித் தொகையினர் நகர்ப்புறங்களை நோக்கி புலம் பெயர்ந்து செல்வற்கான காரணத்தை விளக்குவதற்கு இந்த மாதிரி முயல்கின்றது.

குடியகல்வு என்பது, தனி நபர் ஒருவரின் விவேகபூர்வமான பொருளாதார கணக்கீடுகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளது என்ற எடுகோளுடனேயே டொடாரோவின் மாதிரி ஆரம்பமாகின்றது. புலம் பெயர்ந்து செல்வதற்கான தீர்மானம் எதிர் பார்க்கப்படும் நகர-கிராம வருமான வேறுபாடுகளை (உண்மையில் நிலவும் வேறு பாடுகளல்ல) அடிப்படையாகக் கொண்டே எடுக்கப்படுகின்றது என இந்த மாதிரி ஏற்றுக் கொள்கின்றது. விவேகபூர்வமாக முடிவுகளை எடுக்கக் கூடியவர்கள் என்ற முறையில் குடி பெயர்ந்து செல்வோர், தமக்கு, கிராமியத் துறைக்கும் நகரத் துறைக்குமிடையே கிடைக்கக் கூடியதாக இருக்கும் பல்வேறு ஊழியச் சந்தை வாய்ப்புக்களையும் கவனத்தில் எடுக்கின்றார்கள். குடிபெயர்ந்து செல்வதன் மூலம் எதிர் பார்க்கப்படும் ஆதாயங்களை உச்ச மட்டத்தில் பெற்றுத் தரக்கூடிய துறையை அவர்கள் தெரிவு செய்து கொள்கின்றார்கள். எதிர்பார்க்கப்படும் ஆதாயங்கள் பின்வருவனவற்றால கணிக்கப்படுகின்றன:

(அ) கிராமிய மற்றும் நகர தொழில்வாய்ப்புக்களின் மெய் வருமானங்களில் காணப்படும் வித்தியாசம்; மற்றும்,

(ஆ) புதிதாக குடிபெயர்ந்து செல்லும் ஒருவர் நகர்ப்பகுதியில் தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளக் கூடிய சாத்தியப்பாடு.

டொடாரோ (இங்கு வரைபடம் 2ல் தரப்பட்டுள்ள படத்தின் உதவியுடன்) குடியகல்வு தீர்மானத்தின் மீது தாக்கத்தினை எடுத்து வரும் பன்முகப்படுத்தப்பட்ட காரணிகளை விளக்குகின்றார். இங்கு பொருளாதாரக் காரணிகளும் அதே போல பொருளாதாரம் அல்லாத காரணிகளும் உள்ளடக்கப் பட்டுள்ளன. எனினும், பொருளாதாரக் காரணிகள் முதன்மை பெறுகின்றன.

இந்த மாதிரியின் சிந்தனை நிகழ்வுப்போக்கு, ஒரு வழமையான உதாரணத்தின் மூலம் டொடாரோவினால் எடுத்து விளக்கப் படுகின்றது:

"தேர்ச்சியற்ற ஓரளவுக்குத் தேர்ச்சி பெற்றுள்ள சராசரி கிராமப்புற தொழிலாளி ஒருவனுக்கு ஒரு பண்ணைக் கூலியாக (அல்லது தனது சொந்த நிலத்தில் வேலை செய்யும்) கூலியாக வருடாந்த சராசரி மெய் வருமானமாக 50 அலகுகள் பெற்று பண்ணைத் தொழிலாளியாக வேலை செய்வதற்கு அல்லது கல்விப் பின்னணியைக் கொண்டுள்ள ஒரு தொழிலாளி ஆண்டொன்றுக்கு 100 அலகுகளை மெய் வருமானமாக பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு வேலை வாய்ப்புக்கிடையே ஒரு தெரிவு வழங்கப்படுகின்றது என வைத்துக் கொள்வோம். குடி பெயரும் தீர்மானத்தின் பிரதான நிர்ணய காரணியாக வருமான வேறுபாடே இருந்து வருகின்றது என்பதனை வலியுறுத்தி வரும் குடியகல்வு தொடர்பான இந்தப் பாரம்பரிய பொருளாதார மாதிரிகள், இந்த நிலைமையில், ஒரு தெளிவான தெரிவினை சுட்டிக்காட்டும். இந்தத் தொழிலாளி அதிக வேதனம் பெற்றுத் தரும் நகர்ப்புற தொழில் வாய்ப்பிலன தெரிவு செய்து கொள்ள வேண்டும்".

எவ்வாறிருந்த போதிலும், இந்தப் பொருள் விளக்கம் வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகள் தொடர்பாகவே ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டது. அதாவது, நகர்ப்புறங்களில் முழு அளவிலான வேலை வாய்ப்பு அல்லது ஓரளவுக்கு முழு அளவிலான வேலைவாய்ப்பு நிலவி வரும் என்ற எடுகோளின் அடிப்படையிலேயே இது முன்வைக்கப்பட்டிருந்தது. முழு அளவில் வேலை வாய்ப்புக் காணப்படும் ஒரு சூழ்நிலையில், குடி பெயர்ந்து செல்வதற்கான தீர்மானம் உயர்ந்த வேதனம் தரும் தொழிலை அது எங்கு கிடைத்தாலும் பெற்றுக் கொள்வதன் அடிப்படையிலேயே எடுக்கப்படுகின்றது என வலியுறுத்திக் கூறமுடியும். இத்தகைய குடியகல்வு கேள்வி மற்றும் வழங்கல் என்பன தொடர்பான புவியியல் ரீதியான மாற்றங்களுக் கூடாக கூலி விகிதங்களில் நிலவிவரும் வித்தியாசங்களை குறைந்து விடுவதற்கு வழிகோலும் என எளிமையான பொருளாதாரக் கோட்பாடு கூற முடியும்.

துரதிர்ஷ்டவசமாக, பெரும் பாலான வளர்முக நாடுகளைப் பொறுத்தவரையில், இந்தப் பொருள் விளக்கம் யதார்த்தபூர்வமானதாக இருந்து வரவில்லை. ஏனெனில், இந்த வளர்முக நாடுகளில் நகர்ப் புறங்களில் மிகை ஊழியம் குறித்த பிரச்சினை தொடர்ச்சியாக நிலவி வருகின்றது. இந்த நிலையில், புலம் பெயர்ந்து வருபவர்களில் பெரும்பாலானவர்கள் உடனடியாக நல்ல சம்பளத்துடன் கூடிய தொழில்களை பெற்றுக் கொள்ள முடியாதிருக்கும். இவர்களில் பெரும்பான்மையினர், ஒன்றில் வேலையற்றவர்களாக இருக்க வேண்டும்; அல்லது நகர பாரம்பரிய துறையில் தற்காலிக வேலைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். டொடாரோவின் அடிப்படை மாதிரியில் மாற்றங்களை எடுத்துவர வேண்டிய அவசியத்தை இது எடுத்துக் காட்டுகிறது.

### பாகம் 111


### டொடாரோவின் அடிப்படை மாதிரி உருவை விஸ்தரித்தல்

அடிப்படை டொடாரோ மாதிரி, அதன் விளக்கத் திறனை விருத்தி செய்யும் பொருட்டு ஹரிஸ்-டொடாரோ மாதிரியின் மூலம் விஸ்தரித்து, நவீனமயமாக் கப்பட்டது. இதன் மூலம் இந்த மாதிரிக்குச் சில யதார்த்த ரீதியான கூறுகள் அறிமுகப்படுத் தப்பட்டன. எனினும், இன்று வரையில் இந்த மாதிரியின் அடிப்படைக் குணாம்சங்கள் பெருமளவுக்கு மாற்றமடையாது நிலைத்து வருகின்றன. மேலும், அவை சமகால குடியகல்வு ஆய்வுகளுக்கான ஒரு சட்டகத்தி னையும் வழங்கி வருகின்றன.

டொடாரோவும் அவருடைய சகாவான ஜோன் ஹரிஸ் என்பவரும் இணைந்து, குடியகல்வு மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம் என்பன தொடர்பான இரு-துறை (கிராம-நகர) உள்ளக வர்த்தக மாதிரியொன்றை உருவாக்குவதற்காக டொடாரோவின் ஆரம்ப மாதிரி உருவினை விஸ்தரித்தனர். இதன் மூலம் கிராமிய

வரைபடம் 2

குடியகல்வு தீர்மானத்தை பகுப்பாய்வு செய்வதற்கான கட்டமைப்பு




ஆதாரம் : பயிரீ (1974) பக். 553

வருமானங்கள், நகர – கிராமிய வெளியீடு மற்றும் ஒட்டுமொத்தமான சமூக சேமநலன் என்பவற்றின் மீதான குடியகல்வின் தாக்கம் குறித்து கவனம் செலுத்துவதற்குச் சாத்தியமாயிற்று. இரு துறைகளும் – அதாவது கிராமியத் துறையும் நகரத்துறையும் – பகுப்பாய்வு நோக்கங்களுக்காக உற்பத்தி மற்றும் வருமானங்கள் என்பவற்றின் கண்ணோட்டத்தில் பிரித்து நோக்கப் படுகின்றன. கிராமியத்துறை வேளாண்மைத்துறைப் பொருட்களின் உற்பத்தியில்– குறிப்பாக உணவுப் பண்டங்களின் உற்பத்தியில் – சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ள அதேவேளையில், நகரத்துறை தயாரிக்கப்பட்ட முடிவுப் பொருட்களின் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியினைப் பெற்றுக் கொண்டுள்ளது. வேளாண்மைத் துறையின் உற்பத்திப் பொருட்களின் ஒரு பகுதி, முடிவுப் பொருட்களுடன் பரிமாறிக் கொள்ளப்படும் விதத்தில் நகர்ப்புறங்களுக்கு வியாபாரம் செய்யப்படுகின்றது. கிராமியத் துறைக்கு, ஒன்றில், வேளாண்மைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக கிடைக்கக் கூடியதாக இருக்கும் மொத்த ஊழியத்தையும் பயன்படுத்திக் கொள்வதற்கும் அல்லது உணவுப் பொருள் உற்பத்திக்கு, இந்த ஊழியத்தின் ஒரு பகுதியை மட்டும் பயன்படுத்திக் கொண்டு, மிகுதி ஊழியத்தை நகர்ப்புறங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்குமிடையே ஒரு தெரிவு கிடைக்கின்றது. எனவே, சராசரி குடியகல்வோர் கிராமியத் துறையுடனான தமது பிணைப்புக்களை தொடர்ந்தும் வைத்துக் கொண்டுள்ளனர் என கருதப் படுகின்றது. அவர்கள் சம்பாதிக்கும் வருமானம், பகுப்பாய்வு நோக்கங்களுக்காக, கிராமியத் துறைக்குப் போய் சேரும் வருமானம் என கவனத்தில் எடுக்கப்படுகின்றது. துறைகளுக்கிடையிலான பிணைப்புக்கள் குறித்த இந்த எடுகோள்கள், ஹரிஸ்–டொடாரோ மாதிரி உள்ளகக் குடியகல்வின் சேமநலன் மற்றும் பகிர்வு பின் விளைவுகள் என்பவற்றை மதிப்பிடுவதற்கு உதவிய போதிலும், நகரில் பெருகி வரும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு மத்தியில் தொடர்ந்தும் புலம் பெயர்ந்து செல்லும் தனிப்பட்டவர்களின் விவேகத்தினை எடுத்து விளக்குவதற்கு அவை அவசியமாக இருக்கவில்லை.

எனவே, ஹரிஸ்–டொடாரோ முழு நிறைவான மாதிரி பாரம்பரிய இரு–துறை புதிய சாஸ்திரிய வர்த்தக

மாதிரியின் ஒரு விஸ்தரிப்பாக மட்டுமே இருந்து வருகின்றது. எனவே, கிராம மற்றும் நகரத் துறைகள் தொடர்பான விவசாய மற்றும் பொருள் உற்பத்தி தொழில் நுட்பங்கள் தொடர்பான பல்வேறு மாறுபடத்தக்க விகிதாசாரங்கள் காணப்படுகின்றன. எவ்வாறிருந்தபோதிலும், குடியகல்வு சமன்பாடே இந்த மாதிரியின் தனித்துவமான, பெருமளவுக்குப் புதுமை நோக்குக் கொண்ட சிறப்பம்சமாக இருந்து வருகின்றது.

பாகம் IV

## கோட்பாடுகளின் குறைநிறைகள்

லீயின் கோட்பாடு பெருமளவுக்கு எளிமை மற்றும் நேரடியான அணுகு முறை என்பவற்றைக் கொண்டுள்ளது. அதன் பெரும்பாலான எடுகோள்கள் செல்லுபடியாகும் தன்மையைக் கொண்டனவாக இருந்து வருவதுடன், அதன் ஆற்றலுக்கும் இது ஒரு காரணமாக இருந்து வருகின்றது. எனினும், இக்கோட்பாடு பெருமளவுக்கு ஒரு பொதுத் தன்மையைக் கொண்டிருப்பதனாலும், அதன் பல எடுகோள்கள் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதனாலும் வளர்முக நாடுகளில் கொள்கை பகுப் பாய்வுகளுக்கான அதன் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்து வருகின்றது. மிக முக்கியமாக, அதன் எடுகோள்களின் செல்லுபடியாகும் தன்மை, குடியகல்வு ஆரம்பிக்கும் இடங்களிலும் இறுதியில் சென்றடையும் இடங்களிலும் நிலவிவரும் சக காரணிகள் மற்றும் சயகாரணிகள் என்பவற்றின் முக்கியத்துவத்தினை வெவ்வேறு மக்கள் குழுக்கள், வர்க்கத்தினர் என்போர் தொடர்பாக அளவீடு செய்வதற்கான ஒரு வாய்ப்பினை வழங்கவில்லை. மேலும், இந்த மாதிரியில் எடுத்துக் காட்டப்படுள்ள இடையில் தலையிடும் இடையூறுகள் என்ற அம்சம், இந்த இடையூறுகளில் முக்கியமானவை எவை, முக்கியத்துவமற்றவை எவை என்பதனை நாம் தெரிந்து கொள்வதற்கும் எமக்கு உதவவில்லை. மேலும், சக காரணிகள் மற்றும் சய காரணிகள் என்பவற்றுக்கிடையிலான வித்தியாசங்கள் குறித்த உள்நோக் கொன்றினையும் இது தரவில்லை. சுருக்கமாக சொல்வதானால், மிகவும் தீவிரமான கோட்பாட்டுரீதியான சட்டக மொன்றுக்குள் தங்கியிருக்கும் மாறிகள் மற்றும் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் மாறிகள் மற்றும் என்பவற் றுக்கிடையிலான இடைத் தொடர்பினை லீயின் கோட்பாடு குறித்துரைக்க வில்லை. மேலும், பெரும்பாலான பொருளாதாரம் அல்லாத சமூக விஞ்ஞானக் குடியகல்வு மாதிரிகள், வளர்முக நாடுகளைச் சேர்ந்த தீர்மானங்களை எடுப்போருக்கு ஓரளவுக்கு நடைமுறைக் கொள்கை வழிகாட்டு நெறிகளை வழங்கி வருகின்றன.

குடியகல்வு தொடர்பான பிரச்சினை குறித்த பொருளியலாளர்களின் சூத்திரங்களில் குறித்துரைக்கப்பட்ட கொள்கை சிபார்சுகளைக் கண்டறிந்து கொள்ள முடியும். வளர்முக நாடுகளின் குடியகல்வு தொடர்பான பொருளாதார எழுத்தாக்கங்கள் ஒரு சமீப காலத்திய காட்சியுண்மையாக இருந்து வந்த போதிலும், அது மிக முக்கியமான கோட்பாட்டு அடிப்படைகளைக் கொண்ட எழுத்தாக்கங்களாக இருந்து வருகின்றது.

டொடாரோவின் அடிப்படை மாதிரியும் அதனையடுத்து ஹரிஸ்-டொடாரோ மாதிரியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களும் குடியகல்வு நிகழ்வுப்போக்கின் பகிர்வு மற்றும் சேமநல அம்சங்களை உள்ளடக்கும் விசயத்தில் அனைத்தும் அடங்கிய ஒரு விரிவான முறையைக் கொண்டனவாக இருந்து வருகின்றன. மேலும், குடியகல்வு தீர்மானத்தை நிர்ணயம் செய்வதில் (கிராமிய மற்றும் நகரத் துறைகளுக்கிடையே) எதிர் பார்க்கப்படும் வருமான வேறு பாட்டினையும் அது உள்ளடக்கி இருக்கின்றது. அந்த வகையில், லீயின் கோட்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது. ஹரிஸ்-டொடாரோ மாதிரி குடியகல்வோர் ஒன்றில் சாதாரண வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றனர்; அல்லது குடியகல் வினையடுத்து அவர்களுக்கு எந்த வருமானமும் கிடைப்பதில்லை என்ற நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளது.

எவ்வாறிருந்தபோதிலும், டொடாரோ ஹரிஸ்-டொடாரோ மாதிரியில் குறைபாடுகள் இல்லாமல் இல்லை. அது மொத்த ஊழியர் விகிதத்தை கவனத்தில் எடுக்கவில்லை. அத்துடன், நகர்ப்புறங்களில் தொழில் களில் ஈடுபட்டிருப்போர் விஸ்தரிக் கப்பட்ட குடும்ப முறைக்கு ஊடாக தொழில் இல்லாமல் இருப்பவர்களுடன் தமது வருமானங்களைப் பகிர்ந்து கொண்டு வாழ்வதனையும் அது கவனத்தில் எடுக்கவில்லை. ஜோன்ஸன் என்பவர் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

பகவதி மற்றும் ஸ்ரீநிவாசன் என்போர் ஹரிஸ்-டொடாரோவின் மாதிரியில் காணப்படும் கோட்பாட்டு ரீதியான சில பலவீனங்களை இனங்கண்டு கண்டுள்ளனர். மேலும், அதன் பிரதான கொள்கை சிபார்சுகள் சிலவற்றை அவர்கள் திருத்தி அமைத்துள்ளனர். குறிப்பாக, கிராம மற்றும் நகர்ப்புறங்களில் காணப்படும் பல்வேறு கூலி மற்றும் உற்பத்தி மானியப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களின் குடியகல்வு மற்றும் வேலைவாய்ப்புத் தாக்கத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் அவர்கள் சில திருத்தங்களை முன் வைத்துள்ளனர். குறிப்பாக, நகர்ப்புற கூலி மானியம் குடியகல்வுக் கட்டுப்பாட்டுடன் இணைந்த வகையில் மேற்கொள்ளப்படுவது, உற்பத்தித் திறனை எடுத்து வருவதற்கு அவசியமாகும் என்ற ஹரிஸ்-டொடாரோவின் மாதிரியின் முடிவு சரியானதல்ல என்பதனை அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். ஏனெனில், உள்ளக குடியகல்வு குறித்த பௌதீக கட்டுப்பாடுகள் இல்லாமலேயே பல்வேறு வகையான வரி அல்லது மானியத் திட்டங்கள் மூலம் இதற்கு ஒரு தீர்வினை எடுத்துவர முடியுமென அவர்கள் கருதுகின்றனர். கிராம-நகரத் துறைகளுக்கு இடையிலான மூலதன அசைவினை அறிமுகப்படுத்துவதன் மூலம் கோர்டன் மற்றும் பின்லே என்பவர்கள் ஹரிஸ்-டொடாரோ மாதிரியை மேலும் விஸ்தரித்தனர்.

பாகம் V.

## முடிவுரை

குடியகல்வு தொடர்பான லீயின் கோட்பாடும் டொடாரோ/

ஹரிஸ்-டொடாரோ மாதிரிகளும் தமக்கே உரிய குறைநிறைகளைக் கொண்டுள்ளன: லீயின் கோட்பாடு குடியகல்வுத் தீர்மானத்துடன் சம்பந்தப்பட்டுள்ள பொருளாதாரம் அல்லாத காரணிகளை அதிகளவுக்கு வலியுறுத்துகின்றது. அந்த வகையில், இந்த மாதிரியின் பிரயோக முக்கியத்துவமும் கொள்கையுடனான தொடர்பும் சிறிதளவிலேயே காணப்படுகின்றது. அதே வேளையில், டொடாரோ/ ஹரிஸ்-டொடாரோ மாதிரி சார்புரீதியில் அனுபவரீதியாகப் பரீட்சித்துப் பார்க்கக் கூடிய ஆற்றலைக் கொண்டதாக இருந்து வருகின்றது. மேலும், அது கொள்கை சிபார்சுகள் மற்றும் எதிர்வு கூறல்கள் என்பவற்றை தன்னகத்தே கொண்டிருப்பதனால், வளர்முக நாடுகளைப் பொறுத்தவரையில் ஒரு முக்கியத்துவத்தையும் கொண்டுள்ளது. எனினும், இதனையும் கூட ஒரு முழு நிறைவான மாதிரி என்று கூறமுடியாது. ஆனால், லீயின் மாதிரியிலும் பார்க்க அது பூரணத்துவம் கொண்டதாக இருந்து வருகின்றது. இந்தக் கோட்பாடுகளைப் பயன்படுத்தும் பொழுது இவற்றின் சரியான பின்புலன்களையும் கொண்ட நிலையிலேயே நாம் அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

( 4 பக்கத் தொடர்ச்சி)

அவர்களுடைய முயற்சி முழு அளவில் வெற்றியடையாத போதிலும், இந்த முயற்சி பாராட்டத்தக்கதொன்றாகும். கம்யூனிஸ்டு கட்சியின் 8ஆவது மத்திய குழுக் கூட்டத்தில் 1959 செப்டம்பரில் ஒரு முக்கியமான முடிவு முன்வைக்கப்பட்டது. திட்டமிட்ட உற்பத்தி மேலாதிக்கம் செலுத்தி வரும் சுதந்திரச் சந்தைப் பொருளாதாரமொன்றாகவே எமது பொருளாதாரம் இருந்து வருகின்றது.

இந்த முடிவிலிருந்தே, அதனையடுத்து, திட்டமிட்ட பொருளாதாரமொன்றினால் வழிநடாத்தப்படும் சந்தைப் பொருளாதார முறையொன்று உருவாகியது. மாவோ சேதுங் 1959 டிசம்பரில் சீன ஜனநாயக தேசிய அபிவிருத்தி கவுன்சில் மற்றும் வர்த்தக தொழில் முனைவோர் கவுன்சில் என்பவற்றின் தலைவர்களுக்கு மத்தியில் உரை நிகழ்த்தும் போது பின்வருமாறு குறிப்பிட்டார்: "அரச துறை தொழில் முயற்சிகளை ஸ்தாபிக்க முடியும்; தனியார் துறை தொழில் முயற்சிகளையும் ஸ்தாபிக்க முடியும்; நாங்கள் முதலாளித்துவத்தை ஒழித்துவிட்டு, மீண்டும் முதலாளித்துவத்தை கட்டியெழுப்புவோம்". மறைமுகமாக இயங்கும் கைத்தொழில்களும் கடைகளும் சட்டபூர்வமானவையாக ஆக்கப்பட முடியும் என்றும், அவை தொழிலாளர்களை வேலையில் அமர்த்திக் கொள்ள முடியும் என்றும், குடும்பத் தொழில் முயற்சிகள் உருவாக்கப்பட்டு அவற்றில் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட முடியும் என்றும் அவர் கூறினார். இதனை அவர், புதிய பொருளாதார கொள்கை என விளக்கினார். ஆனால், அதனையடுத்து, மாவோவின் இந்தக் கருத்துக்கள் செயற்படுத்தப்படவில்லை. இதன் விளைவாக, பொதுமக்கள் உரித்து தொடர்பான கருதுகோள் முதன்மை வகிக்கத் தொடங்கியது.

பண்டப் பொளாதாரமும் பணமும் ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை சிலர் 1958 நவம்பர் கூட்டத்தில் முன்வைத்தபோது, மாவோ மீண்டும் பண்டங்களினதும் பணத்தினதும் தேவையை வலியுறுத்தினார். பண்ட உற்பத்தி, வரலாற்றில் நீண்ட காலமாக இடம் பெற்று வந்துள்ளது என்பதனை அவர் சுட்டிக் காட்டினார்; இப்பொழுது நாங்கள் சோஷலிஸ பண்ட உற்பத்தியை அதற்கு சேர்க்கிறோம்; பண்ட உற்பத்தியை அதிகரிப்பதற்கு நாங்கள் திட்டமிட வேண்டும். 1960களின் தொடக்கத்தில், மாவோவும் ஏனைய த்லைவர்களும் சீனாவில் நம்பிக்கைப் பொறுப்பு முறை பரீட்சார்த்தமாக செயற்படுத்தப்பட வேண்டுமென கூறி வந்தனர். அரச நிர்வாக முறைகள் காரணமாக தொழில் முயற்சிகளின் முகாமையில் நிலவிவந்த பல்வறு பலவீனங்களையும் கவனத்தில் எடுத்தே அவர்கள் இவ்வாறு கூறினர். "முறைகள் குறித்த பிரச்சினை ஒரு முக்கியமான விடயமாகும். முதலாளித்துவ முகாமை அனுபவங்களிலிருந்து நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். முதலாளித்துவ ஏகபோக தொழில் முயற்சிகளின் அனுபவத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும்." என்று லி சியாயோ ஷி குறிப்பிட்டார்.

1950 களின் நடுப்பகுதியிலிருந்து 1960 களின் நடுப்பகுதி வரையிலான காலகட்டத்தின்போது, மாவோ சேதுங்கும் சீன கம்யூனிஸ்டு கட்சியின் ஏனைய முக்கிய தலைவர்களும் சோஷலிஸத்தின் நிர்மாணம் குறித்த ஒரு வகையான புதிய சிந்தனையொன்றில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதனை இது காட்டுகிறது. இந்தப் புதிய சிந்தனை, சோவியத் அனுபவத்தின் மறுபதிப்பாக இருக்கவில்லை. அவர்கள் சீன அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, சிந்திப்பதற்கு முயன்றார்கள். அடுத்து வந்த காலகட்டத்தில், இப்பொழுது நன்கு அறியப்பட்டிருக்கும் காரணங்களால் இந்தக் கருத்துக்களை செயற்படுத்த முடியாது போய்விட்டது. தேசிய மட்டத்தில் பாரிய தவறுகள் இடம் பெற்றன.

ஆனால், விஞ்ஞானிகள் என்ற முறையிலும் கோட்பாட்டுவாதிகள் என்ற முறையிலும் மார்க்சிச அணுகுமுறையையும் முறைமியலையும் நாங்கள் பின்பற்றி வர வேண்டும். வறட்டுத் தத்துவத்தை நாங்கள் எதிர்க்க வேண்டும்.

மாவோ சேதுங்கினாலும் சீன கம்யூனிஸ்டு கட்சியினாலும் 1949-66 காலப்பிரிவின் போது- குறிப்பாக 1956-66 காலப்பிரிவின் போது- நிறைவு செய்யப்பட்ட பணிகளை சரியாக மதிப்பிடுவதற்கு, மார்க்சிய தர்க்கவியலையும் பொருள் முதல்வாத முறையையும் பின்பற்றுவது முக்கியமாகும்.

இங்கு வலியுறுத்தப்பட வேண்டிய மற்றொரு விடயமும் உள்ளது. கலாச்சாரப் புரட்சிக்கு முற்பட்ட காலத்தில் சீன கம்யூனிஸ்டு கட்சியும் மாவோவும் சோவியத் யூனியனிலிருந்து வந்த நிர்ப்பந்தங்களை வெற்றிகரமாக எதிர்த்து நிற்கக் கூடியதாக இருந்தது. அரசியல், பொருளாதாரம் மற்றும் வெளி உறவுகள் போன்ற விடயங்களில் அவர்கள் சோவியத் யூனியனின் கட்டாம்பிள்ளைத்தனத்துக்கு சரணடைந்துவிடவில்லை. எனவே, அதனால், சோவியத் யூனியனின் மாபெரும் துணைக் கோளாகவும், தங்கியிருக்கும் அரசாகவும் மாறிவிடக் கூடிய வரலாற்று ரீதியான தலைவிதியிலிருந்து சீனா தப்பித்துக் கொண்டது.

# இலங்கையின் மனித மூலவளங்களின் அபிவிருத்தி ஒரு பேரண்டக் கண்ணோட்டம்

சுதந்த ரணசிங்க
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
முகாமையியல் பட்டப்பின்படிப்பு நிறுவனம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)

புதிதாக கைத்தொழில்மயமாக்கப்பட்ட நாடு என்ற நிலையினை அடைவதற்காக முயற்சி எடுத்துவருகின்ற வளர்முக நாடான இலங்கை, சிறந்ததொரு மனித மூலவளங்கள் அபிவிருத்திக் கொள்கையினூடாக கல்வி பயின்ற இள வயதினரான ஊழியப் படையிடமிருந்து நல்ல பயனைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆயினும், கல்விகற்ற இளைஞர்களிடையே நிலவிவரும் வேலையில்லாத்திண்டாட்டம் ஊழியச் சந்தையில் சமநிலையின்மையைத் தோற்றுவித்துள்ளது. பொருளாதாரத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற மனித வலுவினை உருவாக்குவதில் இந்நாடு தவறிவிட்டது என்பதனையே இது காட்டுகிறது. ஒழுங்கு முறையிலமைந்த ஒரு மனித மூலவளங்கள் திட்டம் இல்லாத சூழ்நிலையில், அதிக எண்ணிக்கையில் (கல்வி கற்ற) வேலை வாய்ப்பற்றோரை உருவாக்குகின்ற தற்போதைய போக்கு தொடர்ந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, மனித மூலவளங்கள் திட்டமிடுதல், அவற்றின் அபிவிருத்தி ஆகியவற்றோடு தொடர்புடைய பல பிரதான விடயங்களைப் பற்றி சிந்திக்க வேண்டிய ஒரு அவசர தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

## அறிமுகம்

இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கம், மனித மூலவளங்கள் அபிவிருத்தி, அவற்றின் கொள்கை அமுலாக்கம் என்பவற்றோடு தொடர்புள்ள பல பிரதான விடயங்களை இனம் கண்டு கொள்ளும் நோக்குடன் இலங்கையின் மனித மூலவளங்கள் அபிவிருத்தியின் நிலமை பற்றி பரந்த அளவிலான ஒரு கண்ணோட்டத்தினை மேற் கொள்வதாகும். இலங்கையில் வேலை வாய்ப்பு, வேலையில்லாத்திண்டாட்டம், மனித மூலவளங்கள் அபிவிருத்தி முறைமை ஆகியவற்றைக் குறிப்பாக தொடர்புபடுத்தி, தற்போதைய தொழிற்சந்தை சமநிலையின்மை பற்றி இக்கட்டுரை சுருக்கமாக ஆராயும்.

கடந்த சில தசாப்தங்களாக இலங்கையின் பொருளாதார செயலாற்றத்தினை அவதானிக்கும் போது, இந்நாடு ஆயுள் எல்லை, சிசு மரணவிகிதம் போன்ற அபிவிருத்திச் சுட்டெண்களின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்திருந்த போதிலும் பொருளாதார வளர்ச்சி குறைந்த அளவிலேயே இருந்து வந்துள்ளது என்பதை அவதானிக்க முடிகிறது. சமூக அபிவிருத்தியைப் பொறுத்தவரையில், பல்வேறு முன்னேற்றங்களுக்கு வழிவகுத்த சேமநல நோக்குடைய அபிவிருத்திக் கொள்கையானது, 1978 இன் ஆரம்பத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட பொருளதார தாராளமயமாக்கல் மற்றும் திறந்த பொருளாதாரக் கொள்கைகள் என்பவற்றின் காரணமாக கனிசமான அளவு மாற்றமடைந்தது. 1993 இல் – அதாவது பொருளாதார தாராளமயமாக்கல் அறிமுகப்படுத்தப்பட்டு பதினைந்து வருடங்கள் சென்ற பின்னரும் கூட– கல்விகற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதில் நாடு பல சிரமங்களை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளது. திறந்த பொருளாதார கொள்கையின் மூலம் பயனடைந்த கைத்தொழில் மற்றும் சேவைகள் போன்ற நவீன துறைகளிலிருந்து போதியளவிலான வேலை வாய்ப்புக்களை இவர்கள் பெற்றுக் கொள்ள முடியாது போய்விட்டது.

1992ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின்படி இந்நாடு 4.3 சதவீத மெய்வளர்ச்சியையும் 3.5 சதவீத தலைக்குரிய மொ.தே.உ. வளர்ச்சியையும் சாதித்துக் கொண்டிருந்தது. நடைமுறை விலைகளில் தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தி ஏறத்தாழ 494 அமெரிக்க டொலர்களாகவும் நடு ஆண்டுக் குடித்தொகை 1கோடியே 74 இலட்சமாகவும் இருந்தது. விவசாயத் துறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 21.4 சதவீதத்தையும், உற்பத்தித் துறைகள், சேவைகள் துறைகள் ஆகியன முறையே 18.5 சதவீதத்தையும் 51 சதவீதத்தையும் பங்களிப்புச் செய்துள்ளன என்பதை இத்தரவுகள் தெரிவிக்கின்றன.

ஊழியர் படையின் பெரும்பாலானோர் ஈடுபட்டிருக்கும்

விவசாயத் துறையில் எதிர்மறையான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதனை பொருளாதாரப் போக்குகள் குறித்த தரவுகள் தெரிவிக்கின்றன. அதே வேளையில், பொருள் உற்பத்தித் துறை (9 சதவீதம்), நிர்மாணத்துறை (7சதவீதம்), சேவைகள் துறை (5.3 சதவீதம்) ஆகியன உயர்ந்த வளர்ச்சி வீதங்களைக் காட்டியிருக்கின்றன. சேவைகள் துறையின் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், போக்குவரத்து, தொடர்பாடல், வர்த்தகம் மற்றும் வங்கியும் நிதிச் சேவைகளும் ஆகிய பிரிவுகளில் வளர்ச்சி பிரதானமாக இடம் பெற்றிருக்கிறது. போதிய தரவின்மை காரணமாக தொழில் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வதில் உயர்ந்த வளர்ச்சியைக் காட்டிய துறைகள் எத்தகைய பங்கினை வழங்கின என்பது பற்றி திட்டவட்டமாகக் கூறுவது கடினமாகும். எவ்வாறாயினும், கல்விகற்ற கிராமிய இளைஞரிடையே அதிகரித்து வருகின்ற தொழில்வாய்ப்பின்மைப் பிரச்சினையானது, வர்த்தகம், தொடர்பாடல், வங்கியும் நிதிச் சேவைகளும் போன்ற உயர்வளர்ச்சி வீதங்களைக் காட்டிய சில குறிப்பிட்ட துறைகளில் உருவாக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களை கிராமிய இளைஞர்கள் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்பதனையே எடுத்துக் காட்டுகின்றது.

மகாவலித்திட்டம், நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் போன்ற அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்படுகின்ற பாரிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சில 1986ன் இறுதிப் பகுதியில் பூர்த்தியடைந்துள்ளமையால் இத்தசாப்தம் முடிவடைந்த பின்னர், கிராமிய இளைஞர்களுக்கு அதிக அளவிலான தொழில் வாய்ப்புகளை அளிக்கக்கூடிய சாத்தியங்கள் இல்லையென்பதையும் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகும். அரசாங்கத்தினால் மிகவும் தீவிரமாக ஊக்கப்படுத்தப்படுத்தப்பட்டு வந்த பொதுத் துறைகளைத் தனியார்மயமாக்கும் நிகழ்ச்சித்திட்டமும் கூட, புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதைப் பொறுத்தவரையில், எதிர்மறையான தாக்கத்தனைக் கொண்டிருந்தது. இத்தகைய பின்னணியில், இலங்கையின் மனித மூலவளங்கள்

அட்டவணை 1

ஊழியர் படை வளர்ச்சி மற்றும் பங்கேற்பு விகிதங்கள்

| மதிப்பீடு | ஊழியர் படை ('000) | பங்கேற்பு விகிதம் (%) மொத்தம் | ஆண் | பெண் | தொழில் வாய்ப்பு ('000) |
|---|---|---|---|---|---|
| 1. குடித்தொகை மதிப்பு - 1946 | 2,611 | 39.2 | 37.8 | 18.2 | 2,612 |
| 2. குடித்தொகை மதிப்பு - 1953 | 2,993 | 37.0 | 53.1 | 18.9 | 2,993 |
| 3. குடித்தொகை மதிப்பு - 1963 | 3,464 | 32.7 | 49.8 | 14.2 | 3,200 |
| 4. ஊழியர் படை மதிப்பீடு - 1968 | 4,150 | 34.6 | 50.7 | 17.2 | 3,674 |
| 5. குடித்தொகை மதிப்பு - 1971 | 4,488 | 35.4 | 50.7 | 19.1 | 3,649 |
| 6. ஊழியர்படை பங்கேற்பு விகித மதிப்பீடு - 1973 | 4,560 | 34.4 | 48.5 | 20.2 | 3,767 |
| 7. ஊழியர்படை மற்றும் சமூக- பொருளாதார மதிப்பீடு - 1980/81 | 5,715 | 37.3 | 53.1 | 21.2 | 4,851 |
| 8. குடித்தொகை மதிப்பு - 1981 | 5,105 | 33.8 | 49.8 | 17.1 | 4,119 |
| 9. இலங்கை ஊழியர்படை மதிப்பீடு - 1992* | 5,820 | 48.1 | 65.9 | 29.6 | 4,860 |

* வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர

அபிவிருத்தியோடு சம்பந்தப்பட்டுள்ள சில முக்கிய விடயங்களை இங்கு ஆராய்வோம்.

### (2) ஊழியர் படை உள்ளடக்கமும் அதன் வளர்ச்சிப் போக்குகளும்

1981 ல் நடாத்தப்பட்ட குடித்தொகை மதப்பீட்டின்படி, இலங்கையின் குடித்தொகை 1 கோடியே 48 இலட்சமாக இருந்தது. 110 வருட காலத்துக்குள் 6 மடங்கு பெருக்கம் ஏற்பட்டுள்ளதனை இது பிரதிபலிக்கின்றது. 1980 களின் பிற்பகுதியில் இலங்கையின் குடித்தொகை வளர்ச்சி 1.4 சதவீதமாக மதிப்பிடப்பட்டிருந்தது. 1992ம் ஆண்டளவில் இது1.0 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததோடு மதிப்பீடு செய்யப்பட்ட குடித்தொகையின் அளவு 1 கோடியே 74 இலட்சமாக இருந்தது.

குடித்தொகையின் வயதமைப்பினை அவதானிக்கையில், 1981ம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்போது 46 சத வீதத்தினர் 19 வயதுக்குடபட்டவர்களாக இருந்தபடியால் இலங்கை ஒரு இளம் சந்ததியினரைக் கொண்டிருக்கும் பேற்றினைப் பெற்றுள்ளது. பிரதேச ரீதியாக குடிசனப்பகிர்வினை அவதானிக்கையில் 72 சதவீதத்தினர் கிராமப் பகுதிகளிலும், 22 சதவீதத்தினர் நகரப்பகுதிகளிலும் 6 சதவீதத்தினர் தோட்டப்பகுதிகளிலும் வாழ்கின்றனர் என்பதை அறியக்கூடியதாகவுள்ளது.

அட்டவணை 1ல் தரப்பட்டுள்ள ஊழியர்படை வளர்ச்சி, ஆண், பெண் பங்களிப்பு வீதங்கள் ஆகியவற்றின் தரவுகளின்படி (அதாவது, தொழில்களைப் பெற்றுக் கொண்டவர்களையும் வேலைகளைச் செய்வதற்கு ஆயத்தமாக இருப்பவர்களையும் உள்ளடக்கிய) இலங்கையின் ஊழியர்படையானது, ஏககாலத்தில் குடித்தொகையதிகரிப்போடு சேர்ந்து வளர்ச்சியடைந்துள்ளது. 1946 ற்கும் 1981 ற்கும் இடைப்பட்ட

காலத்தில் ஊழியர் படையின் அளவு அநேகமாக இரண்டு மடங்காகியுள்ளது. 1946 ற்கும் 1953 ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் குடித்தொகை வருடாந்தம் 2.8 சதவீதமாக அதிகரித்தபோது ஊழியர்படை வருடாந்தம் 2 சதவீதமாக அதிகரித்திருக்கிறது. 1953–63 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் குடித்தொகை வளர்ச்சி சராசரியாக வருடாந்தம் 2.7 சதவீதமாகவும் ஊழியர் படையின் வளர்ச்சி வருடாந்தம் 1.5 சதவீதமாகவும் இருந்திருக்கிறது. 1963–71 ற்கிடைப்பட்ட காலப்பகுதியில் குடித்தொகை வளர்ச்சி வருடாந்தம் 2.2 சதவீதமாகவும் ஊழியர் படையின் வளர்ச்சி வருடாந்தம் 3.3 சதவீதமா கவும் இருந்திருக்கிறது. 1970களில் குடித்தொகை வளர்ச்சி வருடாந்தம் 2.2 சதவீதமாகவும், ஊழியர் படையின் வளர்ச்சி 3.3 சதவீதமாகவும் இருந்துள்ளது. 1970 களில் குடித் தொகை வளர்ச்சி வீதம் வருடாந்தம் 1.7 சதவீதத்திற்கும் ஊழியர் படையின் வளர்ச்சி 2.7 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. குடித்தொகையின் படிப்படியான வீழ்ச்சிக்குக் காரணங்களாக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினை அதிகளவில் ஏற்றுக்கொண்டமை, அதிகரித்தளவில் கல்வித் தேர்ச்சிகள், நகரமயமாக்கம், ஊழியர் படையினரின் அதிகரித்த பங்களிப்பு, 15–34 வயதிற்குட்பட்ட இளவயதினரிடையே திருமணங்கள் பிற்போடப்பட்டமை ஆகியவை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### (3) தொழில் வாய்ப்புக் கட்டமைப்பு

தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதில் இலங்கையின் பங்களிப்பு மிகவும் குறைவானதாக உள்ளதென்பதனை 1950 களின் ஆரம்பத்தில் இருந்து இடம்பெற்ற தொழில் வாய்ப்பு வளர்ச்சி பற்றிய தரவுகள் காட்டுகின்றன. 1946 ற்கும் 1971 க்குமிடைப்பட்ட 25 வருட காலப்பகுதியில் பொருளாதாரத்தில் 1,038,000 தொழில் வாய்ப்புகள் மட்டுமே உருவாக்கப்பட்டன. இதன் கருத்து யாதெனில், தொழில் வாய்ப்பு வளர்ச்சியானது சராசரியாக வருடாந்தம் 1.6 சதவீதமாக இருந்திருக்கின்றது என்பதாகும். இதே காலப்பகுதியில் குடித்தொகை வளர்ச்சி சராசரியாக வருடாந்தம் 2.5 சதவீதமாகவும் ஊழியர் படை

அட்டவணை 2

ஊழியர்படை மற்றும் வேலைவாய்ப்பு

| மதிப்பீடு | ஊழியர்படை ('000) | | | தொழில்வாய்ப்புப் பெற்றோர் ('000) | | | வேலையற்றோர் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் |
| குடித்தொகை மதிப்பு – 1953 | 2.993 | 2.268 | 724 | 2.993 | 2.268 | 724 | | | |
| குடித்தொகை மதிப்பு – 1963 | 3,464 | 2,742 | 722 | 3.200 | 2.543 | 657 | 264.970 | 199.490 | 65.480 |
| ஊழியர்படை மதிப்பீடு – 1966 | 4.150 | 3.156 | 994 | 3.674 | 2.835 | 839 | 464.200 | 312.000 | 152.200 |
| குடித்தொகை மதிப்பு – 1971 | 4.448 | 3.312 | 1.176 | 3.649 | 2.838 | 811 | 839.264 | 474.065 | 365.199 |
| ஊழியர்படை, சமூக-பொருளாதார மதிப்பீடு – 1980/81 | 5.715 | 4.100 | 1.606 | 4.851 | 3.623 | 1.228 | 857.168 | 503.207 | 353.961 |
| இலங்கை ஊழியர் படை மதிப்பீடு 1992* | 5,823 | 4,063 | 1,760 | 4.857 | 3.607 | 1.250 | 965.901 | 455.605 | 510.296 |

* வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர

ஆதாரம் : திட்ட அமுல் அமைச்சு, தொழில்வாய்ப்பு மற்றும் மனித வலு திட்டமிடல் பிரிவு

அட்டவணை 3

கைத்தொழில் துறை அடிப்படையில் வேலைவாய்ப்புகளின் பகிர்வு (ஆயிரங்களில்)

| துறை | குடிமதிப்பு 1953 No. (%) | குடிமதிப்பு 1963 No. (%) | குடிமதிப்பு 1971 No. (%) | குடிமதிப்பு 1981 No. (%) | ஊழியர் படை மதிப்பீடு 1992 |
|---|---|---|---|---|---|
| 1. விவசாயம, காட்டுத்தொழில், கடற்றொழில் | 1584.1 (52.9) | 1681.9 (52.6) | 1828.9 (50.0) | 1863.8 (45.2) | 1.905.3 (39.0) |
| 2. சுரங்கமகழ்தலும், கல் உடைத்தலும் | 13.8 (0.5) | 9.4 (0.3) | 13.1 (0.4) | 38.6 (0.9) | 118.3 (2.0) |
| 3. மின்சாரம், வாயு, தண்ணீர் | 3.3 (0.1) | 7.8 (0.2) | 9.6 (0.3) | 15.2 (0.4) | 175.7 (3.5) |
| 4. பொருளுற்பத்தி | 289.2 (9.7) | 292.3 (9.2) | 339.4 (9.3) | 415.8 (10.1) | 646.1 (13.0) |
| 5. நிர்மாணம் | 56.7 (1.9) | 85.1 (2.7) | 103.6 (2.8) | 124.8 (3.9) | 261.9 (5.0) |
| 6. மொத்த, சில்லறை வியாபாரம் | 282.8 (9.4) | 349.1 (10.9) | 343.8 (9.4) | 434.3 (10.5) | 557.6 (11.5) |
| 7. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பாடல் | 104.3 (3.5) | 137.6 (4.3) | 178.9 (4.9) | 198.8 (4.8) | 207.5 (4.0) |
| 8. நிதி, காப்புறுதி, மெய்யாதனம, வணிக சேவைகள் | 65.1 (2.2) | 15.6 (0.5) | 24.9 (0.7) | 45.5 (1.1) | 81.8 (1.7) |
| 9. சனசமூக, சமூக மற்றும் தனிப்பட்ட சேவைகள் | 396.2 (13.2) | 440.9 (13.8) | 492.8 (13.5) | 596.7 (14.5) | 816.2 (16.00) |
| 10. வரையறுக்கப்படாத நடவடிக்கைகள் | 197.8 (6.6) | 175.4 (5.5) | 313.9 (8.6) | 385.8 (9.4) | 245.1 (5.0) |
| 11. அனைத்து பொருளாதார நடவைக்கைகளும் | 2993.3 (100.0) | 3195.1 (100.0) | 3648.9 (100.0) | 4119.3 (100.0) | 4,857.6 (100.0) |

ஆதாரம்: குடிமதிப்புத் தரவுகள் மற்றும் நுகர்வோர் நிதி ஆய்வு 1981

வளர்ச்சி சராசரியாக 2.3 சதவீதமாகவும் இருந்திருக்கின்றது.

தொழில்வாய்ப்பு வளர்ச்சியில் ஒரு சிறியளவான முன்னேற்றம் 1971-1981 ற்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்டிருக்கின்றது. இத் தசாப்தத்தில் தொழில்வாய்ப்பு வளர்ச்சி ஏறக்குறைய 2.7சதவீதமாக இருந்துள்ளது. இவ் வளர்ச்சி, பெரும்பாலும் 1977ற்குப் பிற்பட்ட பகுதியில் அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட வர்த்தகத் தாராளமயமாக்கல் மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கத்தின் நிமித்தம் ஏற்பட்டிருக்கிறது. 1978-1982 காலப்பகுதியில் ஏறக்குறைய 2,00,000 புதிய தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டமையால், அது வேலைவாய்ப்பின்மைப் பிரச்சினையை ஒரு குறிப்பிடப்பட்ட அளவிற்குக் குறைத்துக் கொள்வதற்கு உதவியாக இருந்தது.

அட்டவணை 2ல் தரப்பட்டுள்ள தரவின்படி, 1992ம் ஆண்டில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொண்ட ஆண்களின் தொகை அதிகமாகவும், அதேநேரத்தில் வேலை வாய்ப்புகளற்ற பெண்களின் தொகை, ஆண்களினதை விட அதிகமாகவும் இருந்தது என்பதைக் காணமுடிகின்றது.

வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொண்டவர்களுள், 1953ம் ஆண்டு பெண்கள் 24 சதவீதமாகவும், 1963ம் ஆண்டு 20.5 சதவீதமாகவும் இருந்திருக்கிறது. 1971 குடிசன மதிப்பின் படி, வேலை வாய்ப்பு பெற்ற மொத்தத் தொகையினரில் பெண்களின் தொகை 22 சதவீதமாக இருந்ததைக் கொண்டு, கடந்த 9 வருடங்களாக பெண்களின் தொழில்வாய்ப்பு நிலைமையில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்பதை அவதானிக்க முடிகிறது. தொழில் வாய்ப்பு பெற்ற பெண்களின் தொகை 25.7 சதவீதமாகவும் தொழில் வாய்ப்பினைப் பெறாதோரின் தொகை 53 சதவீதமாகவும் இருந்ததென 1992 தொழிற்படை மதிப்பாய்வுகள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும், இம் மதிப்பீடுகள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளை உள்ளடக்கவில்லையாதலால் இத்தரவுகள் மிகுந்த அவதானத்துடன் பயன்படுத்தப்படல் வேண்டும்.

இங்கு தரப்பட்டுள்ள அட்டவணை-3 இலங்கையின் தொழில் வாய்ப்புக் கட்டமைப்பு பற்றிய ஒரு எண்ணக் கருவினைத் தருவதாக அமைந்துள்ளது. இதுவரையிலும் முக்கிய பங்கினை வகித்த விவசாயம், காட்டுத்தொழில், மீன் பிடித்துறை ஆகியன 1953 லிருந்து மிகச் சிறிய மாற்றத்தினையே அடைந்திருக்கின்றன வென இந்த அட்டவணையிலிருந்து அறிய முடிகிறது. 1971 ம் ஆண்டின் குடிசன மதிப்பீடுவரை, மொத்தத் தொழில் வாய்ப்புகளில் 50 சதவீதத்தினை வழங்கிவந்த விவசாயத் துறை, 1981ம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின் போது 45.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கிறது. விவசாயத் துறையில் வேலை வாய்ப்புகள் மேலும் 39 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததென 1992ம் ஆண்டின் தொழிற்படை மதிப்பீடு தெரிவிக்கிறது. இவ்வட்டவணையின்படி, விவசாயத் துறையில் வேலைவாய்ப்புகள் 1953ம் ஆண்டு 1.58 மில்லியனாகவிருந்து 1992ல் 1.9 மில்லியனாக அதிகரிப்பதைக் கொண்டு, ஏறக்குறைய கடந்த 40 வருடங்களாக சராசரி வளர்ச்சி வீதம் 1.0 சதவீதமாக இருந்துள்ளதென்பதை அவதானிக்க முடிகிறது. இதே காலப் பகுதியில் குடிசனத் தொகை, தொழிற்படை ஆகியவற்றின் அதிகரிப்புகளோடு ஒப்பிடுகையில், விவசாயத் துறையினது தொழில் வாய்ப்பு வளர்ச்சி வீதம் மிகவும் குறைவானதாகவே இருந்திருக்கிறது.

அட்டவணை 3ல் தரப்பட்டுள்ள தரவுகளின்படி, தொழில் வாய்ப்புக்களை வழங்குவதில் பொருள் உற்பத்தித் துறையின் பங்களிப்பு 1971-1981 க்கிடைப்பட்ட காலப்பகுதியில் 9 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக சிறிதளவு அதிகரித்திருப்பதைக் காண முடிகிறது. அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் கைத்தொழில் அதிபர்களுக்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்புகளைக் கருத்தில் கொண்டு, உற்பத்தித் துறையின் வேலைவாய்ப்பு வளர்ச்சி வீதம் மிகவும் துரித கதியில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும், சுதந்திர வர்த்தக வலையம் உட்பட்ட நவீன கைத்தொழில்களில் உருவாக்கப்பட்ட தொழில் வாய்ப்புகளின் உண்மையான தொகை எதிர்பார்த்த தொகையினை விட மிகவும் குறைவாகவே இருந்தது. துறைரீதியான தரவுகள் கிடைக்க வில்லையாதலால் வெவ்வேறு கைத்தொழில் துறைகளுக்கிடையே வேலை வாய்ப்பினை பெற்றுள்ளவர்களின் பகிர்வு பற்றி எவ்வித கருத்தும் தெரிவிப்பது கடினமாக உள்ளது. எவ்வாறாயினும், 1978 இல் அறிமுகப்படுத்தப்பட்ட தாராள வர்த்தகக் கொள்கை காரணமாக, சிறுகைத்தொழில் துறையானது வேலைவாய்ப்புகளை வழங்குவதில் குறிப்பிடப்பட்ட சில பின்னடைவுகளை எதிர்நோக்கியதென்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அட்டவணை மூன்றின்படி மொத்த வியாபார, சில்லறை வியாபார வர்த்தகத்துறை, சமூக, தனிப்பட்ட சேவைகள் துறை ஆகியன 1992 ஆம் ஆண்டின் மொத்த வேலை வாய்ப்புகளில் முறையே 11.5 சதவீதத்தையும், 16 சதவீதத்தையும் கொண்டிருந்தன. 1981ஆம் ஆண்டு பெறப்பட்ட வேலைவாய்ப்புத் தொகையோடு ஒப்பிடுகையில் மேற்கூறப்பட்ட இந்த இரண்டு துறைகளிலும் வேலை வாய்ப்பு வளர்ச்சி கடந்த பத்து வருட காலத்தில் மிகவும் சிறியதாகவே இருந்துள்ளது. 1983 இல் ஏற்பட்ட கலவரம் காரணமாக சுற்றுலாத் துறையில் வேலைவாய்ப்பு அளவுகூட 50 சதவீதத்தினால் குறைவடைந்தது. 1990 இல் இருந்து உல்லாசப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட மேல்நோக்கிய அசைவின் காரணமாக சுற்றுலாத்துறையில் வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கத் தொடங்கியது. எவ்வாறாயினும், சுற்றுலாத் துறையில் உள்ள வேலைவாய்ப்புக்கள் பற்றி சரியான தரவுகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிர்மாணக கைத் தொழில் துறையில் வேலைவாய்ப்புகளின் தொகை கடந்த பத்து வருடங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்திருக்கின்றது. இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக 1978 க்குப் பின்பு அரசாங்கத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட பாரிய அளவிலான உள்ளகக் கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களைக் குறிப்பிடலாம்.

கடந்த தசாப்தத்தில் போக்குவரத்துத்துறை தொடர்புக் கைத்தொழில் துறை போன்ற துறைகளினால் வழங்கப்பட்ட தொழில் வாய்ப்புகளின் அளவானது சுமார் 4 சதவீதமாக நிலைத்திருந்தது. மின்சாரம், எரிவாயு, நீர் விநியோகம் போன்ற நவீன துறைகளில் வேலைவாய்பின் அளவானது போற்றக் கூடிய அதிகரிப்பினை அடைந்திருந்த அதே சமயம் நிதி, காப்புறுதி, காணி ஆகிய துறைகளில் வேலைவாய்ப்பின் அளவானது கடந்த பத்து வருடங்களில் குறிப்பிடத்தக்க தொரு அதிகரிப்பினைக் காட்டவில்லை.

தொழில் ரீதியாக வேலைவாய்ப்புப் பெற்றவர்களின் பகிர்வு அட்டவணை 4ல் தரப்பட்டுள்ளது. இதன்படி 1981 ஆம் ஆண்டில் வேலைகளில் ஈடுபட்டிருந்த சனத்தொகையினரில் 45 சதவீதத்தினர் விவசாயம், கால்நடை வளர்ப்பு, காட்டுத்தொழில், மீன்பிடித் தொழில் ஆகிய தொழில்களிலும், 29 சதவீதத்தினர் உற்பத்தி, போக்குவரத்து என்பவற்றோடு தொடர்புடைய தொழில்களிலும ஈடுபட்டு வந்துள்ளனர். உயர்தொழில், தொழில்நுட்பம், நிர்வாகம், முகாமைத்துவம், எழுதுவினைஞர் மற்றும் அதோடு தொடர்புள்ள பிரிவுகள் என்பவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்டு மாத வருமானத்தினைப் பெறுகின்ற வேலையாட்களின் அளவு மொத்தத் தொகையினரில் 12 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது. 1971 - 1981 ற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் உயர்தொழிலும் தொழில்நுட்பமும், மற்றும் எழுதுவினைஞர் ஆகியவற்றில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பு காணப்பட்டுள்ளது. இந்த இரு பிரிவுகளின் கீழும் வகைப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர்கள், தாதிகள், எழுதுவினைஞர்கள் போன்றவர்களை பொதுத் துறையில் அதிகளவில் சோர்த்துக் கொண்டமை இதற்குக் காரணமாகத் தெரிவிக்கப்படுகிறது.

1992ஆம் ஆண்டின் இலங்கை ஊழியர் படை பற்றிய மதிப்பீட்டு அறிக்கை (இரண்டாம் காலாண்டு), தொழில் வாய்ப்புப் பெற்றவர்களை கைத்தொழிற்துறை ரீதியாகவும் தொழில்கள் ரீதியாகவும் வகைப்படுத்தி உள்ளது. இதன்படி, தொழில் வாய்ப்புக்களைப் பெற்ற தொகையினரில் 27 சதவீதத்திற்கும் அதிகமானோர் நல்ல திறன்களைக் கொண்ட விவசாய, மீன்பிடித் தொழிலாளர்களாகவும், 23.7 வீதத்தினர் ஆரம்பப்படியிலான தொழில்களைப் புரிபவர்களாகவும் (திறன்களைப் பெற்றுக் கொள்ளாத தொழிலாளர்களாக), 16 சதவீதத்தினர் கைப்பணியோடு தொடர்புடைய தொழில்களில் ஈடுபடுபவர்களாகவும், 9 சதவீதத்தினர் விற்பனைகள் மற்றும் சேவைகளோடு தொடர்புடைய தொழில்களில் ஈடுபடுவர்களாகவும் இருந்துள்ளனர். முகாமையாளர்களாகவும் உயர்தொழில்களைப் புரிந்தவர்களாகவும் வகுக்கப்பட்டிருந்த பிரிவினர்கள் முறையே 3.7 சதவீதமாகவும், 4.7 சதவீதமாகவும் இருந்தனர். வேலைவாய்ப்புக்களைப் பெற்றவர்களில் 2 சதவீதத்திற்கும் சிறிது அதிகமான தொகையினர் தொழில்நுட்பவியலாளர்களாகவும், அதனோடிணைந்த உயர் தொழில்களைப் புரிபவர்களாகவும் ஏறக்குறைய 3 சதவீதத்தினர் எழுதுவினைஞர்களாகவும் வகுக்கப்பட்டிருந்தனர். முக்கியமாக தொடர்புத் துறையில் பொருத்துனர்களாகவும், இயந்திர இயக்குனர்களாகவும் பணிபுரிந்தவர்களின் தொகை ஏறக்குறைய 5 சதவீதமாக இருந்தது.

திறன்களின் அடிப்படையில் இலங்கையின் மனிதவலு பற்றிய முழு விபரம் இன்னமும் கிடைக்கவில்லை. பொதுத்துறையிலும், ஒழுங்கமைக்கப்பட்ட தனியார் துறையிலும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றவர்களின் தொகையை அடிப்படையாகக் கொண்டே வெவ்வேறு உயர் தொழில்கள், திறன்களைக் கொண்டுள்ள தொழிலாளர்கள் பற்றிய தரவுகள் பெறப்பட்டுள்ளது. 1982ஆம் ஆண்டில் உள்ள பயிற்றப்பட்ட மனித வலுவினரின் தொகை, 1983-1991ற்கு இடைப்பட்ட காலத்திற்கு தெரிவு செய்யப்பட்ட தொழில்களில் எறியம் செய்யப்பட்ட கேள்வியின் அளவு ஆகிய விபரங்கள் அட்டவணை 5ல் கிட்டத்தட்ட சரியான முறையில் தரப்பட்டுள்ளது. இவ்வட்டவணை பொறியியல் துறை மற்றும் அதுபோன்ற விஞ்ஞானத் துறைகள் ஆகியவற்றை உள்ளடக்கவில்லை. எவ்வாறாயினும், அரசாங்கத்திலும் ஏனைய நிறுவனங்களிலும் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுள்ளவர்களின் அடிப்படையிலும் பல்கலைக்கழகங்கள், ஏனைய உயர்மட்ட தொழில்நுட்பப்பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றால் ஆண்டுதோறும் பயிற்றப்பட்டவர்களின் தொகை அடிப்படையிலும் அவதானிக்கையில், பொறியியல்துறை மற்றும் அதனோடு தொடர்புடைய ஏனைய துறைகளிலும் உள்ள உயர்மட்ட மனிதவலுவினரின் தொகை ஏறக்குறைய 5,000 ஆக இருந்ததென்று ஒரு அனுமானத்திற்கு வரமுடியும்.

கணக்கியல், சட்டம், நில அளவை, கட்டட நிர்மாணம், பல்வைத்தியம், மிருகவைத்தியம் போன்ற உயர் தொழில்களோடு, திறன்களைக் கொண்டுள்ள மனிதவலுவினரின் ஏனைய பிரிவினர் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால், இவை குறித்த சரியான தரவுகள் கிடைக்கவில்லை. மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் உள்ளவாறு, மேலே கூறப்பட்டுள்ள தொழிற்துறைகளில் தகைமை பெற்றவர்கள் கூட, ஆரம்பத்தில் பொதுத்துறையிலும் தனியார் துறை நிறுவனங்களிலும் தொழில்களைப் பெற்று, தொழில் அனுபவத்தைப் பெற்ற சில வருடங்களின் பின்னர் தனிப்பட்ட ரீதியில் தொழில் புரிவதற்காகவும் சிறப்பான வாய்ப்புக்களைக் கருதி வெளிநாடுகளில் குடியேறுவதற்காகவும் சிலர் தாம் ஈடுபட்டு வந்த தொழில்களை விட்டுவிடுகின்றனர். இவ்வாறு திறன்களைக் கொண்ட மனிதவலுவினரில் கணிசமான தொகையினர் இடம் பெயருவதன் காரணமாக இந்நாட்டின் திறன்களைக் கொண்டுள்ள மனித வலு பற்றி ஒரு தரவு அடிப்படையைக் கட்டி எழுப்புவது கடினமாக உள்ளது. ஆயினும், குறிப்பிட்ட சில உயர்தொழில் பிரிவுகளில் திறன்களைக் கொண்ட மனிதவலுவினருக்கு பற்றாக்குறை காணப்படுகிறது என்பதையும், அதேசமயம் சட்டத்துறை போன்ற வேறு சில பிரிவுகளில் மேலதிகமாக மனிதவலுவினர் உள்ளனர் என்பதையும் ஒருவர் அவதானிக்க முடியும். வெவ்வேறு துறைகளிலும் பற்றாக்குறையாக உள்ள திறன்களைக் கொண்ட மனிதவலுவினரின் தொகையை திட்டவட்டமாக தீர்மானித்துக் கொள்வதற்கு உதவும் முகமாக திறன்களைக் கொண்ட மனிதவலுவினருக்கான வருடாந்த கேள்வி, நிரம்பல் மட்டம் போன்றவற்றைக் குறித்துக் கொள்வதற்கு நம்பத்தகுந்த மதிப்பீட்டுத் தரவுகள் இன்னமும் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், பதவிகளில் சேர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் அற்ற ஒரு நிலைமையில், பொறியியலாளர்கள், மருத்துவர்கள் போன்ற உயர் தொழில் திறன் மனிதவலுவினர் தமது பல்கலைக் கழகக் கல்வியினைப் பூர்த்தியாக்கிய பின்பும் கூட சிறிது காலத்திற்கு வேலைகள் அற்று இருந்தனர்; அல்லது கீழ் உழைப்பில் ஈடுபட்டிருந்

தனர் என்பதை இங்கு கவனிக்க வேண்டும்.

### 4. வேலைவாய்ப்பின்மையின் குணாம்சங்கள்

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக, வேலையில்லாத் திண்டாட்டம் இலங்கையின் முக்கியமான ஒரு பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. அட்டவணை 6 ல் உள்ள தரவுகளின் படி, 1960ல் 340,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்ட வேலையற்றோரின் தொகை (தொழிற்படையின் 10 வீதம்) 1969/70 ல் 5,58,600 க்கு உயர்வடைந்து (14.3%), பின்பு 1970க்களின் நடுப்பகுதியில் பத்து இலட்சம் தொகையையும் (இது தொழிற்படையின் 20%-25%) தாண்டிவிட்டது. 1981 குடிசன மதிப்பீட்டின்படி, வேலையற்றோரின் தொகை 895,143 ஆக இருந்தது (இது தொழிற்படையின் 18 சதவீதமாகும்). 1981-1982 நுகர்வோர் நிதி சமூக-பொருளாதார ஆய்வின்படி வேலையற்றோரின் தொகை 604,640 ஆகவிருந்தது. 1981இல் வேலைவாய்ப்பு வீதம் 18 சதவீதத்தில் இருந்து 1982 இல் 12சத வீதமாக கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்ததையே இது குறித்துக் காட்டுகின்றது. எவ்வாறாயினும், 1986 ஆம் ஆண்டளவில் வேலைவாய்ப்பின்மை வீதம் 14 சதவீதமாக உயர்வடைந்திருக்கிறது. இவ்வட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைகள் வேலையற்றோரின் தொகைகளை மட்டுமே குறிப்பிடுவதால் கீழுழைப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் தொகையைப் பற்றி எந்தவிதமான கருத்தையும் இது தெரிவிக்கவில்லை. கீழுழைப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் தொகை ஏறக்குறைய தொழிற்படையின் 20-25 சதவீதமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இனி வரப்போகும் ஆண்டுகளில் 1,60,000 த்திற்கும் 1,65,000ற்கும் இடைப்பட்ட தொகையினர் தொழில் தேடுவோர்களாக வருடாந்தம் ஊழியர் படையில் சேர்வர் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1980 களின் ஆரம்பத்திலிருந்து தேங்கிக்கிடக்கும் 9,00,000 வேலையற்றோரையும் சேர்த்துக் கொள்ளுமிடத்து 1990ஆம் ஆண்டளவில் முழு அளவிலான வேலைவாய்ப்பினை அடைவதற்காக இலங்கையில் மொத்தமாக 24 இலட்சம் தொழில்கள் உருவாக்கப்பட வேண்டியிருக்கும் (ரொட்றிகோவும் ஏனையோரும், 1987:259). எவ்வாறாயினும், கடந்தகால தரவுகளின் அடிப்படையில் பொருளாதாரத்தின் முன்னணித் துறைகளுக்கு

அட்டவணை 4

தொழில் பிரிவு அடிப்படையில் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளோரின் பகிர்வு 1953 - 81

| பிரதான தொழில் பிரிவு | 1963 எண். (000) | % | 1971 எண். (000) | % | 1980/81 எண். (000) | % |
|---|---|---|---|---|---|---|
| 1. தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப | 142.7 | 4.5 | 178.5 | 4.9 | 269.2 | 5.5 |
| 2. நிர்வாக மற்றும் முகாமைத்துவ | 32.9 | 1.0 | 14.0 | 4.0 | 25.5 | 0.5 |
| 3. இலிகிதர் மற்றும் சம்பந்தப்பட்ட தரங்கள் | 118.4 | 3.7 | 186.1 | 5.1 | 274.1 | 5.6 |
| 4. விற்பனை ஊழியர்கள் | 212.2 | 6.6 | 272.4 | 7.5 | 396.0 | 8.2 |
| 5. சேவைத்துறை ஊழியர்கள் | 259.6 | 8.1 | 198.0 | 5.4 | 265.4 | 5.5 |
| 6. விவசாயம், விலங்கு வளர்ப்பு, காட்டுத்தொழில்,கடற்றொழில் | 1653.6 | 51.7 | 1782.1 | 48.8 | 2191.2 | 45.2 |
| 7. உற்பத்தி, போக்குவரத்து ; மற்றும் தொழிலாளர்கள் | 739.7 | 23.1 | 926.4 | 25.4 | 1415.4 | 29.2 |
| 8. வகைப்படுத்தப்படாத தொழிலாளர்கள் | 40.6 | 1.3 | 91.5 | 2.4 | 14.8 | 0.3 |
| 9. மொத்தம் | 3799.7 | 100.0 | 3649.0 | 100.0 | 4851.4 | 100.0 |

ஆதாரம்: குடித்தொகை மதிப்பீடு 1963 மற்றும் 1971
ஊழியர்படை, சமூக-பொருளாதார ஆய்வு 1980 / 81

மிகவும் குறைந்த மட்ட அளவிலேயே மனித வலுச்சேர்ப்பு இடம்பெற்றமையால் ஊழியர் படைக்குப் புதியவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக ஆண்டுதோறும் 150,000 தொழில் வாய்ப்புக்களைக் கூட உருவாக்குவதென்பது ஒரு அடைய முடியாத இலக்காகவே இருந்தது.

1992ஆம் ஆண்டின் இலங்கை ஊழியர்படை பற்றிய மதிப்பாய்வின்படி வேலையற்றோரின் தொகை 0.96 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 0.45 மில்லியன் (46.8%) ஆண்களும், 0.51 மில்லியன் (53%) பெண்களுமாவார்கள். இந்த ஆய்வின்படி, கிராமிய வேலையற்றோரின் தொகை 0.77 மில்லியனாக இருக்கையில், நகர வேலையற்றோரின் தொகை 0.19 மில்லியனாக இருந்தது. வேலைவாய்ப்பின்மை வீதமானது (வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த) 16.59% என இந்த ஆய்வில் மதிப்பிடப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பின்மை வீதம் 15-19 வயதுக்கிடைப்பட்ட இளைஞர்களுக்கிடையேயும், 20-24 வயதுக்கிடைப்பட்ட இளைஞர்களுக்கிடையேயும் மிகவும் உயர்வாகக் காணப்பட்டுள்ளதென 1992ஆம் ஆண்டின் ஊழியர்படை பற்றிய மதிப்பாய்வு தெரிவிக்கின்றது. வேலையற்றோரின் 23.6 சதவீதத்தினர் க.பொ.த.(சா.த) அல்லது தே.க.பொ.ப. பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளனரென இவ் ஆய்வு மேலும் தெரிவித்துள்ளது. அத்தோடு சித்தியடைகின்ற கல்விமட்டம் உயர்வடைகின்ற போது வேலைவாய்ப்பற்ற நிலைமையும் அதிகரிக்கின்றது. இதன்படி கல்வி கற்ற இளைஞர்களிடையே வேலைவாய்ப்பின்மைப் பிரச்சினையானது மிகவும் தீவிரமாக இருக்கும் போல் தெரிகிறது.

இலங்கையிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையானது, தொழில்களுக்கான கேள்வி, அவற்றின் நிரம்பல் என்பவற்றுக்கிடையேயுள்ள சமநிலையின்மையையும், அத்தோடு பொருளாதாரத்தில் கிடைக்கக் கூடியதாக இருக்கின்ற தொழில்கள் வேலையற்றோரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவகையில் அமைந்திராத நிலைமையில் ஒரு கட்டமைப்புச் சமநிலையின்மையையும் பிரதிபலிக்கின்றதென அவதானிக்கப்பட்டுள்ளது. வேலையற்றிருக்கும் கிராமிய இளைஞர்களிடையே அவர்களின் தொழில் ரீதியான எதிர்பார்ப்புகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வுகூட, இளைஞர்களின் வேலை எதிர்பார்ப்புகள் அவர்கள் பெற்றுள்ள கல்வித் தரங்களோடு குறிப்பிடத்தக்களவு ஒருங்கிணைந்து செல்பவையாகவுள்ளன என்று அவதானித்துள்ளது. இந்த ஆய்வின்படி, கல்வி கற்றுள்ள இளைஞர்கள் உயர்தொழில், தொழில்நுட்பம், முகாமைத்துவம், நிர்வாகம், இலிகிதர் சேவை, வர்த்தகம், வாணிபத்துறை போன்றவற்றில் தொழில்களைப் பெற்றுக் கொள்ளவும், ஓரளவான கல்வித்தரத்தினைக் கொண்டிருந்தோர் உற்பத்தித் தொழில், சேவைகள், விளையாட்டும் பொழுதுபோக்குகளும், போக்குவரத்தும், தொடர்புத் துறையும் போன்றவற்றில் தொழில்களைப் பெற்றுக்கொள்ளவும் ஆர்வம் காட்டியுள்ளனர். வேலையற்ற கிராமிய

அட்டவணை 5

தெரிவு செய்யப்பட்ட சில தொழில்களில் மனிதவலுவின் பகிர்வும் எதிர்பார்க்கப்படும் கேள்வியும்

| தொழில் | மொத்த எண்ணிக்கை 1982 | மேலதிக கேள்வி 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | மொத்த எண்ணிக்கை 1982 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| டாக்டர்கள் | 4,984 | 600 | 600 | 600 | 600 | 600 | 600 | 600 | 625 | 650 | 5475 |
| ஆயுர்வேத வைத்தியர்கள் | 5,355 | 250 | 250 | 250 | 275 | 275 | 275 | 300 | 300 | 300 | 2475 |
| ஆசிரியர்கள் | 153,483 | 5750 | 6000 | 6000 | 6250 | 6250 | 6500 | 6500 | 7000 | 7000 | 57250 |
| தாதிமார் | 11,048 | 1150 | 1150 | 1150 | 1150 | 1150 | 1150 | 1150 | 1150 | 1150 | 10350 |
| கணக்கு வைப்பவர்கள் | 10,300 | 500 | 550 | 550 | 550 | 600 | 600 | 600 | 650 | 650 | 5250 |
| சுருக்கெழுத்தாளர்கள் | 9,420 | 1050 | 1050 | 1100 | 1150 | 1000 | 1000 | 1000 | 1050 | 1050 | 9450 |
| தட்டெழுத்தாளர்கள் | 12,400 | 1050 | 1100 | 1150 | 1200 | 1000 | 1000 | 1000 | 1000 | 1000 | 9500 |
| மேசன்மார் | 17,500 | 3000 | 3000 | 3250 | 3250 | 3000 | 3000 | 3250 | 3250 | 3250 | 28250 |
| தச்சர் | 15,500 | 2700 | 2700 | 2800 | 2000 | 2400 | 2500 | 2600 | 2700 | 2700 | 24000 |
| குழாய் பொருத்துவோர் | 1,000 | 140 | 140 | 150 | 150 | 150 | 150 | 175 | 175 | 175 | 1405 |
| பற்றவைப்பவர் | 6,700 | 450 | 450 | 450 | 450 | 450 | 475 | 475 | 475 | 475 | 4150 |
| கொல்லர் | 6,600 | 275 | 275 | 275 | 275 | 200 | 200 | 200 | 200 | 200 | 2100 |
| மின்சார வயர் பொருத்துவோர் | 4,400 | 475 | 475 | 500 | 500 | 400 | 400 | 400 | 450 | 450 | 4050 |
| மோட்டார் வாகனம் பழுதுபார்ப்போர் | 40,800 | 2100 | 2100 | 2100 | 2100 | 1900 | 1900 | 1900 | 1600 | 1600 | 17300 |
| பார வாகன ஓட்டுனர்கள் | 3,150 | 400 | 400 | 400 | 350 | 350 | 350 | 400 | 400 | 400 | 3500 |
| தொழில்சார் மருத்துவிச்சிகள்** | 4,098 | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a |
| மருந்து கலப்பவர்கள் | 3,535 | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a |
| சிகை அலங்கரிப்போர் | 12,134 | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a |
| பண்ணை இயந்திரம் * இயக்குவோர் | 4,511 | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a |
| இயந்திரக் கருவிகள் * இயக்குவோர் | 8,648 | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a |
| இயந்திரங்களைப் பொருத்துபவர்கள்* | 6,395 | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a |
| நகை செய்பவர்கள் * | 10,070 | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a |
| கல்பரப்புவோர் /கடு வெய்வோர்* | 50,705 | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a | n.a |

* குடித்தொகை மதிப்பு 1971 ** குடித்தொகைமதிப்பு 1981

ஆதாரம்: தொழில்வாய்ப்பு மற்றும் மனித வலு திட்டமிடல் பிரிவு, திட்டமிடல் அமைச்சு

n.a – கிடைக்கவில்லை

இளைஞர்களில் ஒரு குறிப்பிட்ட தொகையினர் மாத்திரமே விவசாயத் திலும் அதனோடிணைந்த துறைக ளிலும் தொழில்களைப் பெற்றுக் கொள்ள ஆர்வம் காட்டினரென இந்த ஆய்வு தெரிவித்துள்ளது. (ரணசிங்க, 1978:59).

கல்வி கற்று வேலையற்றிருக்கும் இளைஞர்களிடையேயுள்ள வேலை எதிர்பார்ப்புப் பிரச்சினையானது காலனித்துவக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, சுதந்திரம் அடைந்ததிலிருந்து கடந்த பல தசாப்தங்களாக அதிக மாற்றங்கள் எதுவுமின்றி இன்றுவரை தொடரப்பட்டு வருகின்ற "லிபரல் கலைகளை அடிப்படையாகக்" கொண்ட இலவசக் கல்வித் திட்டத்தின் விளைவுகளைப் பிரதிபலிக்கின்றது. மிக வும் மந்தமான பொருளாதார வளர்ச் சியின் நிமித்தம் ஏற்பட்ட தொழிற் சந்தைச் சமநிலையின்மை, மிகவும் குறைவான அளவில் வேலை வாய்ப்பு உருவாக்கம், வேலை வாய்ப்புகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்குமிடையே தொடர் பற்ற நிலைமை காரணமாக உருவாகிய சமநிலையின்மை ஆகியன வேலை வாய்ப்பின்மைப் பிரச்சினை மிகவும் மோசமான நிலைமையையடைய வழிவகுத்தன.

**மனித வலுவுக்கான கேள்வியும், அதன் நிரம்பல் சமநிலையின்மையும்**

இலங்கையில் ஒரு ஸ்திரமான மனிதவலுக் கொள்கை இல்லாத நிலையில், தேசிய மட்டத்திலோ அல்லது துறைசார் மட்டத்திலோ மனித வலுவுக்கான கேள்வி, நிரம்பல் நிலைமை பற்றி நம்பத்தகுந்த ஒரு மதிப்பீடு இல்லாதிருப்பது ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. மனிதவலு

மற்றும் தொழில்வாய்ப்பு என்ற விடயம் பல்வேறு பொதுத் துறை நிறுவகங்களின் ஆதிக்க வரம்பிற்குள் இருந்த போதிலும், இந் நாட்டிற்கு வேண்டிய ஒரு பரந்த மனித வலுத்திட்டத்தினை இதுவரை தயாரித்துக் கொள்ள முடியவில்லை.

மனித வலுத் தேவையிலும், அதன் நிரம்பலிலும் நிலவுகின்ற சமநிலையின்மை தொடர்பாக மனித வலு பற்றிய பல்வேறு ஆய்வுகள் கருத்துத் தெரிவித்திருக்கின்றன. இந்த ஆய்வுகளின்படி, மிகவும் குறைவான கேள்வி காணப்படுகின்ற கலை, சமூக விஞ்ஞானம், மானிடவியல் போன்ற துறைகளில் உயர்மட்ட ரீதியிலான மனிதவலு மேலதிகமாக காணப்படுகிறது. வர்த்தகம், முகாமைத்துவம் போன்ற துறைகளில் பயிற்றப்பட்ட மனித வலுவினர் மேலதிகமாக இல்லாதிருந்தாலும் கூட, இத்தகைய துறைகளில் சித்தி அடைகின்ற பட்டதாரிகள் பொருத்தமான வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதில் அதிகளவு சிரமத்தினை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இதற்குக் காரணம் பதவிகளுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்கையில், தனியார் துறையினரால் கேட்கப்படுகின்ற ஆங்கில மொழித் தகைமை, வயது போன்ற பிரமாணங்களை இப் பட்டதாரிகளுள் பெரும்பாலோர் பூர்த்தி செய்யத் தவறியுள்ளமையாகும்.

கலை மானிடவியல், சமூக விஞ்ஞானம், சட்டம், முகாமைத்துவக் கற்கைகள், வர்த்தகம் ஆகிய கற்கை நெறிகளில் பட்டம் பெறுகின்ற பட்டதாரிகளின் நிரம்பல் அளவு பற்றிப் பெறப்பட்டுள்ள தரவுகளின்படி, வருடாந்தம் ஏறக்குறைய 2500 பேர் பட்டங்களைப் பெற்று வெளியேறுகிறார்களென மதிப்பிடப்பட்டுள்ளது. இத் தொகையினருள் ஏறக்குறைய மூன்றிலொரு பங்கினர் முக்கியமாக பொதுத்துறையின் பல்வேறு பதவிகளுக்கும் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். ஆயினும், மனிதவலு நியாயப்படுத்தற் கொள்கை காரணமாக பொதுத்துறையில் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, வேலையற்ற பட்டதாரிகளினதும், கீழுழைப்பில் ஈடுபடுகின்ற பட்டதாரிகளினதும், தொகையில் ஏற்படுகின்ற வருடாந்த அதிகரிப்பு, மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் 1988ம் ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக பட்டங்களைக் கொண்டுள்ள உயர்மட்ட

அட்டவணை 6

வேலையின்மை பற்றிய மதிப்பீடுகள்

| மதிப்பீட்டாய்வு | ஆண் | பெண் | மொத்தம் | வேலையற்றோர் % |
|---|---|---|---|---|
| 1. வேலைவாய்ப்பு, வேலையின்மை மற்றும் கீழுழைப்பு தொடர்பான மதிப்பீடு 1959-60 (சதொதா) | 250,000 | 90,000 | 340,000 | 10.5 |
| 2. குடித்தொகை மதிப்பு 1963 | 199,490 | 65,480 | 264,970 | 7.7 |
| 3. நுகர்வோர் நிதி ஆய்வு 1963 | - | | 457,700 | 13.8 |
| 4. ஊழியர் படை மதிப்பீடு 1968 | 312,000 | 152,800 | 464,200 | 13.4 |
| 5. சமூக-பொருளாதார ஆய்வு 1969-70 | 349,000 | 209,600 | 558,600 | 14.3 |
| 6. குடித்தொகை மதிப்பீடு 1971 | 474,065 | 197,917 | 671,982 | 15.6 |
| 7. ஊழியர்படை பங்கேற்கும் வீதங்களை நிர்ணயம் செய்யும் காரணிகள் 1973 | 446,929 | 346,071 | 793,000 | 18.3 |
| 8. நுகர்வோர் நிதி ஆய்வு 1973 | | | 1,073,000 | 24.0 |
| 9. காணி மற்றும் ஊழிய பயன்பாட்டு மதிப்பீடு 1975 | 499,500 | 434,800 | 884,300 | 19.7 |
| 10. ஊழியர்படை, சமூக-பொருளாதார மதிப்பீடு 1980-81 | 503,207 | 353,961 | 857,168 | 15.3 |
| 11. குடித்தொகை மதிப்பு 1981 | 498,726 | 396,417 | 895,143 | 17.9 |
| 12. நுகர்வோர் நிதி மற்றும் சமூக-பொருளாதார மதிப்பீடு 1981/82 | 298,038 | 306,602 | 604,640 | 11.9 |
| 13. ஊழியர் படை மற்றும் சமூக-பொருளாதார மதிப்பீடு 1985/86 | 433,243 | 407,009 | 840,253 | 14.0 |

ஆதாரம்: கொரனே, 1986:110
தொகைமதிப்பு புள்ளிவிவர திணைக்களம், இலங்கை
n.a – கிடைக்கவில்லை

மனித வலுவினருக்கான கேள்வி, நிரம்பல் தொடர்பான எறியத்தின்படி, கலைப்பட்ட தாரிகளின் நிரம்பல், அதன் கேள்வியினை விட அதிகமாகவிருக்கும் என்றும், அதே சமயம் மருத்துவம், பல்வைத்தியம், பொறியியல், விவசாய விஞ்ஞானம் போன்ற கற்கை நெறிகளில் பட்டம் பெற்றவர்களின் நிரம்பல், அவற்றுக்கான கேள்வியினைவிடக் குறைவாக இருக்குமென்றும் அவதானிக்கப்பட்டுள்ளது.

1971–1978 ற்கிடைப்பட்ட காலத்துக்கான மனிதவலுவினரின் கேள்வி, நிரம்பல் பற்றி 1975ம் ஆண்டில் தொழில்வாய்ப்பு, பொருளாதார அலுவல்கள் அமைச்சிலுள்ள தொழில் வாய்ப்பு, மனிதவலுத் திட்டமிடற் பிரிவால் தயாரிக்கப்பட்ட எறியத்தின்படி, விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு மாத்திரமே அவற்றுக்கான கேள்வி, நிரம்பலுக்கிடையில் ஒரு பாரதூரமான சமநிலையின்மை காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதவலுவுக்கான கேள்வி, நிரம்பல் என்பவற்றுக்கிடையே சமநிலையின்மை தோன்றுவதை தூண்டும் காரணிகளுள் திறன்களைக் கொண்டுள்ள மனிதவலுவினரின் குடியகல்வும் ஒன்றாகும். உயர்தொழில் தகைமைகளைக் கொண்டுள்ள உயர்மட்ட மனித வலுவினர் இலங்கையிலிருந்து ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளைப் போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்குச் செல்வது 1960களின் நடுப்பகுதியிலிருந்து தொடர்ந்து நடைபெறுகிறது. ஆயினும், 1970களின் பிற்பகுதியில் இவை தொடர்பான ஒழுங்கு விதிகள் தளர்த்தப்படும்வரை, உயர்தொழில் தகைமையைக் கொண்டவர்களின் குடியகல்வு அதிகளவில் இடம்பெறவில்லை. இதுபற்றியதொரு ஆய்வின்படி, 1971–1976 காலப்பகுதியில் மொத்தம் 4293 உயர் தொழில் தகைமையுள்ளோர் வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்து சென்றுள்ளனர். இத்தொகையினரில் 1254 மருத்துவர், 1974 பொறியியலாளர், 499 கணக்காளர்,

141 பல்கலைகழக விரிவுரையாளர், 628 ஏனைய பாட ஆசிரியர்கள், 160 வழக்குரைஞர், 537 தொழில்நுட்ப வியலாளர் ஆகியோர் உள்ளடங்கு கின்றனர் (நேசையா,1979B).

1970 களின் நடுப்பகுதியிலிருந்து, திறன்களைக் கொண்டுள்ள மனிதவலுவினர் மேற்காசிய நாடுகளுக்கு பாரிய அளவில் குடிபெயர்ந்து சென்றமையால் ஏற்பட்ட விளைவுகள் தேசிய பொருளாதாரத்தில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தின.

மனிதவலு மட்டத்தின் அடிப்ப டையில், 1979-1981ற்கிடைப்பட்ட காலப்பகுதியில் குடிபெயர்ந்து சென்றவர்களின் பகிர்வு பற்றிய தரவு அட்டவணை 7ல் தரப்பட்டுள்ளது. இவ்வட்டவணையின்படி, 1981ம் ஆண்டு குடிபெயர்ந்து சென்ற மொத்தத் தொகையினருள், உயர் தொழில் தகைமைகளைக் கொண்டுள்ள உயர்மட்ட மனித வலுவினரின் தொகை 3.5சதவீதமாகவும், நடுத்தர மட்ட மனிதவலுவினரின் தொகை 5.9 சதவீதமாகவும் இருந்துள்ளது. இதில் திறன்களைக் கொண்டுள்ள மனித வலுவினரின் தொகை (மேசன்மார், தச்சன்மார், மெக்கானிக்குகள் போன்ற) ஏறக்குறைய 20 சதவீதமாகவும், வீட்டுப் பணிப்பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற பெண்களுட்பட்டு, திறன்களைக் கொண்டிராத தொழிலா ளர்களின் தொகை 55 சதவீதத்திற்கும் அதிகமாகவும் இருந்துள்ளது.

தேர்ச்சி பெற்றிராத மனிதவலுவினர் மேற்காசிய நாடுகளுக்கு குடிபெயர்ந்து சென்றமை வேலையில்லாப் பிரச்சி னையை ஓரளவிற்குக் குறைத்துக் கொள்வதற்கு உதவியுள்ளது. மேலும், குடிபெயர்ந்து சென்றோரின் பண அனுப்பீடுகளினால் அந்நியச் செலாவணியில் ஏற்பட்ட அதிகரிப்பு கூட நாட்டின் சென்மதி நிலுவைப் பற்றாக்குறையினை மேம்படுத்துவதற்கு உதவியுள்ளது. எவ்வாறாயினும், திறன் கள் வேண்டப்படுகின்ற பகுதிகளில், பயிற்றப்பட்ட மனிதவலுவினரின் இழப் பின் நிமித்தமாக ஏற்பட்டுள்ள குடியகல்வு எதிர்த்தாக்கம் பற்றி இங்கு மேலதிகமாக அழுத்திக்கூற வேண்டிய தேவையில்லை.

**கல்வியும் மனித மூலவள அபிவிருத்தியும்**

1945ல் அறிமுகப்படுத்தப்பட்ட இல வசக் கல்வியினைத் தொடர்ந்து, அடுத்த டுத்து வந்த அரசாங்கங்கள் பொதுக் கல்வியிலும், உயர்கல்வியிலும் கணிச மானளவு மூலவளங்களைச் செலவழித் துள்ளன. கடந்த சில வருடங்களாக கல்வி, உயர்கல்வி என்பவற்றில் மேற் கொள்ளப்பட்டுள்ள முதலீடு பற்றிய தரவுகள் அட்டவணை 8ல் தரப் பட்டுள்ளன.

அட்டவணை 7

குடியகன்று சென்ற மனிதவலுவின் பகிர்வு 1979-81

| மனிதவலு மட்டம் | 1979 எண்ணிக்கை | % | 1980 எண்ணிக்கை | % | 1981 எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|---|
| உயர்மட்டம் | 1,657 | 6.4 | 1,357 | 4.7 | 1,991 | 3.5 |
| நடுத்தர மட்டம் | 2,374 | 9.2 | 2,199 | 7.7 | 3,420 | 5.9 |
| தேர்ச்சி பெற்றோர் | 6,110 | 23.6 | 5,805 | 20.6 | 11,187 | 19.5 |
| தேர்ச்சியற்றோர் | 12,803 | 49.5 | 14,501 | 50.6 | 31,936 | 55.6 |
| வகைப்படுத்தப் படாதவர்கள் | 2,931 | 11.3 | 4,692 | 16.4 | 8,913 | 15.5 |
| மொத்தம் | 25,875 | 100.00 | 28,644 | 100.00 | 57,447 | 100.00 |

ஆதாரம்: குடியகல்வு புள்ளி விவரங்கள் 1981, தொழில்வாய்ப்பு, மனிதவலு திட்டமிடல் பிரிவு, திட்ட அமுல் அமைச்சு

கடந்த சில தசாப்தங்களாக கல்வி வாய்ப்புக்களில் பொதுவானதொரு வளர்ச்சி காணப்பட்ட போதிலும், மாணவர்களிடையே தொழில் முன்னிலைத் திறன்கள் அல்லது தொழில்நுட்பத் திறன்களை விருத்தி செய்யும் முகமாக, கல்வி முறைமை யானது குறிப்பிடத்தக்களவு மாற்றம் எதனையும் அடையவில்லை. ஆகவே, கல்வியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடானது, நாட்டிற்கும், கல்வியைப் பெற்றுக் கொள்பவர்களுக்கும் நன்மையளிக்கக் கூடியவகையில் இந்நாட்டின் மனித மூலவளங்களை விருத்தி செய்யத் தவறிவிட்டது. பாடசாலைக்கு அனுமதி பெறுகின்ற மாணவர்களுள் 40 சதவீதத்தினர் எத்தகைய இரண்டாம் நிலைக் கல்வியையும் பெற்றுக் கொள்வதில்லை யென்றும், நடுத்தரமட்ட வேலைவாய்ப் புக்களுக்கு வேண்டப்படுகின்ற ஆகக் குறைந்த அடிப்படைக் கல்வித்தகை மையான க.பொ.த. (சாதாரணதர) மட்டத்தை அடையாது 60 சதவீதத்தினர் பாடசாலையை விட்டு அகல்கின்றனரென்றும், உயர்கல்வி வாய்ப்பினைத் தீர்மானிக்கின்ற தரம் 11, தரம்12 ஆகிய வகுப்புக்களுக்கு செல்வதற்கு 80 சதவீதத்தினர் சித்தி பெறத் தவறுகின்றனர் என்றும் கல்வி முறைமையிலுள்ள பல்வேறு குறைபா டுகள் பற்றி விரிவான பகுப்பாய்வுகளை மேற்கொண்ட ஒரு விமர்சகர் தெரிவித்துள்ளார் (ஜயவீர 1979:19).

பாடசாலையினை விட்டு தொடக்கத் திலேயே அகலும் பிரச்சினையானது குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களின் பிள்ளைகளை வெகு வாகப் பாதிப்பதனால், இப் பிரச்சினை இலவசக் கல்வியின் நன்மைகளை வெறிதாக்கியது மட்டுமல்லாமல், ஆண்டுதோறும் பாடசாலைக் கல்வியினைப் பூர்தியாக்காது தொழிற் படையில் சேருகின்ற குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்க ளிலுள்ள இளைஞர்களிடையே ஒரு உயர்மட்ட வேலையில்லாத் திண்டாட் டத்தையும் ஏற்படுத்தியது. பாடசா லையை முன்னதாகவே விட்டகல் வதாலோ அல்லது பாடசாலைக் கல்வியினைப் பூர்த்தி செய்ததன் பின்போ தொழிற்படையில் சேர்பவர் களிடம் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதில் உதவியளிக்கக் கூடிய தொழில் முன்னிலைத் திறன்களோ அல்லது தொழில் நுட்பத் திறன்களோ இல்லாமையினால் இப்பிரச்சினையானது மேலும் தீவிரமடைந்துள்ளது. வேலையற்ற இளைஞர்களுள் 48.7 சதவீதத்தினர் தரம் 10 இனை அடைவதற்கு முன்பாகவும், 39 சதவீதத்தினர் க.பொ.த (சா.த) சித்தி அடைந்த பின்பும் தொழிற்படையில் சேர்ந்துள்ளனரென 1992 ற்கான தொழிற்படை மதிப்பாய்வு தெரிவிக்கிறது. எழுதுவினைஞர் தரத் தினையொத்த வேலை வாய்ப்பு களுக்குத் தேவையான ஆகக்குறைந்த கல்வித் தகைமையின் அடிப்படையில், ஏறக்குறைய 39 சதவீதத்திற்கும்

மேற்படாத வேலையற்ற இளைஞர்கள், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிடைக்கக் கூடியதாகவிருக்கின்ற எழுதுவினைஞர் தரத்தினையொத்த வேலைகளுக்குப் போட்டியிடக்கூடிய நிலைமையில் உள்ளனர். எனினும், மிகவும் குறைந்த கல்வித் தகைமைகளைக் கொண்டுள்ள வேலையற்ற இளைஞர்கள் கூட நிலையான வருமானம், வேலைப் பாதுகாப்பு, ஓரளவு சமூக அந்தஸ்து போன்றவற்றினைத் தருகின்ற எழுதுவினைஞர் தரத்தினையொத்த தொழில்களைப் பெற்றுக் கொள்ளவே பெரிதும் நாடுகின்றனர்.

தொழில் புரிவோரின் கல்வித் தரத்தினை அவதானிக்கையில், அது, வேலையற்றோரினுடையதைப் போன்ற ஒத்த அமைப்பினைக் கொண்டிருக் கிறதாக அமைந்துள்ளது. தொழில்க ளைப் பெற்றவர்களில் 23 சதவீதத்தினர் தரம் 1ற்கும் தரம் 4ற்கும் இடைப்பட்ட கல்வியையும், 45 சதவீதத்தினர் தரம் 5 ற்கும் தரம் 9 ற்கும் இடைப்பட்ட கல்வியையும் பெற்றுள்ளனரென தொழில் புரிவோரினது கல்வித் தராதரப் பின்னணி பற்றி 1992ல் மேற் கொள்ளப்பட்ட தொழிற்படை மதிப்பாய் வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி தொழில்வாய்ப்பு பெற்றவர்களுள் 65 சதவீதத்திற்கும் அதிகமானோர் பாடசா லையினை முன்னதாகவே விட்டகன்ற வர்களாக உள்ளனர். க.பொ.த(சா.த), தே.க. பொ. த. ப. அல்லது வேறு உயாகல்வி மட்டங்களைப் பெற்றிருந் தோரின் தொகை வேலை வாய்ப்பினைப் பெற்ற மொத்தத் தொகையினரின் 23 சதவீதமாக இருந்தது.

தொழில் புரிவோரிடையேயும் தொழில் அற்றோரிடையேயும் காணப் பட்ட பொதுவானதொரு அம்சம், இவர்களுள் பெரும்பாலானோர் (75 சதவீதத்திற்கும் அதிகமானோர்) கலைப் பாடங்களிலேயே கல்வி பயின்றுள்ளனர் என்பதாகும். பட்டதாரிகளைப் பொறுத்தவரையிலும் கூட, கலைப் பாடங்களில் பட்டங்களைப் பெற்ற பட்டதாரிகளிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பரவலாக காணப்பட்டது. விஞ்ஞானக் கல்விக்கு வேண்டிய வசதிகள் கிராமப் பகுதிகளில் போதியளவு இல்லாமை, தங்கள் பிள்ளைகளுக்கு விஞ்ஞானக் கல்வியினை அளிக்கக் கூடிய அளவிற்குப் பெற்றோர்களிடம் போதிய பொருளா தார வசதியின்மை ஆகியன இந்நிலைமை தோன்றுவதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம்.

இலங்கையின் கல்விக் கொள்கை பற்றி கருத்துகள் தெரிவித்துள்ள பல

அட்டவணை 8

கல்வி தொடர்பான பின்னணி புள்ளிவிவரங்கள்

| | 1988 | 1989 | 1990 | 1991 | 1992* |
|---|---|---|---|---|---|
| 1. பாடசாலை எண்ணிக்கை | 9,771 | 9,805 | 9,864 | 9,998 | 10,042 |
| 2. மாணவர் எண்ணிக்கை | 3,938,062 | 4,057,815 | 4,111,272 | 4,135,114 | 4,155,035 |
| 3. ஆசிரியர் எண்ணிக்கை | 146,334 | 153,243 | 184,822 | 177,231 | 182,597 |
| 4. ஆசிரியர் ஒருவருக்கான மாணவர் | 27.7 | 27.3 | 22.9 | 24.1 | 23.5 |
| 5. கல்வி மீதான அரசாங்க செலவினம் (ரூபத்து இலட்) | 3,980 | 6,166 | 9,571 | 9,128 | 9,664 |
| 6. கல்வி மீதான செலவு மொதேஉ யின் x ஆக | 2.0 | 2.8 | 3.4 | 2.7 | 2.6 |
| 7. உயர்கல்வி மீதான செலவு (ரூமில்.) | 1,080.1 | 1,188.7 | 1,379.3 | 1,470.2 | கி.வி. |
| 8. உயர்கல்வி மீதான செலவு மொதஉயின்x ஆக | 0.54 | 0.53 | 0.49 | 0.45 | கி.வி. |

* தற்காலிகமானது கிவி கிடைக்கவில்லை

ஆதாரம்:

1. Economic & Social Statistics of Sri Lanka (Central Bank)
2. Sri Lanka Socio Economic Data (Central Bank)
3. Statistical Hand Book - University Grants Commission

விமர்சகர்கள், அதன் பாடசாலைக் கல்வி விதானத்தில் தொழில் முன்னிலைக் கல்வி பற்றியோ அல்லது தொழில்நுட்பக் கல்வி பற்றியோ போதிய முன்னறிவு வழங்கப்படாமை பற்றி குறை கூறியுள்ளனர். மாணவர்களுள் பெரும்பாலானோர் தரம் 10றகப்பால் சித்தியடையாதிருந்த போதிலும் படசாலைக் கல்வி விதானமானது பல்கலைக்கழகத் தேவைகளின் அடிப் படையிலேயே தயாரிக்கப்படுள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளது (உடாகம, 1982:12).

இந்த நிலைமையைச் சீராக்கு வதற்காக 1973-1976 காலப் பகுதியின்போது பல்வேறு தொழில் முன்னிலைப் பாடங்கள் பாடசாலைக் கல்வி விதானத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட போதிலும், 1977ல் அதிகாரத்திற்கு வந்த அரசாங்கத் தினால் இச்சீர்திருத்தங்கள் முன் னெடுத்துச் செல்லப்படாமையினால், அவற்றின் மூலம் தகுந்த பயன் கிடைக்கவில்லை. ஆகவே, கல்விக் கொள்கையில் காணப்பட்ட சீரற்ற தன்மை கூட மனித மூலவளங்களின் விருத்திக்குத் தடையாக இருக்கின்றது.

**உயர்மட்ட ரீதியிலான மனித மூலவளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

இலங்கையில் உயர்மட்ட ரீதியிலான மனித மூலவளங்கள் அபிவிருத்திக்கென செலவிடப்படுகின்ற வருடாந்த மொத்த முதலீடு, மொத்தத் தேசிய உற்பத்தியின் 1 சதவீதத்தினைக் கூடக் கொண்டிருக்க வில்லை (அட்டவணை 8). 1991ல் உயர் கல்விக்கான மொத்தச் செலவினத்தில் பல்கலைக்கழகக் கல்விக்கென 19 சதவீதம் செலவழிக் கப்பட்டுள்ளது. இது மொ.தே. உ. யின் 0.45 சதவீதமாகும். பல்கலைக்கழகக் கல்விக்கென மிகவும் குறைவாகச் செலவிடப்படுகின்ற செலவினத் தொகையோடு, உயர்கல்விக்காக அதிகரித்து வருகின்ற கேள்வியினை இங்கு ஆராய வேண்டியுள்ளது. பல்கலைக்கழகக் கல்விக்கான கேள்வி யினை இந்நாட்டின் உயர்கல்வி முறைமை திருப்திப்படுத்தத் தவறியுள் ளமை பற்றி அட்டவணை 9ல் தரப்பட்டுள்ள தரவுகளிலிருந்து காணக் கூடியதாக இருக்கிறது. பல்கலைக்கழகக் கல்விக்குத் தகைமை பெற்றவர்களுக்கும், நாட்டின் 8 பல்கலைக்கழங்களிலுமுள்ள பல்வேறு கற்கை நெறிகளுக்கு அனுமதிக் கப்படுகின்ற மாணவர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தின் பரி மாண அளவினை அட்டவணை 8 மிகவும் தெளிவாகக் காட்டுகிறது.

(அடுத்த இதழில் முடியும்)

(முன் உள்ளட்டைத் தொடர்ச்சி)

நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். வரி அறவீடு தொடர்பான விடயத்தில், ஒரே சீரான, படிப்படியான வரிக் கொள்கையொன்றுசெயற்படுத்தப்படுதல் அவசியமாகும (தொழிலாளர் அணி வீரர்களுக்கு 1943ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம்திகதி செஞ்சிகன்ஸு-நிங்ஸியா எல்லைப் பிராந்தியத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது நிகழ்த்திய உரை.) இந்தக் கொள்கைகள் குறிப்பாக தாய்-ஹொங் பிராந்தியத்தில் (அப்பொழுது 129வது பிரிவின் அரசியல் ஆணையாளராக இருந்த) டெங்சியோவோ பிங்கின் தலைமையின் கீழ் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டன.

அரச சோஷலிஸ மாதிரி உரு இன்றைய யுகத்தைப் பொறுத்தவரையில் முழு அளவில் செயலற்றுப் போயுள்ளது. மேலும், இன்றைய நிலைமைகளில் பாட்டாளி வர்க்க (அதேபோல உழவர்களினதும்) சர்வாதிகாரம் என்ற சுலோகமும் மவுசு இழந்து போயுள்ளது. எனவே, இந்தச் சூழ்நிலையில், எம்முன் உள்ள பணி, முதலாளித்துவத்துக்குப் பதிலாக, ஆற்றல் மிக்க, தாக்கமான, முற்போக்கான அரசியல் மற்றும் பொருளாதார மாற்றுவழிகளை கண்டறிவதாகவே உள்ளது.

இப்பணியை நிறைவு செய்யாது, முறையான ஒரு மாற்றத்தை எடுத்துவருவதற்காக போராடுவது பயனற்றதாகும்; அத்துடன் சில வேளைகளில் அது ஆபத்தானதாகவும் உள்ளது. ஏனெனில், அது (இலங்கையின் ஜே.வி.பி. இயக்கம் மற்றும் பெருநாட்டின் "மின்னும் பாதை"இயக்கம் போன்ற) விவேகபூர்வமற்ற, காட்டுமிராண்டித்தனமான சக்திகளின் எழுச்சிக்கு வழிகோல முடியும். எனவே, இன்றைய காலகட்டத்தில், முதலாளித்துவ அமைப்புக்கு எதிரான போராட்டம் (மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்துவரும் ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க கண்டங்களைச் சேர்ந்த நாடுகளிலும் கூட) நிலைமைக்கான போர் என்ற வடிவத்தினை எடுக்கக் கூடாது; மாறாக, அது திறமைவாய்ந்த ஒரு திட்டத்துடன் கூடிய போர் ஒன்றாக அது அமைதல் வேண்டும். மாற்றுவழிகளுக்கான எமது தேடல் தொடர்பான நெருக்கடி தீர்த்து வைக்கப்படாத நிலையில், தற்போதைய ஆட்சி அமைப்புக்களை நிலைகுலையச் செய்வதன் மூலம் பாசிஸ சக்திகளும் பொல்பொட்வாத சக்திகளும் மட்டுமே பயனடைய முடியும் என்பது ஒரு கசப்பான உண்மையாகும். மேலும், அது ஏகாதிபத்தியவாதம் சோஷலிஸத்தை களங்கப்படுத்துவதற்கு உதவுவதுடன், முதலாளித்துவத்தின் வெற்றிகரமான மீட்சிக்கும் வழிகோலும்.

எனவே இன்று எம்முன் உள்ள மிக முக்கியமான பணி மாற்றுவழிகளை வகுத்துக் கொள்வதாகும்; மாற்றுவழிகளுக்கான இந்தத் தேடலில், சீனாவின் அனுபவத்தினை அலசி ஆராய்வது முக்கியமாகும். ஏனெனில், சீனா மட்டுமே சோஷலிஸத்தின் உயிர் வாழ்க்கை தொடர்பான மாபெரும் நெருக்கடியில் இருந்து தப்பி, செழித்து வளர்ந்து வந்துள்ள கம்யூனிஸத்தின் தலைமையின் கீழான ஒரு சோஷலிஸ நாடாக உள்ளது. இந்தப் பணியில் நாம் வெற்றி பெறக் கூடியவர்களாக இருந்தால் மட்டுமே மீண்டும் ஒரு முறை ஒரு மேலாதிக்க சக்தியாகவும், எதிர்காலத்தை நிர்ணயம் செய்யும் ஒரு காரணியாகவும் வருவதற்கு ஆற்றல் கொண்டிருக்கும் மார்க்ஸிஸமொன்றை நாங்கள் கட்டியெழுப்பக் கூடியவர்களாக இருப்போம்.

பொருளியல் நோக்கின் இந்த இதழ், மாவோ சேதுங்கின் பிறப்பு நூற்றாண்டினை நினைவு கூருமுகமாக சீனாவின் நான்கு முக்கிய மார்க்ஸிய அறிஞர்களின் சிறப்புக் கட்டுரைகளை தாங்கி வெளிவருகின்றது. (இக்கட்டுரைகளை எமது இதழுக்கென பிரத்தியேகமாகப் பெற்றுத்தந்தமைக்காக கொழும்பில் அமைந்துள்ள சீனத் தூதுவராலயத்தின் அரசியல் பிரிவின் முதல் செயலாளர் திரு.ஜியங் குவிசென் அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்).

இந்த விடயத்துடன் பெருமளவுக்கு சம்பந்தப்பட்டுள்ள பிறிதொரு அம்சமும் இந்த இரட்டைச் சிறப்பிதழில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது; அதாவது "நாளைய மார்க்ஸிஸம்:- மூன்றாவது ஆயிரம் ஆண்டுக்குரிய மார்க்ஸிஸம்" என்ற தலைப்பு. இந்தத் தலைப்பு தொடர்பாக ஜேம்ஸ் பெட்ராஸ் மற்றும் ஜெரிட் ஹூய்ஸர் ஆகியோர் எழுதியுள்ள கட்டுரைகளை இந்த இதழில் தந்துள்ளோம். மேலும் ஹங்கேரியைச் சேர்ந்த ஜியோஜி லின்ஜேல் இந்த இதழில் இரு கட்டுரைகளை எழுதியுள்ளார்; (ஹங்கேரி நாடு, ஏனைய மார்க்ஸிஸங்கள் மற்றும் ஏனைய சோஷலிஸங்கள் என்பவற்றுக்கான ஒரு முன்னோடியாகவும் ஓர் ஆய்வு கூடமாகவும் இருந்து வந்துள்ளது). இன்று சோஷலிஸடுகள் முன்னால் உள்ள அபிவிருத்தி தொடர்பான பல்வேறு தெரிவுகளையும் இக்கட்டுரைகள் பகுப்பாய்வு செய்கின்றன. இவை தவிர, மெலீஸா டன்பார், ஜோர்தானின் துவாஜான் பைஸால் குறித்த சில குறிப்புக்களை இங்கு தருகிறார். மேலும் அபூ.என்.எம். வாஹிட் எழுதியுள்ள குடியகல்வு கோட்பாடுகள் தொடர்பான கட்டுரையையும் இந்த இதழில் வெளியிடப்படுகின்றது.

---

( 26 பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கருதுகின்றார். இந்த முயற்சியின்போது தற்போதைய பொருளாதார சிந்தனையின் விவேகபூர்வமற்ற தன்மையை தோழமை உணர்வு, கருணை போன்ற சதாகால மானிட உந்துணர்வுகளின் விவேகபூர்வமான தன்மையை கவனத்தில் எடுத்து ஒழித்துக் கொள்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. உலக மயமாக்கலை கீழே இருந்து நோக்கும் நிகழ்வுப்போக்கு அநேகமாக மேலைத்தேச மார்க்ஸிஸ்ட்டுகளினால் துவக்கி வைக்கப்பட்டு, முன் எடுத்துச் செல்லப்பட முடியாது. பேர்லின் சுவரின் வீழ்ச்சியினையடுத்து மேலைத்தேச மார்க்ஸிஸ்டுகள் ஒரு நெருக்கடி நிலையில் அல்லது ஒரு குழப்ப நிலையில் இருந்து வருவது போல் தோன்றுகின்றது. இக்கட்டுரையில் முன்னர் சுட்டிக் காட்டப்பட்டது போல, பெரும்பாலான மூன்றாவது மண்டல நாடுகளின் நிலைமைகள் மிகவும் மோசமாக இருந்து வருகின்றன. எனவே, இந்த நிலையில் ஒரு மார்க்ஸிய கண்ணோட்டத்தை எடுப்பது என்பது பொருத்தமான அணுகுமுறையாகவே உள்ளது. சாவோ பவ்லோ மாநாடு தவிர இது தொடர்பாக மேலும் பல முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

இலங்கை அஞ்சல் திணைக்களத்தில் செய்திப்பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண்: QD/46/News/94

"இக்காலகட்டத்தின் போது அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம் என்பன சோஷலிஸ அல்லது முதலாளித்துவ வடிவங்களைப் பெற மாட்டா என்றும், அவை நிலை மாற்ற வடிவங்களையே பெற்றுக்கொள்ளும் என்றும் மாவோ சுட்டிக் காட்டினார்."

- லிங் பிஷி

மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பிரிவு வெளியீடு

(இரட்டை இதழ்) விலை : ரூ 20/-
வருட சந்தா : ரூ 120/-

உரிய முறையில் "பொருளியல் நோக்கின்" பெயரைக் குறிப்பிட்டு, அதில் இடம்பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

யுனைற்ரெட் மேர்ச்சன்ஸ் லிமிற்ரெட், கொழும்பு 13.